யாப்பருங்கலக்காரிகை

(பாடநுண் பதிப்பு)

அன்பளிப்பு
அமரர். ஆர். திருமலை. இ.ஆ.ப.
GIFTED BY
TIRUMALAI I.A.S. (Late)

பதிப்பாசிரியர்

சு. சாமிஐயா, எம்.ஓ.எல்.

பொதுப் பதிப்பாசிரியர்

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

TNSDA
10786

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1973

22-6-'73

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY. * MADRAS. *
LIBRARY.

அன்பளிப்பு

GIFTED BY
R. TIRUMALAI I.A.S. (Late)

யாப்பருங்கலக்காரிகை

(பாடநூல் பதிப்பு)

பதிப்பாசிரியர்

சு. சாமிஐயா, எம்.ஓ.எல்.

பொதுப் பதிப்பாசிரியர்

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1973

ரூ 2-00

முதற் பதிப்பு: 1973

திருப்பனந்தாள் திருமட வெளியீட்டு நிதியுதவி

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY • MADRAS •
10786
A94.8U
BHW

சிவகாமி அச்சகம், அண்ணமலைநகர்



திருப்பனந்தாள் காசிமடத்து இருபத்தொன்றுவது பட்டத்து
எழுந்தருளியுள்ள, திருப்பெருந்திரு.

காசிவாசி முத்துகுமாரசாமித்தம்பிரான் சுவாமிகள்

உள்ளுறை

		பக்கம்
பதிப்புரை	...	1
ஆசிரியர் வரலாறு	...	5
உரையாசிரியர் வரலாறு	...	11
காரிகை முதற் குறிப்பகராதி	...	14
உறுப்பியல் — கருத்து	...	௧
உறுப்பியல்	...	௭
உறுப்பியல் — விளக்கம்	...	௫௬
செய்யுளியல் — கருத்து	...	௬௧
செய்யுளியல்	...	௭௭
செய்யுளியல் — விளக்கம்	...	௧௫0
ஒழிபியல் — கருத்து	...	௧௫௪
ஒழிபியல்	...	௧௬௩
ஒழிபியல் — விளக்கம்	...	௨௨௭
பின்னிணைப்பு	...	௨௨௯
பாடபேதங்கள்	...	௨௩௧
மேற்கோள் நூற்பா முதற் குறிப்பகராதி	...	௨௩௩
மேற்கோட் செய்யுள் முதற் குறிப்பகராதி	...	௨௩௭
அருஞ்சொற் பொருள்கள்	...	௨௪௧
பிழை திருத்தம்		

பதிப்புரை

(டாக்டர் வ. சுப. மாணிக்கம், தமிழ்ப்பேராசிரியர்)

தமிழிலக்கணங்களுள் வழிவழிப் பயிலப்படும் ஒரு நூல் யாப்பருங்கலக் காரிகையாகும். தோன்றும்போதே உரையொடு தோன்றிய இரட்டைத் தன்மையால், மலைவுக்கும் வேறுபாட்டிற்கும் மறுப்புக்கும் இடந்தராத நூலாக விளங்கி வருகின்றது. யாப்பருங்கலக் காரிகை என நீண்டதொரு பெயரீடு இருந்தாலும், காரிகை என்பதே பிறந்தநாள் தொட்டு வந்த வழக்கு என்பதனைக் 'காரிகைக் குளத்தூர்' என்ற கல்வெட்டுத் தொடரால் அறியலாம். "யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக்காரிகை என்னும் பெயர்த்து" என குணசாகர உரையாசிரியர் விளக்கியிருத்தலின், காரிகை என்னும் கிளவிக்கு அழகு என்பதே அவர் கொண்ட முதற் பொருள்.

காரிகை கற்றுக் கவிபா டுவதினும்
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே

என்ற செய்யுட்கு யாப்பிலக்கணம் கற்றுவிடுவதால் கவி வந்து விடாது. பாடும் ஆற்றல் பிறவியிலேயே அமைய வேண்டும் என்பது கருத்தெனக் கருதிக் கொண்டு வருகின்றோம். சிறந்த யாப்பு நூலான காரிகையையே கற்றுக் குற்றமின்றி அருமையாக இன்கவி பாடினாலும் இக்காலத்துப் பிழைப்புக்கு வழியில்லை; அதனை விடுத்து ஆரவாரமான கடும் பேரிகை கொட்டினால் பிழைப்பு உண்டு என்பது இதன் கருத்தாகும். நன்றாகப் பாடியும் பரிசில் பெறாத ஓர் ஏழைப்புலவனின் அவலப்பாடல் இது. 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை' என்ற தொடரை ஒப்புநோக்குக. யாப்புப் பனுவல்களுள் கற்கத் தகுவது காரிகை என்ற சிறப்பை இத்தனிச் செய்யுள் நிலைநாட்டுகின்றது.

தமிழாராய்ச்சி பலதுறையில் பெருகி வரும் காலம் இது. எனினும் யாப்பாராய்ச்சி இன்னும் ஆய்வாளர்களின் உள்ளத்தைப் பற்றவில்லை. இப் பல்கலைக் கழகத்தின் முன்னைத் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருந்த டாக்டர் அ. சிதம்பரநாதனுர் முப்பதாண்டுகட்கு முன்பே தமிழ் யாப்பு என்பது பற்றி ஆய்வுக் கட்டுரை எழுதி இப்பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் எய்தினர். Advanced Studies in Tamil prosody என்ற அந்த ஆய்வுநூலை இப்பல்கலைக் கழகம் வெளியிட்டது என்பதனை நினைவுபடுத்த விழைகின்றேன். தொல்காப்பியத்தில் செய்யுளியலே பேரியல் என்பதனையும், ஐவகையிலக்கணத்தில் யாப்புக்குத் தோன்றிய இலக்கண நூல்களே மிகுதி என்பதனையும் எண்ணிப் பார்ப்பின், யாப்பாராய்ச்சிக்குப் பேரிடம் உண்டு என்பது எளிதிற் பெறப்படும். பாவினங்கள் என்பவை அவ்வப் பாவிற்கு உரிய இனங்கள் ஆகுமா? அப்பாக்களின் ஓசைகள் இவ்வினங்களில் உண்டா? கட்டளைக் கலித்துறையில் காரிகை பாடியிருந்தும், அதன் இலக்கணம் காரிகையில் ஏன் இடம் பெறவில்லை? என்றினைய அரில்கள் யாப்புலகில் பல்கிக் கிடக்கின்றன.

யாப்புச் சிக்கல்களைக் கண்டுபிடித்து விடுவித்தற்குச் செவ்விய ஆராய்ச்சிப் பதிப்புக்கள் பல வெளிவருதல் வேண்டும். அப்பதிப்பு மாணவர்க்குப் பாடநூலாகவும் ஆய்வர்க்குப் பார்வை நூலாகவும் அமையின், கார்கால மழைபோலும் என்ற நோக்கத்தோடு, அண்ணுமலைப் பல்கலைக் கழகம் யாப்பருங்கலக் காரிகைப் பாட நுண்பதிப்பாக வெளியிடுகின்றது.

ஒவ்வொரு இயலுக்கு முன்னும் ஆற்றொழுக்கான கருத்துச் சுருக்கம், ஒவ்வொரு இயலின் பின்னும் வேண்டிய கருத்து விளக்கம், பாவும் பாவினங்கட்கும் வரைபடம் அமைத்தல், குறியீடுகாட்டல், மேற்கோள் நூல்களைப் பக்கத்தே சுட்டல், அருஞ்சொற் பொருள் விளக்கம் என்ற நற்கூறுகள் இப்பதிப்பில் உள; ஆதலின் மாணவர்க்கு இப்பதிப்பு ஏற்ற வழித்துணையாகும்.

பாடபேதங்கள், ஆசிரியர்களைக் காட்டும் மேற்கோள் நூற்பா முதற்குறிப்பகராதி, இடஞ்சுட்டும் மேற்கோள் செய்யுள் முதற் குறிப்பகராதி, விளக்கத்திற் காணப்படும் ஆராய்ச்சிக் குறிப்புக்

கள், ஆய்வு பொதிந்த முகவுரை இவ்வெல்லாம் ஆய்வாளர்க்கு மேலும் தூண்டு கோலாகும்.

இக் காரிகையைப் பாட நுண் பதிப்பாகச் செய்தவர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. சு. சாமிஜயா, எம். ஓ. எல். பல்லாண்டு புலவர் வகுப்புக்குப் பாடம் கற்பித்த பயில்வினர். இதுவரை வெளிவந்த காரிகைப் பதிப்புக்களை ஒப்பிட்டுப் பார்த்தும், இதன் தொடர்பான பிற யாப்பிலக்கண நூல்களைக் கற்றும், காலத்திற்கேற்ற புதியமுறை களைத் தழுவி இப்பதிப்புக் கடமையைச் செவ்வையாக முடித் துள்ளார். பாடப்பணிக்கிடையே பதிப்புப் பணியை மேற் கொண்ட ஆசிரியரின் தனிமுயற்சி பாராட்டுக்கு உரியது.

திருப்பனந்தாள் 19ஆம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த திருப்பெருந்திரு காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தேவாரத் திருமுறைப் பரிசுக்கும் தமிழ் இலக்கண இலக்கிய வெளியீடுகட்கும் என்று அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நிறுவிய அறக்கட்டளையின் சார்பில் இந்த யாப்பருங்கலக் காரிகை வெளியிடப்படுகின்றது. நல்ல தமிழ் நூல்கள் வெளி வருவதற்கு அறக் கட்டளை வகுத்த திருபெருந்திரு. சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளையும், அத்திருவினர்தம் அறப்பணியைக் காத்துச் செந்தமிழும் சிவநெறியும் இணைந்து தழைக்கத் தாமே பல கட்டளைகள் நிறுவியும் புகழுருவெய்திய திருப்பெருந்திரு. காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளையும் பல்கலைக் கழகம் நன்றியொடு நினைவு கூர்கின்றது. அருளாளர்களாகிய அவ்விருவர்தம் திருப்பணி தமிழ்ப்பணிகளை மேலும் வளம் பெற்று ஓங்க வழிவகுத்து அருட்பணி புரிந்துவருபவரும் செந் தமிழ்ப்புலமை நலம் சிறக்கப் பெற்றவரும் ஆகிய திருப்பெருந் திரு. முத்துகுமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்குப் பல்கலைக் கழகம் தன் நன்றியைப் புலப்படுத்துகின்றது.

2

திருப்பனந்தாள் காசிமடம் பத்தொன்பதாவது பட்டம்
திருப்பெருந்திரு.
காசிவாசி சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள்

இராஜராஜ அபயகுல
சேகர சோழ மகாராஜா

காரிகை ஆசிரியர் வரலாறு

:o:

யாப்பருங்கலக் காரிகையின் ஆசிரியர், 'ஆரிய மென்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகை யாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர்' என உரை ஆசிரியராகிய குணசாகரர் குறிப்பிடுகின்றார். யாப்பருங்கலமும் இவ்வாசிரியரால் செய்யப்பெற்றதே. இதனை, 'யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரம் உடைத்தாய்ச் செய்யப்பட்டமையால் யாப்பருங் கலக்காரிகை என்னும் பெயர்த்து' என்ற குணசாகரர் கூற்றால் உணரலாம். 'விரவியு மருகியும் வேறு மொரோவழி மருவியும் பெருதும் வழங்குமன் னவையே (யாப்பருங்கலம் 15) என்ற நூற்பா உரையில் 'இந்நூலுடையாரும் மாஞ்சீர் கலியுட்புகா, எனவும்.......... விளங்கக் கூறினர்' என்று காரிகை நூலின் 58வது காரிகையை எடுத்துக் காட்டி, விருத்தி உரைகாரர் கூறும் கூற்றும் இக் கருத்தினை அரண் செய்யக் காணலாம். அன்றியும், வீரசோழியம் அலங்காரப் படலம் 39ஆம் செய்யுள் உரையில் பெருந்தேவனார், 'மாலைமாற்றே' என்ற யாப்பருங்கல நூற்பாவினை எடுத்துக்காட்டி, 'என்று அமிதசாகரனார் கூறியன கொள்க' எனக் கூறுகின்றார். எனவே அமிதசாகரர், யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை ஆகிய இருநூல்களையும் செய்தனர் என்பது நன்கு புலப்படுகின்றது.

இவர் பெயரினை, அமிதசாகரர், அமுதசாகரர், அமிர்தசாகரர் எனப் பல வாருக வழங்குகின்றனர். யாப்பருங்கலப் பாயிரத்தில்,

துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி
அளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே

என்ற அடிகளில், 'அளப்பருங் கடற் பெயர்' என்ற தொடரால் இவர் பெயர் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. மிதம்-அளவோடு

கூடியது, அமிதம்-அளவற்றது என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. அமித சாகரர் என்பதே தம் கருத்தாகும் என நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் (செந்தமிழ். தொகுதி 17, பக்: 493) கூறியுள்ளார்கள். அமித சாகரர் என்ற வடமொழிப் பெயரின் பெயர்ப்பே 'அளப்பருங் கடற் பெயர்' என்ற தொடர் என அனவரத விநாயகம் பிள்ளை (விவேகபோதினி, தொகுதி 12 பகுதி 1) அவர்கள் கருதுகின்றார்கள்.

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் பதிப்பில் ஆசிரியர் வரலாற்றில், 'இவர் பெயரினை அமித சாகரர் என்றிருக்க வேண்டுமென அறிஞர் சிலர் கருதுகின்றனர். இருப்பினும் ஓர் ஏட்டிலேனும் அமிதசாகரர் என்று காணப்படவில்லை. அமுதசாகரர் என்றோ அமிர்தசாகரர் என்றோ தான் காணப்படுகின்றது.' என்று கூறப்பெற்றுள்ளது. இந்த ஐயத்தினை நாம் எளிதில் தள்ளிவிட இயலாது. அமுதம் என்றோ, அமிர்தம் என்றோ கொண்டால், 'அளப்பரும்' என்பதனைக் கடலின் அடையாக நீக்கிவிட்டு, அக்கடல் வெளிப்படுத்திய அமிர்தம் அல்லது அமுதம் என்ற சொல் சாகரருக்கு முன்னால் சேர்க்கப் பெற வேண்டும். ஆனால் 'அளப்பரும்' என்ற தொடர் வறிதான அடையாகக் கூறப்பெற்றிருக்க இயலாது என்பதனை அப்பாயிரத்தின் முன்னடிகளில்,

'தனக்குவரம் பாகிய தவத்தொடு புணர்ந்த
குணக்கடற் பெயரோன்'

என்று குணசாகரர், 'குணக்கடற் பெயரோன்' எனச் சுட்டப்பட்டமையால் அறியலாம். அன்றியும், K. V. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் வெளிப்படுத்திய நீடூர்க் கல்வெட்டு ஒன்றில்,

* 'தண்டமி ழமித சாகர முனியைச்

---

* ஸ்வஸ்திஸ்ரீ எண்டிசை உலகை ஒரு குடை நீழற் கீழிருத்திய குலோத்
துங்கசோழற் கியாண்டொரு முப்பத்தெட்டினிற் சோணாட்டிசை
வளர் திருவிந்தளூர் நாட்டுண்.........டைநீடிய நீடூர் உமையோ
டு நிலாவின பெருமாற்கு வந்து......லைமலையெனச் சிலையாலுத்த
ம விமானமிங் கமைத்தான் தண்டமிழ் அமிதஸாகரமுனியை ஐயங்கொ
ண்ட சோழமண்டலத்துத் தண்சிறுகுன்ற (நாட்டு)த் திருத்தி......
நூற்காரிகை அவனூற் கண்டவன் மருமான் காரிகை குளத்தூர்
க்காவல் நிலாவினன் எவர்க்குங் கருணையுந்தி (யாகமுங்) காட்டிமிழ
லை நாட்டுவேள் கண்டன் மாதவனே

[Epigraphica Indica Vol XIII p. 64-69]

சயங்கொண்ட சோழமண் டலத்துத்
தண்சிறு குன்ற நாட்டகத் திருத்திச்
சந்தநூற் காரிகை யவனுற்
கண்டவன் மருமான்' என்ற தொடர்களில்

இவர் பெயர் அமித சாகரர் என்றே ஆளப்பட்டுள்ளது. எனவே, அறிஞர் பெருமக்கள் அமித சாகரர் என்றே பெருவழக்காக இப்போது கொள்ளலாயினர்.

இவர் தம் பெற்றோர் யாவர் என அறிய இயலவில்லை. குண சாகரர் என்பவர் இவர் தம் ஞானசிரியர் என்பது மட்டும், 'குணக் கடற் பெயரோன் கொள்கையின் வழாஅ' என்ற யாப்பருங்கலத் தொடரால் விளங்குகின்றது. இவர் உரையாசிரியரான குண சாகரரின் வேறானவர். அமித சாகரர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பது,

'வெறிகமழ் தாமரை மீமிசை யொதுங்கிய
வறிவனை வணங்கி யறைகுவன் யாப்பே'

என்று யாப்பருங்கலத்திலும்;

'கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்
எந்த மடிகள் இணையடி யேத்தி'

என்று யாப்பருங்கலக் காரிகையிலும், இவர் கூறிய தெய்வ வணக்கம், அருக தேவனைப் பற்றியே அமைந்துள்ளமையால் இனிது புலப்படும். அன்றியும், இருநூல்களிலும் காட்டப்பட்ட மேற்கோட் செய்யுட்களுள் பல அருகதேவனையும், முதல் தீர்த்தங்கரரையும் வாழ்த்துவன வாகவும், சமண சமய உண்மைகளைப் புலப்படுப்பனவாகவும் அமைந்துள்ளன. எனவே இவர் ஒரு சமணர் என்று ஐயமின்றிக் கூறலாம்.

சமண சமயத்தில் பற்பல சங்கங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று நந்திகணம். நந்திகணத்தின் ஒரு கூறாக விளங்கும் அருங்கலான்வயம் என்ற பிரிவினைச் சேர்ந்தவர் இவ்வாசிரியர். (கலைக் களஞ்சியம் தொகுதி 8 பக்: 578). இப்பிரிவினர் மிகுதியாக வாழ்ந்த இடம் திருவாரூருக்கு அண்மையிலுள்ள தீபங்குடி என்னும் ஊராகும் என்று T. A. கோபிநாத ராவ் (செந்தமிழ், தொகுதி 5, பக்: 98, 99) குறித்துள்ளார். இவ்வாசிரியரும்

அவ்வூரில் வாழ்ந்த ஒரு துறவியாக இருக்கலாம். இவர் துறவு பூண்டு வாழ்ந்தவர் என்பது, 'அமித சாகரமுனி' என்றும், 'அருந்தவத்தோன்' என்றும் குறிக்கப்படுதலால் விளங்குகின்றது.

இவரைப் பாண்டி நாட்டவர் என்று பேராசிரியர் மு. இராகவ ஐயங்கார் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள் (சாஸனத் தமிழ்க் கவி சரிதம் பக்: 44). இக்கருத்துக்குக் காட்டப்பெற்ற சான்று ஏற்புடைத்தா என்பது ஐயத்திற் குரியதாக உள்ளது. 'தொண்டை நாட்டிலிருந்து இயற்றிய காரிகை நூலை ஆண்டு அரங்கேற்றாது, தேனார் கமழ் தொங்கல் மீனவன் கேட்ப, அப்பாண்டியனது அவை முன்பு அரங்கேற்றியது என்க' என்று எடுத்துக் காட்டுகின்றார். மேற் காட்டப்பட்ட, காரிகை அவை யடக்கச் செய்யுளின் தொடருக்கு உரையாசிரியர்கள் யாரும் இவ்வாறு பொருள் கொள்ளவில்லை. பழைய உரையாசிரியராகிய குண சாகரரும் புத்துரை காரராகிய சுன்னாகம். குமாரசுவாமிப் பிள்ளை அவர்களும்' மீனவன் கேட்ப மலையத்து அருந்தவனாகிய அகத்தியன் சொன்ன கன்னித் தமிழ் நூல் என்றே பொருள் கொண்டுள்ளனர். காலம், களம் கூறவேண்டும் என்ற நோக்கோடு இவ்வாறு ஐயங்கார் அவர்கள் பொருள் கொண்டிருப்பார்களேயானால், தற்சிறப்புப் பாயிரத்தில் அவை சுட்டப்பெற வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. ஈண்டு ஆசிரியர் தமிழின் பெருமையினையும் தம் அடக்கத்தினையும் சுட்ட வந்தனரே அன்றி அரங்கேறிய இடம் கூற முற்பட்டாரில்லை. ஏனெனில் தம் அடக்கத்தைக் கூறிக்கொள்ளுமுகமாக அமைக்கப்பெற்ற இவ்விடத்தில் பாண்டியன் அவைக்களத்தில் தம்நூல் அரங்கேற்றப்பட்டது எனப் பெருமைபடக் கூறிக் கொண்டிருக்க இயலாது. எவ்வாறு இவ்வாறு கண்ணழித்துப் பேராசிரியர் இராகவையங்கார் பொருள் கொண்டனர் என்பது விளங்கவில்லை. எனவே இவர் பாண்டிநாட்டினர் என்று கூறுதற்குச் சான்று ஒன்றும் கிடைத்திலது.

இந்நூலினை இவர் இயற்றிய இடம் அல்லது அரங்கேற்றிய இடம் தொண்டை நாட்டிலுள்ள குளத்தூர். அதன் பின்னர் இவ்வூர் காரிகைக் குளத்தூர் என்று வழங்கியமையே இதற்குச் சான்றாகும். வேளிர் வழிவந்த சோழ அதிகாரிகளுள் ஒருவன்

அமிதசாகரரை அழைப்பித்து, காரிகை நூலினைச் செய்வித்தான். இவ்வுண்மையினை நீடூர்க் கல் வெட்டுக்களிலுள்ள,

* ''நேரியற் காண்டே ழைஞ்சுடன் மூன்றில்
நிகரிலாக் கற்றளி நீடூர்
நிலாவினுற் கமைத்த நிலாவினு னமுத
சாகர னெடுந்தமிழ்த் தொடுத்த
காரிகைக் குளத்தூர் மன்னவன்'' என்றும்,

''தண்டமி ழமித சாகர முனியை
சயங் கொண்ட சோழமண்டலத்துத்
தண்சிறு குன்ற நாட்டகத் திருத்திச்
சந்தநூற் காரிகை யவனுற்
கண்டவன் மருமான் காரிகைக் குளத்தூர்க்
காவலன்'' என்றும் காணப்படுகின்ற தொடர்கள் அரண் செய்கின்றன.

இவர்தம் காலம் கி. பி. பத்தாம் நூற்றுண்டு என்பதற்குச் சில சான்றுகள் கிடைத்துள்ளன. குலோத்துங்க சோழனின் 38, 46 ஆம் ஆட்சி ஆண்டுகளில் பொறிக்கப்பெற்ற நீடூர்க் கல் வெட்டுக்களில் அமிதசாகரர், கண்டன் மாதவனின் முன்னேருள் ஒருவனுல் குளத்தூருக்கு அழைத்து வரப்பெற்று, காரிகை நூலினைச் செய்வித்தான் என்ற குறிப்புக் காணப்படுகின்றது. கண்டன் மாதவன் குலோத்துங்கன் காலத்தவன். இவன் முன்னேன், அஃதாவது காரிகை நூலினைச் செய்வித்தோன் இன்னுன் எனக் குறிப்பிடாமையால் அந்நிகழ்ச்சி

---

* ஸ்வதிஸ்ரீ [கூரி]ய[வு] லகநைத்தையுங் குடைக்கீழ் ஆ
(க்கிய] குலோத்துங்க சோழர்க் காண்டொரு நா[ற்]பத்தாருத நி
டைத் தில்லை அம்பலத்
தே வடகீழ்[ப்]பால் போரியல் மத்தது சொன்ன வாறறிவார் கோயி
லும் புராண நூல் விரிக்கும்
புரிசை மாளிகையும் வரிசையால் விளங்கப் பொருப்பினுல் விருப்புறச்
செய்தோன் நேரியற்காண்
டேழைஞ்சு(ட)ன் மூன்றினில் நிகரிலாக் கற்றளி நீடூர் நிலாவினுற்
கமைத்த நிலாவினுன்
அமுதஸாகரனெடுத்த......தொடுத்த காரிகைக் குளத்தூர் மன்னனவன்
தொண்டை
காவலன் சிறுகுன்ற நாட்......கற்பகம் மிழலை நாட்டு வேளாண்டவன்
கண்டன் மாதவனே
[Epigraphica Indica Vol XIII. p. 64-69]

கண்டன் மாதவனுக்குப் பல தலைமுறை முன்னர் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று தெரிகின்றது.

பத்தாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த குணசாகர பட்டாரகர் என்ற சமண சமயப் பெரியாரே அமித சாகரரின் ஆசிரியராக இருக்கலாம் என அறிஞர் கருதுகின்றனர். (சாஸனத் தமிழ்க் கவிசரிதம் 43, 44). இக் குணசாகர பட்டாரகரைப் பற்றிய கல் வெட்டுகளில் வீரநாராயணஏரி, உத்தம சோழன் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. வீரநாராயணன் என்பது முதற் பராந்தகன் பெயராகும். உத்தமசோழன் என்பது பராந்தகன் பெயரருள் ஒருவனுன மதுராந்தகனுக்கு (955-970) உரிய பெயராகும். ஆகவே, குணசாகர பட்டாரகர் மதுராந்தகன் வாழ்ந்த 970 ஆம் ஆண்டின் பின் வாழ்ந்தவர் என்ப்து தெளியப்படுகின்றது. மாறஞ் சடையன் என்ற பாண்டியன் குணசாகரர் காலத்து வாழ்ந்தவனுவான். இம் மாறஞ் சடையன் உத்தமசோழன் (970) காலத்தை ஒட்டிவாழ்ந்தவன்.

எனவே அமிதசாகரர் 10 ஆம் நூற்றுண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்பது தெளிவாகின்றது. இவ்வுண்மையை வரலாற்ருசிரியர்கள் பலரும் ஒத்துக்கொண்டுள்ளனர். ‘‘சுந்தர சோழனுக்குப் பின், 970 இல் பட்டமேற்றவன் உத்தமசோழன் (970-985). இக்காலப் பகுதியில் குணசாகர பட்டாரகர் வாழ்ந்தார் என்ருல், இவர் மாணுக்கரான அமித சாகரர், அடுத்துப் பட்டமேற்ற இராசராசன் (985-1014) காலத்தில் வாழ்ந்தார் என்பது பொருந்தக் கூடியதே’’ என்று மு. அருணுசலம் (தமிழ் இலக்கிய வரலாறு 11 ஆம் நூற்றுண்டு, பக்: 115) கூறுகின்ருர். இவர் இந்நூலை எழுதிய காலம் சோழ அரசன் முதலாம் இராஜராஜன் வாழ்ந்ந கி. பி. 985-1013க்குள் அகப்பட்டது எனக் கருதப்படுகின்றது (கலைக்களஞ்சியம், தொகுதி 8, பக்: 578). இந்நூல் வீரசோழியத்திற்கு முற்பட்டது என்பது வீரசோழிய உரைகாரராகிய பெருந்தேவனுர் காட்டிய எடுத்துக்காட்டால் உணரலாம். எனவே இவர்காலம் 10 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி எனக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை.

சு. சாமிஐயா

காரிகை உரையாசிரியர் வரலாறு

—:o:—

யாப்பருங்கலக் காரிகையின் உரை ஆசிரியர் குணசாகரர் என்பவர் ஆவார். அமித சாகரர்தம் ஆசிரியர் பெயரும் இவர் பெயரும் ஒன்ருய் இருத்தலால் இருவரும் ஒருவரே எனச் சிலர் கருதுவர். இருவரும் வெவ்வேருனவர் என்பதே அறிஞர்களின் கருத்தாகும். 'இவர் அமிதசாகரர் காலத்திற்குப் பிற்பட்டவர் என்பது, சில காரிகை நூற்பாக்கட்கு ஆசிரியர் கருத்திற்கேற்ப உரை கூருது வேறுபட மொழிந்தமையால் விளங்கும்' என்று (செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு: 8, பக்: 393) கனகசுந்தரம் பிள்ளை கூறுகின்ருர். பன்னிரண்டாம் நூற்ருண்டிற்குப் பிற்பட்டவர் என்பது கலைக்களஞ்சியத்திற் காணப்பெறும் (கலைக்களஞ்சியம், தொகுதி: 4, பக்: 16) செய்தியாகும்.

ஒருவர் பெயரினை அவருடைய பெயரப் பிள்ளைக்கு இடுவது போல, ஒரு ஆசிரியர், தம் மாணவருக்கு, தம் ஆசிரியரின் பெயரினை இடுவதும் மரபு. ஞானுசிரியர் பரம்பரையில் இம் மரபினைப் பரக்கக் காணலாம். தம் ஆசிரியராகிய திருவியலூர் உய்யவந்ததேவ நாயனர் பெயரினை, தம் மாணக்கர்க்குச் சூட்டி மகிழ்ந்தார் திருக்கடவூர் ஆளுடையதேவ நாயனர். முதல் உய்யவந்ததேவ நாயனர் திருவுந்தியாரையும், இரண்டாம் உய்யவந்ததேவ நாயனர் திருக்களிற்றுப்படியாரையும் செய்தனர். பரஞ்சோதி முனிவர், தம் ஆசிரியராகிய சத்தியஞான தரிசினிகளின் பெயரினைத் தம் மாணவர்க்கு, மெய்கண்டார் எனச் சூட்டினர். இன்று வாழ்கின்ற சமயப் பெரியார்களும் இவ்வாறே முறையாகப் பெயரிட்டுக் கொள்கின்றனர். எனவே அமிதசாகரரும் தம் ஆசிரியர் பெயராகிய குணசாகர பட்டாரகர் பெயரினைத் தம் மாணவர்க்கு இட்டிருக்கலாம். அவ்வாருயின் இவருடைய காலம் 11 ஆம் நூற்ருண்டு என்ருகின்றது. குணசாகரர், தம் ஆசிரியரிடத்துப் பெருமதிப்புக் கொண்டவர் என்பது, 'அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர்' என்ற அவர் கூற்ருல் விளங்குகின்றது. காலத்தால் முற்பட்ட ஒருவரின்,

துறவு வாழ்க்கை அல்லது இல்லற வாழ்க்கை, சமயநெறி போன்றவற்றை அவருடைய வரலாறு கொண்டு கூறிவிடலாம். ஆனால் பண்பு நலன்களை நேரில் கண்டு உணர்ந்தவர்களால் மட்டுமே கூற இயலும். அமிதசாகரர் தம் இயல்பினைப் பலகாலும் கண்டு, உளங்கொண்டு பெருந்தன்மை உடையார் என்று இவர் கூறுவதால் ஆசிரியர் காலத் தவராக இவரைக் கூறுவதே பொருந்துவதாகும். ஆசிரியர் வரலாற்றில், அவருடைய காலம் 10 ஆம் நூற்றாண்டின் இறுதி என வரையறுத்தமையால் இவருடைய காலம் 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கொள்ளலாம்.

இவர் இன்ன ஊரினர் என்றோ, பெற்றோர் இன்னார் என்றோ அறிய இயலவில்லை. எனினும் இவர் சோணாட்டவர் என்பது, 'செந்தமிழ் நிலமாவது சோணாடே' என்றெழுதிய அவர் கொள்கையாலும், அவ்விடத்து:

மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியில்மாப் பெருமை பரவுறு சோழனுஞ்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கு
மையறு சோழ வளநா டென்ப (காரிகை: 199)

என்று, அவர் காட்டிய அகவலொன்றாலும் ஊகிக்கப்படுகின்றது' (செந்தமிழ், தொகுதி, 24 பக்: 170) என்று பேராசிரியர் மு. இராகவ ஐயங்கார் குறிப்பிடுகின்றார்.

இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். இவர் காட்டும் உதாரணச் செய்யுள்கள் பலவும் அருகதேவன் வாழ்த்தாகவும், சமண சமயக் கோட்பாடுகளை விளக்குவனவாகவும் காணப்படுகின்றன. சிந்தாமணி, சூளாமணி போன்ற சமண நூல்களையும் மேற்கோளாகப் பல இடங்களில் காட்டுகின்றார்.

யாப்பருங்கலத்தின் உரையாசிரியரும் இவராகவே இருத்தல் கூடும் என்பது அறிஞர்கள் கருத்தாகும். இருநூல்களிலும் காணப்படும் உதாரணச் செய்யுட்கள் ஒன்றாகவே பல இடங்களில் காணப்படுகின்றன. சிற்சில இடங்களில் உரைநடையும்

ஒத்துக் காணப்படுகின்றது. எனினும் காரிகையின் உரை, யாப்பருங்கல உரைக்குப் பின்னர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பது, 'யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க' (காரிகை, பக்கங்கள்: 40, 127, 182, 219) என்று இவர் கூறியிருத்தலால் இனிது விளங்கும்.

'யாப்பறிவார் நீப்புணர்வார்' என்ற பழமொழிக்கேற்ப இவர் தொன்னூற் பொருட்குவியலை உள்ளவாறு உணர்ந்து உரை செய்துள்ளார். இவர் காட்டிய மேற்கோள் நூற்பாக்கள் பலப்பல. தொல்காப்பியம், பல்காயம், காக்கைபாடினியம், சிறு காக்கை பாடினியம், அவிநயம், நற்றத்தர்யாப்பு, மயேச்சுரர் யாப்பு, சங்கயாப்பு, யாப்பருங்கலம் போன்ற நூல்களிலிருந்தும், இன்னும் இப்பொழுது அறியவியலாத பல இலக்கண நூல்களினின்றும் மேற்கோள்களைக் காட்டியுள்ளார். இவற்றால், இவர் தம் இலக்கணப் புலமையும், சங்க இலக்கியம், சிந்தாமணி, சூளாமணி, திருக்குறள் போன்ற பல நூல்களை இடமறிந்து காட்டுவதால் இவர் தம் இலக்கியப்புலமையும் நன்கு விளங்குகின்றது. உதாரணம் கிடைக்காத இடங்கட்கு இவரே அவ்விலக்கணம் அமையப்பாடி இருத்தலும் கூடும் எனத் தோன்றுகின்றது. காரிகை நூலினைப் பகுத்து நூற்பாத்தொகையும், கிரந்தத் தொகையும், எழுத்துத் தொகையும் கூறிச் செல்லும் முறை, படித்தின்புறத்தக்கது. ஒவ்வொரு செய்தியினையும் சான்று காட்டி நிறுவும் இயல்பு உடையவர். உத்திவகைகளைப் பொருத்திப் பார்த்து உரிய இடங்களில் எடுத்து மொழிகின்றார். ஆசிரியர் கருதி அமைத்த விதப்புக் கிளவிகட்கு இவர், விளக்கங்கள் தந்து இலக்கண அமைவினை ஏற்படுத்துகின்றார். சுருங்கக் கூறின், உரை எழுதுவதற்கு இவரை ஒரு முன்னோடியாகக் கொள்ளலாம். இவர் தம் வரலாற்றை நம்மால் தெளிவாக அறிய இயலவில்லை ஆயினும் இவர் தம் புலமைத்திறத்தினை இவர் உரை நமக்குப் பறை சாற்றுகின்றது.

சு. சாமிஐயா

காரிகை முதற் குறிப்பு அகர வரிசை

	பக்க எண்
அசையடி முன்னர்	123
அடிவரை யின்றி	137
அந்தமில் பாதம்	98
அந்த முதலாத்	46
அருகிக் கலியோ	179
அறத்தாறிது	42
இயற்றளை வெள்ளடி	175
இருசீர் மிசை	50
ஈரசை நாற்சீர்	24
ஈரடி வெண்பாக்	85
உருவு கண்டெள்ளா	89
எழுத்துப் பதின் மூன்	222
எழுவா யெழுத்	43
ஒன்றும் பலவும்	90
கடை யயற் பாதம்	106
கந்த மடிவில்	7
கந்தமும் தேனும்	55
கன்று குணில்	116
குடநிலைத் தண்	136
குறளடி நான்கின	140
குறளிரு சீரடி	36
குறிலெ நெடிலே	22
குறி நெடிலாவி	13
குன்றக் குறவன்	29
கொண்டன் முழங்கின	106
கொய்திணை	139
சீருந் தளையுஞ்	163
சீரொடு விட்டிசை	226
சுருக்கமில்	12
சுருங்கிற்று	192
தன்சீர் தன	32
தண்ணிழல் தண்பூ	27
தரவே தரவிணை	128
தரவொன்று தாழிசை	116
தருக்கியல் தாழிசை	111
திருமழை உள்ளார்	34
திரைத்த விருது	37
தென்றலிடையுந்	148
தேமா புளிமா	26
தேனூர் கமழ்	11
நற்கொற்ற வாயில்	95
நின்று விளங்கு	128
நேரிசை யாகு	111
நேரிசை யின்னிசை	94
பண்பார் புறநிலை	143
பொருளோடடி முதல்	193
மடப்பிடி பேடை	143
மாஞ்சீர் கலியுட்	171
மாவும் புண்மோனை	47
மூன்றடி யானும்	101
மோனை விகற்பம்	52
வருக்க நெடிலினம்	182
வளம்பட வென்பது	82
வாணெடுங்கண் பனி	122
விட்டிசைத் தல்லான்	169
வெண்பா அகவல்	76
வெண்பா வளம்பட	149
வெள்ளைக் கிரண்டடி	40
வைக றுகவூர்	94

யாப்பருங்கலக்காரிகை

1. உறுப்பியற் கருத்து

யாப்பருங்கலக்காரிகை உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று இயல் கொண்டது. முதலாவதாகிய உறுப்பியல் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற ஆறு உறுப்புக்களையும் நிரல்பட விரித்துரைக்கும்.

1. **எழுத்து:** எழுதப்படுதலின் எழுத்து ஆயிற்று. எழுத்துக்கள் சேர்ந்தே அசை ஆதலின் எழுத்தினை முதலில் கூறினர். குறில், நெடில், உயிர், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஆய்தம், மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், அளபெடை ஆகிய பதின்மூன்று எழுத்துக்களும் அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்களாம். செய்யுளுள் எழுத்து எண்ணுங்கால் ஒற்று நீக்கி எண்ணுதல் முறையாகும்.

2. **அசை:** அசைக்கப்படுதலின் அசையெனப் பெயர் பெற்றது. அசைத்து இசை கோடலின் அசை எனப் பெயர் பெற்றது எனினும் ஒக்கும். அவை: **நேரசை, நிரையசை.**

குறில் தனித்தோ (**ழி**) நெடில் தனித்தோ (**ஆ**) குறில் ஒற்றடுத்தோ (**வெள்**) நெடில் ஒற்றடுத்தோ (**வேல்**) வரின் நேரசையாகும்.

குறில் இணைந்தோ (**வெறி**) குறில் நெடில் இணைந்தோ (**சுரு**) குறில் இணைந்து ஒற்றடுத்தோ (**நிறம்**) குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்தோ (**விளாம்**) வரின் நிரை யசையாகும்.

3. **சீர்:** அசைகள் இணைந்தோ தனித்தோ சீர்பெற நிற்குமாயின் சீர் எனப்படும். அவை: 30.

ஓரசைச்சீர்	:	2
ஈரசைச்சீர்	:	4
மூவசைச்சீர்	:	8
நாலசைச்சீர்	:	16
		30

ஓரசைச்சீர் : 2.

நேர் × நாள்.
நிரை × மலர்.

ஓரசையே நின்றும் சீராகும்.

ஈரசைச்சீர் : 4.

நேர் நேர் × தேமா	}	மாச்சீர்.
நிரை நேர் × புளிமா		
நிரை நிரை × கருவிளம்	}	விளச்சீர்.
நேர் நிரை × கூவிளம்		

இவற்றை அகவற்சீர் அல்லது ஆசிரிய உரிச்சீர் என்பர்.

மூவசைச்சீர் : 8. ஈரசைச்சீர் நான்குடன் தனித்தனியே 'காய்' எனவும் 'கனி' எனவும் சேர்ப்பின் மூவசைச்சீர் எட்டாகும்.

நேர் நேர் நேர்	×	தே மாங்காய்	காய்ச்சீர் நான்கும் வெண்பா உரிச்சீராகும்.
நிரை நேர் நேர்	×	புளி மாங்காய்	
நிரை நிரை நேர்	×	கரு விளங்காய்	
நேர் நிரை நேர்	×	கூவிளங்காய்	
நேர் நேர் நிரை	×	தேமாங்கனி	கனிச்சீர் நான்கும் வஞ்சி உரிச்சீராகும்.
நிரை நேர் நிரை	×	புளி மாங்கனி	
நிரை நிரை நிரை	×	கருவிளங்கனி	
நேர் நிரை நிரை	×	கூவிளங் கனி	

நாலசைச்சீர் : 16. ஈரசைச்சீர் நான்கினையும் நிறுத்தி இறுதியில் தண்ணிழல், தண்பூ, நறும்பூ, நறுநிழல் என்ற வாய்பாடுகளைக் கொடுத்துத் தனித்தனியே பெருக்கினுல் நாலசைச்சீர் பதினாறும் வந்துறும் .

நேர் நேர் நேர் நேர்	×	தேமாந்தண் பூ	காய்ச்சீரோடு ஒக்கும்.
நிரை நேர் நேர் நேர்	×	புளி மாந் தண் பூ	
நிரை நிரை நேர் நேர்	×	கரு விளந் தண் பூ	
நேர் நிரை நேர் நேர்	×	கூ விளந் தண் பூ	
நேர் நேர் நிரை நேர்	×	தேமா நறும் பூ	
நிரை நேர் நிரை நேர்	×	புளி மா நறும் பூ	
நிரை நிரை நிரை நேர்	×	கரு விள நறும் பூ	
நேர் நிரை நிரை நேர்	×	கூ விள நறும் பூ	

நேர் நேர் நேர் நிரை × தேமாந் தண்ணிழல்
நிரை நேர் நேர் நிரை × புளி மாந் தண்ணிழல்
நிரை நிரை நேர் நிரை × கருவிளந் தண்ணிழல்
நேர் நிரை நேர் நிரை × கூவிளந் தண்ணிழல்
நேர் நேர் நிரை நிரை × தேமா நறுநிழல்
நிரை நேர் நிரை நிரை × புளி மா நறுநிழல்
நிரை நிரை நிரை நிரை × கரு விள நறுநிழல்
நேர் நிரை நிரை நிரை × கூவிள நறுநிழல்
} கனிச்சீரோடு ஒக்கும்.

4. தளை : 7 : தளைதல் = கட்டுதல். சீருடன் சீரினை இயையப் புணர்ப்பது.

(1) மா முன் நேர் : நேரொன்றாசிரியத்தளை.

(2) விள முன் நிரை: நிரையொன்றாசிரியத்தளை.

(3) மா முன் நிரை, விள முன் நேர் } இயற்சீர் வெண்டளை.

(4) காய் முன் நேர் : வெண்சீர் வெண்டளை.

(5) காய் முன் நிரை: கலித்தளை.

(6) கனி முன் நிரை: ஒன்றிய வஞ்சித்தளை.

(7) கனி முன் நேர் : ஒன்றாத வஞ்சித்தளை.

தன்சீர் நின்று தன் வருஞ்சீர் ஒன்றுவதும் ஒன்றாததும் என இருவகையில் தளைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று கின்ற நிலையில் அமைந்த தளைகள் நான்கு. அவை நேரொன் றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர்வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை என்பன. ஒன்றாத நிலையில் அமை கின்ற தளைகள் மூன்று. அவை, இயற்சீர் வெண்டளை, கலித் தளை, ஒன்றாத வஞ்சித்தளை என்பன.

ஓரசைச்சீரை ஆசிரியவுரிச்சீரே போலக் கொண்டு தளை கொள்ள வேண்டும். நான் கசைச்சீருள் பூச்சீர் எட்டினையும் காய்ச்சீர் போலவும், நிழற்சீர் எட்டினையும் கனிச்சீர் போலவும் தளைகொள்ளுதல் வேண்டும்.

5. அடி : சீர்கள் இயைந்து தளையடுத்து முடிவது அடி யாகும். குறளடி, சிந்தடி, அளவடி அல்லது நேரடி, நெடிலடி, கழிநெடிலடி என அடிகள் ஐந்து வகையாகும். இரண்டு சீர்கள்

கொண்ட அடி குறளடி எனப்படும். முச்சீர் கொண்டது சிந்தடி என்ப. நாற்சீர் கொண்டது நேரடியாகும். ஐஞ்சீர் கொண்டது நெடிலடி என்ப. ஆறுசீரும் அதற்கு மேற்பட்ட சீர்களும் கொண்டது கழிநெடிலடி எனப்படும்.

வெண்பா இரண்டடிச் சிறுமை பெறும். அகவற்பாவிற்கு மூன்றடி குறைந்த அளவாகும். கலிப்பா நான்கடிச் சிறுமை பெற்றுவரும். வஞ்சிப்பா மூன்றடிச் சிறுமையாக வரும். பெருமைக்கு அடி-மிகுதிக்கு-வரையறை இல்லை.

6. தொடை : அடிகளிலும் சீர்களிலும் அமைந்து அழகு பெறத் தொடுக்கப்படுவது தொடையாகும். தளைகளை மாலை யினுள்ளே இருக்கும் நார் எனவும், இதனை மாலையின் மேல் தொடுக்கப்படுகின்ற அழகுப்பொருள் எனவும் கூறலாம். இது தொடை எனவும் தொடைவிகற்பம் எனவும் இருவகையாக வரும். தொடைகள் எட்டுவகையாகும். அவை மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை எனப்பெயர் பெறும். முதலாம் எழுத்துகள் ஒன்றி வரத் தொடுக்கப்படுவது மோனையாகும். இறுதி எழுத்துக்கள் இயையத் தொடுக்கப்படுவது இயைபாகும். இரண்டாம் எழுத்துக் கள் ஒன்றிவரத் தொடுக்கப்படுவது எதுகை ஆகும். சொல்லோ அன்றிப் பொருளோ முரண்படத் தொடுக்கப்படுவது முரணாகும். அளபெடை அடிதோறும் வரத் தொடுக்கப்படுவது அளபெடை யாகும். ஓர் அடியின் ஈற்றில் நிற்கும் எழுத்தோ, அசையோ, சீரோ மற்றை அடிக்கு முதலாய் வருவது அந்தாதி எனப்படும். ஓர் அடியின் முதலில் வந்த சொற்களே அந்த அடிமுழுவதும் வருமாயின் அஃது இரட்டைத்தொடை எனப்பெயர் பெறும். மோனை முதலாகக் கூறப்பட்ட தொடைகள் எவையும் பொருந் தாமல் வருமாயின் அது செந்தொடை எனப்பெயர் பெறும்.

தொடை விகற்பம் : 7. இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்பன.

×	×	___	___	இணை
×		×	___	பொழிப்பு
×	___	___	×	ஒரூஉ

×	×	×		கூழை
×		×	×	மேற்கதுவாய்
×	×		×	கீழ்க்கதுவாய்
×	×	×	×	முற்று

அடிதோறும் பார்ப்பது தொடை எனப்படும். அதாவது மேலிருந்து கீழ் நோக்கிப் பார்க்கப் படுவதாகும். சீர் தோறும் பார்ப்பது தொடை விகற்பமாகும். அதாவது இடமிருந்து வலமாகப் பார்க்கப்படுவதாகும். மேலே காட்டியுள்ள கோடுகளை ஒரு பாவாக நினைந்து ஒவ்வொரு கோட்டினையும் ஒவ்வொரு சீராக நினைந்து பார்த்தால் × குறியிடப் பட்டவற்றில் மோனை முதலியவை அமைந்திருந்தால் அவ்வவ் வடிகட்கு நேரே எழுதப்பட்டுள்ள பெயர்களைப் பெறும். மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை ஆகிய ஐந்து தொடைகளே விகற்பம் (வேறுபாடு) பெறும். மற்றைய அந்தாதி, இரட்டை, செந்தொடை ஆகிய மூன்று தொடைகளும் விகற்பம் பெரு. மோனை முதலாக அளபெடை ஈருகக் கூறப்பெற்ற ஐந்து தொடைகளும் தனித்தனியே ஏழுவிகற்பங்களைத் தம்பால் ஏற்கும். எனவே ஐந்து தொடைகளும் ஏழுவிகற்பங்களோடு உறழத் தொடைவிகற்பம் முப்பத்தைந்தாகும்.

விகற்பம் பெறும் தொடைகள் : 5.
தொடை விகற்பங்கள் : 7.
இவை யிரண்டும் உறழ 5×7 : 35.
தொடைகள் : 8.
தொடை, தொடை விகற்பங்கள் மொத்தம் } 43 ஆகும்.

உரையிடைச் சிலகருத்துக்கள் : குற்றெழுத்தும் ஒற்றளபெடையும் ஒரோவொன்று ஒரு மாத்திரை. நெட்டெழுத்து இரண்டு மாத்திரை. உயிரளபெடை மூன்று மாத்திரை, ஆய்தம், மெய், குற்றியலிகரம், குற்றியலுகரம் ஒரோவொன்று அரை மாத்திரை. ஐகாரக்குறுக்கம் ஒன்றரை மாத்திரை மகரக்குறுக்கமும் ஆய்தக் குறுக்கமும் ஒரோவொன்று கால் மாத்திரை. இவற்றை "அறிஞர் உரைத்த அளபும்" என்ற மிகையினுல்

உரையாசிரியர் கொள்ளுகிருர். ஆசிரியர் மாத்திரையை உறுப்பு எனச் சேர்க்காமையின் உரையாசிரியர் இவற்றைக் கொள்ள நேர்ந்தது.

வெண்பாவினுள் நாலசைச்சீர் வாரா; ஆசிரியத்துள்ளும் குற்றுகரம் வந்துழியன்றி வாரா: வஞ்சியுள் குற்றுகரம் வராதேயும் வரப்பெறும்; ஓரடியுள் இரண்டு நாலசைச்சீர் வஞ்சியுள் வரப்பெறும்; மற்றைய பாக்களில் ஓரடியுள் ஒன்றன்றி வாரா; நிழல் என்று முடியும் நாலசைச்சீர் எட்டும் வஞ்சிப்பாவினுள் அல்லது வாரா.

சீர்கள் தளை கொள்ளுங்கால் தன்சீர் நின்று வருகின்ற சீரும் தன்சீராகவே அமைந்து தளைகொள்ளுதலே சிறப்புடையதாகும். எனினும், தன்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் நின்று தளை கொள்ளுதல் இழுக்காகாது என்பது எல்லாத் தளைகளுக்கும் ஒக்கும்.

இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுக்கப்படுவது எதுகையாகும்; எனினும், முதலெழுத்து நெடிலாக அமையுமேயானுல் அடுத்த அடியும் நெடிலாக அமைந்து எதுகை அமைவதே ஏற்புடைத்து. அஃதாவது, கட்டு என்பதற்குப் பட்டு என்பதல்லது பாட்டு என்பது எதுகையாகாது. காட்டு என்பதற்குப் பாட்டு என்பதல்லது பட்டு என்பது எதுகையாகாது.

முரண் தொடை பொருளாலோ, அன்றிச் சொல்லாலோ மறுதலைப்படத் தொடுக்கப்படுவது. ''காலையிற் சென்று மாலையில் திரும்பினுன்'' என்பது பொருள் முரணுகும். காலையிற் கடைக்குச் சென்று மாலை வாங்கி வந்தான்'' என்பது சொல் முரணுகும்.

மேற்கதுவாய், கீழ்க்கதுவாய் என்ற தொடை விகற்பங்களை ஒருசார் ஆசிரியர் இரண்டாம் சீர்க்கண் இன்றி வருவதைக் கீழ்க்கதுவாய் என்றும், மூன்ருஞ் சீர்க்கண் இன்றி வருவதை மேற்கதுவாய் என்றும் கூறுவர்.

யாப்பருங்கலக்காரிகை

மூலமும் உரையும்

தற்சிறப்புப் பாயிரம்

கந்த மடிவிற் கடிமலர்ப் பிண்டிக்கண் ணோர்நிழற்கீழ்
எந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே. (1)

என்பது காரிகை நூலுரைக்குமிடத்து நூற்பெயரும், காரணமும், ஆக்கியோன் பெயரும், அளவும், பயனும் எடுத்துரைக்கற் பாற்று.

அற்றேல் இந்நூல் என்ன பெயர்த்தோ வெனின், பாளித்தியம் என்னும் பாகத இலக்கணமும், பிங்கலம் என்னும் சந்தோபிசிதமும் போலக் காரிகை யாப்பிற்றாய், குணகாங்கியம் என்னுங் கருநாடகச் சந்தமேபோல மகடூஉ முன்னிலைத்தாய், அவையடக்கமும் உடையதாய், மயேச்சுரர் யாப்பேபோல உதாரணம் எடுத்தோதி, இசைத் தமிழ்ச் செய்யுள் துறைக் கோவையே போலவும் அருமறையகத் தட்டகவோத்தின் வருக்கக் கோவையே போலவும் உருபாவதாரத்திற்கு நீதகச் சுலோகமே போலவும் முதனினைப் புணர்த்திய இலக்கியத்ததாய், வேதத்திற்கு நிருத்தமும், வியாகரணத்திற்குக் காரிகையும், அவிநயர் யாப்பிற்கு நாலடி நாற்பதும்போல யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய், அலங்காரம் உடைத்தாகச் செய்யப் பட்டமையால் 'யாப்பருங்கலக்காரிகை' யென்னும் பெயர்த்து.

இந்நூல் யாது காரணமாகச் செய்யப்பட்டதோ எனின், பண்டையோர் உரைத்த தண்டமிழ் யாப்பிற் கொண்டிலாத குறியினோரைக் குறிக்கொளுவுதல் காரணமாகவும், தொல்லைப் பனுவல் துணிபொருள் உணர்ந்த நல்லவையோரை நகுவிப்பது காரணமாகவும் செய்யப்பட்டது.

இந்நூல் யாவராற் செய்யப்பட்டதோவெனின், ஆரிய மென்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப் படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது.

இந்நூல் எவ்வளவைத்தோ எனின், இயல் வகையால் மூன்றும், காரிகை வகையால் நாற்பத்துநான்கும், கிரந்த வகையால் தொண்ணூறு கிரந்தமும், இருபத்தெட்டெழுத் தும் எனக் கொள்க. அவற்றுள், ஒரு கிரந்தமாவது ஒற்றொழித்து, உயிரும் உயிர்மெய்யுமாகிய முப்பத்திரண் டெழுத்தாமெனக் கொள்க. அவற்றுள், நேரசை முதலாகிய காரிகை இருபத்தொன்றும், நிரையசை முதலாகிய காரிகை இருபத்துமூன்றுமெனக் கொள்க.

நேரசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்து நான்கும், நிரையசை முதலாகிய காரிகை ஒன்றி னுக்கு எழுத்து அறுபத்தெட்டுமெனக் கொள்க. இவ்விரு திறமுங் கூட்டி உறழ இரண்டாயிரத்துத் தொளாயிரத் தெட்டு எழுத்தா மெனக் கொள்க. நேரசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக் கெழுத்துப் பதினாறும் நிரை யசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக் கெழுத்துப் பதினேழுமெனக் கொள்க. என்னை,

> அடியடி தோறு மைஞ்சீ ராகி
> முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
> கடையொரு சீரும் விளங்கா யாகி
> நேர்பதி னாறே நிரைபதி னேழென்
> றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே

என்றாராகலின்.

இந்நூலாற் பயன் யாதோ எனின், யாப்பாராய்தல் பயன்.

யாப்பு ஆராயவே பா, தாழிசை, துறை, விருத்தங் களால் ஆக்கப்பட்ட அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அவற்றின் மெய்ம்மை யறிந்து, விழுப்பமெய்தி,

இம்மை, மறுமை வழுவாமல் நிகழ்வாராதலின்; இருமைக்கும் உறுதிபயப்பது யாப்பெனக் கொள்க.

யாப்பெனினும், பாட்டெனினும், தூக்கெனினும், தொடர்பெனினும், செய்யுளெனினும் ஒக்கும்.

யாப்பும்
தூக்கும் பாட்டும் தொடர்புஞ் செய்யுளை
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே

என்றாராகலின்.

இந்நூல் உறுப்பியலும், செய்யுளியலும், ஒழிபியலும் என மூவகைப்படும். அவற்றுள், இவ்வியல் என்ன பெயர்த்தோ எனின், எழுத்தும் அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் என்னும் ஆறு உறுப்பினையும் உணர்த்திற்றுதலான் உறுப்பியலென்னும் பெயர்த்து.

இவ்வியலுள் இத்தலைக் காரிகை என்னுதலிற்றோ வெனின், தற்சிறப்புப் பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று. என்னை,

வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச்
சிறப்பென்னும் பாயிர மாம்

தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு
மெய்த வுரைப்பது தற்சிறப் பாகும்

என்றாராகலின்.

பொருள் :

'கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்
எந்த மடிக ளிணையடி யேத்தி'

கந்தம் என்பது நறு நாற்றம், மடிவு என்பது கேடு, இல் என்பது இல்லாமை, கடி என்பது மிகுதி, மலர் என்பது பூ, பிண்டி என்பது அசோகு, கண் என்பது இடம், ஆர்தல் என்பது நிறைதல், நிழல் என்பது சாயை, கீழ் என்பது பக்கம், எம்மும் தம்மும் இடைச்சொல், அடிகளாவார்

சுவாமிகள், இணை அடி ஏத்தி என்பது துணையான சீர்ப் பாதங்களை வாழ்த்தி என்றவாறு.

'எழுத்தசைசீர், பந்த மடிதொடை பாவினங் கூறுவன்'

எழுத்தென்பது உயிரும் உயிர்மெய்யும் அளபெடையும் உள்ள எழுத்துப் பதின்மூன்றினையும், அசை என்பது அவ் வெழுத்துக் கூடின நேரும் நிரையும் ஆகிய அசையிரண்டி னையும், சீர் என்பது அவ்வசை கூடின சீர் முப்பதினையும், பந்தம் என்பது அச் சீர் கூடின தளை ஏழினையும், அடி என்பது அத்தளை கூடின அடி ஐந்தினையும், தொடை என்பது அவ்வடி கூடின தொடை நாற்பத்து மூன்றினையும், பா என்பது அத்தொடை கூடின பா ஐந்தினையும், இனம் என்பது அப் பாக் கூடின இனம் மூன்றினையும்,—கூறுவன் என்பது இவ்வெட்டினையும் ஆம்படியைச் சொல்லுவன் என்றவாறு.

'பல்லவத்தின், சந்தமடிய வடியான் மருட்டிய தாழ்குழலே'

பல்லவம் என்பது தளிர், சந்தம் என்பது நிறம், மடிய என்பது கெட என்றவாறு. அடியால் என்பது பாதத்தால் என்றவாறு. மருட்டிய என்பது மயக்கிய என்றவாறு. தாழ்குழல் என்பது தாழ்ந்த குழலினையுடையாள் என்றவாறு.

பொழிப்புரை :

முருகு விரியும் மொய்ம்மல ரசோகின் கீழிருக்கும் அருகனது அடி வணங்கி எழுத்தும், அசையும், சீரும், தளையும், அடியும், தொடையும், பாவும், பாவினமும் ஆமாறுரைப்பன்; தளிர் புரையுஞ் சிறு மெல்லடித் தகை நெடுங் குழற் றையலாய் என்றவாறு. என்னை,

பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்
பிண்ட மாகக் கொண்டுரைப் பதுவே

என்றாராகலின்.

'கந்தமடிவில்...இணையடி யேத்தி' என வணக்கம் சொல்லப்பட்டது. 'எழுத்து...இனங் கூறுவன்' என அதிகாரங் கூறப்பட்டது. என்னை,

> வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து
> மங்கல மொழிமுதல் வகுத்து
>
> எடுத்துக் கொண்ட இலக்கண இலக்கியம்
> இடுக்கண் இன்றி இனிது முடியும்

என்பவாகலின் ஈண்டு வணக்கஞ் செய்யப்பட்டது.

இனி, எழுத்து முதலாகிய எட்டனையும் காரணக்குறியான் வழங்குமாறு. என்னை,

> எழுதப் படுதலின் எழுத்தே; அவ்வெழுத்
> தசைத்திசை கோடலின் அசையே; அசையியைந்து
> சீர்கொள நிற்றலிற் சீரே; சீரிரண்டு
> தட்டு நிற்றலின் தளையே; அத்தளை
> அடுத்து நடத்தலின் அடியே; அடியிரண்டு
> தொடுத்தன் முதலாயின தொடையே; அத்தொடை
> பாவி நடத்தலிற் பாவே; பாவொத்து
> இனமா நடத்தலின் இனமெனப் படுமே

என வரும். பந்தமெனினும், தளை யெனினும் ஒக்கும் என்னை,

> பகுத்தெதிர் நிற்றலிற் பந்தந் தளையென
> வகுத்தனர் மாதோ வண்டமி ழோரே

என்றாராகலின்.

'பல்லவத்தின் சந்த மடிய வடியான் மருட்டிய தாழ் குழலே' என்பது மகடூஉ முன்னிலை. ஏகாரம் ஈற்றசை.

அவையடக்கம்

> தேனார் கமழ்தொங்கன் மீனவன் கேட்பத்தெண் ணீரருவிக்
> கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்
> யானு நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமால்
> ஆனு வறிவின வர்கட்கென் னுங்கொலோ னுதரவே. (2)

இக்காரிகை நூலினது பெருந்தன்மையும், ஆசிரியரது பெருந்தன்மையும், தனதுள்ளக் குறையும் உணர்த்திய முகத்தான் அவையடக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

(பொருள்) தேன் நிறைந்த மணங் கமழ்கின்ற வேப்ப மாலையைத் தரித்த பாண்டியன் கேட்க, தெளிந்த அருவி நீரையுடைய சந்தனச்சோலை சூழ்ந்த பொதிய மலையில் எழுந்தருளி யிருக்கின்ற அரிய தவத்தினையுடைய முதலாசிரியராகிய அகத்திய முனிவரால் அருளிச் செய்யப்பட்ட அழிவின்றி நிலைபெற்ற முத்தமிழுள், இயற்றமிழின் கூறுகிய யாப்பிலக்கண நூலை, யானும் அவாவினால் எனது புல்லிய நாவைக்கொண்டு சொல்லத் தொடங்கினேன். இஃது அறிவிலியாகிய எனக்கே நகையினை விளைக்குமாயின் குறைவில்லாத அறிவினை உடையவர்க்கு யாதாகுமோ! எ - று.

ஏ: அசை நிலை. இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. 'யானு நடாத்துகின்றேன்' என்பதற்கு வேறு பொருள் கூறுவாருமுளர்.

சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றேயிவ் விருநிலமே. (3)

இ. கை. புலவரது சிறப்புணர்த்திய முகத்தான் அவையடக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

(பொ - ள்) பனி தோய்ந்த நெடிய இமயவரையிடத்தைச் சேர்ந்த இழிவாகிய கரிய காக்கைப் புள்ளும் பொன்னிற முற்றிருக்குமென்று பரந்த விவ்வுலகத்தவர் சொல்வர். இவ்வாறே குற்றந் தீர்ந்த அளவில்லாத நூற்கேள்வியையுடைய புலவருக்கு முன் யான் கூறிய சிறப்பில்லாத பிண்டப் பொருளும் சிறந்த நுண்பொருளாம்; எ - று.

அன்று, ஓ, ஏ: அசைநிலை.

தற்சிறப்புப் பாயிரம் முற்றும்.

1. உறுப்பியல்

1. எழுத்து

அசைக்கு உறுப்பாம் எழுத்துக்கள்

குறினெடி லாவி குறுகிய மூவுயி ராய்தமெய்யே
மறுவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருட்டும்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞ ருரைத்த வளபு மசைக்குறுப் பாவனவே. (4)

இ-கை. மேலதிகாரம் பாரித்த எட்டனுள் அசைக் குறுப்பாம் எழுத்துக்களது பெயர் வேறுபா டுணர்த்துதல் நுதலீற்று.

1. குறில்

(பொ-ள்) குறில் என்பது குற்றெழுத்து :— அ, இ, உ, எ, ஒ என விவை. என்னை,

அ, இ, உ,
எ, ஒ என்னு மப்பா லைந்து
மோரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப (தொல். 3)

என்றாராகலின்.

2. நெடில்

நெடிலென்பது நெட்டெழுத்து :— ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவிவை. என்னை,

ஆ-ஈ-ஊ-ஏ-ஐ
ஓ-ஔ என்னு மப்பா லேழு
மீரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப (தொல். 4)

என்றாராகலின்.

3. ஆவி - உயிர்

ஆவி என்பது உயிரெழுத்து :— அவை அகரமுதல் ஔகார மீறாய்க் கிடந்த பன்னிரண்டெழுத்து மெனக் கொள்க. என்னை,

ஔகார விறுவாய்ப்
பன்னீ ரெழுத்து முயிரென மொழிப (தொல். 8)

என்றாராகலின்.

4, 5, 6. குறுகிய மூவுயிர்

குறுகிய, மூவுயிராவன :— குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஐகாரக் குறுக்கமும் என விவை. இவை மேலே சொல்லுதும்.

7. ஆய்தம்

ஆய்தம் என்பது அஃகேனம். அஃகேனம் எனினும் ஆய்தம் எனினும், தனிநிலை எனினும், புள்ளி எனினும், ஒற்றெனினும் ஒக்கும். என்னை,

அஃகேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி
ஒற்றிப் பால ஐந்தும் இதற்கே

என்றாராகலின்.

வரலாறு:—எஃகு—கஃசு—கஃடு—கஃது—கஃபு—கஃறு என வரும். என்னை,

குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே
(தொல். 38)

என்றாராகலின்.

8. மெய்

இனி மெய்யாவன :— ககரமுதல் னகரமீருய்க் கிடந்த பதினெட்டெழுத்தும் எனக் கொள்க. என்னை,

னகார விறுவாய்ப்
பதினெண் எழுத்து மெய்யென மொழிப (தொல். 9)

என்றாராகலின்.

மெய்யெனினும், உடம்பெனினும், உறுப்பெனினும், ஒற்றெனினும், புள்ளியெனினும் ஒக்கும். என்னை,

மெய்யுடம் புறுப்பொற் றிவைதாம் ஒருபொருட்
செய்யும் என்று செப்பினர் புலவர்

மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல் (தொல். 15)
எகர வொகரத் தியற்கையு மற்றே (தொல். 10)
மெய்யி னியக்க மகரமொடு சிவணும் (தொல். 46)
மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும் (தொல். 139)

என்றாராகலின்.

ஏகாரம் எண்ணேகாரம். என்னை,

> எண்ணே கார மிடையிட்டுக் கொளினு
> மெண்ணுக்குறித் தியலு மென்மனுர் புலவர் (தொல். 773)

என்ருராகலின்.

9, 10, 11. மூவினம்

மூவினமாவன :— வல்லினம் மெல்லினம் இடையினம் என விவை. வல்லினமாவன : க, ச, ட, த, ப, ற. மெல்லின மாவன : ங, ஞ, ண, ந, ம, ன. இடையினமாவன: ய, ர, ல, வ, ழ, ள. என்னை,

> வல்லெழுத் தென்ப கசட தபற (தொல். 19)
> மெல்லெழுத் தென்ப ஙஞண நமன (தொல். 20)
> இடையெழுத் தென்ப யரல வழள (தொல். 21)

என்ருராகலின்.

'மறுவறு மூவினம்' என்று சிறப்பித்த வதனுல், அவை உயிர்மெய்யாகிய காலத்தும், அப்பெயரானே வழங்கப்படு மெனக் கொள்க. என்னை,

> விதப்புக் கிளவி வேண்டியது விளக்கும்

என்ருராகலின்.

12. உயிர்மெய்

உயிர்மெய்யாவன : உயிரும் மெய்யுங் கூட்டி உச்சரிக் கப்படாநின்ற பன்னிரு பதினெட் டிருநூற்றெருபத்தா றெழுத்தும் எனக் கொள்க. என்னை,

> உயிரீ ராறே மெய்ம்மூ வாறே
> யம்மூ வாறு முயிரொ டுயிர்ப்ப
> விருநூற் றெருபத் தாறுயிர் மெய்யே (?)

> புள்ளி யில்லா வெல்லா மெய்யு
> முருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலு
> மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலு
> மாயீ ரியல வுயிர்த்த லாறே (தொல். 17)

> மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே (தொல். 18)

என்ருராகலின்.

'மைதீ ருயிர்மெய்' என்று சிறப்பித்த வதனுல் ஏறிய உயிரினளவே உயிர்மெய்க்கும் அளவெனக் கொள்க. என்னை,

உயிர்மெய்க் களவு முயிரள வென்ப

என்ருராகலின்.

'மதி மருட்டும்...நுண்ணிடையாய்' என்பது மகடூஉ முன்னிலை. என்னை,

வெண்பா

இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்—தடங்கண்ணுய்
உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும்
கைப்பரு பேய்ச்சுரையின் காய் (நாலடியார் 116)

எனப் பிறரும், 'தடங்கண்ணுய்' என்று மகடூஉ முன்னிலை சொன்னுர் உளரெனக் கொள்க.

மதி என்பது ஈண்டுப் பிறை; அஃது,

இருகோட் டொருமதி யெழில்பெற மிலைச்சினை
(நக்கீரர் திருவெழுகூற்)

என்றற்போலக் கொள்க. அல்லதூஉம் அறிவினை மயக்குஞ் சிறுநுதல் முதலாகிய உறுப்புக்களை யுடையா யென்றுமாம்.

13. அளபெடை

'அறிஞ ருரைத்த அளபும்' என்பது புலவராற் சொல்லப்பட்ட அளபெடைகளும் எ-று.

அளபெனினும், அளபெடையெனினும், புலுதமெனினும் ஒக்கும். என்னை,

அளபே புலுத மாயிரு பெயரு
மளபெடை யென்ப வறிந்திசி னோரே

என்ருராகலின்.

அவை போக்கிச் சொல்லுதும்.

'அசைக் குறுப்பாவன' என்பது இப்பதின்மூன்று திறத் தெழுத்தும் அசைக்குறுப்பாம் எழுத்து எ-று.

குறில்நெடி லளபெடை யுயிருறுப் புயிர்மெய்
வலிய மெலிய இடைமையோ டாய்தம்
இ-உ-ஐ யென் மூன்றன் குறுக்கமோ
டப்பதின் மூன்று மசைக்குறுப் பாகும்

என்றார் காக்கைபாடினியாரும் எனக் கொள்க.

ஏகாரம் ஈற்றசை; தேற்றமெனினும் அமையும். என்னை,

தேற்றம் வினவே பிரிநிலை யெண்ணே
யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே (தொல். 742)

என்றாராகலின்.

இனி, மூவுயிர்க் குறுக்கமும் அளபெடைகளும் ஆமாறு சொல்லுதும்.

அவற்றுள் குற்றியலுகரம் வருமாறு:—

குற்றியலுகரம்

நெடிற் கீழும், நெடிலொற்றின் கீழும், குறிலிணைக் கீழும், குறிலிணை யொற்றின் கீழும், குறினெடிற் கீழும் குறினெடி லொற்றின் கீழும், குற்றொற்றின் கீழும் என்றிவ் வேழிடத்தும் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால், அது குற்றியலுகர மென்று வழங்கப்படு மெனக் கொள்க. என்னை,

நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை
ஒற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப

எழுவகை இடத்துங் குற்றிய லுகரம்
வழுவின்றி வரூஉம் வல்லா றூர்ந்தே

என்றாராகலின்.

வருமாறு: நாகு-காசு-காடு-காது-காபு-காறு என நெடிற்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

நாக்கு-காச்சு-காட்டு-காத்து-காப்பு-காற்று என நெடிலொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

வரகு – முரசு-முருடு - மருது - துரபு - கவறு எனக் குறிலிணைக் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அரக்கு - பொரிச்சு - தெருட்டு - குருத்து - பொருப்பு - சிரற்று எனக் குறிலிணை ஒற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அசோகு – பலாசு - மலாடு - கெடாது - புதாபு - விராறு எனக் குறில் நெடிற் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

தமாக்கு-தடாச்சு-பனுட்டு-கடாத்து-புதாப்பு - விராற்று எனக் குறில் நெடில் ஒற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு

அக்கு–கச்சு–கட்டு-கத்து–கப்பு-கற்று எனக் குற்றொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு காண்க.

இனிக் குற்றியலுகரம் அறுவகைப்படும் என்பாருமுளர். அவையாவன :—ஈரெழுத்தொருமொழி, உயிர்த் தொடர் மொழி, இடைத்தொடர் மொழி, ஆய்தத்தொடர்மொழி, வன்றொடர் மொழி, மென்றொடர் மொழி என்றிவை. என்னை,

ஈரெழுத் தொருமொழி யுயிர்த்தொட ரிடைத்தொட
ராய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொட
ராயிரு மூன்றே யுகரங் குறுகிடன் (தொல். 406)

என்றூராகலின்.

குற்றியலிகரம்

இனிக் குற்றியலிகரம் வருமாறு:— உகரந் திரிந்தும் திரியாதும் யகரமோ டியைபின்கண் வந்த இகரம் குற்றியலிகரம் என்று வழங்கப்படும். என்னை,

வல்லெழுத் தாரூ டெழுவகை யிடத்து
முகர மரையாம் யகரமோ டியையி
னிகரமுங் குறுகு மென்மனர் புலவர்
(அவிநய நூற்பா. யா. வி. 2 உரை)

யகரம் வருவழி யிகரங் குறுகு
முகரக் கிளவி துவரத் தோன்றாது (தொல். 410)

என்றாராகலின்.

வ - று: நாகியாது-காசியாது-காடியாது-காதியாது-காபியாது-காறியாது என வரும்.

ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக் கொள்க இனித் திரியாது வந்த குற்றியலிகரம் வருமாறு: கேண்மியா, சென்மியா எனக் கொள்க. என்னை,

குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே (தொல். 34)

என்றாராகலின்.

ஐகாரக்குறுக்கம்

இனி ஐகாரக் குறுக்கம் வருமாறு:—

அளபெடுத்தற்கண்ணும், தனியே சொல்லுதற்கண்ணும் அன்றி அல்லாதவழி வந்த ஐகாரம் தன்னளவிற் சுருங்கி ஒன்றரை மாத்திரையும், ஒரு மாத்திரையுமாகக் குறுகுமெனக் கொள்க. ஐகாரம் குறுகுமிடத்து, மொழி முதலிடை கடையென மூன்றிடத்துங் குறுகும். என்னை,

அளபெடை தனியிரண் டல்வழி ஐ ஔ
வுளதா மொன்றரை தனிமையு மாகும்
(அவிநயம். யா. வி. 2 நூ. உரை)

என்றாராகலின்.

வ - று: ஐப்பசி - மைப்புறம்; மடையன் - இடையன்; குவளை - தவளை; திணை - பனை என முதலும் இடையும் கடையும் குறுகியவாறு கண்டுகொள்க. என்னை,

மொழிமுத லிடைகடை யெனமூன் றிடத்து
மழியா தைகா ரங்குறு கும்மே

என்றாராகலின்.

அளபெடை

இனி, அளபெடை வருமாறு :— அளபெடை இரண்டு வகைப்படும், உயிரளபெடையும் ஒற்றளபெடையும் என. என்னை,

உயிரள பெடையு மொற்றளபெடையுமென்
றுயிரண் டென்ப வளபெடை தானே

என்றாராகலின்.

உயிரளபெடை

அவற்றுள், உயிரளபெடைக்குச் சொல்லுமாறு :— உயிருள் நெட்டெழுத்தேழும் அளபெடுக்கும். அவை அளபெடுக்குமிடத்து ஐகாரம் இகரத்தோடும், ஔகாரம் உகரத்தோடும் அளபெடுக்கும்; ஒழிந்தனவுந் தமக்கினமாகிய குற்றெழுத்தோடு அளபெடுக்கும் எனக் கொள்க. என்னை,

குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே (தொல். 41)

ஐ ஔ வென்னு மாயீ ரெழுத்திற்
கிகர வுகர மிசைநிறை வாகும் (தொல். 42)

என்றார் தொல்காப்பியனார்.

அவை நான்கிடத்தும் வந்தளபெடுக்கும். நான்கிடமாவன : தனிநிலையும், ஒருசொல் முதனிலையும், இடைநிலையும், இறுதி நிலையும் என விவை. என்னை,

தனிநிலை முதனிலை யிடைநிலை ஈறென
நால்வகைப் படூஉமள பாய்வரு மிடனே

என்றாராகலின்.

வ - று : ஆஅ - ஈஇ - ஊஉ - ஏஎ-ஐஇ-ஓஒ-ஔஉ என இவை ஏழும் தனிநிலை அளபெடை.

ஆஅரிடம் - ஈஇரிலை - ஊஉரிடம் - ஏஎரிகள் - ஐஇயவி - ஓஒரிகள் - ஔஉவியம் என இவை ஏழும் முதனிலை அளபெடை.

படாஅகை - பரீஇயம் - கழூஉமணி - பரேஎரம் - வளைஇயம் - புரோஒசை - அநௌஉகம் என இவை ஏழும் இடைநிலை அளபெடை.

கடாஅ - குரீஇ - கழூஉ - மிலேஎ - கடைஇ - அரோஒ - அநௌஉ என இவை ஏழும் இறுதிநிலை அளபெடை.

உயிரளபெடை எழுத்துநோக்க ஏழாம். இடம் நோக்க நான்காம். எழுத்தும் இடமும் உறழ்ந்து நோக்க இருபத் தெட்டாமெனக் கொள்க.

ஒற்றளபெடை

இனி ஒற்றளபெடைக்குச் சொல்லுமாறு: ஒற்றுக் களுள் ங-ஞ-ண-ந-ம-ன-வ-ய-ல-ள ஆய்த மென்னும் பதினேரொற்றும், குறிற்கீழும் குறிலிணைக்கீழும் வந்து அளபெடுக்குமெனக் கொள்க. என்னை,

> **ஙஞண நமன வயலள வாய்த**
> **மெனுமிவை யீரிடத் தளபெழு மொரோவழி**
> **(யாப்பருங்கல விருத்தி மேற்)**

> **வன்மையொடு ரஃகான் ழஃகா னொழிந்தாங்**
> **கன்மை யாய்தமோ டளபெழு மொரோவழி**

என்றூராகலின்.

வ - று: மங்ங்கலம் - மஞ்ஞ்சு - மண்ண்ணு - பந்ந்து - அம்ம்பு - மின்ன்னு - தெவ்வ்வர் - வெய்ய்யர் - செல்ல்க - கொள்ள்க - எஃஃகு எனக் குறிற்கீழ்ப் பதினேரொற்றும் அளபெழுந்தவாறு கண்டு கொள்க.

அரங்ங்கம்-முரஞ்ஞ்சு-முரண்ண்டு-பருந்ந்து-அரும்ம்பு-முரன்ன்று-குரவ்வ்வை - அரைய்ய்யர் - குரல்ல்கள் - திரள்ள் கள்-வரஃஃகு எனக் குறிலிணைக்கீழ்ப் பதினேரொற்றும் அளபெழுந்தவாறு கண்டுகொள்க.

இவ்விருபத்திரண்டு புள்ளியளபெடையுஞ் செய்யுளகத் தல்லது பரவை வழக்கினுள் வாரா எனக்கொள்க. என்னை,

மாத்திரை வகையால் தளைதப கெடாநிலை
யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்
(யாப்பருங்கல விருத்தி மேற்)

என்றாராகலின்.

மாத்திரை

'அறிஞ ருரைத்த வளபும்' என்று சிறப்பித்தவதனல் குற்றெழுத்தும் ஒற்றளபெடையும் ஒரோ ஒன்று ஒரு மாத்திரை; நெட்டெழுத்து இரண்டு மாத்திரை; உயிரளபெடை மூன்று மாத்திரை; ஆய்தமும், மெய்யும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஒரோ ஒன்று அரை மாத்திரை; ஐகாரக் குறுக்கம் ஒன்றரை மாத்திரை; மகரக்குறுக்கமும், ஆய்தக் குறுக்கமும் ஒரோ ஒன்று கால் மாத்திரை. என்னை,

ஒன்றிரண் டொருமூன் றென்றரை யரைகா
லென்றனர் பொழுதிவை யிமைநொடி யளவே

கண்ணிமை கைந்நொடி யளவே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே

ஒற்றுக்கு மாத்திரை யொன்றே யளபெழுந்தாற்
றெற்றக் குறியதுவே யாம்

உன்னல் காலே யூன்ற லரையே
முறுக்கல் முக்கால் விடுத்த லொன்றே

என்றார் பிறருமெனக் கொள்க.

2. அசை

குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினு நிரைந்தொற் றடுப்பினும் நேர்நிரையென்
றறிவேய் புரையுமென் றோளி யுதாரண மாழிவெள்வேல்
வெறியே சுருநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே (5)

இ-கை. நிரனிறைப் பொருள்கோள் வகையால் நேரசையும் நிரையசையும் ஆமாறும், அவற்றிற்கு உதாரணம் ஆமாறும் உணர்த்துதல் நுதலிற்று:

(இ-ள்.) குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறினெடிலே நெறியே வரினு நிரைந்தொற் றடுப்பினும் நேர்

நிரை யென்றறி' என்பது: குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்து வரினும் நேரசையாம். குறிலிணைந்து வரினும், குறினெடி லிணைந்து வரினும், குறிலிணைந் தொற்றடுத்து வரினும், குறினெடி லிணைந் தொற்றடுத்து வரினும் நிரையசையாம் என்னை,

நெடில்குறி றனியாய் நின்றுமொற் றடுத்து
நடைபெறு நேரசை நால்வகை யானே

(யாப்பருங்கலம்: 6)

குறிலிணை குறிநெடி றனித்து மொற்றடுத்து
நெறிமையி னுன்காய் வருநிரை யசையே

(யாப்பருங்கலம்: 8)

என்றாராகலின்.

'வேய்புரையு மென்றோளி' என்பது மகடூஉ முன்னிலை.

'உதாரணம் ஆழி வெள் வேல் வெறியே சுரு நிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே' என்பது: நேரசைக்கு உதாரணம்—ஆ—ழி—வெள்—வேல் எனவும், நிரையசைக்கு உதாரணம் வெறி — சுரு — நிறம் — விளாம் என வுஞ் சொல்லுவர் புலவர்; எ - று.

அகலம் உரையிற் கொள்க.

அகலமெனினும், விருத்தியுரை யெனினும் ஒக்கும். என்னை,

அகல மென்ப தாசறக் கிளப்பின்
விகல மின்றி விரித்துரைப் பதுவே

என்றாராகலின்.

'விண்டோய் விளாம்' என்று சிறப்பித்தவதனுல் நேரசை ஓரலகு பெறும்; நிரையசை ஈரலகு பெறுமெனக் கொள்க.

வ - று: ஆ - எனத்தனி நெடில் நேரசை ஆயினவாறு. ழி-எனத் தனிக்குறில் நேரசை ஆயினவாறு. வெள்-எனக் குற்றெழுத்து ஒற்றடுத்து நேரசை ஆயினவாறு, வேல் என நெட்டெழுத்து ஒற்றடுத்து நேரசை ஆயினவாறு. வெறி

எனக் குறிலிணைந்து நிரையசை ஆயினவாறு. சுரு எனக் குறில் நெடிலிணைந்து நிரையசை ஆயினவாறு. நிறம்-எனக் குறிலிணைந்து ஒற்றடுத்து நிரையசை ஆயினவாறு. விளாம்-எனக் குறினெடிலிணைந்து ஒற்றடுத்து நிரையசை ஆயினவாறு காண்க.

இவற்றிற்குச் செய்யுள் வருமாறு :

நேரிசை ஆசிரியப்பா

போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே

இது நேரசை நான்கும் வந்த செய்யுள்.

நேரிசை ஆசிரியப்பா

அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே

இது நிரையசை நான்கும் வந்த செய்யுள்.

'குறிலே நெடிலே' என்னும் இக்காரிகை தன்னையே இலக்கியமாக அலகிடினும் இழுக்காது. என்னை,

குறிலே நெடிலே குறிலிணை குறினெடி
லொற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரு நிரையு மென்றிசிற் பெயரே (தொல். 1261)

என்றார் தொல்காப்பியனார்.

கோழி வேந்தன் நேரசை நிரையசை
யாழ்புனல் வாழ்க்கை வெறி குரா நிறங் குரால்

என்று உதாரண மெடுத்தோதினாரு முளரெனக் கொள்க.

3. சீர்

ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினவாம்
நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யாலிறுப
வாரசை மென்மலே மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
ஓரசை யேநின்றுஞ் சீராம் பொதுவொரு நாலசையே. (6)

இ-கை. அவ்வசைகளானுகிய சீர்களது பெயர் வேறு பாடுணர்த்துதல் நுதலிற்று.

'ஈரசை நாற்சீ ரகவற்குரிய' என்பது இரண்டசையி னுன் ஆகிய நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீர் எனப்படும் எ - று.

அகவ லெனினும் ஆசிரிய மெனினும் ஒக்கும். என்னை,

அகவ லென்ப தாசிரியப் பெயரே (தொல். 1338) (?)

என்ருராகலின்.

''வெண்பாவினவாம் நேரசை யாலிற்ற மூவசைச்சீர்'' என்பது: நேரசை இறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வெண்பா உரிச்சீர் எனப்படும்; எ - று.

'நிரையா லிறுப வகுத்தவஞ் சிக்குரிச்சீர்' என்பது, நிரையசை இறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வஞ்சி உரிச்சீர் எனப்படும்; எ - று.

'வாரசை மென்முலை மாதே' என்பது மகடூஉ முன்னிலை.

'ஓரசையே நின்றுஞ் சீராம்' என்பது: ஒரோவிடத்து நேரசை தானே நின்றுஞ் சீராம்; நிரையசை தானே நின்றுஞ் சீராம்; அவை அசைச்சீர் எனப்படும்; எ - று.

'பொதுவொரு நாலசையே' என்பது நாலசையினுனு கிய சீர் பொதுச்சீர் எனப்படும்; எ - று.

நான் கென்பதனை எல்லாவற்றேடுங் கூட்டி மத்திம தீபமாகப் பொருளுரைத்துக் கொள்க. என்னை,

ஈரசை கூடிய சீரியற் சீரவை
ஈரிரண் டென்ப ரியல்புணர்ந் தோரே
(யாப்பருங்கலம்: 11)

மூவசைச் சீருரிச் சீரிரு நான்கனு
ணேரிறு நான்கும் வெள்ளை யல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட்டனவே (,, 12)

நாலசைச் சீர்பொதுச் சீர்பதி னாறே (யாப்பருங்கலம்: 13)

ஓரசைச் சீருமஃ தோரிரு வகைத்தே (,, 14)

என்பன யாப்பருங்கலம்.

நாலசை யானு நடைபெறு மோரசை
சீர்நிலை யெய்தலுஞ் சிலவிடத் துளவே

என்றார் காக்கைபாடினியார்.

தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்
காமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந் தங்கனியா
வாமாண் கலையல்குன் மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த வசைச்சீர்க் குதாரண நாண்மலரே (7)

இ - கை. முறையானே முதல் நான்கு சீருக்கும் உதாரணம் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'தேமா புளிமா கருவிளங் கூவிளங் சீரகவற் காம்' என்பது. நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை யாகிய தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீருக்கு உதாரணமாம் எ - று.

'ஆங் கடைகாய் அடையின் வெண்பாவிற்கு' என்பது: அவை, கடையிற் காய் என்னுஞ் சொற்பெற்றுத் தேமாங் காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் என வரும் நான்கு சீரும் வெண்பா உரிச்சீருக்கு உதாரணமாம்; எ - று.

'அந்தங் கனியா வகுத்தவஞ் சிக்குரிச்சீர்' என்பது இவ்வீற்றின்கட் கனி என்னுஞ் சொற்பெற்றுத் தேமாங் கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி எனவரும் நான்கு சீரும் வஞ்சி உரிச்சீருக்கு உதாரணமாம்; எ - று.

'வாமாண் கலையல்குல் மாதே' என்பது மகடூஉ முன்னிலை.

'நாமாண் புரைத்த அசைச்சீர்க் குதாரணம் நாள் மலரே' என்பது ஓரோவிடத்தாமென் றுரைக்கப்பட்ட

ஓரசைச்சீருக்கு உதாரணம் நாள் என்பதூஉம், மலர் என்பதூஉம் ஆம் என்றவாறு.

நாள் என்பது நேரசைச் சீருக்கும் மலர் என்பது நிரையசைச் சீருக்கும் உதாரணமாம்.

ஆம் என்பதனை எல்லாவற்றோடுங் கூட்டி மத்திம தீபமாகப் பொருளுரைத்துக் கொள்க.

இன்னிசை வெண்பா

அம்ம் பவள்ள் வரிநெடுங்க ணுய்வஞ்சிக்
கொம்ம் பவள்ள்கொடிமருங்குல் கோங்கின்
அரும்ம் பவள்முலை ஒக்குமே ஒக்கும்
கரும்ம் பவள்வாயிற் சொல்

என்னும் பொய்கையார் வாக்கினுள், ஒக்கும் என்பதனை எல்லாவற்றோடுங் கூட்டிப் பொருளுரைத்துக் கொண்டாற் போலக் கொள்க.

தண்ணிழ றண்பூ நறும்பூ நறுநிழ றந்துறழ்ந்தால்
எண்ணிரு நாலசைச் சீர்வந் தருகு மினியவற்றுட்
கண்ணிய பூவினங் காய்ச்சீ ரனைய கனியொடொக்கும்
ஒண்ணிழற் சீரசைச் சீரியற் சீரொக்கு மொண்டளைக்கே (8)

இ-கை. பொதுச்சீருக்கு உதாரணமாமாறும், அவற்றதெண்ணும் பொதுச்சீரும் அசைச் சீரும் செய்யுளகத்து வருங்கால் தளைவழங்கும் முறைமையும் உணர்த்துதல் நுதலிற்று.

'தண்ணிழல்...அருகும்' என்பது: தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கனோடும்; தண்ணிழல், தண்பூ, நறும்பூ, நறுநிழல் என்னும் நான்கனையும், முறையானே கொணர்ந் துறழ்ந்தாற் பதினாறு நாலசைச்சீருக்கும் உதாரணமாம்; (எ - று.).

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பன அதிகாரத்தால் வருவித்துரைக்கப்பட்டன.

'அருகும்,' என்பதனால் அச்சீர் செய்யுளகத்து அருகியன்றி வாரா வெனக் கொள்க.

வ-று: தேமாந்தண்ணிழல் தேமாந்தண்பூ தேமாநறும்பூ
புளிமாந்தண்ணிழல் புளிமாந்தண்பூ புளிமாநறும்பூ
கருவிளந்தண்ணிழல் கருவிளந்தண்பூ கருவிள்நறும்பூ
கூவிளந்தண்ணிழல் கூவிளந்தண்பூ கூவிளநறும்பூ
தேமாநறுநிழல் கருவிளநறுநிழல்
புளிமாநறுநிழல் கூவிளநறுநிழல்
எனவுங் கொள்க.

'இனி அவற்றுள் கண்ணிய பூவினம் காய்ச்சீ ரனைய' என்பது: அந் நாலசைச்சீர் பதினாறனுள்ளும், பூவென்னுஞ் சொல்லிறுதியாகிய நேரீற்றுப் பொதுச்சீ ரெட்டும், காயென்னுஞ் சொல்லிறுதியாகிய வெண்பா உரிச்சீரே போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோ டொன்றுவது வெண்டளையாகவும் ஒன்றாதது கலித்தளையாகவும் வழங்கப்படும்; எ - று.

'கனியொடொக்கும் ஒண்ணிழற்சீர்' என்பது: நிழலென்னுஞ் சொல்லிறுதியாகிய நிரையீற்றுப் பொதுச்சீரெட்டும், கனியென்னுஞ் சொல்லிறுதியாகிய வஞ்சி உரிச்சீரேபோலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோ டொன்றினும் ஒன்றுவிடினும் வஞ்சித்தளை யென்று வழங்கப்படும்; எ - று.

'அசைச்சீர் இயற்சீ ரொக்கும்' என்பது: ஓரசைச்சீர் ஆசிரிய உரிச்சீரேபோலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோ டொன்றுவது ஆசிரியத்தளையாகவும், ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாகவும் வழங்கப்படும்; எ - று.

இயற்சீர் எனினும் ஆசிரிய உரிச்சீர் எனினும் ஒக்கும். என்னை,

இயற்சீ ரெல்லாம் ஆசிரிய உரிச்சீர்
என்றாராகலின்.

'ஒண் தளைக்கே' என்பது: ஒள்ளிய தளை வழங்குமிடத்து; எ - று.

MADRAS STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, MADRAS- LIBRARY 10786

'ஒண்தளை' என்பதனை இறுதி விளக்காகப் பொருளுரைத்துக் கொள்க. 'கண்ணிய பூவினம்' என்று சிறப்பித்த வதனுல் வெண்பாவினுள் நாலசைச்சீர் வாரா; ஆசிரியத்துள்ளுங் குற்றுகரம் வந்துழி யன்றி வாரா; கலியினுள்ளும் பெரும்பான்மையுங் குற்றுகரம் வந்துழி யன்றி வாரா; வஞ்சியுட் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும்; வஞ்சியுள் இரண்டு நாலசைச்சீர் ஓரடியுள் அருகிக் கண்ணுற்று நிற்கவும் பெறும்; அல்லனவற்றுள் பெரும்பான்மையும் ஓரடியுளொன்றன்றி வாரா; இரண்டுவரினுங் கண்ணுற்று நில்லா; பாவினத்துள்ளும் பயின்று வாரா வெனக் கொள்க. 'ஒண்ணிழற்சீர்' என்று சிறப்பித்த வதனுல் நிழல் என்னுஞ் சொல்லிறுதியாகிய நிரையீற்றுப் பொதுச்சீர் எட்டும் வஞ்சியுளல்லது வாரா எனக் கொள்க. என்னை,

நாலசை யான்நடை பெற்றன வஞ்சியுள்
ஈரொன் றணைதலு மேனுழி யொன்றுசென்
றுகலும் அந்தம் நிரையசை வந்தன
கூறிய வஞ்சிக் குரியன ஆதலும்
ஆகு மென்ப அறிந்திசி னோரே

என்றார் காக்கைபாடினியார்.

இனி, ஒரு சாரார் வெண்பாவினுள் அளபெழுந்தால் நாலசைச்சீர் வருமென்பார் உளராயினும், அவ்வா றலகிட்டு உதாரண வாய்பாட்டால் ஓசை யூட்டும்பொழுது செப்பலோசை பிழைக்கு மென்பதூஉம், ஆண்டுச் சீரும், தளையுஞ் சிதைய வாராமையான் அளபெடுப்பனவு மல்ல; அளபெடுப்பினும் அளபெடைகள் அலகு காரியம் பெறுவனவும் அல்ல வென்பதூஉம் காக்கைபாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிவு. அதுவே இந்நூலுடையாருக்கும் உடன்பாடு.

உதாரண இலக்கியமுதனினைப்புச் செய்யுள்

குன்றக் குறவ னகவல்பொன் னரம்வெண் பாட்டுவஞ்சிக்
கொன்று முதாரணம் பூந்தா மரையென்ப வோரசைச்சீர்
நன்றறி வாரிற் கய்வரும் பாலொடு நாலசைச்சீர்க்
கன்றதென் னாள்ளற் பள்ளத்தி னேடங்கண் வானத்துமே (9)

இ-கை. முறையானே ஐந்துவகைப்பட்ட சீரானும் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்துதல் நுதலிற்று.

'குன்றக்குறவன் அகவல்'

ஆசிரியப்பா

குன்றக் குறவன் காதல் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்
ஐயள் அரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே
(ஐங்குறுநூறு : 255)

இந்நேரிசை யாசிரியப் பாட்டினுள் ஆசிரிய உரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

'பொன்னாரம் வெண்பாட்டு'

வெண்பா

பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற்—கென்னோ
மனனொடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனனாடன் பேரே வரும்

இந்நேரிசை வெண்பாவினுள் வெண்பா உரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

'வஞ்சிக்கொன்று முதாரணம் பூந்தாமரை யென்ப'

வஞ்சிப்பா

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்
மகிழு மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே

இக் குறளடி வஞ்சிப்பாட்டினுள் வஞ்சியுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

'ஓரசைச்சீர் நன்றறி வாரிற் கயவரும் பாலொடு,'

குறள் வெண்பா

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர் (குறள்: 1072)

இக்குறள் வெண்பாவினுள், 'இலர்' என நிரையசைச் சீர் வந்தவாறு கண்டுகொள்க.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர் (குறள்: 1121)

இக் குறள் வெண்பாவினுள், 'நீர்' என நேரசை வந்தவாறு கண்டுகொள்க.

'நாலசைச்சீர்க் கன்ற தென்னூர் அள்ளற் பள்ளத்தி னூடேங்கண் வானத்தும்,'

அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு
வேங்கைவாயில் வியன்குன்றூரன்

என்னும் பழம்பாட்டினுள் ஓரடியுள் இரண்டு நாலசைச் சீர் வந்தவாறு கண்டுகொள்க.

வஞ்சிப்பா

அங் கண் வா னத் தமரரரசரும்
வெங் களி யானை வேல்வேந்தரும்
வடி வார் கூந் தன் மங்கையரும்
கடி மல ரேந் திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங் கஞ் சுமந் த மணியணைமிசைக்
கொங் கவி ரசோ கின் குளிர்நிழற்கீழ்ச்
செழு நீர்ப் பவ ளத் திரள்காம்பின்
முழு மதி புரை யு முக்குடைநீழல்
வெங் கண் வினைப் பகை விளிவெய்தப்
பொன் புனை நெடு மதில் புடைவளைப்ப
அனந் த சதுட் டய மவையெய்த
நனந் தலை யுல குடை நவைநீங்க
மந் த மா ருத மருங்கசைப்ப
அந் தர துந் துபி நின்றியம்ப
இலங் கு சா மரை யெழுந்தலமர
நலங் கிளர் பூ மழை நனிசொரிதர
இனிதிருந்
தருணெறி நடாத்திய ஆதிதன்
திருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே
(திருப்பாமாலை)

இக் குறளடி வஞ்சிப்பாவினுள் நாலசைச்சீர் பதினாறும் அடிதோறும் முதற்கண்ணே வந்தவாறு கண்டுகொள்க.

இதனுள், நேரீற்றுப்பொதுச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோ டொன்றுவது வெண்சீர் வெண்டளையாக வும், ஒன்றாதது கலித்தளையாகவும், நிரையீற்றுப் பொதுச் சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோ டொன்றினும், ஒன்றா விடினும் வஞ்சித்தளையாகவும் கொண்டு வழங்கப் படும்; எ - று.

இவ்வாறு பிறரும்,

குன்று கூதிர் பண்பு தோழி
விளியிசை முத்துறழ் என்றிவை யெல்லாம்
தெளிய வந்த செந்துறைச் செந்துறை

என்று உதாரண மெடுத்தோதினா ரெனக் கொள்க.

'அன்றதென்னார்' என்பதை அன்ற வென்னா ரெனக் கொள்க.

4. தளை

தன்சீர் தனதொன்றிற் றன்தளை யாந்தண வாதவஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த
வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்
ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மொண்ணுதலே (10)

இ - கை. நின்ற சீரி னீற்றசையும், வருஞ்சீரின் முத லசையும் தம்மு ளொன்றுவதும் ஒன்றாததுமாகிய ஏழ்தளை யும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'தன்சீர் தனதொன்றின் தன் தளையாம்' என்பது தன் சீர் நின்று தன் வருஞ் சீர் முதலசையோ டொன்றுவது தன் தளையாம்; எ - று.

எனவே, ஆசிரிய உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முத லசையோடு நேரா யொன்றுவது நேரொன்றாசிரியத் தளை தளையாம்; நிரையாய் ஒன்றுவது நிரையொன்றாசிரியத் தளையாம். வெண்பா உரிச்சீர் நின்று தன் வருஞ் சீர் முத

லசையோ டொன்றுவது வெண்சீர் வெண்டளையாம். வஞ்சி உரிச்சீர் நின்று தன் வருஞ் சீர் முதலசையோ டொன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம்; எ-று.

'தணவாத' என்று மிகுத்துச் சொல்லியவதனால் தன் சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோ டொன்றுவதூஉந் தன் தளையே சிறப்பின்றாயினு மெனக் கொள்க.

'வஞ்சிவண்சீர் விகற்பமும் வஞ்சிக்குரித்து' என்பது: வஞ்சி உரிச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றாததூஉம் ஒன்றாத வஞ்சித்தளையாம்; எ-று.

'வண்சீர்' என்று சிறப்பித்தவதனால் வஞ்சி உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோ டொன்றாததூஉம் ஒன்றாத வஞ்சித்தளையே சிறப்பின்றாயினும் எனக் கொள்க.

'வல்லோர் வகுத்த வெண்சீர் விகற்பங் கலித்தளையாய் விடும்' என்பது; வெண்பா உரிச்சீர் நின்று தன்வருஞ் சீர் முதலசையோ டொன்றாதது கலித்தளையாம்; எ-று.

'வல்லோர் வகுத்த,' என்று சிறப்பித்த வதனால், வெண்பா உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோ டொன்றாததூஉம், கலித்தளையே சிறப்பின்றாயினு மெனக் கொள்க.

'வெண் தளையாம் ஒண்சீரகவல் உரிச்சீர் விகற்பமும்' என்பது; ஆசிரிய உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோ டொன்றாதது, இயற்சீர் வெண்டளையாம்; எ-று.

'ஒண்சீர்' என்று சிறப்பித்தவதனால் ஆசிரிய உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோ டொன்றாததூஉம், இயற்சீர் வெண்தளையே சிறப்பின்றாயினும் எனக் கொள்க.

'ஒண்ணுதலே' என்பது மகடூஉ முன்னிலை. என்னை,

இயர்சீ ரிரண்டு தலைப்பெயல் தம்முள்
விகற்ப மிலவாய் விரவி நடப்பின்
அதற்பெய ராசிரி யத்தளை யாகும்

இயற்சீ ரிரண்டு தலைப்பெயல் தம்முள்
விகற்ப வகையது வெண்டளை யாகும்

உரிச்சீ ரதனுள் உரைத்தமை யன்றிக்
கலக்குந் தளையெனக் கண்டிசி னோரே

வெண்சீ ரிறுதிக் கிணையசை பின்வரக்
கண்டன வெல்லாம் கலித்தளை யாகும்

தன்சீ ரிரண்டு தலைப்பெயல் தம்முளொத்
தொன்றினும் ஒன்று தொழியினும் வஞ்சியின்
பந்தம் எனப்பெயர் பகரப் படுமே

என்றார் காக்கைபாடினியார்.

உதாரண இலக்கிய முதல் நினைப்புச் செய்யுள்

திருமழை உள்ளா ரகவல் சிலைவிலங் காகும்வெள்ளை
மருளறு வஞ்சிமந் தாநிலம் வந்துமை தீர்கலியின்
தெரிவுறு பந்தநல்லாய்! செல்வப் போர்க்கதக் கண்ணனென்ப
துரிமையின் கண்ணின்மை யோரசைச் சீருக் குதாரணமே (11)

இ-கை. அத்தளைகளான் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்துதல் நுதலிற்று.

'திருமழை யுள்ளா ரகவல்'

ஆசிரியப்பா

திருமழை தலைஇய இருணிற விசும்பின்
விண்ணதிர் இமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே

இது நிரையொன் றாசிரியத் தளையான் வந்த செய்யுள்.

ஆசிரியப்பா

உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
அலங்குகுலை ஈந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில்பொதி பவளம் ஏய்க்கும்
அகில்படு கள்ளியங் காடிறந் தோரே
(ஐங்குறுநூறு தனிப் : 2)

இது நேரொன் றாசிரியத் தளையான் வந்த செய்யுள்.

'சிலை விலங்காகும் வெள்ளை'

வெண்பா

சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றுசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள் - மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது (தண்டி. சூ. 16. மேற்)

இது வெண்சீர் வெண்டளையானும், இயற்சீர் வெண்டளையானும் வந்த செய்யுள்.

'மருளறு வஞ்சிமந் தாநிலம் வந்து'

வஞ்சிப்பா

மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்கு
இனிதின் ஒதுங்கிய இறைவனை
மனமொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே
(திருப்பாமாலை)

இது மயக்கமற வகுத்த வஞ்சித்தளை ஒன்றுததூஉம் ஒன்றியதூஉமாக வந்த செய்யுள்.

'மைதீர் கலியின் தெரிவுறு பந்தம் செல்வப்போர்க் கதக்கண்ணன்'

கலிப்பா

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே

இது மயக்கமில்லாக் கலித்தளையான் வந்த செய்யுள்.

'நல்லாய்' என்பது மகடூஉ முன்னிலை.

'உரிமையின் கண்ணின்மை ஓரசைச்சீருக்குதாரணம்'

வஞ்சி விருத்தம்

உரிமை யின்கண்ணி ன்மையால்
அரிமதர் மழைக் கண்ணுள்
செருமதி செய் தீமையால்
பெருமை கொன்ற என்பவே

இம் முச்சீரடி வஞ்சிவிருத்தத்துள் மழை என்னும் நிரையசைச்சீர் இயற்சீரேபோல நின்று வருஞ்சீர் முதலசையோடொன்ருமையின் இயற்சீர் வெண்டளை யாயிற்று. செய்யென்னும் நேரசைச்சீர் இயற்சீரே போல நின்று வருஞ்சீர் முதலசையோ டொன்றினமையின் ஆசிரியத்தளை யாயிற்று.

5. அடி

குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்
அறைதரு காலை யளவொடு நேரடி யையொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோட்
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே (12)

இ-கை. அத்தளைகளான் வந்த அடிகளது பெயர் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

'குறளிரு சீரடி' என்பது: இருசீரான் வந்த அடி குறளடி எனப்படும்; எ-று.

'சிந்துமுச்சீரடி' என்பது: முச்சீரான் வந்த அடி சிந்தடி எனப்படும்; எ-று.

'நாலொருசீர் அறைதருகாலை யளவொடு நேரடி', என்பது: நாற்சீரான் வந்த அடி அளவடி என்றும் நேரடி என்றுஞ் சொல்லப்படும்; எ-று.

'ஐயொருசீர் நிறைதரு பாத நெடிலடியாம் என்பது: ஐஞ்சீரான் வந்த அடி நெடிலடி எனப்படும்; எ-று.

'நெடுமென் பணைத்தோள் கறைகெழு வேற்கணல் லாய்' என்பது: மகடூஉ முன்னிலை.

'மிக்கபாதங் கழிநெடில்' என்பது: ஐஞ்சீரின் மிக்க சீரான் வரும் அடியெல்லாங் கழிநெடிலடி எனப்படும் எ—று. அகலம் உரையிற் கொள்க. என்னை,

குறளடி சிந்தடி யிருசீர் மூச்சீர்
அளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர்
நிரனிறை வகையான் நிறுத்தனர் கொளலே
(யாப்பருங்கலம் : 24)

கழிநெடி லடியே கசடறக் கிளப்பி
னறுசீர் முதலா வையிரண் டீரு
வருவன பிறவும் வகுத்தனர் கொளலே (,, 25)

என்பன யாப்பருங்கலம்.

உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை

திரைத்தவிருது குறள்சிந் தளவடி தேம்பழுத்து
விரிக்கு நெடிலடி வேனெடுங் கண்ணிவென் றூன்வினையின்
இரைக்குங் கணிகொண்ட மூவடிவோடிடங் கொங்குமற்றுங்
கரிக்கைக் கவான்மருப் பேர்முலை மாதர் கழிநெடிலே (13)

இ-கை. அவ்வடிகளான் வந்த இலக்கியங்கட்டு முதல் நினைப்புணர்த்துதல் நுதலிற்று.

'திரைத்தவிருது குறள்சிந்து'

வஞ்சித்துறை

திரைத்த சாலிகை
நிரைத்த போனிரந்
திரைப்ப தேன்களே
விரைக்கொள் மாலையாய் (சூளாமணி சீயவதை: 172)

இது குறளடியான் வந்த செய்யுள்.

வஞ்சி விருத்தம்

இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினே
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினய்
(சூளாமணி சீயவதை : 170)

இது சிந்தடியான் வந்த செய்யுள்.

'அளவடி தேம் பழுத்து'

கலி விருத்தம்

தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளும் மதுத்தண் டீட்டமும்
தாம்பழுத் துளசில தவள மாடமே
(சூளாமணி நகர் : 14)

இஃது அளவடியான் வந்த செய்யுள்.

'விரிக்கு நெடிலடி வென்றான் வினையின்'

கலித்துறை

வென்றான் வினையின் தொகையாய விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின் ஒழியாது முற்றும்
சென்றான் திகழுஞ் சுடர்சூ ழொளிமூர்த்தி யாகி
நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார் வினை நீங்கி நின்றார்
(சூளாமணி—காப்பு)

இது நெடிலடியான் வந்த செய்யுள்.

'இரைக்கும் கணிகொண்ட மூவடிவோடிடங் கொங்கு மற்றும்'

அறுசீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெயர்
இனவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புகள் திகழ்ந்தெழ
நுடங்கிய விலயத்தால்
திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத்
திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடல் திரையொடு
பொருதல தவியாதே (சூளாமணி. கல்: 51)

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடு
கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண் டலர்ந்த வனமாலை சூடி
அகிலாவி குஞ்சி கமழ

மணிகுண் டலங்கள் இருபாலும் வந்து
வரையாக மீது திவளத்
துணிகொண் டிலங்கு சுடர்வேலி னோடு
வருவானி தென்கொல் துணிவே
(சூளாமணி. அரசி: 197)

இஃது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மூவடிவி னுலிரண்டு சூழ்சுடரும் நாண
முழுதுலக மூடியெழின் முளைவயிர நாற்றித்
தூவடிவி னுலிலங்கு வெண்குடையி னீழற்
சுடரோயுன் அடிபோற்றிச் சொல்லுவதொன் றுண்டால்
சேவடிகள் தாமரையின் சேயிதழ்கள் தீண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொலிகள் சூழ்ந்து
புலங்கொளா வாலெமக்கெம் புண்ணியர்தங் கோவே
(சூளாமணி. துறவு: 64)

இஃது எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

ஒன்பதின்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இடங்கைக வெஞ்சிலை வலங்கை வாளியின் எதிர்ந்த தானையை
இலங்கும் ஆழியின் விலங்கியோள்
முடங்கு வாலுழை மடங்கல் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோள்
வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை சுந்தரி
வனங்கொள் பூண்முலை மகிழ்ந்தகோன்
தடங்கொள் தாமரை யிடங்கொள் சேவடி தலைக்கு வைப்பவர்
தமக்கு வெந்துயர் தவிர்க்குமே.

இஃது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

பதின்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடு நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத வென்று நின்று தாழ
அங்க புவ்வ மாதி யாய வாதி நூலி
னீதி யோது பாதி யாய
செங்கண் மாலைகாலை மாலை சேர்நர் சேர்வர்
சோதி சேர்ந்த சித்தி தானே

இது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

'மற்றும்' என்பதனால் பதின்சீரின் மிக்கு வருவனவு முள; அவை யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

'வேனெடுங்கண்ணி' என்பதுங், 'கரிக்கைக் கவான் மருப்பேர் முலைமாதர்' என்பதும் மகடூஉ முன்னிலை.

'கழிநெடிலே' என்பது: அவை யெல்லாங் கழிநெடிலடியாம் எ-று.

'விரிக்கு நெடிலடி' என்று சிறப்பித்தவதனால் எண்சீரின் மிக்க சீரான் வருமடிகள் சிறப்பிலவெனக் கொள்க. என்னை,

இரண்டு முதலா எட்ட ளுகத்
திரண்ட சீரான் அடிமுடி வுடைய
இறந்த வரினு மடிமுடி வுடைய
சிறந்த வல்ல செய்யு ளுள்ளே

என்றார் காக்கைபாடினியார்.

நான்குபாக்களுக்கும் உரிய அடியின் சிறுமையும் பெருமையும்

வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்
கெள்ளப் படாக்கலிக் கீரிரண் டாகு மிழிபுரைப்போர்
உள்ளக் கருத்தி னளவே பெருமையொண் போதலைத்த
கள்ளக் கருநெடுங் கட்சுரி மென்குழற் காரிகையே (14)

இ-கை, அவ்வடி வரையறையான் வந்த நான்கு பாவிற்குஞ் சிறுமை பெருமை உணர்த்துதல் நுதலிற்று.

'வெள்ளைக்கிரண்டடி இழிபு' என்பது: வெண்பாவிற்கு இரண்டடியே சிறுமை எ-று.

'வஞ்சிக்கு மூன்றடி இழிபு' என்பது: வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமை எ-று.

'மூன்றகவற்கு இழிபு' என்பது, ஆசிரியப்பாவிற்கு மூன்றடியே சிறுமை; எ-று.

'எள்ளப்படாக் கலிக் கீரிரண்டாகும் இழிபு' என்பது கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை எ-று.

'இழிபு' என்பது நான்கு பாவிற்கும் 'சிறுமை' எ-று.

'உரைப்போர் உள்ளக் கருத்தினளவே பெருமை' என்பது: நான்கு பாவிற்கும் பெருமைக் கெல்லை பாடுவோனது பொருள் முடிவுக் குறிப்பே; வரையறையில்லை; எ-று.

'ஒண்போதலைத்த......காரிகையே' என்பது: மகடூஉ முன்னிலை.

'எள்ளப்படாக் கலிக்கு' என்று சிறப்பித்த வதனால் துள்ளலோசையிற் சிறிதும் வழுவாது நாற்சீர் நாலடியான் வருவது தரவு கொச்சகக்கலிப்பா என்றும், துள்ளலோசை யிற் சிறிது வழுவி நாற்சீர் நாலடியான் வருவது கலிவிருத்தம் என்றும், தெரிந்துணரப்படும் எனக் கொள்க.

'வெள்ளைக் கிரண்டாம் அகவற்கு மூன்று கலிக்கடி நான் கெள்ளப்படாவஞ்சிப்பாவிற்கு மூன்றும் இழிபு' என்று பாக்களை முறையிற் கூறுது தலைதடுமாற்றமாகக் காரிகை சொல்லவேண்டிய தென்னையோ வெனின், தலைதடுமாற்றந் தந்து புணர்ந்துரைத்த லென்பது தந்திர வுத்தியாகலின். அன்றியும் மயேச்சுரர் முதலாகிய ஒருசார் ஆசிரியர் வஞ்சிப்பா இரண்டடியானும் வரப்பெறும் என்றரென்ப தூஉம், ஆசிரியப்பா இரண்டடிச் சுரிதகமாய் வரப்பெறும் என்றார் என்பதூஉம் அறிவித்தற்கு எனக் கொள்க. என்னை,

> வெண்பா ஆசிரியங் கலியே வஞ்சியென
> நுண்பா உணர்ந்தோர் நுவலுங் காலை
> இரண்டும் மூன்றும் நான்கும் இரண்டும்
> திரண்ட அடியின் சிறுமைக் கெல்லை

என்றெடுத்தோதிய மயேச்சுரர் வஞ்சிச் சிறுமைக்குக் காட்டும் பாட்டு:—

வஞ்சிப்பா

> பூந்தண்சினை மலர்மல்கிய பொழிற்பிண்டி
> வேந்தன்புகழ் பரவாதவர் வினைவெல்லார்
> அதனால்
> அறிவன தடியிணை பரவிப்
> பெறுகுவர் யாவரும் பிறவியில் நெறியே.

இதனை முச்சீரடி வஞ்சியாக அலகிட்டு இரண்டடி யாமாறு கண்டு கொள்க. என்னை,

ஒருதொடை ஈரடி வெண்பாச் சிறுமை
இருதொடை மூன்று மடியி னிழிந்து
வருவன ஆசிரிய மில்லென மொழிப
வஞ்சியு மப்பா வழக்கின ஆகும்

(யாப்பருங்கல விருத்தி மேற்)

நான்கா மடியினும் மூன்றுந் தொடையினும்
தாழ்ந்து கலிப்பா தழுவுத லிலவே (,,)

உரைப்போர் குறிப்பினை நீக்கிப் பெருமை
வரைத்தித் துணையென வைத்துரை யில்லென்
றுரைந்தனர் மாதோ வுணர்ந்திசி னோரே (,,)

என்றார் காக்கைபாடினியார்.

உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை

அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபக வற்கிழிபு
குறித்தாங் குரைப்பின் முதுக்குறைந் தாங்குறை யாக்கலியின்
றிறத்தாறி துசெல்வப் போர்ச்செங்கண் மேதிவஞ் சிச்சிறுமை
புறத்தாழ் கருமென் குழற்றிரு வேயன்ன பூங்கொடியே (15)

இ - கை. அவ்வடி வரையறையான் வந்த இலக்கியங் கட்கு முதல்நினைப் புணர்த்துதல் நுதலிற்று.

'அறத்தா றிதுவென வெள்ளைக்கிழிபு'

குறள் வெண்பா

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை (குறள்: 37)

இஃது இரண்டடியான் வெண்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

'அகவற்கிழிபு குறித்தாங் குரைப்பின் முதுக்குறைந் தாம்'

ஆசிரியப்பா

முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே

இது மூன்றடியான் ஆசிரியப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

'குறையாக் கலியின் திறத்தா றிதுசெல்வப் போர்'

தரவுகொச்சகக் கலிப்பா

செல்வப்போர்க் கதக்கண்ணன்...மருமம்பாய்ந் தொளித்ததே
(காரிகை: 35)

இது நான்கடியாற் கலிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

'செங்கண்மேதி வஞ்சிச் சிறுமை'

வஞ்சிப்பா

செங்கண்மேதி கரும்புழக்கி
அங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலும்
செழுநீர்,
நல்வயற் கழனி யூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே

இது மூன்றடியான் வஞ்சிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

'புறத்தாழ் கருமென் குழல்திருவேயன்ன பூங்கொடியே' என்பது : மகடூஉ முன்னிலை, ஆங்கு : அசை.

6. தொடை

எழுவா யெழுத்தொன்றின் மோனை யிறுதி யியைபிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினும் முரணடி தோறு முதன்மொழிக்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே (16)

1 அடிமோனை	கூழைமோனை
இணைமோனை	மேற்கதுவாய் மோனை
பொழிப்புமோனை	கீழ்க்கதுவாய்மோனை
ஒரூஉமோனை	முற்றுமோனை—எனவும்,
2 அடியியைபு	கூழையியைபு
இணையியைபு	மேற்கதுவாயியைபு
பொழிப்பியைபு	கீழ்க்கதுவாயியைபு
ஒரூஉவியைபு	முற்றியைபு—எனவும்,
3 அடியெதுகை	கூழையெதுகை
இணையெதுகை	மேற்கதுவாயெதுகை
பொழிப்பெதுகை	கீழ்க்கதுவாயெதுகை
ஒரூஉவெதுகை	முற்றெதுகை—எனவும்,
4 அடிமுரண்	கூழைமுரண்
இணைமுரண்	மேற்கதுவாய்முரண்
பொழிப்புமுரண்	கீழ்க்கதுவாய்முரண்
ஒரூஉமுரண்	முற்றுமுரண்—எனவும்,
5 அடியளபெடை	கூழையளபெடை
இணையளபெடை	மேற்கதுவாயளபெடை
பொழிப்பளபெடை	கீக்கதுவாயளபெடை
ஒரூஉவளபெடை	முற்றளபெடை—எனவும்

அந்தாதித்தொடை, இரட்டைத்தொடை, செந்தொடை, என்னும் தொடையும், தொடைவிகற்பமும் ஆமாறுணர்த்துவான் எடுத்துக்கொண்டார்.

அவற்றுள், இக்காரிகை அடிமோனையும், அடியியைபும் அடி யெதுகையும், அடிமுரணும், அடியளபெடையும் ஆமா றுணர்த்துதல் நுதலிற்று.

'எழுவாயெழுத் தொன்றின் மோனை' என்பது: அடி தோறும் முதலெழுத் தொன்றிவரத் தொடுப்பது அடி மோனைத்தொடை எனப்படும்; எ - று.

எழுவாயெனினும், ஆதியெனினும், முதலெனினும் ஒக்கும். மோனையெனினும், முதற்றொடையெனினும் ஒக்கும்.

'இறுதியியைபு' என்பது: அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும், சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடியியைபுத்தொடை எனப்படும்; எ - று.

'இரண்டாம் வழுவா எழுத்தொன்றின் எதுகை' என்பது: அடிதோறும் முதற்கண் இரண்டாமெழுத் தொன்றி வரத் தொடுப்பது அடியெதுகைத்தொடை எனப்படும்; எ - று.

'மாதே' என்பது: மகடூஉ முன்னிலை. 'இரண்டாமெழுத் தொன்றி னெதுகை' என்னாது 'வழுவா வெழுத்து' என்று மிகுத்துச் சொல்லிய வதனால், இரண்டாமெழுத் தொன்றிவரினும் முதலெழுத்தெல்லாந் தம்முள் ஒத்த அளவினவாய் வந்து கட்டு எபன்தற்குப் பட்டு என்பது அல்லது பாட்டு என்பது எதுகையாகாது; காட்டு என்பதற் குப் பாட்டு என்பதல்லது பட்டு என்பது எதுகையாகாது எனக் கொள்க.

'மறுதலைத்த மொழியான் வரினு முரண்' என்பது: அடிதோறும் முதற்கட் சொல்லானும், பொருளானும் மறு தலைப்படத் தொடுப்பது அடிமுரண் தொடை எனப்படும்; எ - று.

'மொழியான் வரினும்' என்ற உம்மையாற் பொருளான் வரினும் என்பதாயிற்று. 'அடிதோறும்' என்பது மத்திம தீபம் எனக் கொள்க.

'முதன்மொழிக்கண் அழியா தளபெடுத் தொன்றுவ தாகும் அளபெடையே' என்பது: அடிதோறும் முதற்கண் உயிரானும், ஒற்றானும் அளபெடுத்தொன்றிவரத் தொடுப் பது அடியளபெடைத்தொடை எனப்படும்; எ - று.

'அழியாது' என்று மிகுத்துச் சொல்லியவதனால் நான்கு யிரளபெடையும், இரண்டொற் றளபெடையுந் தம்முள் ஒன்றிவரத் தொடுப்பது சிறப்புடைத்து, தொடை விகற்பத் துள் நான்குயிரளபெடையும்; இரண் டொற்றளபெடையுந் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பினும் இழுக்காது எனக் கொள்க. என்னை,

முதலெழுத் தொன்றின் மோனை யெதுகை
முதலெழுத் தளவோ டொத்தது முதலா
அஃதொழித் தொன்றி னாகு மென்ப
இவ்விரு தொடைக்குங் கிளையெழுத் துரிய

என்றார் பல்காயனார்.

இறுவா யொப்பினஃ தியைபென மொழிப (தொல். 1353)
மொழியினும் பொருளினு முரணுதல் முரணே (தொல். 1352)

என்றார் தொல்காப்பினாயர்.

அளபெடைத் தொடைக்கே அளபெடை ஒன்றும்

என்றார் நத்தத்தனார்.

அந்த முதலாத் தொடுப்பதந் தாதி யடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டால்
செந்தொடை நாமம் பெறுநறு மென்குழற் றேமொழியே (17)

இ-கை. அந்தாதித்தொடையும், இரட்டைத்தொடையும், செந்தொடையும் ஆமா றுணர்த்துதல் நுதலிற்று.

'அந்தமுதலாத் தொடுப்ப தந்தாதி' என்பது: அடிதோறும், இறுதிக்கண் நின்ற எழுத்தானும், அசையானும், சீரானும் அடியானும் மற்றையடிக் காதியாகத் தொடுப்பது அந்தாதித்தொடை எனப்படும்; எ-று.

'அடிமுழுதும் வந்தமொழியே வருவதிரட்டை வரன் முறையான்' என்பது; ஓரடிமுழுதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது இரட்டைத் தொடை எனப்படும்; எ-று.

'வரன் முறையான்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், ஈற்றெழுத்தொன்று குறையினும் இழுக்காது; நாற்சீரின் மிக்கு வரப்பெறாது; எனக்கொள்க.

'முந்திய மோனை முதலா முழுதும் ஒவ்வாது விட்டாற் செந்தொடை நாமம் பெறும்' என்பது: மேற் சொல்லப்பட்ட மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும்' போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடை எனப்படும்: எ-று.

'முந்திய மோனை' என்று சிறப்பித்த வதனுல் அசை யும், சீருந் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பது சிறப்புடைத் தெனக்கொள்க.

'நறுமென் குழல் தேமொழியே' என்பது: மகடூஉ முன்னிலை. என்னை?

அடியுஞ் சீரும் அசையும் எழுத்தும்
முடிவு முதலாச் செய்யுள் மொழியினஃ
தந்தாதித் தொடையென் றறைதல் வேண்டும்

என்ருர் நத்தத்தனுர்.

ஒருசீ ரடிமுழுவதும் வருவ திரட்டை

என்ருர் மயேச்சுரர்.

சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லியற் புலவரது செந்தொடை யென்ப (தொல்: 1367)

என்ருர் தொல்காப்பியனுர்.

அசையினுஞ் சீரினு மிசையினும் எல்லாம்
இசையா தாவது செந்தொடை தானே
(யாப்பருங்க. வி. நூ. 50 மே.)

என்ருர் காக்கைபாடினியார்.

உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

மாவும்புண் மோனை யியைபின் னகைவடி யேரெதுகைக்
கேவின் முரணு மிருள்பரந் தீண்டள பாஅவளிய
ஓவிலந் தாதி யுலகுட னுமொக்கு மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவென் ருகும் பணிமொழியே. (18)

இ-கை. அடிமோனை முதலாகிய முதற்ருெடை எட்டி னுலும் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்துதல் நுதலிற்று.

'மாவும்புண் மோனை'

நேரிசை யாசிரியப்பா

மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோள் இன்னுயிர்ப் புறத்திறுத் தன்றே

இஃது அடிதோறும் முதலெழுத் தொன்றிவரத் தொடுத்தமையான் அடிமோனைத்தொடை; எ-று.

'இயைபின்னகை'

நேரிசை யாசிரியப்பா

இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி ஊடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
திருநுதற் பொறித்த திலகமும் அணங்கே

இஃது அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுத் தமையான் அடியியைபுத் தொடை; எ-று.

'வடியே ரெதுகைக்கு'

இன்னிசை வெண்பா

வடியேர்கண் ணீர்மல்க வான்பொருட்கட் சென்றார்
கடியார் கணங்குழாய் காணார்கொல் காட்டில்
இடியின் முழக்கஞ்சி யீர்ங்கவுள் வேழம்
பிடியின் புறத்தசைத்த கை

இஃது அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுத்தமையான் அடியெதுகைத் தொடை; எ-று.

'ஏவின் முரணு மிருள் பரந்து'

நேரிசை யாசிரியப்பா

இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்
நிலவுக்குவித் தன்ன வெண்மண லொருசிறை
இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா துறைக்குஞ்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே

இஃது அடிதோறும் முதற்கண்ணே எல்லாம் மறுதலைப் படத் தொடுத்தமையான் அடிமுரண்தொடை; எ-று.

ஏவின் முரணுமென்பது எல்லா முரண்தொடையாலும் வரப்பெறும்; எ-று.

'ஈண்டள பா அவளிய'

பஃறொடை வெண்பா

ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டீஇ ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுள்
தூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றேள்
மேஎ வலைப்பட்ட நம்போல் நறுநுதல்
ஓஒ உழக்குந் துயர்

இஃது அடிதோறும் முதற்கண்ணே அளபெடுத்தொன்றி வரத் தொடுத்தமையான் அடியளபெடைத் தொடை எ-று.

'ஓவிலந்தாதி யுலகுடனும்'

நேரிசை யாசிரியப்பா

உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனை
அறிவுசேர் உள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே
(திருப்பாமாலை)

இது நான்கந்தாதித் தொடையும் வந்த செய்யுள்.

ஓவிலந்தாதி என்றவதனல் எல்லாவந்தாதியும் வரப் பெறும் என்று கொள்க.

'ஒக்குமே இரட்டை'

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்குங்
குளக்கொட்டிப் பூவின் நிறம்

இஃது ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வரத் தொடுத்தமையால் இரட்டைத் தொடை; என்றவாறு.

இஃது இறுதிச்சீர் ஏகாரத்தாற் குறைபடினும் இழுக்காது; நாற்சீரின் மிக்குவரப் பெருது எனக் கொள்க.

'பாவருஞ் செந்தொடை பூத்தவென் ருகும்'

நேரிசை யாசிரியப்பா

பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே

இது மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுத்தமையாற் செந்தொடை. பாவரு மென்பதனை இறுதி விளக்காகக் கொண்டு பொருளுரைத்துக் கொள்க.

'பணிமொழியே' என்பது: மகடூஉ முன்னிலை.

இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை யிட்டொரூஉவாம்
இருசீ ரிடையிட்ட தீறிலி கூழை முதலிறுவாய்
வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்
வருசீர் முழுவது மொன்றின்முற் ருமென்ப மற்றவையே (19)

இ-கை. இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பமும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'இருசீர் மிசையிணை யாகும்' என்பது: முதலிரு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது இணைத் தொடை எனப்படும்; எ-று.

'பொழிப் பிடையிட்டு' என்பது முதற் சீர்க்கண்ணும் மூன்ருஞ் சீர்க்கண்ணும், மோனை முதலாயின வரத் தொடுப்பது பொழிப்பு எனப்படும்; எ-று.

'ஒரூஉவாம் இருசீர் இடையிட்டது' என்பது நடுவிரு சீர்க்கண்ணுமின்றி முதற்சீர்க்கண்ணும், இறுதிச்சீர்க்

கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது ஒரூஉ எனப்படும்; எ-று.

'ஈறிலி கூழை' என்பது: இறுதிச்சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது கூழை எனப்படும்; எ-று.

'முதலிறுவாய், வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்'; என்பது: முதலயற்சீர்க்கணின்றி, ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது மேற்கதுவாய் என்றும், ஈற்றயற்சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் என்றும் சொல்லப்படும்; எ-று.

இது நிரனிறை யெனக் கொள்க. என்னை,

கடையயல் முதலயல் கதுவாய் கீழ்மேல்

என்றார் அவிநயனார்.

முதலயற் சீர்க்கண் இல்லாததனைக் கீழ்க்கதுவாயென் றும், ஈற்றயற் சீர்க்கண் இல்லாததனை மேற்கதுவாயென்றும் வேண்டினார் கையடனார் முதலாகிய ஒருசார் ஆசிரிய ரென்பதறிவித்தற்கு "மைதீர்கதுவாய்" என்று விதப்புரைத் தார் எனக் கொள்க.

'விதப்புக் கிளவி வேண்டுவது விளக்கும்'

'வருசீர் முழுவதும் ஒன்றின் முற்றுமென்ப' என்பது: எல்லாச் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப் பது முற்று எனப்படும்; எ-று.

'மற்றவையே' என்பது இணைமோனை முதலிய முப்பத் தைந்து, தொடை விகற்பமும்; எ-று. இஃது 'இறுதி விளக்கு' எனக்கொள்க.

'சீர்முழுது மொன்றின் முற்றும்' என்னாது, 'வருசீர்' என்று சிறப்பித்தது, இணைமோனை முதலாகிய முப்பத் தைந்து தொடை விகற்பமும் அளவடிக்கண்ணே வழங்கப்

படும் என்பதூஉம், இணையியையபு முதலாகிய ஏழுவிகற்பமும் இறுதிச்சீரே முதற்சீராகக் கொண்டு வழங்கப்படும் என்பதூஉம் அறிவித்தற்கெனக் கொள்க. என்னை,

இருசீர் மிசைவரத் தொடுப்பதை யிணையே
(யாப்பருங்கலம்: 42)

முதலொடு மூன்றுஞ் சீர்த்தொடை பொழிப்பே (,, 43)

சீரிரண்டிடைவிடத் தொடுப்ப தொரூஉத் தொடை (,, 44)

மூவொரு சீரு முதல்வரத் தொடுப்பது
கூழை யென்மனார் குறியுணர்ந் தோரே (,, 45)

முதலயற் சீரொழித் தல்லன மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கதுவாயே (,, 46)

ஈற்றயற் சீரொழித் தெல்லாந் தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமைய தாகும் (,, 47)

சீர்தொறுந் தொடுப்பது முற்றெனப் படுமே (,, 48)

என்றாராகலின்.

இயைபுத் தொடைக்கே ஏழு விகற்பமும் இறுதிச்சீர் முதலாகக் காட்டினார் கையடனார் முதலிய ஒருசார் ஆசிரியர் எனக் கொள்க.

மோனை எதுகை முரணியை பளபெடை
பாதம் இணையே பொழிப்பொ டொரூஉத்தொடை
கூழை கதுவாய் மிசையதூஉம் கீழதூஉம்
சீரிய முற்றொடு சிவணு மார் அவையே
என்பது யாப்பருங்கலம் (34)

உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை

மோனை விகற்ப மணிமலர் மொய்த்துட னுமியையபிற்
கேனை யெதுகைச் சினம்பொன்னி னன்ன வினிமுரணிற்
கான விகற்பமுஞ் சீறடிப் பேர தளபெடையின்
தான விகற்பமுந் தாஅட்டாஅ மரையென்ப தாழ்குழலே (20)

இ-கை. இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பங்களால் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப் புணர்த்துதல் நுதலிற்று.

'மோனை விகற்பம் அணிமலர்'

நேரிசை வெண்பா

அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி
அரிற்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி
அகன்ற வல்கு லந்நுண் மருங்குல்
அரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள்
அவிர்மதி யனைய திருநுத லரிவை
அயில்வே லனுக்கி யம்பலைத் தமர்ந்த
கருங்கயல் நெடுங்க ணோக்கமென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே

இதனுள் இணைமோனை முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

'மொய்த்துடனு மியைபிற்கு'

நேரிசை யாசிரியப்பா

மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே
மற்றத னயலே முத்துறழ் மணலே
நிழலே இனியத னயலது கடலே
மாதர் நகிலே வல்லே யியலே
வில்லே நுதலே வேற்கண் கயலே
பல்லே தளவம் பாலே சொல்லே
புயலே குழலே மயிலே யியலே
அதனால்,
இவ்வயின் இவ்வுரு இயங்கலின்
எவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே.

இதனுள் இணையியைபு முதலிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

'ஏனையெதுகைக் கினம்பொன்னி னன்ன'

நேரிசை யாசிரியப்பா

பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப்
பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி
மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய

நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
என்னையு மிடுக்கண் துன்னுவித் தின்னடை
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
கன்னியம் புன்னை யின்னிழல் துன்னிய
மயிலேய் சாயலவ் வாணுதல்
அயில்வேல் உண்கணெம் அறிவுதொலைத் தனவே

இதனுள் இணையெதுகை முதலாகிய ஏழுவிகற்பமும், முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

'இனி முரணிற்கான விகற்பமுஞ் சீறடிப் பேரது'

நேரிசை யாசிரியப்பா

சீறடிப் பேரகல் அல்குல் ஒல்குபு
சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கிக்
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும்
இருக்கையு நிலையும் ஏந்தெழி லியக்கமும்
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தெனை முனியாது
என்றும் இன்னண மாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே

இதனுள் இணைமுரண் முதலாகிய ஏழுவிகற்பமும், முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

'அளபெடையின் தானவிகற்பமுந் தாஅட்டாஅ மரை யென்ப'

நேரிசை யாசிரியப்பா

தா அட் டாஅ மரைமலர் உழக்கிப்
பூஉக் குவளைப் போஒ தருந்திக்
கா அய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅண் மோஒட் டெருமை
தேஎம் புனலிடைச் சோஒர் பாஅல்
மீஇ ஞெஅர்ந் துகளுஞ் சீஇர்
ஆஅ ஞெஅ நீஇ ணீஇர்
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா னவே

இதனுள், இணையளபெடை முதலாகிய ஏழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

'தானவிகற்பம்' என்று சிறப்பித்தவதனால் இரண்டளபெடையும் வரப்பெறும் எனக் கொள்க.

'தாழ்குழலே' என்பது மகடூஉ முன்னிலை.

உறுப்பியற் செய்யுட்களின் முதனினைப்புக் காரிகை

கந்தமுந் தேனுஞ் சுருக்கமும் காதற் குறில்குறிலே
சந்தமுந் தீரசை தேமாந்தண் குன்றந்தண் சீர்திருவுங்
கொந்தவிழ் கோதாய் குறடிரை வெள்ளைக் கறத்தெழுவாய்
அந்தமு மாவு மிருசீரு மோனையு மாமுறுப்பே (21)

உறுப்பியல் முற்றும்.

யாப்பருங்கலக்காரிகை

உறுப்பியல்—விளக்கம்

காரிகை
எண்

1. 'எழுத்தசைசீர் பந்தமடி தொடை' என்று செய்யுள் உறுப்புக்க ளாறனையுஞ் சுட்டினர். இந்த ஆறும் உறுப்பியலுள் கூறப்படுபவை.

'பாவினங் கூறுவன்' இது உம்மைத்தொகை. பாவும் பாவினமும் என்பது பொருள். இவ் விரண்டையும் செய்யுளியலுள் கூறுவர்.

சிறப்புப் பாயிரமாக இல்லாமையினால் ஆக்கியோன் பெயர், நூற்பெயர், காரணம், அளவு, பயன் முதலியவற்றை உரையாசிரியர் எடுத்து மொழிகின்றார்.

பாளித்தியம், சந்தோபிசிதம், குணகாங்கியம், உருபாவதாரம் போன்ற வேற்றுமொழி நூல்கள் எடுத்துக் காட்டப்பெற்று, அவைபோல எவ்வெவ்வாறு இந்நூல் அமைந்து கிடக்கின்றது என்று கூறுவது ஒரு புது வழக்காகும்.

இந்நூலாசிரியரின் பெயரைக் குறிக்கவந்த உரையாசிரியர் 'ஆரிய மென்னும் பாரிரும் பௌத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர்' என்று குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியம் செய்யுளியலை நோக்கிக் காரிகை நூலினை நோக்குவார் யாவரும் இதற்கு முதனூல் தொல்காப்பியம் என்றே கொள்வர். நூல் அமைக்கின்ற முறைகளிற் சிலவற்றைத் தழுவி இந்நூல் செய்தார் என்று கூறவந்தவர், அவ்வாறு கூறினர் போலும். இக் கருத்து உரையாசியர்க்கும்

உடன்பாடே என்பது 'பண்டையோர் உரைத்த தண்டமிழ் யாப்பிற் கொண்டிலாத குறியினோரைக் குறிக்கொளுவுதல் காரணமாகவும், தொல்லைப் பனுவல் துணிபொருளுணர்ந்த நல்லவையோரை நகுவிப்பது காரணமாகவுஞ் செய்யப்பட்டது என்று கூறுவதால் விளங்கும்.

பாகதம் என்பது பிராகிருதம் என்பதன் திரிபாகும்.

2. 'யானு நடாத்துகின்றேன்' என்பதற்கு யான் + நா எனப் பிரித்துத்தொக்க உம்மையை விரித்து யானும் எனது புல்லிய நாவைக் கொண்டு எனப்பொருள் கொள்ளவேண்டும். யானு நடாத்துகின்றேன்! என்று பொருள் கொள்ளவும் இயலும்.

4. 'குறில் நெடில் ஆவி' என்பதற்குக் குறிலும், நெடிலும் உயிரும் என உம்மை விரித்துப் பொருள் கொள்க. குறிலும், நெடிலும் ஆவியுள் அடங்காதோ என்றால், யாப்பினுள் இத்தகைய பகுப்பு இன்றியமையாது வேண்டப்படுதலால் தனித்தனியே கூறினர். அசையாகக் கொள்ளுங்கால், குறில் தனித்தோ, நெடில் தனித்தோ வருமாயின் ஒரு நேரசையாகும். இவ்விடத்து ஆவி எனப் பொதுப் படக் கூற இயலாது. எதுகைகளுள் உயிர் எதுகை என்பதொன்று உண்டு, இரண்டாமெழுத்துக்கள் ஒன்றாதாயினும் இரண்டா மெழுத்துக்கள் மேலேறிய உயிர் ஒன்றிவருமானால் உயிரெதுகை என்று பெயர் இவ்விடத்துக் குறினெடிலாகிய இரண்டும் வரலாம். வண்ணங்கள் கூறும்பொழுது குறில், நெடில் என்ற இரண்டோடும் தனித்தனியே தூங்கிசை, ஏந்திசை, அடுக்கிசை, பிரிந்திசை, மயங்கிசை முதலிய ஐந்தும் சேர்ந்து வருகின்ற வண்ணங்களைக் காணலாம்.

'மெய் மறுவறு மூவினம்' என்பதும் இது போலவே தனித்தனியே வேண்டப்படுகின்றன. நேரசை, நிரையசை ஆகிய இரண்டிற்கும், குறிலோடும், நெடிலோடும், குறினெடிலோடும், குறிலிணையோடும் அடுத்து ஒற்று வரப்பெறும். வண்ணங் கூறுங்கால் வலி, மெலி, இடை என்ற மூன்றேடும் தூங்கிசை முதலிய ஐந்தும் வண்ணங்களாக வந்து உறழும். அப்பொழுது மெய் என்று கூறினல் மட்டும் போதாது.

6. "ஈரசை நாற்சீர்" என்றவிடத்துள்ள நான்கு என்னுஞ் சொல்லை நேரசையாலிற்ற மூவசைச்சீர் நான்கு எனவும், நிரையாலிறுப வகுத்த வஞ்சிக்குரிச்சீர் நான்கு எனவும் கொள்ளுதல் வேண்டும்.

7. இரண்டாமடியில் முதற்சீரின் கண்ணுள்ள "ஆம்" என்னுஞ் சொல்லையும் இறுதிக் கண்ணுள்ள உதாரணம் என்னுஞ் சொல்லையும் எல்லாவற்றேடுங்கூட்டி அகவற்சீருக்குதாரணமாம், வெண்பாவுரிச்சீர்க்குதாரணமாம், அசைச்சீர்க்குதாரணமாம், வஞ்சியுரிச்சீர்க்குதாரணமாம், அசைச்சீர்க்குதாரணமாம் என்று பொருளுரைத்துக் கொள்க.

8. தளைகளைக் கூறுவதற்கு முன்னரேயே ஓரசைச்சீரும், நாலசைச்சீரும் எவ்வாறு தளைகொள்ளுதல் வேண்டும் எனக் கூறியுள்ளார். அடுத்த நூற்பாவினுலேயே தளை கூறுகின்றமையான் அதனெழிபாகக் கூற வேண்டுவனவற்றை ஈண்டே தோற்றுவாய் செய்தார்.

10. தன்சீர் நின்று தன்வருஞ்சீரோடு ஒன்றுவன நான்கு தளைகள்: நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, ஒன்றிய

வஞ்சித்தளை என்பனவாம். அவ்வாறின்றி விகற்பித்து வரும் நிலையில் வருகின்ற தளைகள் மூன்றும்: இயற்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றுத வஞ்சித்தளை என்பனவாம்,

12. காரிகை ஆசிரியர் சீரெண்ணி அடிவகுக்கின்ற முறையை மேற்கொண்டுள்ளார். தொல்காப்பியர் எழுத்தெண்ணி அடிவகுக்கின்ற முறையையும், சீரெண்ணி அடிவகுக்கின்ற முறையையும் கூறிச் செல்லுகின்றுர். அடிகளில் நாற்சீர் கொண்டதுசிறப்பானதும் பெரும்பான்மையானதுமாம். "நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே" (தொல்: 1289) என்பர் தொல்காப்பியர். எனவே அதனை அளவடி என்றும் நேரடி என்றுஞ் சுட்டினர், அதில் குறைந்தவைகளைச் சிந்தடி, குறளடி எனவும் மிகுந்தவைகளை நெடிலடி, கழிநெடிலடி எனவுங் குறித்தனர். மக்களுள் அளவிற் குறைந்தவர்களை குறளன், சிந்தன் எனவும் மிகுந்தவர்களை நெட்டையர் எனவுங் கூறுமாறு போல இப்பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

14. நான்கு பாக்களுக்கு மட்டுமே அடிவரையறை சுட்டப்பட்டுள்ளது. இனப்பாடல்கட்குரிய அடிவரையறைகளை செய்யுளியலின்கண் ஆண்டாண்டு சுட்டுகின்றுர். மருட்பாவிற்கு அடிவரையறை கூறுமைக்குக் காரணம், இருபாக்களின் பிறப்பாக இருத்தலால் அப்பாக்களின் அடிவரையறையே அதற்குமொக்கும் என்னுங் கருத்துப்பட விடப்பட்டுள்ளது போலும்.

16. விகற்பம் பெறுகின்ற ஐந்துதொடைகளை மட்டும் இக்காரிகையாற் கூறுகின்றுர். தொடை விகற்பம் பெருத்தொடைகளை வருங்காரிகையால் விளக்குகின்றுர்கள்.

17. அந்தாதி அடிதோறும் இறுதிக்கண்ணின்ற எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ மற்றைய

வடிக்கு முதலாக வரப்பெறுவதாம். ஒரு பாடலின் முதலும் இறுதியும் ஒத்து வருவது மண்டிலித்து வருதல் எனக் கூறப்பெறும். அந்தாதி நூலாக அமைக்கப்படுகின்ற நிலையில் முதற்பாடலின் முதற்சொல்லும் இறுதிச் சொல்லும் மண்டலித்து வருமாறு அமைக்கப்பெற்றிருக்கும்.

19. தொடை விகற்பங்கள் நாற்சீர் கொண்ட அடிகளையே தமக்கு இருப்பிடமாகக் கொண்டு வருவன. ''சீர் முழுதும் ஒன்றின் முற்றும்'' என்ற பகுதிக்கு நான்கு சீர்களிலும் மோனை முதலாயின பொருந்தி வருவதையே முற்று என்று கொள்ளுகின்றோம். நான்கு சீர்களைக் கொண்ட பாவின் இடையே ஒரு கோடிழுத்தால் முதலிரண்டுசீர் மேற்பகுதியென்றும், மற்றைய இரண்டு சீர்களும் கீழ்ப்பகுதி யென்றும் கொள்ளப்படுகின்றன. இரண்டாம் சீர்க்கணின்றி மோனை முதலாயினவரின் அது மேற்கதுவாய் என்றும் மூன்றுஞ் சீர்க்கணின்றி மோனை முதலாயின வருவனவற்றைக் கீழ்க்கதுவாயென்றும் பெயரிட்டு வழங்குகின்றார் ஆசிரியர்.

செய்யுளியல்

செய்யுளியல்—கருத்து

வெண்பா, அகவற்பா, கலிப்பா ஆகிய மூன்றும் அளவடியால் வரும். வஞ்சிப்பா குறளடியாலும் சிந்தடியாலும் வரும். பாக்களில் வழங்கும் ஓசையினைச் சந்தம் என்று கூறுப. அவ்வோசையினை நான்கு வகையாக வகுத்துள்ளனர். அவை செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என்பன. இவை ஒவ்வொன்றும் மூவகையாக அமையும். ஏந்திசைச் செப்பல், தூங்கிசைச் செப்பல், ஒழுகிசைச் செப்பல் எனவும்; ஏந்திசையகவல், தூங்கிசையகவல், ஒழுகிசை அகவல் எனவும்; ஏந்திசைத் துள்ளல், அகவல் துள்ளல், பிரிந்திசைத் துள்ளல் எனவும்; ஏந்திசைத் தூங்கல், அகவல் தூங்கல், பிரிந்திசைத் தூங்கல் எனவும் பெயர் பெறும்.

வெண்பா: செப்பலோசையுடைத்தாய், ஈற்றடி முச்சீர்த்தாய் ஏனையடி நான்கு சீர்த்தாய் இரண்டாம் அடியில் ஏற்ற தனிச்சொற் பெற்று வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் விரவி வேற்றுத்தளை விரவாது காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாடுகளுள் ஏதேனும் ஒன்றை ஈற்றிலே பெற்று முடியப் பெறுவது இதன்பொது இலக்கணம் ஆகும். இது குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, சிந்தியல் வெண்பா என ஐவகையாக வரும்.

குறள்வெண்பா: வெண்பாவின் பொதுவிலக்கணம் பொருந்தி முதலடி நான்கு சீர்த்தாய் இரண்டாமடி மூன்று சீர்த்தாய் இரண்டடிகளைக் கொண்டு வருவது.

நேரிசைவெண்பா: வெண்பாவின் பொதுவிலக்கணம் பொருந்தி இரண்டாமடியில் தனிச்சொல் பெற்று ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வந்து நான்கடி கொண்டதாய் நிகழ்வது.

இருகுறள் நேரிசை வெண்பா : குறட்பாக்கள் இரண்டு சேர்ந்து இடையில் தனிச்சொல் ஒன்று கூட்டி அமைக்கப் பெறுவதாகும்.

ஆசிடை நேரிசை வெண்பா : இருகுறள் வெண்பாக்களைச் சேர்த்து நேரிசை வெண்பாவாகச் செய்யுங்கால் முதற் குறட்பாவின் இறுதிச்சீர் நாள் எனவோ மலர் எனவோ நின்று விட்டிசைக்குமாயின் அச்சீரினை முழுமைப்படுத்தித் தனிச்சொல்லோடு இயையப் புணர்த்தல் வேண்டும். அவ்விறுதிச் சீரினை ஓரசையோ ஈரசையோ கூட்டித் தளைதட்டாது அமைத்தல்வேண்டும். அவ்வாறு அமைக்கப்படுவதற்கு ஆசிடை நேரிசை வெண்பா எனப்பெயர். ஆசின் எண்ணிக்கையைப் பொறுத்து ஓராசிடையிட்ட நேரிசை வெண்பா எனவும் ஈராசிடையிட்ட நேரிசை வெண்பா எனவும் பெயரிட்டு வழங்கப்படும். இதுவும் ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வரப்பெறும். ஆசு என்றால் உலோகங்கள் ஒன்றோடொன்று பற்றுவதற்கு வைக்கப்படும் பற்று (பொடி) போலத் தளைபெற நில்லாத சீரினைத் தளைபெறுதற்கேற்ப ஓரசையோ ஈரசையோ கூட்டுவதனை "ஆசு" என்று கூறினர் ஆசிரியர். நான்கடியும் ஒரெதுகையாக வருவது ஒரு விகற்பமாகும். முன்னிரண்டடியும் ஒரெதுகையாகவும் பின்னிரண்டடியும் வேறெதுகையாகவும் வரப்பெறுவது இரு விகற்பமெனவும் கூறப்பெறும்.

இன்னிசை வெண்பா : நேரிசை வெண்பாவே போல வந்து தனிச்சொல் இல்லாமல் அமையுமாயின் அது இன்னிசை வெண்பா எனப்பெயர் பெறும். ஒருவிகற்பத்தானும் பல விகற்பத்தானும் இது வரப்பெறும். இது இரண்டாமடி இறுதியில் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தான் வரப்பெறுவது மற்றோர் வகையாகும். மூன்றாமடி இறுதியில் தனிச்சொல் பெற்று இரண்டு விகற்பத்தான் வருவது பிறிதோர் வகையாகும். இவையன்றி அடிதோறும் ஒருஉத்

தொடைபெற்று வருவனவும், நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு நான்கடியான் வருவனவும் இன்னிசை வெண்பா எனப்படும்.

பஃறொடை வெண்பா: வெண்பாவின் பொது ணம் பொருந்தி நேரிசை வெண்பாவைப் போலவோ அ லது இன்னிசை வெண்பாவைப் போலவோ அமைந்து நான் கடியின் மிக்க பலவடிகளான் வருவது பஃறொடை வெண்பா எனப்படும். இதுவும் ஒரு விகற்பத்தானும் பல விகற்பத் தானும் வரப்பெறும்.

சிந்தியல் வெண்பா: வெண்பாவின் பொதுவிலக்கணம் பொருந்தி மூன்றடிகளால் வரப்பெறுவது சிந்தியல் வெண்பா ஆகும். இரண்டாமடியில் தனிச்சொல் பெற்று நேரிசை வெண்பாவைப் போல் வருமாயின் அது நேரிசைச் சிந்தியல் வெண்பா எனவும்; தனிச்சொல் இன்றி இன்னிசை வெண்பா வைப் போல வருமாயின் அது இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனவும் பெயர்பெறும்.

உரைக்கருத்து: செப்பலோசையிற் சிறிது வழுவிவந்த பஃறொடை வெண்பாக்களை ஒருபுடை ஒப்புமை நோக்கி வெண்கலிப்பா என வழங்குதலும் உண்டு.

குறள் வெண்பாவினை ஓரடி முக்கால் என்றும் சிந்தியல் வெண்பாவினை ஈரடி முக்கால் என்றும் நேரிசை இன்னிசை வெண்பாக்களை மூவடி முக்கால் என்றும் பஃறொடை வெண்பாவினைப் பலவடி முக்கால் என்றும் கூறுதலும் உண்டு.


வெண்பா
குறள் வெண்பா
நேரிசை வெண்பா (அ)
இரு குறள் நேரிசை
ஒருவிகற்பம் பெற்றது
இருவிகற்பம் பெற்றது
ஓராசு இடையிட்டது
ஈராசு இடையிட்டது
இன்னிசை வெண்பா
தனிச்சொல் இன்றி வந்த இன்னிசை வெண்பா
தனிச்சொல் இன்றி ஒருவிகற்பம் பெற்ற இன்னிசை வெண்பா
தனிச்சொல் இன்றி பலவிகற்பம் பெற்ற இன்னிசை வெண்பா
2-ஆம் அடியில் தனிச்சொற் பெற்று 3 விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா
3-ஆம் அடியில் தனிச்சொல் பெற்று 2 விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா
அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்றுவந்த இன்னிசை வெண்பா
நேரிசையில் சிறிது வேறுபட்டு நான்கு அடியான் வந்த இன்னிசை வெண்பா
பஃறொடை வெண்பா
சிந்தியல் வெண்பா
நேரிசைச் சிந்தியல்
ஒருவிகற்ப நேரிசைச் சிந்தியல்
இருவிகற்ப நேரிசைச் சிந்தியல்
இன்னிசைச் சிந்தியல்
ஒருவிகற்ப இன்னிசைச் சிந்தியல்
பலவிகற்ப இன்னிசைச் சிந்தியல்

குறட்பா இனங்கள்: குறள்வெண் செந்துறை, குறட்டாழிசை, செந்துறைச்சிதைவுத் தாழிசைக் குறள், சந்தம் சிதைந்த குறட்டாழிசை என நான்கு வகையாக வரும்.

குறள் வெண் செந்துறை: இது செந்துறை வெள்ளை என்றும் பெயரிட்டு வழங்கப்படும். இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடையதாய் வரப்பெறுவது.

குறட்டாழிசை: இது தாழிசைக் குறள் எனவும் பெயர் பெறும். நாற்சீரின் மிக்க பல சீர்களான் வந்து இரண்டடியாய் ஈற்றடி குறைந்து வரப்பெறுவது.

செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள்: அடி இரண்டாய் அளவொத்து விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இன்றி வெண் செந்துறையினின்றும் சிதைந்து வருவன எல்லாம் இப்பெயரிட்டு வழங்கப்படும்.

சந்தம் சிதைந்த குறட்டாழிசை: குறள் வெண்பாவே போல வரப்பெற்று ஏதேனும் ஒரு இடத்தில் செப்பலோசையிற் சிறிது சிதைந்து வருமானால் அது குறள் வெண்பாவிற்கினமாகிய குறட்டாழிசை எனப்படும்.

வெண்பா இனங்கள்: வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் என்ற மூன்றும் வெண்பாவின் இனங்களாகும்.

வெண்டாழிசை: இது வெள்ளொத் தாழிசை எனவும் வழங்கப்பெறும். மூன்றடியாய் இறுதியடி வெண்பாவே போன்று முச்சீரான் முடியப்பெறும். சிந்தியல் வெண்பா ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருமாயின் அது வெள்ளொத் தாழிசையாகும். வெண்பாவிற்கு இனமாய்த்தாழம்பட்ட ஓசையொடு வருதலால் இது வெண்டாழிசை எனப்பட்டது

வெண்டுறை: மூன்றடி முதலாக ஏழடி ஈருக, ஈற்றில் உள்ள சில அடிகளில் சில சீர் குறைந்து வரப்பெறும்.

எனவே மூன்றடி, நான்கடி, ஐந்தடி, ஆறடி, ஏழடி ஆய அடிகளால் வெண்டுறை வரப்பெறும். இது ஒரே ஒலி யோடு அமைக்கப்படுமாயின் ஓரொலி வெண்டுறை என் றும் சிலவடி ஓரோசையாலும் மற்றையடிகள் வேறோசை யாலும் அமைக்கப்படுமாயின் வேற்றொலி வெண்டுறை எனவும் வழங்கப்பெறும்.

வெளிவிருத்தம்: மூன்றடியானும் நான்கடியானும் வந்து அடிதோறும் ஒருசொல்லே தனிச்சொல்லாக இறுதியில் வந்து அமையுமானால் அது வெளிவிருத்தம் எனப்பெறும். தனிச்சொல் ஐந்தாவது சீராக வரப்பெறும்.

ஆசிரியப்பா: அகவல் ஓசையும் ஆசிரிய உரிச்சீரும் பயின்று அளவடி உடையதாய் ஆசிரியத் தளைமிக்குப் பிற தளை மயங்கியும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் 'அல்லாத பிறசீர்கள் எல்லாம் வரப்பெறுவது ஆசிரியப் பாவாகும். அது நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என நான்கு வகையாக வரப்பெறும்.

நேரிசை ஆசிரியப்பா: ஆசிரியப்பாவின் பொதுவிலக் கணம் பொருந்தி, ஈற்றயலடி முச்சீரான் வரப்பெறுவது நேரிசை ஆசிரியப்பாவாகும்.

இணைக்குறள் ஆசிரியப்பா: ஆசிரியப்பாவின் பொது விலக்கணம் பொருந்தி, முதலடியும் ஈற்றடியும் நான்கு சீர்த்தாய் இடையடிகள் ஒன்றும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வரப்பெறுவதாம். குறளடி என்பது பொது வாக அளவடியிற் குறைந்த சிந்தடி, குறளடி என்ற இரண் டிற்கும் பொருந்தும். எனவே, குறளடி இரண்டு இணைந்து வருவதை இணைக்குறள் ஆசிரியம் எனக் கூறினர் என்ப.

நிலைமண்டில ஆசிரியப்பா: ஆசிரியப்பாவின் பொதுஇலக் கணம் பொருந்தி, எல்லா அடியுந் தம்முள் அளவொத்து அளவடியான் வரப்பெறுவது நிலைமண்டிலமாகும்.

அடிமறிமண்டில ஆசிரியப்பா: ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பொருந்தி, ஆசிரியர் அமைத்த முறையில் இல்லாமல், அதனைப் படிப்போர் மனக்குறிப்பின் வழியே எல்லா அடியினையும் முதல் ஈறு இடையாக அமைத்துப் படிப்பினும் ஓசையும் பொருளும் வேறுபடாது வரப்பெறுவதாகும்.

ஆசிரியப்பாவின் இனங்கள்: அவை ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம் என்பன.

ஆசிரியத்தாழிசை: மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரியத்தாழிசை எனப்படும். இது ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடையது. தனியே வரப் பெறினும் ஆசிரியத் தாழிசையாகவே கொள்ளப்படும்.

ஆசிரியத்துறை: இதற்குச் சீர் வரையறை கிடையாது நான்கடியாய் வருவது இதன் பொது இலக்கணம். நான் கடியாய் ஈற்றயலடி குறைந்தும், நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காயும், நான்கடியாய் இடைஇடை குறைந்தும், நான்கடியாய் இடை இடை குறைந்து இடை மடக்காயும் வருவன எல்லாம் ஆசிரியத்துறை என்று வழங்குவர். இவற்றுள் ஈற்றயலடி குறைந்து வருவனவற்றை ஆசிரிய நேர்த்துறை என்றும், இடை இடை குறைந்து வருவனவற்றை ஆசிரிய இணைக்குறட்டுறை என்றும் கூறுவதுண்டு.

ஆசிரிய விருத்தம்: அளவொத்த கழிநெடிலடி நான்காய் வருவன ஆசிரிய விருத்தமாகும். ஐந்து சீர் கொண்ட அடிகளிலிருந்து பதின்சீரின் மிக்க அடிகளாலும் கூட ஆசிரிய விருத்தம் வரப்பெறும். என்றாலும், எண்சீரின் மிக்க அடிகளால் வருவன சிறப்பில்லனவாகும்.

கலிப்பா: துள்ளல் ஓசையுடையதாய்த் தன்தளையும் பிறதளையும் வந்து நிரை முதலாகிய வெண்பா உரிச்சீர் மிக்கு, தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்

சொல், சுரிதகம் என்ற உறுப்புக்களில் ஒன்றும் பலவும் பெற்று வரப்பெறுவதாம். கலிப்பாவில் நேரீற்று இயற்சீரும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வாரா. இது ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக்கலி என வகையால் மூன்ருகும்.

கலிப்பாவின் உறுப்புக்கள் : 6.

1. **தரவு :** இது கலிப்பாவின் முதல் உறுப்பாகும். தரவு என்பதை எருத்தம் என்றும் கூறுவர். இது மூன்றடிச் சிறுமையாகவும், பெருமை வரையறையில்லாமலும் வரப் பெறும். பெருமை சிறுமை இல்லாமல் சில கலிப்பாக்களுக்கு ஆறடியாகவே தரவு வரும். எல்லா உறுப்புகளின் பொருளை யும் தொகுத்து முன்னர்ச்சுட்டலின் தரவெனப்பட்டது.

2. **தாழிசை :** தாழம்பட்ட ஓசையுடையது. இதுவும் முதலுறுப்பு என்கின்ற தகுதி பெற்றது. கலிப்பாவின் இடையில் வரும். எனவே இது இடைநிலைப்பாட்டு என்று அழைக்கப்பெறும். இது தரவைக் காட்டிலும் சுருங்கி வரும். சுருக்கம் இரண்டடியானும் பெருக்கம் நான்கடியானும் வரும்.

3. **அராகம் :** இது துணையுறுப்பு என்கின்ற தகுதியுடையது. முடுகிய ஓசையையுடையது. முடுகியல், வண்ணகம், அடுக்கியல் என்பன இதன் வேறு பெயர்களாம். அளவடி முதலாய எல்லா அடியானும் வரப்பெறும். சிறுமை நான்கடி; பெருமை எட்டடி. தாழிசைக்குப் பின்னரும் அம்போதரங்கத்தின் முன்னரும் வரப்பெறும்.

4. **அம்போதரங்கம் :** தரங்கம் என்ருல் அலை என்று பொருள். நீரலையானது கடலிடைத் தோன்றும் பொழுது உயர்ந்தும் குறுகியும் காணப்படும்; கரைக்கு வரவர அகன்றும் விரிந்தும் குறைந்தும் வரப்பெறும். அதுபோல, நாற்சீரடியும் முச்சீரடியும் இருசீரடியும் ஆகிய அசையடிகளைப் பெற்று வருவது. தாழிசைக்கும் தனிச்சொற்கும் நடுவேயோ,

அராகத்திற்கும் தனிச் சொற்கும் நடுவேயோ வரப்பெறும். அசையடி, பிரிந்திசைக்குறள், சொற்சீரடி, எண் என்பன இதன் வேறு பெயர்கள். நாற்சீரடி இரண்டு கொண்ட அம்போதரங்கம் பேரெண் எனவும், நாற்சீர் ஓரடி நான்கு கொண்ட அம்போதரங்கம் அளவெண் எனவும், முச்சீர் அடி நான்கோ, எட்டோ கொண்ட அம்போதரங்கம் இடையெண் எனவும், இருசீர் அடி எட்டோ, பதினாறோ கொண்ட அம்போதரங்கம் சிற்றெண் எனவும் பெயர் பெறும்.

5. **தனிச்சொல்:** ஒரு சீரே அடியாக வருவது; பெரும்பாலும் சுரிதகத்தின் முன்னும் சிலவிடங்களில் மற்றையுறுப்புக்களின் இடையிலும் வரப்பெறும். விட்டிசை, கூன், தனிநிலை என்பன இதன் வேறு பெயர்கள். விட்டிசையாக நின்று பொருள் நிரப்பும் இயல்பினை உடையது.

6. **சுரிதகம்:** கலிப்பாவின் இறுதி உறுப்பாக அமைவது. இதுவும் துணையுறுப்புக்களில் ஒன்று. நீர்ச்சுழிபோல் மற்றைய உறுப்புக்களின் பொருள்களைத் தன்பால் அடக்கி முடிப்பது. சுருங்கக் கூறின், முடிப்புரைபோல நிற்பது எனலாம். இது ஈற்றயலடி முச்சீராக வரின் ஆசிரியச் சுரிதகம் எனவும், ஈற்றடி முச்சீராக வரின் வெண்பாச் சுரிதகம் எனவும் பெயர்பெறும். அடக்கியல், வாரம், வைப்பு, போக்கியல் என்பன இதன் மறுபெயர்கள்.

ஒழிந்தாசைக் கலி: நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என மூவகையாக வரும்.

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா: முதலில் ஒருதரவு வந்து அதன் பின்னர் மூன்று தாழிசை வந்து, தனிச்சொல், சுரிதகம் என்ற துணையுறுப்புக்களை உடையதாய் வரப் பெறும்.

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா: தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்ற ஐந்து

உறுப்புக்களை உடையதாய் வரப்பெறுவது. தரவு ஆறடியாக வரும்.

வண்ணக ஒழித்தாசைக் கலிப்பா: தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்ற ஆறுறுப்பும் உடையதாய் வரப்பெறுவது. தரவு ஆறடியாக வரும்.

வெண்கலி: வெண்கலிப்பா, கலிவெண்பா என இரண்டாக வரப்பெறும். அவ்வாறின்றி வெண்கலிப்பாவின் வேறு பெயரே கலிவெண்பா எனக் கூறுவோரும் உளர். கலித்தளை மிக்கு, கலியோசை தழுவி வருவது வெண்கலிப்பா என்றும், வெண்டளை மிக்கு. வெள்ளோசை தழுவி வருவது கலிவெண்பா என்றும் பெயரிட்டு வழங்கப்படும். பஃறொடை வெண்பாவில் சிறிது செப்பலோசை வழுவி வந்தவற்றை ஒருபுடை ஒப்புமை நோக்கி வெண்கலிப்பா என வழங்குதலும் உண்டு.

கொச்சகக்கலி: தரவுக் கொச்சகக்கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சிஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா, பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என் ஐந்து வகையாக வரும். மகளிர் உடையில் அமையும் சிறிதும் பெரிதும் சமமும் ஆய மடிப்புக்களைக் ''கொய்சகம்'' என்பர் இக்காலத்தார். அதுபோல, இதுவும் சிறிதும் பெரிதும் சமமும் ஆகிய உறுப்புக்களைப் பெற்று வருவதலால் கொச்சகம் எனப்பெயர் பெற்றது.

தரவுக் கொச்சகக் கலிப்பா: ஒரு தரவு வந்து வேறு உறுப்புக்கள் இன்றி முடிவது ஒரு வகையாகும். ஒரு தரவு, தனிச்சொல், சுரிதகம் என்ற மூன்று உறுப்புக்களால் ஆவது மற்றொரு வகையாகும்.

தரவிணைக் கொச்சகக் கலிப்பா: தரவு இரண்டு வந்து இடையிடை தனிச்சொல் பெற்றுச் சுரிதக உறுப்புப்பெற்று முடியப்பெறும். சுரிதகம் இன்றியும் வரப்பெறுவது உண்டு எனத் தெரிகிறது.

சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா: ஒரு தரவும், தாழிசை சிலவும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று முடியப் பெறும். நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் இதற்கும் சிறிது வேறுபாடு உண்டு. இதில் அமைந்துள்ள தாழிசைகளின் இடையிடையே தனிச்சொற்கள் வரப்பெறும்.

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா: தரவு ஒன்றும், தாழிசை ஆறும், தனிச்சொல்லும், சுரிதகமும் பெற்று முடியப்பெறும். தாழிசை என்கின்ற உறுப்பு மிக்கிருத்தலால் பஃறாழிசை எனப் பெயர் பெற்றது.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா: தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்று கூறப்பட்ட முறையினின்றும் மாறியும், கூடியும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும் பிறபாக்கள் மயங்கியும் கலிப்பாவில் வாரா என்று கூறப்பெற்ற நேரீற்றியற்சீரும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்தும், ஐஞ்சீரடிவிரவியும் ஒத்தாழிசைக் கலிப்பாக்களோடு ஒவ்வாது வருவன எல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனப் பெயர் பெறும்.


கலிப்பா
ஒத்தாழிசைக்கலி
வெண்கலி
கொச்சகக் கலி
நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா
வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா
அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா
வெண்கலிப்பா
கலிவெண்பா
தரவுக்கொச்சகக் கலிப்பா
தரவிணைக் கொச்சகக் கலிப்பா
சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

கலிப்பாவின் இனங்கள்: கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் என்பன கலிப்பாவின் இனங்கள்.

கலித்தாழிசை : இரண்டடியும் பலவடியும் வந்து ஈற்றடி மிகுந்தும், அல்லாத அடிகள் சீரினுல் தம்முள் ஒத்தும், ஒவ்வாதும் வரப்பெறுவது கலித்தாழிசையாகும். இதுவும் ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடையது.

கலித்துறை : ஐஞ்சீரடி (நெடிலடி) நான்காய் வருவது கலித்துறை ஆகும். [கட்டளைக் கலித்துறை: நெடிலடி நான்காய் முதற்சீர் நான்கும் வெண்சீர் வெண்டளையாலோ அல்லது இயற்சீர் வெண்டளையாலோ ஆக்கப்பெற்று, அடி தோறும் இறுதிச்சீர் விளங்காயாக வந்து, நேரசை தொடக்கமாக இருப்பின் எழுத்துக்கள் ஓர் அடிக்குப் பதினறும், நிரையசை தொடக்கமாக இருப்பின் எழுத்துக்கள் ஓர் அடிக்குப் பதினேழும் கட்டளையாக அமையப் பெறுவது கட்டளைக் கலித்துறை ஆகும். கட்டளைக் கலித்துறையினு லேயே ஆசிரியர் காரிகை செய்தமையால் இதற்குத் தனித்து இலக்கணம் கூருராயினர்.]

கலிவிருத்தம் : நான்கு சீர் (அளவடி) கொண்ட அடி நான்காய் வருவது கலிவிருத்தமாகும். இதற்கும் நிலை மண்டில ஆசிரியத்திற்கும் வேறுபாடுகளாவன :—

நிலைமண்டில ஆசிரியப்பா நான்கடியின் மிக்கும் நடக்கும். கலிவிருத்தத்திற்குப் பெருமை சிறுமை இல்லை. இனப் பாக்கள் முதற்சீர் முழுமையும் பெரும்பாலும் ஒத்திருக்கும். ஒரே எதுகைத்தாய் அமையப்பெறும். கலியோசை தழுவி நடக்கும். நிலைமண்டில ஆசிரியப்பாவாயின் இவ்வரை யறைகள் இன்றி வரப்பெறும். ஈற்றெழுத்துக்கள் வரை யறையுடன் அமைக்கப் பெறும், ஆசிரியப்பா, போல இது வருவதில்லை.

வஞ்சிப்பா : இது குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா என இருவகையாக வரும். இருசீர் கொண்ட அடிகளால்

வந்து தனிச் சொல்லும் ஆசிரியச் சுரிதகமும் பெற்று வரின் குறளடி வஞ்சிப்பா எனவும்; முச்சீர் கொண்ட அடிகளால் நிரம்பித் தனிச்சொல்லும் ஆசிரியச் சுரிதகமும் பெற்று முடியப்பெறுவது சிந்தடி வஞ்சிப்பா எனவும் பெயர்பெறும். வஞ்சிப்பாவில் வரும் சுரிதகம் ஆசிரியச் சுரிதகமாக வருவதன்றி வெண்பாச் சுரிதகமாக வரப்பெறுது.

வஞ்சிப்பாவின் இனங்கள்: வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் என வஞ்சிப்பாவின் இனங்கள் மூன்றும்.

வஞ்சித்தாழிசை: இருசீர் கொண்ட (குறளடி) நான்கு வந்த செய்யுள், மூன்று ஒருபொருள் மேல் அடுக்கி வருமாயின் வஞ்சித் தாழிசை ஆகும். இது ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி அல்லது வாராது.

வஞ்சித்துறை: இருசீர் கொண்ட (குறளடி) அடி நான்காய் வருவது வஞ்சித்துறை ஆகும். ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவது வஞ்சித் தாழிசையாகும். ஒரு பொருள் மேல் ஒன்றாய் வருவது வஞ்சித்துறையாகும். இதுவே இவற்றிடை வேறுபாடாம்.

வஞ்சிவிருத்தம்: முச்சீர்கொண்ட (சிந்தடி) அடி நான்காய் வருவது வஞ்சி விருத்தம் ஆகும்.

மருட்பா: மருள் = மயக்கம்=சேர்க்கை. இரு பாக்கள் சேர்ந்து அமையப் பெறுவது மருட்பாவாகும். வெண்பாவும் அகவற்பாவும் சேர்ந்து வருவது மருட்பா எனப்படும். 'ஒரு பார்ப்பனக் குமாரனும் அரச கன்னியும் கூடி வாழ்தல் போல வெண்பாவும் ஆசிரியப்பாவும் மருள் பூண்டு கூடி நிற்றலால் இது மருட்பா எனப்பட்டது' என்பர் சுன்னுகம் குமாரசுவாமிப் பிள்ளை யவர்கள். வெண்பா முன்னுகவும் ஆசிரியப்பா, பின்னுகவும் வத்து அமையப் பெறுவது மருட்பாவாகும். காரிகை ஆசிரியர் கூறிய பா இலக்கணங்களுள் இது ஒன்றற்கே பொருள் வரையறை கூறியுள்ளார்.

1. புறநிலை வாழ்த்து
2. கைக்கிளை
3. வாயுறை வாழ்த்து
4. செவியறிவுறூஉ

என்ற நான்கு பொருண்மேலும் மருட்பா வரப்பெறும்.

புறநிலை வாழ்த்து மருட்பா: வழிபடு தெய்வம் பாட்டுடைத் தலைவனைக் காக்க என்றும் பழிப்பற்ற செல்வத்தோடு அவன் வழிவழிச்சிறந்து விளங்க வேண்டும் என்றும் வாழ்த்திப் பாடுவதாகும். கலிப்பாக்களாலும் வஞ்சிப்பாக்களாலும் இவ்வகைப்பா அமையப்பெருது.

கைக்கிளை மருட்பா: ஒரு மருங்கு பற்றிய கேண்மை உடையோர், கேட்பதற்கு யாரும் இல்லாத காலத்தும் புலம்புகின்ற சொற்களை உடையதாய் அமையப்பெறுவது.

வாயுறை வாழ்த்து மருட்பா: வேம்பும் கடுக்காயும் போலக் கடுமையான சொற்களைப் பயன்படுத்துதல் இல்லாமல் சில மெய்ப்பொருள்களை ஒருவன் வழியானது சிறக்கவேண்டும் என்ற நல்ல நோக்கோடு ஓம்படைச் சொற்களாலே அமைக்கப் பெறுவதாகும்.

செவியறிவுறூஉ மருட்பா: ஒருவன் தன்னை வியந்து கொள்ளாமல், பெரியோர்கள் இடையில் அமைந்து ஒழுகுதல் வேண்டும் எனக், கூறுவோருடைய சொற்களில் நாட்டம் கொள்ளுமாறு அமையப் பாடுவதாம்.

இவையனைத்தும், வெண்பாவும் ஆசிரியப்பாவும் ஒத்த அடிகளால் பாடப்படுமாயின் அது சமநிலை மருட்பா எனவும், ஏதேனும் ஒருபா மிக்க அடிகளாலும் மற்றொன்று குறைந்த அடிகளாலும் அமைக்கப் பெறுமாயின் அது வியனிலை மருட்பா எனவும் பெயரிட்டு வழங்கப்படும்.

இவற்றுள் புறனிலை வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் செவி யறிவுறூஉவும் மருட்பாவினுல் அமைக்கப் படுவதோடன்றி வெண்பா, ஆசிரியப்பா ஆகிய வற்ருலும் அமைக்கப் பெறும். கலிப்பாவும் வஞ்சிப்பாவும் இவற்றிற்கு வாரா.

கைக்கிளை எல்லாப் பாவானும் வரப்பெறும். கைக் கிளை, வெண்பா முதலாக ஆசிரியம் ஈருக வரும்வழி ஆசிரியவடி இரண்டாய் அவற்றுள் ஈற்றயலடி முச்சீராய் வரப்பெறும்.

2. செய்யுளியல்

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY. LIBRARY. Acc No — Date — MADRAS.

1. பாக்கட்குரிய அடியும் ஓசையும்

வெண்பா வகவற் கலிப்பா வளவடி வஞ்சியென்னும்
ஒண்பா வடிகுறள் சிந்தென் றுரைப்ப வொலிமுறையே
திண்பா மலிசெப்பல் சீர்சா லகவற்சென் றேங்குதுள்ளல்
நண்பா வமைந்த நலமிகு தூங்க னறுநுதலே. (22)

என்பது காரிகை. இவ்வியல் என்ன பெயர்த்தோவெனின், வெண்பா, வெண்டாழிசை, வெண்டுறை, வெளி விருத்தம்; ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம்; கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலி விருத்தம்; வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம்; மருட்பா எனக் கிடந்த செய்யுட்களை ஆமாறுணர்த்திற்றுதலாற் 'செய்யுளியல்' என்னும் பெயர்த்து.

வெண்பா முதலா விளம்புநாற் பாவொலி
செப்ப லகவல் சீர்கெழு துள்ளல்
தூங்க லென்ப தொன்னூற் புலவர்

என்றாராகலின்.

இவ்வியலுள் இக் காரிகை என்னுதலிற்றோ வெனின், வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நான்கு பாவிற்கும் அடியும் ஓசையும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'வெண்பா அகவல் கலிப்பா அளவடி'
என்பது: வெண்பாவும், ஆசிரியப்பாவும், கலிப்பாவும் நாற்சீரடியான் வரப்பெறும்; எ - று.

'வஞ்சியென்னும் ஒண்பாவடி குறள்சிந்தென்றுரைப்ப'
என்பது: வஞ்சிப்பா இருசீரடியானும், முச்சீரடியானும் வரப்பெறு மென்று சொல்லுவர் புலவர்; எ - று.

''வஞ்சியென்னு மொண்பா'' என்று சிறப்பித்தவதனல் வெண்பாவின் ஈற்றடியும் நேரிசை யாசிரியப்பாவின் ஈற்றயலடியும், கலிவெண்பாவின் ஈற்றடியும் முச்சீரான் வரப்பெறுமென்றும், இணைக்குற ளாசிரியப்பாவின் இடையடிகள் இரண்டும், பலவும், குறளடியானும் சிந்தடியானும் வரப்பெறு மென்றும். கலியினுள்ளும் ஒருசார் அம்போதரங்கவுறுப்பும் இருசீரடியரானும், முச்சீரடியானும் வரப்பெறுமென்றுங் கொள்க.

அராகவுறுப்புக்கள் அளவடி முதலாய எல்லாவடியானும் வரப்பெறு மென்றுங் கொள்க.

அவை போக்கித் தத்தம் இலக்கணச் சூத்திரத்துள்ளே காட்டுதும். என்னை,

கலியொடு வெண்பா வகவல் கூறிய
வளவடி தன்னு னடக்குமற் றவையே (யாப்பருங்கலம் 27)

சிந்தடி குறளடி யென்றிரண் டடியான்
வஞ்சி நடக்கும் வழக்கினை யுடைய (,, 28)

என்ருர் காக்கைபாடினியார்.

'ஒலிமுறையே திண்பா மலிசெப்பல் சீர்சால் அகவல் சென்றேங்குதுள்ளல் நண்பா வமைந்த நலமிகு தூங்கல்' என்பது: வெண்பா, செப்பலோசையான் வரும்; ஆசிரியப்பா, அகவலோசையான் வரும்; கலிப்பா துள்ளலோசையான் வரும்; வஞ்சிப்பா, தூங்கலோசையான் வரும்; எ - று.

'நறுநுதலே' என்பது மகடூஉ முன்னிலை.

திண்பா மலிசெப்பல்' என்று சிறப்பித்தவதனல் செப்பலோசை மூன்று வகைப்படும்; ஏந்திசைச் செப்பலும், தூங்கிசைச் செப்பலும், ஒழுகிசைச் செப்பலும் என. என்னை,

வெண்சீர் வெண்டளை யான் வரும் யாப்பை
ஏந்திசைச் செப்ப லென்மனுர் புலவர்

இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்ப லென்மனுர் புலவர்

வெண்சீ ரொன்றலும் இயற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல்
(சங்க யாப்புச் செய்யுள்)

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

குறள்வெண்பா

யாதானு நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத ஆறு (குறள் : 397)

இது வெண்சீர் வெண்டளையான் வந்தமையால் ஏந்திசைச் செப்பலோசை.

குறள்வெண்பா

பாலொடு—வாலெயி றூறிய நீர் (காரிகை: 31)

இஃது இயற்சீர் வெண்டளையான் வந்தமையால் தூங்கிசைச் செப்பலோசை.

குறள்வெண்பா

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும் (குறள் : 290)

இது வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் விரவி வந்தமையால், ஒழுகிசைச் செப்பலோசை.

'சீர்சாலகவல்' என்று சிறப்பித்தவதனுல் அகவலோசை மூன்று வகைப்படும்; ஏந்திசை யகவலும், தூங்கிசை யகவலும், ஒழுகிசை யகவலும் என. என்னை,

நேர்நே ரியற்றளை யான்வரு மகவலும்
நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலும்
ஆயிரு தளையுமொத் தாகிய வகவலும்
ஏந்தல் தூங்கல் ஒழுகல் என்றிவை
ஆய்ந்த நிரனிறை ஆகும் என்ப

என்றாராகலின்.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

நேரிசை யாசிரியப்பா

போது சாந்தம்—துன்னு வாரே (காரிகை: 24)

இது நேரொன் றாசிரியத்தளையான் வந்தமையால், ஏத்திசை யகவலோசை.

நேரிசை யாசிரியப்பா

அணி நிழல்—பரிசறுப்பவரே (காரிகை: 24)

இது நிரையொன் றாசிரியத்தளையான் வந்தமையால், தூங்கிசை யகவலோசை.

நேரிசை யாசிரியப்பா

குன்றக் குறவன்—சுணங்கே (காரிகை: 30)

இது நேரொன்றாசிரியத்தளையும் நிரையொன்றாசிரியத் தளையும் விரவி வந்தமையால், ஒழுகிசை யகவலோசை.

'சென்றேங்கு துள்ளல்' என்று சிறப்பித்தவதனால், துள்ளலோசை மூன்று வகைப்படும்; ஏந்திசைத் துள்ளலும் அகவல் துள்ளலும், பிரிந்திசைத் துள்ளலும் என. என்னை,

ஏந்திசைத் துள்ளல் கலித்தளை யியையின்
வெண்டளை தன்றளை யென்றிரண் டியையி
னென்றிய வகவற் றுள்ளலென் றேதுப

தன்றளை பிறதளை யென்றிவை யனைத்தும்
பொருந்தி வரினே பிரிந்திசைத் துள்ளல்

என்றாராகலின்.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு :—

தரவுகொச்சகக் கலிப்பா

முருகவிழ்தா மரைமலர்மேல் முடியிமையோர் புடைவரவே
வருசினனுர் தருமறைநூல் வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுனியா வெதிரியகா தியைஅரியா
நிருமலராய் அருவினராய் நிலவுவர்சோ தியினிடையே

இது கலித்தளையான் வந்தமையால், ஏந்திசைத் துள்ளலோசை.

தரவுகொச்சகக் கலிப்பா

செல்வப்போர்....ஒளித்ததே (காரிகை : 35)

இது வெண்சீர் வெண்டளையும், கலித்தளையும் விரவி வந்தமையால், அகவல் துள்ளலோசை.

கலிப்பா

குடநிலைத் தண்புறவிற் கோவலர் எடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவில் தகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறெரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப
எனவாங்கு,
ஆனொடு புல்லிப் பெரும்புதல் முனையும்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே

இது பல தளையும் விரவி வந்தமையால், பிரிந்திசைத் துள்ளலோசை.

'நண்பா அமைந்த நலமிகு தூங்கல்' என்று சிறப்பித்ததனுல், தூங்கலோசை மூன்று வகைப்படும்; ஏந்திசைத் தூங்கலும், அகவற் றூங்கலும், பிரிந்திசைத் தூங்கலும், என. என்னை,

ஒன்றிய வஞ்சித் தளையே வரினும்
ஒன்ரு வஞ்சித் தளையே வரினும்
என்றிவை யிரண்டும் பிறவு மயங்கினும்
ஏந்த லகவல் பிரிந்திசைத் தூங்கலென்
ருய்ந்த நிரனிறை யாகு மென்ப

என்ருராகலின்.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு :—

வஞ்சிப்பா

வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்தினர்
நாளும்,
மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே

இஃது ஒன்றிய வஞ்சித்தளையான் வந்தமையால், ஏந்திசைத் தூங்கலோசை.

வஞ்சிப்பா

வானோர்தொழ வண்தாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்
ஆனாவருள் கூரறிவனைக்
காணார்,
மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே

இஃது ஒன்றாத வஞ்சித்தளையான் வந்தமையால் அகவல் தூங்கலோசை.

வஞ்சிப்பா

மந்தாநிலம்—மகிழ்ந்தே (காரிகை : 35)

இது பலதளையும் விரவி வந்தமையால், பிரிந்திசைத் தூங்கலோசை.

உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

வளம்பட வென்பது வெள்ளைக் ககவற் குதாரணஞ்செங்
களம்படக் கொன்று கலிக்கரி தாயகண் ணார்கொடிபோல்
துளங்கிடை மாதே சுறமறி தொன்னலத் தின்புலம்பென்
றுளங்கொடு நாவல ரோதினர் வஞ்சிக் குதாரணமே (23)

இ-கை. அவ்வடிகளானும், ஓசைகளானும் வந்த இலக்கியங்கட்கு முதல்நினைப் புணர்த்துதல் நுதலிற்று.

‘வளம்பட வென்பது வெள்ளைக்கு’

இன்னிசை வெண்பா

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றுன்
விளங்காய் திரட்டினு ரில்லை—களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில் (நாலடியார்: 103)

இஃது அளவடியானும், செப்பலோசையானும் வந்த இன்னிசை வெண்பா.

'அகவற் குதாரணஞ் செங்களம் படக்கொன்று'

நேரிசை ஆசிரியப்பா

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட் டியானை
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே (குறுந்தொகை: 1)

இஃது அளவடியானும், அகவலோசையானும் வந்த நேரிசை யாசிரியப்பா.

'கலிக் கரிதாய'

நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா

அரிதாய அறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணுரைத் தெறுதலும்
புரிவமர் காதலீற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி

இது தரவு.

அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே

இன்பத்தின் இகந்தொரீஇ யிலைதீய்ந்த உலவையால்
துன்புறூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
இன்னிழ லின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

இனைநலம் உடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழில் உண்கணு மாடுமால் இடனே

(கலித்தொகை: 11)

இது சுரிதகம்,

இஃது அளவடியானும், துள்ள லோசையானும் வந்த நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.

'கண்ணார் கொடிபோற் றுளங்கிடை மாதே'
என்பது: மகடூஉ முன்னிலை.

'சுறமறி தொன்னலத்தின் புலம்பென் றுளங்கொடு நாவல ரோதினர் வஞ்சிக் குதாரணமே'

குறளடி வஞ்சிப்பா

சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்றாழ்வன பொழிலெல்லாம்
எனவாங்கு,
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே

இஃது இருசீரடியானும், தூங்க லோசையானும் வந்தமையால், குறளடி வஞ்சிப்பா.

சிந்தடி வஞ்சிப்பா

தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேல்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
என்னலத்தகை யிதுவென்னென எழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தி னிற்சிறந்தாங்
கெனப் பெரிதும்
கலங்கஞ ரெய்தி விடுப்பவும்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே

இஃது முச்சீரடியானும், தூங்க லோசையானும் வந்தமையால் சிந்தடி வஞ்சிப்பா. 'உதாரணமே' என்பது இறுதி விளக்காகக் கொள்க.

குறள் வெண்பா, நேரிசை வெண்பா

ஈரடி வெண்பாக் குறள்குறட் பாவிரண் டாயிடைக்கட்
சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச்செப்ப லோசைகுன்ரு
தோரிரண் டாயு மொருவிகற் பாயும் வருவதுண்டேல்
நேரிசை யாகு நெறிசுரி பூங்குழ னேரிழையே (24)

இ-கை. குறள்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடைவெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனவும்;

நேரிசை யாசிரியப்பா, இணைக்குற ளாசிரியப்பா, நிலைமண்டில வாசிரியப்பா, அடிமறிமண்டில வாசிரியப்பா எனவும்;

நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா; கலிவெண்பா, வெண்கலிப்பா, தரவு கொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனவும்;

குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா எனவும்;

புறநிலை வாழ்த்து மருட்பா, கைக்கிளை மருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉ மருட்பா எனவுங் கிடந்த பாவிகற்பங்களுட் செப்பலோசையுடைத்தாய், ஈற்றடி முச்சீராய், ஏனையடி நாற்சீராய் வெண்சீரும் இயற்சீரும் வந்து, வெண்டளை தட்டு, வேற்றுத்தளை விரவாது, காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாட்டா லிறும் வெண்பாவினை அடியானும், தொடையானும், ஓசையானும், பெயர் வேறுபாடுணர்த்துவான் எடுத்துக் கொண்டார்.

அவற்றுள், இக்காரிகை குறள்வெண்பாவும், நேரிசை வெண்பாவும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'ஈரடி வெண்பாக்குறள்' என்பது: இரண்டடியான் வரும் வெண்பா குறள் வெண்பா எனப்படும்; எ—று. என்னை,

தொடையொன் றடியிரண் டாகி வருமேற்
குறளின் பெயர்க்கொடை கொள்ளப் படுமே

என்றார் காக்கை பாடினியார்.

ஈரடி யியைந்தது குறள்வெண் பாவே

என்றார் அவிநயனார்.

குறள் வெண்பா

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னார் உடைத்து (குறள் : 667)

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர் (,, : 395)

இவை இரண்டடியான் இரண்டு விகற்பத்தானும், ஒரு விகற்பத்தானும் வந்த குறள்வெண்பா.

'குறட்பா விரண்டா யிடைக்கட் சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச் செப்பலோசை குன்று தோரிரண்டாயும் ஒரு விகற்பாயும் வருவதுண்டேல் நேரிசையாகும்' என்பது:

இரண்டு குறள்வெண்பாவாய் நடுவு முதற்றொடைக் கேற்ற தனிச்சொல்லால் அடி நிரம்பிச் செப்பலோசை வழு வாது முதலிரண்டடியும் ஒரு விகற்பமாய்க் கடையிரண் டடியும் மற்றொரு விகற்பமாய் வரினும், நான்கடியும் ஒரு விகற்பமாய் வரினும் இரு குறள் நேரிசை வெண்பா எனப் படும்; எ - று.

அவை வருமாறு :—

நேரிசை வெண்பா

தடமண்டு தாமரையின் றாதா டலவன்
இடமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைநண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயினா னூர்

அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு

இவை இரண்டு குறள்வெண்பாவாய், நடுவுமுதற் றொடைக்கேற்ற தனிச்சொல்லான் அடிநிரம்பிச், செப்ப லோசை வழுவாது இரண்டு விகற்பத்தானும், ஒரு விகற் பத்தானும் வந்த இருகுறள் நேரிசை வெண்பா.

'சீரியவான்றனிச்சொல்லடி மூய்' என்று சிறப்பித்த வதனால், முதற் குறட்பாவினோடு தனிச்சொல் இடைவேறு பட்டு விட்டிசைப்பின் ஒற்றுமைப்படாத உலோகங்களை, ஒற்றுமைப்படப் பற்றுசிட்டு விளக்கினாற்போல முதற் குறட் பாவி னிறுதிக்கண் ஒன்றும், இரண்டும் அசைகூட்டி உச்சரிக்கப்பட்டு இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத் தானும் வருவனவு முள; அவை ஒருசார் ஆசிடை நேரிசை வெண்பா எனக்கொள்க.

அவை வருமாறு :—

நேரிசை வெண்பா

தாமரையின் றாதாடித் தண்டுவலைச் சேறளைந்து
தாமரையின் நாற்றமே தானாறுந்—தாமரைபோற்

கண்ணன் முகத்தான் கரதலத்தான் சேவடியென்
கண்ணார்வஞ் செய்யுங் கருத்து

கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—ஒருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமேல் அஃதென்ப
பட்டினம் பெற்ற கலம் (நாலடியார் : 259)

இவை முதற் குறட்பாவின் இறுதிக்கண் ஈரசையானும், ஓரசையானும் ஆசிட்டு இரண்டு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார் (நாலடியார் : 351)

வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன்-வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ.

இவை முதற்குறட்பாவின் இறுதிக்கண் ஓரசையானும் ஈரசையானும் ஆசிட்டு ஒரு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

'நெறிசுரி பூங்குழ னேரிழையே' என்பது: மகடூஉ முன்னிலை. 'வெண்பா வகவல் கலிப்பா வளவடி வஞ்சி' என்னும் காரிகையுள், வெண்பா செப்பலோசையான் வருமென்றும், ஈண்டுஞ் செப்பலோசை குன்றாதென்றுங் கூறியது, கூறியது கூறிற்றாகாது. என்னை,

கூறியது கூறினுங் குற்ற மில்லை
வேறொரு பொருளை விளக்கு மாயின்

என்றாராகலின்.

ஒருசார் பிற பாக்களைத் தத்தம் உதாரண வாய்பாட்டால் ஓசையூட்டும்பொழுது தத்தமோசையிற் சிறிது வழுவி வருவன உளவாயினும், வெண்பாவிற்குச் சிறிதும் செப்பலோசை வழுவலாகாதென்று யாப்புறுத்தற் பொருட்டாக

வும் செப்பலோசையிற் சிறிது வழுவிவந்த நேரிசை இன்னிசை வெண்பாக்களை ஒருபுடை ஒப்புமை நோக்கி வெண்டுறைப்பாற்படுத்து வழங்கினும் இழுக்கா தென்பது அறிவித்தற்காகவும் எனக் கொள்க. என்னை,

தத்தம் பாவினத் தொப்பினுங் குறையினும்
ஒன்றென் றெவ்வா வேற்றுமை வகையாற்
பாத்தம் வண்ண மேலா வாயிற்
பண்போல் விகற்பம் பாவினத் தாகும்

என்றார் கையனார்.

குறட்பா இரண்டடி நால்வகைத் தொடையான்
முதற்பா தனிச்சொலின் அடிமூஉய் இரண்டு
விகற்பின் நடப்பன நேரிசை வெண்பா

என்றார் அவிநயனார்.

இரண்டா மடியின தீறொரூஉ வெய்தி
முரண்ட வெதுகைய தாயினு மாகா
திரண்டு துணியா இடைநனி போழ்ந்து
நிரந்தடி நான்கின நேரிசை வெண்பா

என்றார் காக்கைபாடினியார்.

உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை

உருவுகண் டெள்ளா வுடையார் குறண்மட வாய்தடமண்
டரிய வரைகீண் டிருகுற ணேரிசை தாமரையின்
கருமமு மார்த்தவும் வஞ்சியுங் காமர்தனிச் சொன்முன்னு
நெரிநுண் கருங்குழ னேரிழை யாசிட்ட நேரிசையே (25)

இவ் வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே குறள் வெண்பாவிற்கும், நேரிசை வெண்பாவிற்கும், ஆசிடை நேரிசை வெண்பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதல் நினைத்துக்கொள்க.

இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா

ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி யாய்த்தனிச்சொல்
இன்றி நடப்பினஃ தின்னிசை துன்னு மடிபலவாய்ச்
சென்று நிகழ்வ பஃறொடை யாஞ்சிறை வண்டினங்கள்
துன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத் தூமொழியே (26)

இ-கை. இன்னிசை வெண்பாவும் பஃறொடைவெண் பாவும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடியாய்த் தனிச் சொல்லின்றி நடப்பினஃ தின்னிசை துன்னும்' என்பது:

ஒரு விகற்பத்தானும், பல விகற்பத்தானும் வந்து, நான்கடியாய்த் தனிச்சொல்லில்லாமல் நடப்பின் அஃது இன்னிசை வெண்பா எனப்படும்; எ-று.

அவை வருமாறு:—

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார் (நாலடியார்: 39)

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும் (நாலடியார்: 2)

இவை நான்கடியாய்த் தனிச்சொல்லின்றி ஒரு விகற் பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம் (நாலடியார்: 36)

இது, நான்கடியாய்த் தனிச்சொல்லின்றிப் பல விகற் பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

'ஒன்றல்லன வெல்லாம் பல' என்பது தமிழ் நடை. என்னை,

ஒன்றல் லவைபல தமிழ்நடை வடநூல்
இரண்டல் லவைபல என்றிசி னேரே

என்றூராகலின்.

'துன்னும்' என்று மிகுத்துச் சொல்லிய வதனால், இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தான் வருவனவும், மூன்ருமடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தான் வருவனவும், பல விகற்பாகி அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று வருவனவும், பிற வாற்ருனும், நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு நான்யடியான் வருவனவும் இன்னிசை வெண்பா எனப் படும்.

அவை வருமாறு :—

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்ருேரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்ருேரஃ தாற்ருர் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின் (நாலடியார்: 151)

மலிதேரான் கச்சியும் மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும்—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ எல்லாம் படும்

இவை இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

வளம்பட வேண்டாதார்—செய்தாரு மில் (காரிகை: 83)

இது மூன்ருமடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

கடற்குட்டம் போழ்வர் கலவர்—படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந்—தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்தும்—அவைக்குட்டம்
கற்ருன் கடந்து விடும் (நான்மணிக்கடிகை: 18)

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை; மழையும்
தவமிலா ரில்வழி யில்லை; தவமும்
அரசிய லில்வழி இல்லை; அரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில் (நான்மணிக்கடிகை: 48)

இவை அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று, பல விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா,

இன்னுமை வேண்டி னிரவெழுக—இந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க—வெல்வது
வேண்டின் வெகுளி விடல் (நான்மணிக்கடிகை: 17)

இஃது அடிதோறும் ஒரூஉத் தொடைபெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. பிறவும் வந்துழிக் கண்டுகொள்க. என்னை

தனிச்சொல் தழுவல வாகி விகற்பம்
பலபல தோன்றினு மொன்றே வரினும்
இதற்பெய ரின்னிசை யென்றிசி னோரே

ஒருவிகற் பாகித் தனிச்சொ லின்றியும்
இருவிகற் பாகித் தனிச்சொ லின்றியுந்
தனிச்சொற் பெற்றுப் பலவிகற் பாகியுந்
தனிச்சொ லின்றிப் பலவிகற் பாகியும்
அடியடி தோறும் ஒரூஉத்தொடை யடைநவும்
எனவைந் தாகும் இன்னிசை தானே

என்றூர் காக்கைபாடினியார்.

'அடிபலவாய்ச் சென்று நிகழ்வ பஃறொடையாம்' என்பது:

நான்கடியின் மிக்க பலவடியான் வருவது பஃறொடை வெண்பா எனப்படும்; எ-று.

நேரிசை வெண்பாவிற்கும், இன்னிசை வெண்பாவிற்கும் நான்கடியே உரிமை சொன்னமையான், நான்கடியின் மிக்க பலவடியால் வருமென்பது ஆற்றலாற் போந்த பொருளெனக் கண்டுகொள்க.

வருமாறு:—

ஐந்தடிப்பஃறொடை வெண்பா

சேற்றுக்கால் நீலஞ் செருவென்ற வேந்தன்மேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்

தோற்றந் தொழில்வடிவு தம்முள் தடுமாற்றம்
வேற்றுமை யின்றியே யொத்துன மாவடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண்

இஃது ஐந்தடியான் வந்த ஒரு விகற்பப் பஃறொடை வெண்பா.

ஆறடிப்பஃறொடை வெண்பா

பன்மாடக் கூடல் மதுரை நெடுந் தெருவில்
என்னோடு நின்ரு ரிருவர் அவருள்ளம்
பொன்னோடை நன்றென்ருள் நல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்ருளும் அந்நிலையாள் யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்

இஃது ஆறடியான் வந்த பல விகற்பப் பஃறொடை வெண்பா.

ஏழடிப்பஃறொடை வெண்பா

வையக மெல்லாங் கழனியா—வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள்—செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு—வான்கரும்பின்
சாறேஅந் நாட்டுத் தலையூர்கள்—சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெலாங்-கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்ருன் கச்சி யகம்

இது பல விகற்பத்தான் வந்த ஏழடிப் பஃறொடை வெண்பா.

இனி ஏழடியின் மிக்க பஃறொடை வெண்பாக்களை யாப்பருங்கல விருத்தியுள்ளும், தேசிகமாலை முதலியவற்றுள்ளுங் கண்டுகொள்க.

அடிபலவாய் நிகழ்வ பஃறொடை யென்னது 'சென்று நிகழ்வ' என்று சிறப்பித்தது, செப்பலோசையிற் சிறிது வழுவி வந்த பஃறொடை வெண்பாக்களை ஒருபுடை யொப்புமை நோக்கி வெண்கலிப்பாற் படுத்து வழங்கினும் இழுக்கா தென்பது அறிவித்தற்கெனக் கொள்க.

'சிறை வண்டினங்கள் துன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத் தூமொழியே' என்பது மகடூஉ முன்னிலை.

தொடையடி யித்துணை யென்னும் வழக்கம்
உடையதை யன்றி யுறுப்பழி வில்லா
நடையது பஃறொடை நாமங் கொளலே

என்றார் காக்கைபாடினியார்.

உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை

வைகலும் வைக றுகடீர் கடற்குட்ட மின்றுமங்கண்
எய்து மலிதேர் வளமழை யின்னுமை யின்னிசைபோல்
வையக மெல்லாம் பலவிகற் பேற்றது சேற்றொருகால்
பையர வல்குல்பன் மாடம் பஃறொடைப் பல்விகற்பே (27)

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே இன்னிசை வெண்பாவிற்கும், பஃறொடை வெண்பாவிற்கும் காட்டிய இலக்கியங்களை மூதணிணைத்துக் கொள்க.

சிந்தியல் வெண்பா, வெண்பாவின் இறுதியடி

நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின்வந்தால்
நேரிசை யின்னிசைச் சிந்திய லாகு நிகரில்வெள்ளைக்
கோரசைச் சீரு மொளிசேர் பிறப்புமொண் காசுமிற்ற
சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே (28)

இ-கை. நேரிசைச் சிந்தியல் வெண்பாவும், இன்னிசைச் சிந்தியல் வெண்பாவும், எல்லா வெண்பாவிற்கு மீறுமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

'நேரிசை யின்னிசைபோல நடந்தடி மூன்றின் வந்தால் நேரிசை யின்னிசைச் சிந்தியலாகும்' என்பது:

நேரிசை வெண்பாவேபோல இரண்டா மடியினிறுதி தனிச்சொற் பெற்று இரு விகற்பத்தானும் ஒரு விகற்பத் தானும் மூன்றடியான் வருவன நேரிசைச் சிந்தியல் வெண்பா எனவும், இன்னிசை வெண்பாவே போலத் தனிச்சொலின்றி ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் மூன்றடியான் வருவன இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனவும் வழங்கப்படும்; எ-று. என்னை,

நேரிசைச் சிந்தும் இன்னிசைச் சிந்துமென்
றீரடி முக்கால் இருவகைப் படுமே

என்றாராகலின்.

வருமாறு :

நேரிசைச் சிந்தியல் வெண்பா

நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
மாலைநல் வாயில் மகள்

அறிந்தானை ஏத்தி யறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வ னுரைப்ப—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு

இவை இரண்டாமடியினிறுதி, தனிச்சொற்பெற்று இருவிகற்பத்தானும், ஒரு விகற்பத்தானும் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
அறநாட்டுப் பெண்டி ரடி.

இது தனிச்சொலின்றி ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

சுரையாழ அம்மி மிதப்ப—வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை

முல்லை முறுவலித்துக் காட்டின—மெல்லவே
சேயிதழ்க் காந்தள் துடுப்பீன்ற—போயினர்
திண்டேர் வரவுரைக்குங் கார்

இவை பலவிகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை

நற்கொற்ற வாயி லறிந்தா னையுநறும் பூங்குழலாய்
சொற்பெற்ற நேரிசைச் சிந்திய லாஞ்சுரை யாழவம்மி
நிற்றற் குரிய நறுநீல நெய்தலு முல்லையுமென்
றெற்றப் படாதன வின்னிசைச் சிந்திற் கிலக்கியமே (29)

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே நேரிசைச் சிந்தியல் வெண்பாவிற்கும், இன்னிசைச் சிந்தியல் வெண் பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

'நிகரில் வெள்ளைக், கோரைச்சீரு மொளிசேர் பிறப்பு மொண் காசுமிற்ற, சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே' என்பது: எல்லா வெண்பாவிற்கும் நாள் என் னும் நேரசைச் சீரானும், மலர் என்னும் நிரையசைச் சீரானும் காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டிற் குற்றியலுகர மீருகிய நேரீற் றியற்சீரானும் இற்ற முச்சீரடியே யீற்றடி யாவதென்று தெளிக; எ - று.

வெண்பாவி னிறுதிச்சீர்க்குக் குற்றியலுகரம் ஈருக வேறுதாரண மெடுத்தோதியதூஉம் அசைச்சீர்க்குதாரணம் வேறு காட்டிப் போந்ததூஉம் வெண்பாவினை அலகிட்டு உதாரண வாய்பாட்டான் ஓசையூட்டும்பொழுது, பிற வாய்பாட்டான் ஓசையூட்ட லாகா தாகலின் எனக் கொள்க. இனி அவ்வாற்ருன் ஓசை யூட்டுமாறு:

பாலொடு—நீர் (குறள் : 1121)

என்பதனை அலகிட்டு, முறையானே கூவிளம், கூவிளம், தேமா, கருவிளம், கூவிளம், கூவிளம், நாள் என் ருேசை யூட்டுக.

நன்றறிவாரில்—அவலமிலர் (குறள் : 1072)

என்பதனை, அலகிட்டு முறையானே கூவிளம், தேமா, புளிமா, கருவிளங்காய், தேமா, புளிமா, மலர் என்று ஓசையூட்டுக.

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள் : 60)

என்பதனை அலகிட்டு, முறையானே கூவிளம், தேமா, புளி மாங்காய், கூவிளம், கூவிளம், தேமாங்காய், காசு என் ருேசையூட்டுக.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு (குறள் : 1)

என்பதனை அலகிட்டு, முறையானே புளிமா, புளிமா, புளிமாங்காய், தேமா, புளிமா, பிறப்பு என்றோசையூட்டுக.

பிற வெண்பாக்களையும் இவ்வாறலகிட்டு ஓசையூட்டிச் செப்பலோசை வழுவாமற் கண்டுகொள்க.

'நிகரில் வெள்ளைக்கு' என்று சிறப்பித்தவதனால் குறள் வெண்பாவினை ஓரடி முக்கால் என்றும், சிந்தியல் வெண்பாவினை ஈரடி முக்கால் என்றும், நேரிசை வெண்பாவினை மூவடி முக்கால் என்றும், இன்னிசை வெண்பாவினை இன்னிசை மூவடி முக்கால் என்றும், பஃறொடை வெண்பாவினைப் பலவடி முக்கால் என்றும் பெயரிட்டு வழங்குவர் ஒருசார் ஆசிரியரெனக் கொள்க.

'ஒளிசேர் பிறப்பும் ஒண்காசும்' என்று சிறப்பித்தது காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டான் முற்றியலுகரம் ஈறாகிய நேரீற்றியற்சீர் இறுதியாகிய முச்சீரடியானும் இறுவனவு முள ஒருசார் வெண்பா வென்பது அறிவித்தற் கெனக் கொள்க.

வருமாறு :

குறள் வெண்பா

மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவாட் கருளு

இது, பிறப்பு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈறாய் இற்ற வெண்பா.

குறள் வெண்பா

இனமலர்க் கோதாய் இலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு

இது, காசு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈறாய் இற்ற வெண்பா. இவை செய்யுளியலுடையார் காட்டியவெனக் கொள்க. என்னை,

செப்ப லிசையன வெண்பா மற்றவை
யந்தடி சிந்தடி யாகலு மவ்வடி
யந்த மசைச்சீ ராகவும் பெறுமே (யாப்பருங்கலம்: 57)

குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
பெற்றவாய் பாட்டான் நின்றிறு மென்ப

என்றாராகலின்.

மாவாழ் புலிவாழ் சுரமுள வாக மணியிறுவாய்
ஓவா தளபெடுத் தூஉங் கெழூஉவு முதாரணமாய்
நாவார் பெரும்புகழ் நத்தத்தர் யாப்பி னடந்ததுபோல்
தேய்வா முகரம்வந் தாமியற் சீரிங்குச் செப்பியதே (30)

இவ் வுரைக்காரிகைச் சூத்திரத்துள், ஓசையூட்டுதற் கருத்தாவது 'மாவாழ்சுரம், புலிவாழ்சுரம்' என்னும் வஞ்சி யுரிச்சீ ரிரண்டு முளவாகவைத்து, ஒரு பயனோக்கித் தூஉ மணி, கெழூஉமணி என்றளபெடுத்து நேர்நடுவாகிய வஞ்சி யுரிச் சீர்க்கு உதாரணம் எடுத்துக்காட்டினார் நத்தத்தனார் முதலாகிய ஒருசாராசிரியர். அதுபோல இந்நூலுடை யாருந் தேமா, புளிமா என்னும் இரண்டு நேரீற்றியற்சீரு முளவாக வெண்பாவின் இறுதிச் சீருக்கு உதாரண வாய் பாட்டான் ஓசையூட்டுதற் பொருட்டாகக் குற்றியலுகரம் ஈருகிய காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டான் நேரீற்றியற்சீ ரீருக வேறுதாரணம் எடுத்தோதினார் எனக் கொள்க.

குறள் வெண்செந்துறை, குறட்டாழிசை

அந்தமில் பாத மளவிரண் டொத்து முடியின்வெள்ளைச்
செந்துறை யாகுந் திருவே யதன்பெயர் சீர்பலவாய்
அந்தங் குறைநவுஞ் செந்துறைப் பாட்டி னிழிபுமங்கேழ்ச்
சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே (31)

இ-கை. குறள்வெண்பாவிற் கினமாகிய துறையும் தாழிசையும், ஆமா றுணர்த்துதல் நுதலிற்று.

"அந்தமில் பாதம் அளவிரண்டொத்து முடியின் வெள்ளைச் செந்துறையாகும்" என்பது: இரண்டடியாய்த்

தம்முள் அளவொத்து வருவது வெண்செந்துறை என்றும், செத்துறை வெள்ளை என்றும் பெயரிட்டு வழங்கப்படும் எ - று.

'அந்தமில்பாதம்' என்று சிறப்பித்தவதனால், விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையு முடைத்தாய் வருவதெனக் கொள்க. என்னை,

ஒழுகிய வோசையின் ஒத்தடி யிரண்டாய்
விழுமிய பொருளது வெண்செந் துறையே

என்பது யாப்பருங்கலம் (நூ: 63).

வெண்செந்துறை

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை
(முதுமொழிக்காஞ்சி: 1)

கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே
(கொன்றைவேந்தன்: 1)

இவை விழுமிய பொருளும், ஒழுகிய வோசையுமாய் வந்தமையான், வெண்செந்துறை.

'திருவே' என்பது: மகடூஉ முன்னிலை.

'சீர்பலவாய், அந்தங் குறைநவும்' என்பது:

நாற்சீரின் மிக்க பலசீரான் வந்து அடியிரண்டாய் ஈற்றடி குறைந்து வருவன குறட்டாழிசை எனப்படும் எ - று.

இரண்டடியென்ப ததிகாரத்தான் வருவித்துரைக்கப் பட்டது. குறட்டாழிசை யெனினும், தாழிசைக் குறளெனினும் ஒக்கும். சீர்வரையறை யில்லாமையால் எனைத்துச் சீரானும் அடியானும் வரப்பெறும் எனக் கொள்க.

குறட்டாழிசை

நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கர சாய ஞானநற்
கண்ணி னுனடி யேயடை வார்கள் கற்றவரே.

நீலமாகட னீடுவார்திரை நின்றநின்றபோற் பொங்கிப் பொன்றுமால்
காலம்பல காலஞ் சென்றுஞ் செல்வர் யாக்கை கழிதலுமே.

இவை ஈற்றடி குறைந்து இரண்டடியாய்ப் பல சீரான் வந்தமையால்; குறட்டாழிசை.

'செந்துறைப் பாட்டி னிழிபும்' என்பது:

அடியிரண்டாய் அளவொத்து விழுமிய பொருளும் ஒழுகிய வோசையுமின்றி இவ்வாறே செந்துறை வெள்ளையிற் சிதைந்து வருவனவெல்லாஞ் செந்துறைச் சிதைவுத் தாழிசைக்குறள் எனப்படும் எ - று.

குறட்டாழிசை

பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டலந் தோன்றுமால் வாழி யன்னுய்.

அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வையி னீரே

இவை விழுமிய பொருளும் ஒழுகிய வோசையுமின்றி இரண்டடியுந் தம்முள் ஒத்து வந்தமையிற் செந்துறைச் சிதைவுத் தாழிசைக்குறள்.

'அங்கேழ்ச் சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே' என்பது:

செப்பலோசையிற் சிதைந்து வேற்றுத் தளைதட்டுக் குறள் வெண்பாவிற் சிதைந்து வருவனவெல்லாங் குறள் வெண்பாவிற் கினமாகிய குறட்டாழிசை எனப்படும் எ - று.

குறட்டாழிசை

வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி

இது சந்தஞ் சிதைந்த தாழிசைக் குறள். என்னை,

அந்தடி குறைநவுஞ் செந்துறைச் சிதைவுஞ்
சந்தழி குறளுந் தாழிசைக் குறளே

உரைத்தன இரண்டுங் குறட்பா வினமே

என்பன யாப்பருங்கலம் (நூ. 64, 65)

வெளிவிருத்தம், வெண்தாழிசை, வெண்டுறை

மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்துத்
தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்வெண் டாழிசையே
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறு மூன்றிழி பேழுயர்வாய்
ஆன்றடி தாஞ்சில வந்தங் குறைந்திறும் வெண்டுறையே (32)

இ-கைவெளி. விருத்தமும், வெண்டாழிசையும், வெண்டுறையும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'மூன்றடி யானும் முடிந்தடிதோறும் முடிவிடத்துத், தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்' என்பது:

மூன்றடியானும் முற்றுப்பெற்று அடிதோறும் ஒரு சொல்லே இறுதிக்கண் தனிச்சொல்லாய் வருவது வெளி விருத்தம் எனப்படும் எ-று.

'மூன்றடியானும்' என்ற உம்மையால் நான்கடியானும் வரப்பெறும் எனக்கொள்க. என்னை,

ஒருமூன் றொருநான் கடியடி தோறுந்
தனிச்சொல் தழுவி நடப்பது வெள்ளை
விருத்த மெனப்பெயர் வேண்டப் படுமே

என்றார் காக்கைபாடினியார்.

'தண்டா விருத்தம்' என்று சிறப்பித்தவதனால் நாற்சீரடியுட்பட் டடங்காது வேறாய் வருவது ஈண்டுத் தனிச் சொல் எனக்கொள்க.

வெளி விருத்தம்

கொண்டன் முழங்கினவாற் கோபம் பரந்தனவா—
 லென்செய் கோயான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவா—
 லென்செய் கோயான்
எண்டிசையுந் தோகை யிருந்தகவி யேங்கினவா—
 லென்செய் கோயான்

இது மூன்றடியான் 'என்செய்கோயான்' என்னுந் தனிச்சொற் பெற்றுவந்த வெளிவிருத்தம்.

வெளி விருத்தம்

ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா—ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா—ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா—ரொருசாரார்
ஏகீர் நாய்கீ ரென்செய்து மென்று—ரொருசாரார்

இது நான்கடியாய் 'ஒருசாரார்' என்னுந் தனிச்சொற் பெற்றுவத்த வெளிவிருத்தம்.

'வெண்டாழிசையே, மூன்றடியாய் வெள்ளைபோன் றிறும்' என்பது.

மூன்றடியான் ஈற்றடி வெண்பாவே போல முச்சீரடி யான் இறுவது வெண்டாழிசை யென்றும் வெள்ளொத் தாழிசை யென்றும் வழங்கப்படும்; எ - று. என்னை,

அடியொரு மூன்றுவந் தந்தடி சிந்தாய்
விடினது வெள்ளொத் தாழிசை யாகும்
(யாப்பருங்கலம் : 66)

வருமாறு:

வெண்டாழிசை

நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்

இது மூன்றடியாசிரியத் தளையான் வந்த வெண் டாழிசை.

'மூன்றிழி பேழுயர்வாய், ஆன்றடி தாஞ்சில அந்தங் குறைந்திறும் வெண்டுறையே' என்பது:

மூன்றடிச் சிறுமையாய் ஏழடிப் பெருமையாய் இடையிடை நான்கடியானும், ஐந்தடியானும், ஆறடியானும் வந்து பின்பிற் சில அடி சில சீர் குறைந்து வருவன வெண்டுறை எனப்படும்: எ-று.

'ஆன்றடிதாம்' என்று சிறப்பித்த வதனுல் முன்பிற் சிலவடி ஓரோசையாயும், பின்பிற் சிலவடி மற்றோரோசையாயும் வருவன ஒருசார் வேற்றொலி வெண்டுறை எனக் கொள்க; என்னை,

அடியைந் தாகியு மிக்கும் ஈற்றடி
ஒன்று மிரண்டுஞ் சீர்தபின் வெண்டுறை

என்றார் அவிநயனார்.

மூன்றடி முதலா ஏழடி காறும்வந்
தீற்றடி சிலசில சீர்தப நிற்பினும்
வேற்றொலி விரவினும் வெண்டுறை யாகும்

என்பது யாப்பருங்கலம் (நூ. 67)

வெண்டுறை

தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னுமென்னும்
ஆளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்துவிழும் பிளிற்றி யாங்கே

இது மூன்றடியாய் ஈற்றடி யிரண்டும் இரண்டுசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற்சாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ்மந்தி
கலுழ்வனபோல் நெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ அல்லன்.

இது நான்கடியாய் ஈற்றடி யிரண்டும், இரண்டு சீர் குறைந்துவந்த ஓரொலி வெண்டுறை.

ஓரொலி வெண்டுறை

வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற வரும்வழி யுரைப்பன வுரைப்பன்மற்
செறிவுறு தகையினர் சிறந்தன ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின்

இஃது ஐந்தடியாய் ஈற்றடி ஒன்றொரு சீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

கல்லாதார் நல்லவையுட் கல்லேபோற் சென்றிருந்தாற்
 கருமம் யாதாம்
இல்லாதார் செல்வரைக்கண் டிணங்கியே ஏமுற்றால்
 இயைவ தென்னும்
பொல்லாதார் நன்கலன் மெய்புதைப்பப் பூண்டாலும்
 பொலிவ தென்னும்
புல்லாதார் பொய்க்கேண்மை புனைந்துரைத்தா லாவதென்னே
அல்லாதார் பொய்யாவ தறிபவேல் அமையாதோ

இஃது ஐந்தடியாய் ஈற்றடியிரண்டும் இரண்டுசீர் குறைந்துவந்த ஓரொலி வெண்டுறை.

முழங்கு களியானை மூரிக் கடற்படை முரித்தார் மன்னர்
வழங்குமிடமெல்லாந் தன்புகழேபோக்கிய வைவேல் விண்ணன்
செழுந்தண்பூம் பழசையுட் சிறந்ததுநா ளுஞ்செய
எழுந்த சேதிகத் துள்ளிருந்த அண்ணலாரடி
விழுந்தண்பூ மலர்களால் வியந்துநா ளுந்தொழத்
தொடர்ந்துநின்ற வெவ்வினை துறந்துபோ மாலரோ

இஃது ஆறடியாய் முதலிரண்டும் அறுசீராய்ப் பின் னான்கடியும் நாற்சீராய், முதலிரண்டடியும் ஓரிசையாய்ப் பின் நான்கடியும் மற்றோரிசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை.

முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகு மேவல்செய
 முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் றுக்கரிய
 வைவேல் பாடிக்
கலங்கினின் றுறெலாங் கருதலா காவணம்
இலங்குவா ளிரண்டினு லிருகைவீ சிப்பெயர்ந்
தலங்கன்மா லையவிழ்ந் தாடவா டும்மிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றுறெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றுபவே

இஃது ஏழடியாய் முதல் இரண்டடியும் அறுசீராய் ஓரோசையாய்ப் பின் ஐந்தடியும் நாற்சீராய் வேறோர் ஓசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை.

மூன்றடி யாய்வெள்ளை போன்றிறுந் தாழிசை மூன்றழிபேழ்
ஆன்றடி தாஞ்சில வந்தத் தடிக ளவைகுறைந்து
தோன்றுந் துறைவெள்ளை தண்டா விருத்தந் தனிச்சொல் வந்து
மூன்றடி யானு முடியு முடியுமோர் நான்கினுமே

என்று வெண்பாவிற்கு இனமாகிய தாழிசை, துறை, விருத்தங்கட்கு முறையானே இலக்கணஞ் சொல்லாது தலை தடுமாற்றமாகக் காரிகை சொல்லவேண்டியது என்னையோ வெனின், ஒருசார் வெண்டுறையின் ஈற்றடி ஒன்றொருசீர் குறைந்து வருதலும் உள்ளதென்பதூஉம், வெள்ளொத் தாழிசையின் முதல் இரண்டடியும் நான்கு சீரான் வருமென் பதூஉம், சிந்தியல் வெண்பா ஒரு பொருண்மேன் மூன் றடுக்கி வருவன வெல்லாம் வெள்ளொத்தாழிசை என்று வழங்கப்படும் என்பதூஉம் அறிவித்தற்கு வேண்டப்பட்டது; 'தலை தடுமாற்றந் தந்து புணர்த்துரைத்தல்' என்பது தந்திர உத்தியாகலான்.

வெள்ளொத்தாழிசை முதலிரண்டடியும் நாற்சீராய் வருவது, நண்பிது (~~காரிகை~~: 102) என்னும் இலக்கியத்துட் கண்டுகொள்க.

வெள்ளொத்தாழிசை

அன்னா யறங்கொ னலங்கிளர் சேட் சென்னி
ஒன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் துறந்து விடல்

ஏடீ யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் துறந்து விடல்

பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் துறந்து விடல்

இவை சிந்தியல் வெண்பா ஒரு பொருள்மேன் மூன்றடுக்கி வந்தமையான், வெள்ளொத்தாழிசை. என்னை,

ஈரடி முக்கா லிசைகொள நடந்து
மூன்றுட னடுக்கித் தோன்றினஃ தாழிசை

என்றார் மயேச்சுரர்.

உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

கொண்டன் முழங்கின வாவா விருத்தங் குழலிசைய
வண்டினம் வெண்டுறை தாளாண் முழங்கொடு தாழிசையே
நண்பிதென் றார்கலி கொன்றைவெண் செந்துறை நீலநண்ணும்
பிண்டி யறுவர்வண் டார்வெறி தாழிசை பெய்வனையே (33)

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே வெண்பாவினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதல் நினைத்துக் கொள்க.

வெண்பாவும் அதன் இனமும் முற்றும்.

---

3. ஆசிரியப்பாவும், அதன் இனமும்

நான்குவகை ஆசிரியப்பா

கடையயற் பாதமுச் சீர்வரி னேரிசை காமருசீர்
இடைபல குன்றி னிணைக்குற ளெல்லா வடியுமொத்து
நடைபெறு மாயி னிலைமண் டிலநடு வாதியந்தத்
தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே (34)

இ-கை. அகவலோசை யோடு அளவடித்தாகியும், இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும், தன்றளை தழுவியும், பிறதளை மயங்கியும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர்வருதலில்லா ஆசிரியப்பாவினை, அடியானுந், தொடையானும், ஓசையானும், பொருளானும் பெயர் வேறுபா டுணர்த்துவான் எடுத்துக்கொண்டார்.

அவற்றுள், இக்காரிகை நேரிசையாசிரியப்பாவும், இணைக் குறளாசிரியப்பாவும், நிலைமண்டில வாசிரியப்பாவும், அடிமறி மண்டில வாசிரியப்பாவும் ஆமா றுணர்த்துதல் நுதலிற்று.

'கடையயற் பாத முச்சீர்வரின் நேரிசை' என்பது:

ஈற்றயலடி முச்சீரான் வருவது நேரிசை யாசிரியப்பா எ-று. என்னை,

ஈற்றதன் அயலடி ஒருசீர் குறைய
நிற்பது நேரிசை ஆசிரி யம்மே (அவிநயம்)

அந்த அடியின் அயலடி சிந்தடி
வந்தன நேரிசை யாசிரி யம்மே (யாப்பருங்கலம் : 71)

என்றாராகலின்.

வருமாறு:

நேரிசையாசிரியப்பா

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கு நாடனொடு நட்பே
(குறுந்தொகை: 3)

இஃது ஈற்றயலடி முச்சீரான் வந்தமையால், நேரிசை யாசிரியப்பா.

'காமருசீ, ரிடை பலகுன்றி னிணைக்குறள்' என்பது:

ஈற்றடியும், முதலடியும் ஒழிந்து, இடையடிகள் இரண்டும் பலவும் குறளடியானும், சிந்தடியானும் வருவன இணைக்குறளாசிரியப்பா; எ-று. என்னை,

இடைபல குறைவ திணைக்குற ளாகும்

என்றார் அவிநயனார்.

அளவடி யந்தமு மாதியு மாகிக்
குறளடி சிந்தடி சிந்தடி யென்று யிரண்டும்
இடைவர நிற்ப திணைக்குற ளாகும்.

என்றார் காக்கைபாடினியார்.

இடையிடை சீர்தபின் இணைக்குற ளாகும்

என்றார் சிறுகாக்கைபாடினியார்.

வருமாறு:

இணைக்குறளாசிரியப்பா

நீரின் தண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே

இது முதலடியும் ஈற்றடியும் நாற்சீராய், இடையடி இருசீரானும், முச்சீரானும் வந்தமையால், இணைக்குற ளாசிரியப்பா.

இணைக்குறளாசிரியப்பா

சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும்
நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும்
நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடுவழி யெல்லாம்
எமக்கீயு மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம்
தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை
தைவரு மன்னே
அருங்கலை இரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல்நுண் தேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்

அருநிறத் தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரு மில்லைப்
பாடுநருக்கொன் றீகுநரு மில்லை
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே (புறம்: 235)

இஃது இடையிடையே இருசீரடியும், முச்சீரடியுமாய் வந்தமையால், இணைக்குறளாசிரியப்பா:

'காமருசீர்' என்று சிறப்பித்த வதனால் ஆசிரியப்பா நான்கும் 'ஏ' என்னும் அசைச்சொல்லான் இறுவதே சிறப்புடைத்து; பிற எழுத்தும் ஈருய் வரப்பெறுமாயினும் எனக் கொள்க. என்னை,

அகவ லிசையன அகவல் மற்றவை
ஏ ஓ ஈ ஆய் என் ஐ யென் றிறுமே (யாப்பருங்கலம்: 69)

என்ருராகலின்.

'எல்லா வடியுமொத்து, நடைபெறுமாயின் நிலைமண்டிலம்' என்பது: எல்லாவடியுந் தம்முள் அளவொத்து நாற்சீர் அடியாய் வருவது நிலைமண்டில ஆசிரியப்பா; எ - று.

வருமாறு:

நிலைமண்டில ஆசிரியப்பா

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே (குறுந்தொகை: 18)

இஃது எல்லாவடியும் நாற்சீராய் அளவொத்து வந்தமையால், நிலைமண்டில ஆசிரியப்பா. மண்டிலம் எனினும் நிலை மண்டிலம் எனினும் ஒக்கும்.

நிலைமண்டில ஆசிரியப்பா 'என்' என்னும் அசைச் சொல்லான் இறுவது சிறப்புடைத்து, மற்றொரு சார் ஒற்றி னானும், உயிரினானும் ஈறாய் வரவும் பெறும் எனக்கொள்க. என்னை,

ஒத்த வடித்தாய் உலையா மரபொடு
நிற்பது தானே நிலைமண் டிலமே

என்னென் கிளவியை யீறுப் பெறுதலும்
அன்ன பிறவும் அந்த நிலைபெற
நிற்கவும் பெறாஉம் நிலைமண்டிலமே

என்றார் காக்கைபாடினியர்.

'நடுவாதியந்தத் தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே' என்பது: எல்லாவடியும் முதல், நடு, இறுதி யாக உச்சரிப்பினும் ஓசையும், பொருளும் பிழையாது வருவது அடிமறிமண்டில வாசிரியப்பா; எ-று. என்னை,

மனப்படு மடிமுத லாயிறின் மண்டிலம்
(யாப்பருங்கலம் : 73)

உரைப்போர் குறிப்பி னுணர்வகை யன்றி
இடைப்பால் முதலீ றென்றிவை தம்முண்
மதிக்கப் படாதன மண்டில யாப்பே

என்றார் காக்கைபாடினியார்.

எழுவா யிரட்டித் திறுதி யொன்றாய்
வரினது மண்டில வாசிரி யம்மே

என்றாராகலின்.

வருமாறு:

அடிமறிமண்டில ஆசிரியப்பா

சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே

இதனை எல்லாவடியும் முதல், நடு, இறுதியாக உச்சரித்து ஓசையும், பொருளும் பிழையாது வந்தமையால் அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆமாறு கண்டுகொள்க.

உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

நேரிசை யாகு நிலத்தினு மென்ப திணைக்குறட்பா
நீரின் சிறிய நிலைமைய தாநிலை மண்டிலப்பா
வேரலென் ருகும் விரைமலர்க் கோதைவில் லேர்நுதலாய்
சூரல்பம் பென்ப தடிமறி யாகத் துணிந்தனரே (35)

இவ்வுரைச் சூத்திரக் கரிாகையின் வழியே ஆசிரியப்பா நான்கிற்குங் காட்டிய இலக்கியங்களை முதல் நினைத்துக்கொள்க.

ஆசிரியத்தாழிசை, துறை, விருத்தங்கள்

தருக்கிய ருழிசை மூன்றடி யொப்பன நான்கடியாய்
எருத்தடி நைந்து மிடைமடக் காயு மிடையிடையே
சுருக்கடி யாயுந் துறையாங் குறைவி ஞெல் சீரகவல்
விருத்தங் கழிநெடி லுன்கொத் திருவது மெல்லியலே (36)

இ-கை. ஆசிரியத்தாழிசையும், ஆசிரியத்துறையும் ஆசிரிய விருத்தமும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

'தருக்கியல் தாழிசை மூன்றடி ஒப்பன' என்பது:

மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரியத்தாழிசை; எ-று.

'தருக்கியல் தாழிசை' என்று சிறப்பித்தவதனுல் அவை ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவன சிறப்புடையன; தனியே வரப்பெறுமாயினும் எனக் கொள்க. என்னை,

அடிமூன் ருெத்திறி னுெத்தா ழிசையே

என்ருர் காக்கைபாடினியார்.

மூன்றடி யொத்த முடிவின வாய்விடின்
ஆன்ற வகவற் றுழிசை யாமே (யாப்பருங்கலம் : 75)

ஒத்த வொருபொருள் மூவடி முடியினஃ
தொத்தா ழிசையா முடன்மூன் றடுக்கின்

என்றார் மயேச்சுரர்.

வருமாறு :

ஆசியத்தாழிசை

கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி
(சிலம்பு. ஆய்ச்சியர்குரவை)

பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி
(,, 2)

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி
(,, 3)

இவை ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வந்த ஆசிரியத்தாழிசை.

ஆசிரியத்தாழிசை

வானுற நிமிர்ந்தனை வையகம் அளந்தனை
பால்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் நிரைகழல் தொழுதனம்

இது தனியே வந்த ஆசிரியத்தாழிசை.

'நான்கடியாய் எருத்தடி நைந்தும் இடைமடக்காயும் இடையிடையே சுருக்கடியாயுந் துறையாம்' என்பது:

நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும் நான் கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவன

வும், நான்கடியாய் இடையிடை குறைந்து வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும் ஆசிரியத்துறை; எ - று.

'நான்கடியாய்' என்பதனை எல்லாவற்றினேடுங் கூட்டி 'இடைமடக்காய்' என்பதனை ஒருகால் இருதலையுங் கூட்டி மத்திம தீபமாகப் பொருள் உரைத்துக் கொள்க.

சீர் வரையறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் அடியானும் வரப்பெறும். முதலயலடி குறைந்தும், நடுவீரடி குறைந்தும் மிக்கும் வருவன ஆசிரியத்துறையாம். அல்லது ஓரடி குறைந்து வருவன ஆசிரிய நேர்த்துறை யென்றும், ஈரடி குறைந்து வருவன ஆசிரிய இணைக்குறட்டுறை என்றும் கொள்க.

வருமாறு :

2. ஆசிரியத்துறை

கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி வருதிராயின்
அரையிருள் யாமத் தடுபுலியே றும்மஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை.

ஆசிரியத்துறை

வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட்சேய் வடிவே போலத்
தண்டளிர்ப்பூம் பிண்டித் தழையேந்தி மாவினவித் தணந்
தண்டளிர்ப் பூம்பிண்டித் தழையேந்தி வந்துநம் [தோன்யாரே
பண்டைப் பதிவினவிப் பாங்கு படமொழிந்து படர்ந்தோ னன்றே

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து, இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை.

ஆசிரியத்துறை

இரங்கு குயின்முழவா இன்னிசையாழ் தேனு
அரங்க மணிபொழிலா ஆடும் போலும் இளவேனில்
அரங்க மணிபொழிலா ஆடு மாயின்
மரங்கொல்மணந்தகன்ருர் நெஞ்சமென்செய்ததிள
வேனில்

இது நான்கடியாய் இடையிடை குறைந்து இடை மடக்காய் வந்த ஆசிரிய இணைக்குறட்டுறை.

ஆசிரியத்துறை

கொன்ருர்ந் தமைந்த குருமுகத் தெழில்நிறக்
குருதிக் கோட்டன இருந்தாட் பெருங்கைக்
குன்ருமென அன்ருமெனக்
குமுரு நின்றன கொடுந்தொழில் வேழம்

வென்ருர்ந் தமைந்த விளங்கொளி யிளம்பிறைத்
துலங்குவா ளிலங்கெயிற் றழலுளைப் பரூஉத்தா
ளதிரும் வானென வெதிருங் கூற்றெனச்
சுழலா நின்றன சுழிக்கண் யாளி

சென்ருர்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறியெருத் தெறுழ்வலிப் புலவுநா றழல்வாய்ப்
புனலாமெனக் கனலாமெனப்
புகையா நின்றன புலிமான் ஏற்றை

என்ருங் கிவையிவை யியங்கலி னெந்திறத்
தினிவரல் வேண்டலந் தனிவர லெனத்தலை
விலக்கலி னிறுவரை மிசையெறி குறும்பிடை
யிரவிடைக் களவுளங் கற்ருயது கற்பன்றே

இது நான்கடியாய் முதலடியும், மூன்ருமடியும் பதினன்கு சீராய் அல்லாத அடியிரண்டும் பதினறு சீராய் இடையிடை குறைந்துவந்த ஆசிரியத்துறை. என்னை,

கடையதன் அயலடி கடைதபு நடையவும்
நடுவடி மடக்காய் நான்கடி யாகி
இடையிடை குறைநவும் அகவல் துறையே

என்பது யாப்பருங்கலம் (74)

'குறைவில்தொல் சீரகவல், விருத்தங் கழிநெடிலான் கொத்திறுவது' என்பது:

கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்துவருவன ஆசிரிய விருத்தம்; எ-று.

'குறைவில்தொல் சீர்' என்று சிறப்பித்தவதனால் எண்சீரின் மிக்க சீரான் வந்த அடியெல்லாஞ் சிறப்பில எனக் கொள்க.

வருமாறு:—

ஆசிரிய விருத்தம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

விடஞ்சூ ழரவி னிடை நுடங்க மினல்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடும் மாதங்கி [தாம்
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம் வடிக்கண் ணீலமலர்தாந்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந் தன்மைத்
[தண்ணுமையே

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

1. 'கணிகொண்ட' என்பது: எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

2. 'மூவடிவினால்' என்பது: எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்,

3. 'இடங்கை வெஞ்சிலை' என்பது: ஒன்பதின் சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

4. 'கொங்குதங்கு' என்பது: பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

என்னை,

கழிநெடி லடிநான் கொத்திறின் விருத்தமஃ
தழியா மரபின தகவ லாகும் (யாப்பருங்கலம்: 77)

'மெல்லியலே' என்பது மகடூஉ முன்னிலை.

உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

கன்று குணில்வா னுறத்தா ழிசையாங் கரைபொருகான்
என்றலும் வண்டுளர் பூந்தா ரிரங்கு குயின்முழவாக்
கொன்றூர்ந் தமைந்த வகவற் றுறைகுறை யாவிருத்தம்
பின்றூழ் குழலி விடங்கணி மூவடி வாதியவே (37)

இவ்வுரைச்சூத்திரக் காரிகையின் வழியே ஆசிரியப்பா வினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

ஆசிரியப்பாவும் அதன் இனமும் முற்றும்.

---

4. கலிப்பாவும் அதன் இனமும்

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

அம்போதரங்க ஒழித்தாசைக் கலிப்பா

தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய்
நிரலொன்றி னேரிசை யொத்தா ழிசைக்கலி நீர்த்திரைபோல்
மரபொன்று நேரடி முச்சீர் குறணடு வேமடுப்பின்
அரவொன்று மல்குலஃ தம்போ தரங்கவொத் தாழிசையே (38)

துள்ளல் ஓசைத்தாய், நேரீற்றியற்சீரும், நிரைநடு வாகிய வஞ்சியுரிச்சீரும் வாராது நிரைமுதலாகிய வெண் பாவுரிச்சீர்மிக்கு, நேரடித்தாய்க் கலித்தளையும் அயற்றளை யுந்தட்டுத் தரவு, தாழிசை என்னும் முதல் உறுப்பும் அராகம். அம்போதரங்கம், தனிச்சொல் சுரிதம் என்னுந் துணை உறுப்பும் உடைத்தாய் ஒத்தாழிசைக்கலி, வெண் கலி, கொச்சகக்கலி என்னும் வேறுபாட்டாற் கிடந்த கலிப்பாக்களை உறுப்பினுனும் ஓசையானும், பொருளானும் பெயர் வேறுபாடு உணர்த்துவான் எடுத்துக்கொண்டார்.

அவற்றுள், இக்காரிகை நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவும், அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

‘தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொ ற்சுரிதகமாய் நிரலொன்றி னேரிசை யொத்தாழிசைக் கலி’ என்பது:

முன் ஒரு தரவு வந்து, அதன் பின்பு மூன்று தாழிசை வந்து, அதன்பின் ஒரு தனிச்சொல் வந்து, அதன்பின் ஆசிரியத்தானுவது, வெண்பாவானுவது ஒரு சுரிதக உறுப்புப் பெற்று வருவது நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா எ-று.

தரவு எனினும், எருத்தம் எனினும் ஒக்கும்.

தாழிசை எனினும், இடைநிலைப்பாட்டு எனினும் ஒக்கும்.

தனிச்சொல் எனினும், விட்டிசை எனினும், கூன் எனினும், தனிநிலை எனினும் ஒக்கும்.

சுரிதகம் எனினும், அடக்கியல் எனினும், வாரம் எனினும், வைப்பு எனினும், போக்கியல் எனினும் ஒக்கும். என்னை,

> **தந்துமுன் னிற்றலிற் றரவே தாழிசை**
> **யொத்தாழ்ந் திசைத்தலின் ஒத்தா ழிசையே**
>
> **தனிதர நிற்றலிற் றனிச்சொற் குனிதிரை**
> **நீர்ச்சுழி போல நின்றுசுரிந் திறுதலிற்**
> **சோர்ச்சியில் புலவர் சுரிதக மென்ப**

என்று காரணக்குறி சொன்னுருமுளர் எனக் கொள்க.

இனித் தரவு, தாழிசைகட்கு அடிவரையறை யாமாறு ‘சுருங்கிற்று மூன்றடி’ (காரிகை 57) என்னுங் காரிகையுட் போக்கிச் சொல்லுதும்!

வருமாறு :—

நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா

வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாப்
பூணெடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ

இது தரவு.

சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே,
சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே.
சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே யென்பவாற்
புலம்படைந்து நலந்தொலையப் போவாரோ பொருளிலரே

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு

இது தனிச்சொல்.

அருளெனு மிலராய்ப் பொருள் வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடு தானையிற் பொலிந்தே

இது சுரிதகம்.

இது தரவு மூன்றடியாய்த், தாழிசை மூன்றும் இரண்டிரண்டடியாய்த், தனிச்சொற்பெற்று, மூன்றடி ஆசிரியச் சுரிதகத்தாலிற்ற நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா. என்னை,

தரவொன் றாகித் தாழிசை மூன்றாய்த்
தனிச்சொல்லிடைக் கிடந்து சுரிதகந் தழுவ
வைத்த மரபின தொத்தா ழிசைக்கலி

என்றார் மயேச்சுரர்.

தரவு தாழிசை தனிச்சொற் சுரிதகம்
எனுநான் குறுப்பின தொத்தா ழிசைக்கலி

என்றார் காக்கைபாடினியார்.

வெள்ளைச் சுரிதகத்தாலிற்ற நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குச் செய்யுள் :

வருமாறு :

முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ் முனைவனே
எத்திசையும் பல்லுயிர்க ளின்புற வினிதிருந்து
பத்துறு திசையனைத்தும் பகைபசி பிணிநீங்க
உத்தமர்க டொழுதேத்த வொளிர்வரைபோற் செலவினுய்

இது தரவு.

எள்ளனைத்து மிடரின்றி யெழின்மாண்ட பொன்னெயில்
உள்ளிருந்த வுன்னையே வுறுதுணையென் றடைந்தோரை
வெள்ளில்சேர் வியன்காட்டு ளுறைகென்றல் விழுமிதோ

குணங்களின் வரம்பிகந்து கூடிய பன்னிரண்டு
கணங்களும்வந் தடியேத்தக் காதலித்துன் னடைந்தோரைப்
பிணம்பிறங்கு பெருங்காட்டு ளுறைகென்றல் பெருமையோ

விடத்தகைய வினைநீக்கி வெள்வளைக்கைச் செந்துவர்வாய்
மடத்தகைய மயிலனையார் வணங்கநின் னடைந்தோரைத்
தடத்தகைய காடுறைக வென்பதுநின் றகுதியோ

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு

இது தனிச்சொல்.

எனைத் துணையை யாயினு மாகமற் றுன்கட்
டினைத்துணையுந் தீயவை யின்மையிற் சேர்தும்
வினைத்தொகையை வீட்டுக வென்று

இது சுரிதகம்.

'நீர்த்திரை போன் மரபொன்று நேரடிமுச்சீர் குறணடுவே மடுப்பின், அது அம்போதரங்க வொத்தாழிசையே' என்பது :

கரைசாரக் கரைசார ஒருகாலைக் கொருகாற் சுருங்கி வருகின்ற நீர்த்தரங்கம்போல நாற்சீர் அடியும், முச்சீர் அடியும், இருசீர் அடியும் ஆகிய அசையடிகளைத் தாழிசைக்கும், தனிச்சொற்கும் நடுவே, தொடுத்துத் தரவு, தாழிசை, அம்போதரங்கம் தனிச்சொல், சுரிதகம் என்னும் ஐந்து

உறுப்புடைத்தாய் வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா; எ - று,

'அரவொன்று மல்குல்' என்பது: மகடூஉ முன்னிலை.

'மரபொன்று நேரடி' என்று சிறப்பித்தவதனால், அசையடிதான் ஈரடியால் இரண்டும், ஓரடியால் நான்கும், முச்சீரால் எட்டும் இருசீரால் பதினாறுமாய் வருவது சிறப்புடைத்து, எட்டும், பதினாறும் என்று சொல்லப்பட்டன நான்கும் எட்டுமாகச் சுருங்கிவரப் பெறுமாயினும் எனக் கொள்க. என்னை,

> **ஈரடி யிரண்டும் மோரடி நான்கும்**
> **முச்சீ ரெட்டு மிருசீ ரிரட்டியும்**
> **அச்சீர் குறையினு மம்போத ரங்கம்**

என்றாராகலின்.

அம்போதரங்கம் எனினும் அசையடி எனினும், பிரிந்திசைக்குறள் எனினும், சொற்சீரடி எனினும், எண் எனினும் ஒக்கும். என்னை,

> **அனைய வாகிய வசையடி நான்குந்**
> **தனியொடு தாழிசை யிடைவரு மென்ப**

அவற்றைப் பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் என்று பெயரிட்டு வழங்குவாரும் உளர்.

வருமாறு:—

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

> கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக்
> கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
> அழலவிர் சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
> தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
> ஆர்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
> கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்;

இது தரவு:

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ;

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்பொடு மறம்பிதிர வெதிர்கலக்கிச்
சேணுய ரிருவிசும்பிற் சேர்த்ததுநின் சினமாமோ;

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்துதிறல் வேருக
எருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ;

இவை மூன்றுந் தாழிசை

இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கையின் மாஅ னின்னிறம்;
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை;

இவை நாற்சீரீரடி இரண்டம்போதரங்கம் (பேரெண்)

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை;
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை;
வலிமிகு சகட மாற்றிய வடியினை;

இவை நாற்சீரோரடி நான்கம்போதரங்கம் (அளவெண்)

பேரரவுணர்க் கடந்தோய் நீ;
புணர்மருதம் பிளந்தோய் நீ;
நீரகல மளந்தோய் நீ;
நிழறிகழு மபடையோய் நீ;

இவை முச்சீரோரடி நான்கம்போதரங்கம் (இடையெண்)

ஊழி நீ;	உருவு நீ;
உலகு நீ;	அருவு நீ;
ஆழி நீ;	அறமு நீ;
அருளு நீ;	மறமு நீ;

இவை இருசீரோரடி எட்டம்போதரங்கம். சிற்றெண்)

எனவாங்கு,

இது தனிச்சொல்.

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுழற் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்றுமுதிர் கடலுலகம் முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே.

இஃது ஆசிரியச் சுரிதகம்.

இஃது எட்டும், பதினாறும் என்று சொல்லப்பட்ட முச்சீர் அடியும், இருசீர் அடியும், நான்கும் எட்டுமாய் வந்த அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

நலங்கிளர் திருமணியு நன்பொன்னுங் குயின்றழகார்
இலங்கெயிற் றழலரிமா னெருத்தஞ்சே ரணையின்மேல்
இருபுடையு மியக்கரச ரிணைக்கவரி யெடுத்தசைப்ப
விரிதாமந் துயல்வரூஉம் வெண்குடைமூன் றுடனிழற்ற
வண்டரற்ற நாற்காதம் வகைமாண வுயர்ந்தோங்குந்
தண்டளிர்ப்பூம் பிண்டிக்கீழ்த் தகைபெறவீற் றிருந்தனையே

என்னும் அம்போதரங்க ஒத்தாசைக் கலிப்பாவினுள் எட்டும் பதினாறும் என்று சொல்லப்பட்ட அம்போதரங்கம் குறையாதே வந்தவாறு யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க. என்னை,

நீர்த்திரை போல நிரலே முறைமுறை
யாக்கஞ் சுருங்கி யசையடி தாழிசை
விட்டிசை விரியத் தொடுத்துச் சுரிதகந்
தாங்கித் தழுவும் தரவினோ டைந்தும்
யாப்புற் றமைந்த வம்போ தரங்கம்

என்றார் காக்கைபாடினியார்.

உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை

வாணெடுங் கண்பனி நேரிசை யாகு மதர்த்திருண்டு
சேணுற வோடிக் குழையிட றிச்செருச் செய்யும்விழி
நாணுந் திருவு மறிவுஞ் செறிவு முடையநல்லாய்
ஏனுங் கெடலரு மாமுனி யம்போ தரங்கமென்னே (39)

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும், அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதல் நினைத்துக் கொள்க.

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா

அசையடி முன்ன ரராகம்வந் தெல்லா வுறுப்புமுண்டேல்
வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி வான்றளைதட்
டிசைதன தாகியும் வெண்பா வியைந்துமின் பான்மொழியாய்
விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே (40)

இ-கை. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவும் வெண்கலிப்பாவும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

'அசையடி முன்னரராகம்வந் தெல்லா வுறுப்புமுண்டேல், வசையறு வண்ணக வொத்தாழிசைக்கலி' என்பது:

அம்போதரங்க உறுப்பிற்குந் தாழிசைக்கும் நடுவே அராக உறுப்புப்பெற்றுத் தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்பினையும் உடைத்தாய் வருமெனின் அது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்; எ-று.

அராகம் எனினும், வண்ணகம் எனினும், முடுகியல் எனினும், அடுக்கியல் எனினும் ஒக்கும்.

'வசையறு வண்ணகம்' என்று சிறப்பித்தவதனால் அராக உறுப்புத்தான் அளவடி முதலாய எல்லா வடியானும் வரப்பெறும் எனக் கொள்க.

அடிவரையறையாவது: சிறுமை நான்கடி, பெருமை எட்டடி, இடை ஐந்தடியானும், ஆறடியானும், ஏழடியானும் வரப்பெறும் எனக் கொள்க. என்னை,

அன்னவடி முதலா வனைத்தினு நான்கடி
முதலா யிரட்டியு முடிகிய னடக்கும்

என்றாராகலின்.

வருமாறு :—

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமுமலர் நறும்பைந்தார்ப்
பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்
தோன்றுங்
குரூஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கு மல்லார்க்குந்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள்;

இது தரவு.

காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் றிரியாத மரபொத்தாய் கரவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ;

அன்பினா லமிழ்தளாஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமியையாய்க்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ;

பாங்கனையே வாயிலாப் பல்காலும் வந்தொழுகுந்
தேங்காத கரவினையுந் தெரியாத விருளுடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாய்த்
தடமலர்த்தார் அருளுநின் தகுதியுந் தகுதியோ;

இவை மூன்றும் தாழிசை.

தாது முறிசெறிதடமல ரிடையிடை தழலென விரிவனபொழில்,
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு கருநெய்தல் விரிவனகழி,
தீதுறு திறமறு கெனநனிமுனிவன துணையொடு பிணை
வனதுறை,
மூதறு மொலிகலி நுரைதரு திரையொடு கழிதொடர் புடையது
கடல்,

இவை நான்கும் அராகம்.

கொடுந்திற லுடையன சுறவேறு கொட்பதனால்
இடுங்கழி யிராவருதல் வேண்டாவென் றியைத்திலமோ;
கருநிறத் தடுதொழிற் கராம்பெரி துடைமையால்
இருணிறத் தொருகான வீராவார லென்றிலமோ;

இவை நாற்சீர் ஈரடி யிரண்டம்போதரங்கம்.

நாணொடு கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே;
துஞ்சலு மொழிந்தன்றாற் றொடித்தோளி தடங்கண்ணே;
அரற்றொடு கழிந்தன்று லாரிருளு மாயிழைக்கே;
நயப்பொடு கழிந்தன்று னனவதுவு நன்னுதற்கே;

இவை நாற்சீர் ஓரடி நான்கம்போதரங்கம்

அத்திறத்தா லிசைத்தன தோள்;
அலர்தற்கு மெலிந்தன கண்;
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்;
பொன்னிறத்தாற் போர்த்தன முலே;
அழலினு லசைந்தது நகை;
அணியினு லொசிந்த திடை;
குழலினு லவீர்ந்தது முடி;
குறையினாற் கோடிற்று நிரை;

இவை முச்சீர் ஓரடி யெட்டம்போதரங்கம்.

உட்கொண்ட தகைத்தொருபால்;
உலகறிந்த வலத்தொருபால்;
கட்கொண்டல் துளித்தொருபால்;
கழிவெய்தும் படித்தொருபால்;
பரிவுறூஉந் தகைத்தொருபால்;
படர்வுறூஉம் பசப்பொருபால்;
இரவுறூஉந் துயரொருபால்;
இளிவந்த எழிற்றொருபால்;
மெலிவுறூஉந் தகைத்தொருபால்;
விளர்ப்புவந் தடைந்தொருபால்;
பொலிவுசென் றகன்றொருபால்;
பொறைவந்து கூர்ந்தொருபால்;
காதலிற் கதிர்ப்பொருபால்;
கட்படாத் துயரொருபால்;
ஏதில்சென் றணைந்தொருபால்;
இயனணிற் செறிவொருபால்;

இவை இருசீர் ஓரடிப் பதினாறம்போதரங்கம்.

எனவாங்கு,

இது தனிச்சொல.

இன்னதிவ் வழக்கம் இத்திறம் இவணலம்
என்னவு முன்னாட் டுன்னு யாகிக்
கலந்த வண்மையை யாயினு நலந்தகக்

கிளையொடு கெழீஇத் தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணிய யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே

இது சுரிதகம்.

இஃது ஆறுறுப்புங் குறைவின்றி வத்த வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா. என்னை,

அச்சொலப் பட்ட உறுப்போ டராகம்
வைத்த நடையது வண்ணக மாகும்

என்றார் காக்கைபாடினியார்.

'வான்றளை தட்டிசைதன தாகியும் வெண்பா வியைந்தும்'விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே' என்பது: கலித்தளை தட்டுக் கலியோசை தழுவியும், வெண்தளை தட்டு வெள்ளோசை தழுவியும் வந்து ஈற்றடி முச்சீரான் இறுமெனின் அது வெண்கலிப்பா என்றும், கலி வெண்பா என்றும் வழங்கப்படும்; எ - று.

'இன்பான் மொழியாய்' என்பது: மகடூஉ முன்னிலை.

'விசையறு சிந்தடி' என்று சிறந்பித்தவதனுல் வேற்றுத்தளை தட்டு அருகிவரவும் பெறும் எனக்கொள்க.

வருமாறு :

வெண்கலிப்பா

வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையான்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த
தொன்மைசால் மிகுகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு

இது தன்றளையானும் துள்ளல் ஓசையானும் வந்தமையான் வெண்கலிப்பா.

கலிவெண்பா

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினு மாடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்த வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன் (கலித்தொகை-குறிஞ்சி: 15)

இது வெண்டளைதட்டு வெள்ளோசை தழுவி ஒரு பொருண்மேல் வந்தமையால், கலிவெண்பா. என்னை,

ஒருபொரு ளுதலிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி வருவது கலிவெண் பாட்டே (தொல். 1410)

வெண்டளை தன்றளை யென்றிரு தன்மையின்
வெண்பா வியலது வெண்கலி யாகும்

என்றார் காக்கைபாடினியார்.

இனிப் பிறதளையான் வருமாறு:—

வெண்கலிப்பா

ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தண்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியவென்
தார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
சீர்மலி கொடியிடை சிறந்து

இஃது ஆசிரியத்தளையானும், தன்றளையானும் வந்த வெண்கலிப்பா.

பிறவும் யாப்பருங்கல விருத்தியுட் காண்க.

உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

நின்று விளங்கு மணிப்பசும் பொன்னிற மாறுறுப்பும்
ஒன்றிய வண்ணக வொத்தா ழிசைக்கலி யோசைகுன்றுத்
துன்றிய வாளார் மழையுஞ் சுடர்த்தொடீஇ யேர்மலரும்
என்றிவை வெண்கலிப் பாவிற் கிலக்கிய மேந்திழையே (41)

இவ் வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும், வெண்கலிப்பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

கொச்சகக் கலிப்பாவின் வகை

தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய்
மரபே யியன்று மயங்கியும் வந்தன வாங்கமைத்தோள்
அரவே ரகலல்கு லம்பேர் நெடுங்கண்வம் பேறுகொங்கைக்
குரவே கமழ்குழ லாய்கொண்ட வான்பெயர் கொச்சகமே (42)

இ - கை. தரவு கொச்சகக் கலிப்பாவும், தரவிணைக் கொச்சகக் கலிப்பாவும், சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவும், பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவும், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய், மரபே யியன்று மயங்கியும் வந்தன' என்பது:

ஒரு தரவு வந்தும், இரண்டு தரவு வந்தும், தாழிசை சில வந்தும், தாழிசை பல வந்தும், தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்புந் தம்முண் மயங்கியும், வெண்பாவினோடும், ஆசிரியத்தினோடும் மயங்கியும் வருவனவெல்லாங் கொச்சகக்கலிப்பா என்று பெரிட்டு வழங்கப்படும்; எ - று.

'சொல்லின் முடிவினப்பொருண் முடித்தல்' என்பது, தந்திரவுத்தியாகலின் தரவுகொச்சக முதலாயின அவ்வப் பெயரானே வழங்கப்படும் எனக்கொள்க.

ஒரு தரவு வந்தால் தரவு கொச்சகக் கலிப்பா என்றும், தரவு இரண்டாய் வந்தால் தரவிணைக் கொச்சகக் கலிப்பா என்றும், சில தாழிசை வதால் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், பல தாழிசை வந்தால் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், தம்முண் மயங்கியும் பிறவற்றிேனாடு மயங்கியும் வருவனவெல்லாம் மயங்கிசைச் கொச்சகக் கலிப்பா என்றும் வழங்கப்படும்.

'தாமும்' என்று மிகுத்துச் சொல்லியவதனால் தனிச்சொல்லும், சுரிதகமும் இடையிடை வரப்பெறும் எனக் கொள்க.

'மரபே யியன்றும்' என்று சிறுப்பித்தவதனால் வரலாற்று முறைமையோடுங் கூட்டிக் கலியுறுப்பில் மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும், கலியுள் வாரா என்ற நேரீற்று இயற்சீரும், நிரைநடுவாகிய வஞ்சி யுரிச்சீரும், ஐஞ்சீர் அடியும் வந்து, ஒத்தாழிசைக் கலிப்பாக்களோடு ஒவ்வாது வருவனவெல்லாம் மயங்கிசைச் கொச்சகக் கலிப்பா என்று வழங்கப்படும் எனக்கொள்.

'வாங்கமைத்தோள்......குழலாய்' என்பது: மகடூஉ முன்னிலை.

'கொண்டவான் பெயர் கொச்சகமே' என்பது இறுதி விளக்கு,

வருமாறு:—

தரவு கொச்சகக் கலிப்பா

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே

இது சுரிதகம் இல்லாத தரவு கொச்சகக் கலிப்பா.

தரவு கொச்சகக் கலிப்பா

குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து

வீங்குமணிக் கயிறுரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப;

இது தரவு.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையும்
கானுடைத் தவர்தேர் சென்றவாறே.

இது தனிச்சொல்லும், சுரிதகமும், பெற்று வந்த தரவு கொச்சகக் கலிப்பா.

தரவிணைக் கொச்சகக் கலிப்பா

வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனுங்
கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே;

இது தரவு.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் துறப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரோ;

இது தரவு.

அதனால்,

இது தனிச்சொல்.

செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா ருங்கொலிஃ தெண்ணிய வாறே.

இது சுரிதகம்.

இஃது இடையிடைத் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் இற்ற தரவிணைக் கொச்சகக் கலிப்பா.

சுரிதகமில்லாதது வந்தவழிக் கண்டுகொள்க.

சிஃருழிசைக் கொச்சகக் கலிப்பா

பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினெடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே;

இது தரவு.

ஆங்கொருசார்,

இது தனிச்சொல்.

உச்சியார்க் கிறைவனை யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனைப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே;

ஆங்கொருசார்,

இது தனிச்சொல்.

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே;

ஆங்கொருசார்,

இது தனிச்சொல்

மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனைப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே;

இவை மூன்றுந் தாழிசை.

அஃதான்று,

இது தனிச்சொல்.

கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
நின்றபுக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.

இது சுரிதகம்.

இது நான்கடித் தரவும், மூன்றடித் தாழிசை மூன்றும், சுரிதகமுமாய், இடையிடை தனிச்சொற் பெற்று, நேரிசை

ஒத்தாழிசைக் கலிப்பாவிற் சிறிது வேறுபட்டு வந்தமையால் அஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா.

பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா

தண்மதியோர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடைநிறையு முடன்றளர முன்னுட்கட்
கண்மதியோர்ப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ;

இது தரவு.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பல் தாழ்குழல் தளர்வாளோ;

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ;

அணிநல மிவள்வாட அரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளோ;

நாம்பிரியோ மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த உயர்மொழியும் பழுதாமோ;

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த அருண்மொழியால் அருளுவது மருளாமோ;

சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ;

இவையாறுந் தாழிசை.

அதனுல்,

இது தனிச்சொல்.

அரும்பெற லமிழ்தினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே
விழுமிய தறிமதி வாழி
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே

இது சுரிதகம்.

இது நாலடித்தரவும், இரண்டடித் தாழிசை ஆறும் தனிச்சொல்லும், நான்கடிச் சுரிதகமும் பெற்றுவந்த பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூரு மேமஞ்சால் துறைவகேள்;

மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பரந்தொழுகு மேமஞ்சால் துறைவகேள்;

இவை இரண்டுந் தரவு.

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோள்
தொடிநிகழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்;

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைஇய சிறுபுறத்தோள்
தெண்பனிநீ ருகக்கண்டுந் திரியலனே யென்றியால்;

நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்ஞெசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்;

கனைவரல்யாற் றிடுகரைபோற் கைந்நில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்;

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கல்லா
தாழுமென் னிலைகண்டு மகல்கிலனே யென்றியால்;

கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்;

இவை யாறுந் தாழிசை.

அதனல்,

இது தனிச்சொல்.

அடும்பம லிறும்பி னெடும்பனை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு;

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்;

அரசுடை நிரைபடை விரைசெறி முரைசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்;

அலங்கொளி யவிர்சுட ரிலங்கெழின் மலர்தொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்;

இவை நான்கும் அராகம்.

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ;

ஒல்லாது கழலுமென் னொளிவளையுந் தவிர்ப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ;

தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயே;

மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்;

காதலார் மார்பன்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்;

இணைபிரிந்தார் மார்பன்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்;

இவை யாறுந் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

பகைபோன்றது துறை;	தகையிழந்தன தோள்;
பரிவாயின குறி;	தலைசிறந்தது துயர்;
நகையிழந்தது முகம்;	புகைபரந்தது மெய்;
நனிநாஅணிற் றுளம்;	பொறையாயிற் றென்னுயிர்;

இஃது இருசீரோரடி எட்டம்போதரங்கம்.

அதனால்,

இது தனிச்சொல்.

இனையது நினையா லனையது பொழுதால்
நினையல் வாழி தோழி தொலையாப்
பனியொடு கழிக உண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே.

இது சுரிதகம்.

இது தரவு இரண்டும், தாழிசை ஆறும், தனிச்சொல் லும், அராகம் நான்கும், பெயர்த்தும் ஆறுதாழிசையும் தனிச்சொல்லும், இரு சீரோரடி யெட்டம்போ தரங்க உறுப்பும் பெற்று நான்கடி ஆசிரியச் சுரிதகத் தாலிற்றுக் கலிக்கோதப்பட்ட ஆறுறுப்பும் மிக்கும் குறைந்தும், பிறழந்

தும், உறழ்ந்தும், மயங்கியும் வந்தமையான், மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

வெண்பாவினோடும், ஆசிரியத்தினோடும் வந்த மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா யாப்பருங்கல விருத்தியுள்

"காமர் கடும்புனல்" (கலித்) என்னும் பழம்பாட்டிற் கண்டுகொள்க.

இன்னும், 'மரபே யியன்றும்' என்று சிறப்பித்தவதனால், ஒருபோகு முதலா உடையனவற்றை யெல்லாம் இதனாற் பெயர்கொடுத்துக் கொச்சகம் என்று வழங்கப்படுமெனக் கொள்க. என்னை,

எருத்திய லின்றி யிடைநிலை பெற்றும்
இடைநிலை யின்றி யெருத்துடைத் தாயும்
எருத்த மிரட்டித் திடைநிலை பெற்றும்
இடைய திரட்டித் தெருத்துடைத் தாயும்
இடையு மெருத்து மிரட்டுற வந்தும்
எருத்த மிரட்டித் திடைநிலை யாறு
அடக்கியல் காறு மமைந்த வுறுப்பிற்
கிடக்கை முறைமையிற் கிழமைய தாயுந்
தரவொடு தாழிசை யம்போ தரங்கம்
முடுக்கியல் போக்கிய லென்றிவை யெல்லாம்
முறைதடு மாற மொழிந்தவை யின்றி
யிடையிடை வெண்பாச் சிலபல சேர்ந்தும்
மற்றும் பிறபிற வொப்புறுப் பில்லன
கொச்சக மென்னுங் குறிப்பின வாகும்

என்றார் காக்கைபாடினியார்.

தரவே தரவிணை தாழிசை சிலபல
வரன்முறை பிறழ அயற்பா மயங்கியுந்
தனிச்சொற் பலவா யிடையிடை நடந்தும்
ஒத்தா ழிசைக்கலி யுறுப்பினிற் பிறழ
வைத்த முறையான் வண்ணக விறுவாய்
மயங்கிவந் தனவு மியங்குநெறி முறைமையிற்
கொச்சகக் கலியெனக் கூறினர் புலவர்

என்றார் காமவேளைக் கடுத்த புத்தேள் நாமம் தாங்கிய நல்லாசிரியர் (மயேச்சுரர்).

ஓதப் பட்ட வுறுப்பு வகையெல்லாம்
ஏதப் படாமற் கலிக்கியல் பெய்தி
மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும்
வண்ணமு மடியுந் தொடையு மயங்கியும்
அடக்கிய லந்தந் தொடுத்தன பல்கியும்
கலிவயிற் கடிந்த சீரிடை மிடைந்தும்
நாற்சீ ரிறந்த சீரொடு சிவணியும்
முச்சீ ரிருசீ ரம்போ தரங்கம்
அச்சீர் முடிவிடை யழிவில தழுவியுங்
கொச்சகக் கலியெனக் கூறவும் படுமே
கூறிய வுறுப்பில் குறைபா டின்றித்
தேறிய விரண்டுந் தேவ பாணியுந்
தரவே யொழியினுந் தாழிசை யொழியினும்
இருவகை முத்திறத் தெண்ணே நீங்கினும்
ஒருபோ கென்ப உணர்ந்திசி னோரே

என்றார் மயேச்சுரர்.

தரவின் றாகித் தாழிசை பெற்றுந்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகு மென்ப (தொல். 1406)

என்றார் தொல்காப்பியனார்.

இவற்றிற் கிலக்கியம் யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க.

உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை

குடநிலைத் தண்செல்வப் போர்க்கதக் கண்ணன் றரவுகுன்று
வடிவுடை யாகுந் தரவிணை மன்னும் பரூஉத்தடக்கை
இடமிக வாஞ்சிலை ருழிசை தண்மதி யேர்பலவாய்
மடலவிழ் கோதை மணிகிளர ராகு மயங்கிசையே (43)

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே கொச்சகக் கலிப்பாக்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதல் நினைத் துக்கொள்க.

கலித்தாழிசை, கலித்துறை கலிவிருத்தம்,

அடிவரை யின்றி யளவொத்து மந்தடி நீண்டிசைப்பிற்
கடிதலில் லாக்கலித் தாழிசை யாகுங் கலித்துறையே
நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி யீரிரண்டாய்
விடினது வாகும் விருத்தந் திருத்தகு மெல்லியலே (44)

இ - கை. கலித்தாழிசையும், கலித்துறையும், கலி விருத்தமும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'அடிவரை யின்றி யளவொத்து மந்தடி நீண்டிசைப் பிற்கடிதலில் லாக்கலித் தாழிசையாகும்' என்பது:

இரண்டடியும், பலவடியும் வந்து, ஈற்றடிமிக்கு அல்லாதவடி தம்முள் ஒத்தும், ஒவ்வாதும் வருவது கலித் தாழிசை எ - று.

'கடிதலில் லாக்கலித் தாழிசை' என்று சிறப்பித்த வதனால், ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வருவது சிறப் புடைத்து; தனியே வரப்பெறுமாயினும் எனக்கொள்க.

வருமாறு :—

கழித்தாழிசை

கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடி வாரல்நீ ஐய நலம்வேண்டின்

ஆய்தினை காத்தும் அருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரல்நீ ஐய நலம்வேண்டின்

மென்தினை காத்து மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடி வாரல்நீ ஐய நலம்வேண்டின்

இவை யிரண்டடியாய் ஈற்றடிமிக்கு ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வந்தமையால், கலித்தாழிசை.

வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தில் எழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி லெழாதாய்க் குருலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்

இஃது ஈற்றடிமிக்கு, ஏனையடி மூன்றும் ஒத்துவந்த கலித்தாழிசை.

'அளவொத்தும்' என்ற உம்மையால் ஈற்றடிக்கு ஏனையடி ஒவ்வாது வரப்பெறும் எனவுங் கொள்க.

பூண்ட பறையறையப் பூதமருள
நீண்ட சடையான் ஆடுமே
நீண்ட சடையான் ஆடுமென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே

இஃது ஈற்றடிமிக்கு இரண்டாமடி குறைந்து, முதலடியுங் மூன்ருமடியும் ஒத்துவந்த கலித்தாழிசை.

சீர் வரையறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் அடியானும் வரப்பெறும் எனக் கொள்க. என்னை,

அடியெனைத் தாகியும் ஒத்துவந் தளவினிற்
கடையடி மிகுவது கலித்தா ழிசையே (யாப்பருங்கலம்: 87)

அந்தடி மிக்குச் சிலபல வாயடி
தந்தமு ளொப்பன தாழிசை யாகும் (காக்கைபாடினியார்)

என்ருராகலின்.

'கலித்துறையே, நெடிலடி நான்காய் நிகழ்வது' என்பது: ஐஞ்சீரடி நான்காய் வருவது கலித்துறை; எ - று.

வருமாறு :—

கலித்துறை

யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே

வென்ருன் வினையின்—நீங்கிநின்ருர் (காரிகை: 38)

இவை நெடிலடி நான்காய் வந்த கலித்துறை. என்னை,

நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை
(யாப்பருங்கலம்: 88)

ஐஞ்சீ ரடியின் அடித்தொகை நான்மையோ
டெஞ்சா தியன்றன வெல்லாங் கலித்துறை

என்ருர் காக்கைபாடினியார்.

'நேரடி ஈரிரண்டாய், விடினது வாகும் விருத்தம்' என்பது: நாற்சீரடி நான்காய் வருவது கலிவிருத்தம்; எ-று. என்னை,

அளவடி நான்கின கலிவிருத் தம்மே
என்பது யாப்பருங்கலம் (நூ: 89).

நாலொரு சீரான் நடந்த வடித்தொகை
ஈரிரண் டாகி யியன்றன யாவையும்
காரிகை சார்ந்த கலிவிருத் தம்மே

என்ருர் காக்கைபாடினியார்.

வருமாறு:—

கலிவிருத்தம்

வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்
ஆய்தலின் ஒண்சுடர் ஆழியி ளுன்றமர்
வாய்தலின் நின்றனர் வந்தென மன்னர்முன்
நீதலை சென்றுரை நீள்கடை காப்போய்

தேம்பழுத் தினிய—தவள மாடமே (காரிகை: 39)

இவை நாற்சீர் நாலடியாய் வந்தமையாற் கலிவிருத்தம்.

'திருத்தகு மெல்லியலே' என்பது; மகடூஉ முன்னிலை.

உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

கொய்தினை யாய்தினை மென்தினை வாள்வரி பூண்டபறை
எய்திய தாழிசை யானும்வென் ருனுங் கலித்துறையே
மைதிக ழோதி வரிநெடுங் கண்ண வனமுலையாய்
மெய்தரு வேய்தலை தேம்பழுத் தென்ப விருத்தங்களே (45)

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே கலிப்பா வினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

கலிப்பாவும் அதன் இனமும் முற்றும்

---

5. வஞ்சிப்பாவினினமும் வஞ்சிப்பாவும் அதற்கீருமாறும்

வஞ்சித்தாழிசை, துறை, விருத்தம், வஞ்சிப்பா.

குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்
கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னலிறும் வஞ்சிவஞ் சிக்கொடியே (46)

இ-கை.வஞ்சித்தாழிசையும், வஞ்சித்துறையும், வஞ்சி விருத்தமும், வஞ்சிப்பாவிற்கு ஈருமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

'குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்' என்பது: இருசீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒரு பொருண் மேல் அடுக்கிவருவன வஞ்சித்தாழிசையாம்; எ-று.

'கோதில்' என்று மிகுத்துச் சொல்லியவதனல், அவை யொரு பொருள்மேன் மூன்றடுக்கி யல்லது வாரா எனக் கொள்க.

வருமாறு :

வஞ்சித்தாழிசை

மடப்பிடியை மதவேழம்
தடக்கையான் வெயின்மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்.

பேடையை யிரும்போத்துத்
தோகையான் வெயின்மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்.

இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையான் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்.

இவை இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையால் வஞ்சித்தாழிசை.

குறளடி நான்கவை கூடின வாகி
முறைமையின் அவ்வகை மூன்றணைந் தொன்றி
வருவன வஞ்சித் தாழிசை யாகும்

என்றார் காக்கைபாடினியார்.

'கோதில் வஞ்சித், துறையொரு வாது தனிவரு மாய் விடின்' என்பது: இருசீரடி நான்காய் ஒரு பொருள்மேல் ஒன்றாய் வருவது வஞ்சித்துறை; எ-று.

வருமாறு:—

வஞ்சித்துறை

மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்

இது குறளடி நான்காய் ஒரு பொருள்மேல் தனியே வந்தமையான், வஞ்சிதுறை. என்னை,

குறளடி நான்மையிற் கோவை மூன்றாய்
வருவன வஞ்சித் தாழிசை தனிவரின்
துறையென மொழிப துணிந்திசி னோரே

என்றாராகலின்.

'சிந்தடி நான், கறைதரு காலை விருத்தம்' என்பது முச்சீரடி நான்காய் வருவது வஞ்சிவிருத்தம்; எ-று.

வருமாறு :

வஞ்சி விருத்தம்

சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல வுண்கணி வள்வாழுமே

இது சிந்தடி நான்காய் வந்தமையான், வஞ்சிவிருத்தம். என்னை,

சிந்தடி நான்காய் வருவது வஞ்சிய
தெஞ்சா விருத்த மென்மனர் புலவர்

என்பது யாப்பருங்கலம் (92).

'தனிச்சொல் வந்து, மறைதலில் வாரத்தினலிறும் வஞ்சி' என்பது: குறளடி வஞ்சிப்பாவும் சிந்தடி வஞ்சிப் பாவுந் தனிச்சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிறும்; எ-று.

'மறைதலில் வாரம்' என்று சிறப்பித்தவதனல் வஞ்சிப்பா ஆசிரியச்சுரிதகத்தால் இறுவதல்லது வெள்ளைச் சுரிதகத்தால் இறப்பெருது எனக் கொள்க.

வருமாறு:—

பூந்தாமரை ....பெருவண்மையனே (காரிகை: 30)

என்னுங் குறளடி வஞ்சிப்பா ''நாளும்'' என்னுந் தனிச் சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிற்றவாறும்,

வஞ்சிப்பா

கொடியவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தின் இணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனுகி
எயினடுவண் இனிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை பத்தியலாற் செப்பினேன்
புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே

இச் சிந்தடி வஞ்சிப்பா "புணையென" என்னுந் தனிச்சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் இற்றவாறுங் கண்டு கொள்க. என்னை,

> தூங்கல் இசையன வஞ்சி மற்றவை
> ஆய்ந்த தனிச்சொலோ டகவலின் இறுமே

என்பது யாப்பருங்கலம் [90].

'அமுதே' என்பதும், 'வஞ்சிக்கொடியே' என்பதும் மகடூஉ முன்னிலை.

உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை

மடப்பிடி பேடை யிரும்பிடி வஞ்சியின் ருழிசையாம்
வடுப்புரை கண்ணினல் லாய்மை சிறந்தன வான்றுறையாந்
தடப்பெருஞ் சோலை விருத்தம தாகுந் தயங்குவஞ்சிக்
கொடித்தொடி பூந்தா மரைகொடி மாலை னுதாரணமே (47)

இவ் வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே வஞ்சிப்பாவினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதல்நினைத்துக் கொள்க.

வஞ்சிப்பாவின் இனமும் வஞ்சிப்பாவும்.

முற்றும்.

---

6. மருட்பா

பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் ருக விளையுமென்ருல்
வண்பான் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகமே (48)

இ-கை. மருட்பா ஆமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்பு: புறநிலை வாழ்த்தும், கைக்கிளையும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉவும் என்னும் நான்கு பொருள்மேலும் வெண்பா முதலாக, ஆசிரியம் ஈருக

வருமெனின், அதனை மருட்பா என்று வழங்குவர் புலவர் எ - று.

'வண்பால் மொழி மடவாய்' என்பது: மகடூஉ முன்னிலை. என்னை,

வெள்ளை முதலா ஆசிரிய மிறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்

என்றார் காக்கைபாடினியார்.

வருமாறு:

புறநிலை வாழ்த்து மருட்பா

தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றில் முகைவிரியு முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்ப—என்றுந்
தீரா நண்பின் தேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே

இது வழிபடு தெய்வ நிற்புறங்காப்பப் பழிதீர் செல்வ மொடு ஒருகாலைக் கொருகாற் சிறந்து பொலிக என்றமை யாற் புறநிலை வாழ்த்து மருட்பா. என்னை,

வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ (தொல். 1367)

என்றார் தொல்காப்பியனார்.

கைக்கிளை மருட்பா

திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும்—அரிபரந்த
போகிதழ் உண்கணும் இமைக்கும்
ஆகு மற்றிவள் அகலிடத் தணங்கே
(புறப்பொருள் வெண்பாமாலை, கைக்கிளை 3)

இது துணிதலை நுதலிய ஒருதலைக் காமமாதலிற் கைக் கிளை மருட்பா. என்னை,

காட்சி முதலாக் கலவியி னொருதலை
வேட்கையிற் புலம்புதல் கைக்கிளை யதுதான்
கேட்போ ரில்லாக் கிளவிகள் பெறுமே

என்றாராகலின்.

வாயுறை வாழ்த்து மருட்பா

பலமுறையும் ஓம்பப் படுவன கேண்மின்
சொலல்முறைக்கண் தோன்றிச் சுடர்மணித்தேர் ஊர்ந்து
நிலமுறையின் ஆண்ட நிகரில்லார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்கள் நில்லா
இலங்கும் எறிபடையும் ஆற்றலும் அன்பும்
கலந்ததம் கல்வியும் தோற்றமும் ஏனைப்
பொலன்செய் புனைகலனே டிவ்வா றனைலும்
விலங்கிவரும் கூற்றை விலக்கலும் ஆகா
தனைத்தாதல் நீயிருங் காண்டிர்—நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிழையாது
தேறிநீ ரொழுகின் சென்றுபயன் தருமே

இது மெய்ப்பொருள் சொன்னமையால், வாயுறை வாழ்த்து மருட்பா. என்னை,

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே (தொல்: 1369)

செவியறிவுறூஉ மருட்பா

பல்யானை மன்னர் முருங்க அமருழந்து
கொல்யானைத் தேரொடுங் கோட்டந்து—நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக—அடுதிறல்
ஆளி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்றும்
ஈர முடையையாய் என்வாய்ச்சொற் கேட்டி
அரிய உழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருகா லுழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவ ரிழைக்கும் வரைக்கா னிதியீட்டங்
காட்டும் அமைச்சரை யாற்றத் தெளியல்
அடைத்த வரும்பொரு ளாறன்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
மன்ற மறுக அகழாதி—என்றும்

மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புறம் ஆசைப்ப டேற்க—அறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி—நவையாக
நட்டார் குழிசி சிதையாதி - ஒட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற்—கவிபடைத்தாய்
கற்றூர்க் கினனுகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றூர்ச் செறுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதி
அற்றம் அறிந்த அறிவினுய்—மற்றும்
இவையிவை வீயா தொழுகின் நிலேயாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழல் துஞ்சுவண் மன்னே

இது வியப்பின்றி உயர்ந்தோர்கண் அவிந்தொழுகுதல் கடனென அரசர்க் குரைத்தமையாற் செவியறிவுறூஉ மருட்பா. என்னை,

செவியுறை தானே
பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே (தொல். 1371)

'என்றிப்பொருள்மிசை' என்று மிகுத்துச் சொல்லிய வதனுல் இந்நான்கு பொருண்மேலுமன்றி மருட்பா வரப் பெருதெனக் கொள்க. என்னை,

புறநிலே வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலே மூன்றுந் திண்ணிதின் தெரியின்
வெண்பா வியலினும் ஆசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின வென்ப (தொல். 1417)

என்றூர் தொல்காப்பியனுர்.

'பண்பார் புறநிலே' என்றும்; 'ஒண்பாச்செவியறிவு' என்றுஞ் சிறப்பித்தவதனுல், புறநிலேவாழ்த்தும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉவும் இவ்வாறன்றி வெண்பாவே யாயும், ஆசிரியமேயாயும் வரப்பெறும், கலியும் வஞ்சியு மாய் வரப்பெரு எனக் கொள்க. என்னை,

கலிநிலே வகையும் வஞ்சியும் பெருஅ
வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி வுறூஉவும்என் றவையு மன்ன

என்றூராகலின்.

'பாங்குடைக் கைக்கிளை' என்று சிறப்பித்த வதனல் கைக்கிளை எல்லாப் பாவாலும் வரப்பெறும், மருட்பாவே யாய் வருகவென்னும் யாப்புறவில்லை என்றும், கைக்கிளை வெண்பா முதலாக ஆசிரியம் ஈருக வரும்வழி ஆசிரியவடி இரண்டேயாய் அவற்றுள்; ஈற்றயலடி முச்சீராய் வரும் என்றும், வெண்பாவடியும் ஆசிரியவடியும் ஒத்து வருவன சமநிலை மருட்பா என்றும், ஒவ்வாதன வியனிலை மருட்பா என்றும் வழங்கப்படும் என்றுங் கொள்க. 'ஊனமில்லா வெண்பா' என்று சிறப்பித்தது வேற்று வண்ணம் விரவாது வெள்ளை வண்ணம் எல்லா வண்ணத்துள்ளுஞ் சிறப்புடைத் தாய் மங்கல மரபிற்ரும்; அவ்வாறே வேற்றுத்தளையும் அடியும், சீரும் விரவாமையால் எல்லாப் பாவினுள்ளும் வெண்பா சிறப்புடைத்தென்று முன்வைக்கப்பட்டதென் பது அறிவித்தற்கு எனக் கொள்க.

வெண்பா

நாற்சீ ரடியால் நடைபெறுதலும், வேற்றுப்பாவினல் இருமையும், எல்லாப் பொருள்மேலும் சொல்லப்படுதலும் என்றிவற்ருல் ஆசிரியத்தோடு ஒத்தலும், உயர்ந்த ஓசைத் தாகலும், உத்தமசாதியாகலும், வேற்றுத்தளையும் வேற் றடியும் வேற்றுப்பாவும் விரவாமையும் என்னும் அதிக குணமுடைமையும் நோக்கி வெண்பா ஆசிரியத்தின்முன் வைக்கப்பட்டது.

ஆசிரியப்பா

அளவடியால் நடைபெறுதலும், தனது நடையால் தானினி திறுதலும், எல்லாப்பொருள்களையுந் தன்கண்ணே யடக்கலும், ஒருவாத பொருளிற்ருதலும் என்னும் ஒரு புடையால் வெண்பாவோடொத்தலும், அகவிய வோசைத் தாகலும், அரசர் குலத்தின தாகலும், வேற்றுத்தளையும் அடியும் விரவி வருதலும் என்னும் வேறுபாடுடைமையும் நோக்கி வெண்பாவின்பின் ஆசிரியப்பா வைக்கப்பட்டது.

கலிப்பா

நேரடியால் நிலைபெறுதலும், அயலடியும் அயற்றளையும் விரவிவருதலும், ஆசிரியத்தோடு ஒத்தலும், அயற்பாவினு லிறுதலும், புறநிலை வாழ்த்து முதலிய பொருள்கண்மேற் புகாமையும், வணிக குலத்தினதாகலும், துள்ளலோசைத் தாகலும் நோக்கி ஆசிரியத்தின்பின் கலிப்பா வைக்கப் பட்டது.

வஞ்சிப்பா

புறநிலை வாழ்த்து முதலிய பொருள்கள்மேற் புகாமை யும், அயற்றளையும் அயலடியும் விரவி வருதலும், அயற் பாவினு லிறுதலும், என்றிவற்ருற் கலிப்பாவினே டொத்த லும் நாற்சீரடியால் நடவாமையும் தாழ்ந்த குலத்தின தாகலும் தூங்கலோசைத்தாகலும், அகப்பொருள்கள்மேல் அருகியன்றி வாராமையும் நோக்கிக் கலிப்பாவின்பின் வஞ்சிப்பா வைக்கப்பட்டது. இது நிறுத்த முறைமை.

வெண்பா முதலா நால்வகைப் பாவும்
எஞ்சா நால்வகை வருணம் போலப்
பாவினத் தியற்கையும் அதனே ரற்றே

வேதவாய் மேன்மகனும் வேந்தன் மடமகளும்
நீதியாற் சேர்ந்து நிகழ்ந்த நெடுங்குலம்போல்
ஆதிசால் பாவு மரசர் வியன் பாவும்
ஓதியவா றேத மருட்பாவாய் ஓங்கிற்றே

பண்ணுந் திறமும்போற் பாவு மினமுமாய்
வண்ண விகற்ப வகைமையார்—பண்ணின்
திறம்விளரிக் கில்லதுபோற் செப்பல் அகவல்
இசைமருட்கு மில்லை இனம்

இவற்றை விரித்துரைத்துக் கொள்க.

உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

தென்ற லிடையுந் திருநுதல் வேர்வரும் பன்முறையென்
றென்றிய பாவும்பல் யானையு மென்பவொண் போதமைந்த
பொன்றிக ழோதி புறநிலை கைக்கிளை வாயுறைவாழ்த்
தென்றிவற் றிற்குஞ் செவியறி விற்கு மிலக்கியமே (49)

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே மருட்பா நான்கிற்குங் காட்டிய இலக்கியங்களை முதல் நினைத்துக் கொளக.

செய்யுளியல் முதல் நினைப்புக் காரிகை

வெண்பா வளம்பட வீரடி யொன்றுட னேரிசையும்
கண்பானல் போன்மயி லந்தமின் மூன்றுங் கடைதருக்கி
நண்பார் தரவொன் றசைதர வேயடி யோடுகுறள்
பண்பார் புறநிலை செய்யு ளியலென்ப பாவலரே (50)

செய்யுளியல் முற்றும்.

யாப்பருங்கலக்காரிகை

செய்யுளியல்—விளக்கம்

காரிகை
எண்.

24. விகற்பம்-வேறுபாடு. எதுகை வேறுபட வருவதனை இருவிகற்பம் எனக் கூறினர். எதுகை வேறுபடாது ஒரே எதுகைத் தாய் வருவது விகற்பம் இல்லாத தாகும். எனினும் அதற்கு ஒரு குறியீடு வேண்டும் என்று எண்ணி ஒரு விகற்பம் பெற்றது எனப் பெயர் கொடுப்பாராயினர்.

குறள், சிந்து என அடியானும்; நேரிசை, இன்னிசை என இசையானும்; பஃறொடை எனத் தொடையானும் வெண்பாக்கள் பெயரிடப் பெற்றுள்ளன.

'தாமரையின் றுதாடித் தண்டுவலைச் சேறளைந்து தாமரையி னூற்றமே தான்' என்பது முதற் குறட் பாவின் வடிவம். இதனுடன் 'தாமரைபோல்' என்ற தனிச் சொல்லைச் சேர்ப்பின் இடைவேறுபட்டு விட்டிசைக்கும். எனவே ஏழாம் சீராகிய 'தான்' என் பதனோடு 'நாறும்' என (நா / றும்) என இரு அசை கூட்டி ஒட்டப்பட்டுள்ளன.

26. 'வைகலும் வைகல்' என்ற நாலடியார் பாடலிலும், 'வையகமெல்லாம்' எனத் தொடங்கும் பாடலிலும், 'வைக றுகடீர்' எனத் தொடங்கும் உதராண முதனினைப்புக்காரிகையிலும், ஐகாரம் நெட்டெழுத்தின் தன்மையதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது; ஐகாரம், அளபெடுத்தற் கண்ணும், தனியே சொல்லுதற் கண்ணுமன்றி மற்றைய மொழி முதலிடை கடை என்ற மூவிடத்தும் குறுக்கும் என, 'குறினெடிலாவி'

என்னும் காரிகையின் விளக்கத்துள் கூறப்பெற்றுள்ளது. எனினும் ஐப்பசி, மைப்புறம் என ஒற்று அடுத்து வருமிடங்களில் மட்டுமே முதலில் குறுகும் எனக்கொள்ளுதல் வேண்டும். வைகல், வையகம் போன்ற இடங்களில் ஐகாரம் மொழி முதலில் குறுகாது வரும் எனக்கொள்க.

28. தொல்காப்பியர் 'நேர்'-'நிரை'-'நேர்பு'-'நிரைபு, என நான்கு அசைகளைக் கொண்டுள்ளார். காரிகை ஆசிரியர் 'நேர்பு' 'நிரைபு' ஆகிய இரண்டினையும் நீக்கி விட்டமையால், வெண்பாவின் ஈற்றுச்சீருக்குக் 'காசு' 'பிறப்பு' என இரண்டு வாய்பாடுகளை ஈண்டுக் கூறியுள்ளார்.

31. ஒழுகிய ஓசையாவது தட்டுத் தடங்கலின்றி ஆற்றொழுக்குப் போல ஒழுகுவது. விழுமிய பொருள்-சிறந்த பொருள். 'ஆர்கலியுலகத்து மக்கட் கெல்லாம்; ஓதலிற் சிறந்தன்றொழுக்க முடைமை' என ஓதலையும், ஒழுக்கத்தையும் ஒப்பனவாகக் கொள்ள வேண்டுமெனக் கூறியமையால் இது விழுமிய பொருளாயிற்று.

'பிண்டியின்' என்ற பாடல் இற்று இற்று ஒழுகுவதால் ஒழுகிய ஓசை இலதாயிற்று. இறைவனுக்குப் பாதங்கள் சிறப்புடையன. உலகம் தாளிணையில் தோன்றியது எனக் கூறாமல், 'பெருமான் பிடர்த் தலையில்' தோன்றியது எனக் கூறியமையால் விழுமிய பொருள் இலதாயிற்று.

'வண்டார் பூங்கோதை' என்ற பாட்டில் மூன்றும் சீராகிய 'வரிவளைக்கை' என்பதனை அடுத்துத் 'திருநுதலாள்' என 'நிரை' தொடக்கமாக வந்து கலித்தளை தட்டியமையால் இது சந்தம் சிந்தையது.

32. தலை தடுமாற்றம்—முறை மாற்றம். தாழிசை, துறை, விருத்தம் என முறையிற் கூறுது, விருத்தம், தாழிசை, துறை என முறை மயங்கிக் கூறியமை. தந்திரஉத்தி என்பதற்கு நூல்உத்தி என்பது பொருள்.

34. முதலடியும், இறுதியடியும் நாற்சீர் அடியாய், இடையடிகள் ஒன்றும் பலவும், குறளடி, சிந்தடி என்ற இரண்டும் இடையில் இணைந்து வருதலால் இணைக்குறள் ஆசிரியப்பா எனப் பெயர் பெற்றது.

'சிறியகட் பெறினே' என்னும் புறநானூற்றுப் பாடல் ஐஞ்சீரடியும் ஆசிரியத்துள் வரும் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் தொல்காப்பியம் இளம் பூரணத்துள் காட்டப்பட்டிருக்கிறது. புறநானூற்றிலும், உ. வே. சா. அவர்கள் காரிகைப் பதிப்பிலும், இப்பாடல் இவ்வகையில் அமையவில்லை. இதனைப் பதினேழடிப் பாடல் என்றும், ஏழாமடியும், பன்னிரண்டாமடியும் மூச்சீரான் வந்தன என்றும், மூன்ருமடி முதலாக ஆருமடி யீருக நான்கடியும், பதினுலாமடியும் ஐஞ்சிரான் வந்தன என்றும், இரண்டாமடியும், பதினென்ருமடியும் அறுசீரான் வந்தன என்றும், ஏனைய நாற்சீரான் வந்தன என்றும் இளம் பூரணர் குறித்துள்ளார். காரிகைப் பதிப்புக்களில் இப்பாடல் பலவாருகப் பதிப்பிக்கப்பட்டிருப்பது ஆய்வுக்குரியது.

38. தரவு மூன்றடிச்சிறுமையாய் வரும். இவ்வரையறை அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் பொருந்தாது. அவற்றிற்குப் பெருக்கம் சுருக்கம் இன்றி ஆறடியே தரவாகும். மற்றையவற்றிற்குப் பெருக்கம் பாடுவோனது பொருள் முடிவுக் குறிப்பேயாகும். தாழிசை, இரண்டு முதலாக நான்கடி ஈருக வரப்

பெறும். இவற்றை, 'சுருங்கிற்று மூன்றடி' என்ற 57-ஆவது காரிகையால் கூறுகின்றார்.

46. வஞ்சிப்பாவினைக் கூறாமல் இனங்கட்கு, இலக்கணங் கூறியபின் பாவின் இலக்கணம் கூறினார் ஆசிரியர். இத்தலை தடுமாற்றத்திற்கு விளக்கம் உரை ஆசிரியர் கூறவில்லை. வஞ்சிப்பாவினால் நூல் செய்யும் மரபு இல்லாமல் இருக்கலாம் எனத் தோன்றுகிறது. வஞ்சி இனங்களே பெருவரவிற்றாக நூல்களில் காணப் படுகின்றன.

48. பொருள் வரையறையோடு பாவிலக்கணங் கூறு கின்ற முறை காரிகை ஆசிரியரிடத்து இல்லை. மருட்பாவிற்கு மட்டுமே, புறநிலை வாழ்த்தும், கைக் கிளையும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉவும் என்ற நான்கு பொருண்மேலும் வரும் எனக் கூறு கின்றார்.

ஒழிபியல்

ஒழிபியல்—கருத்து.

சீருந் தளையும் சிதைய வருமிடத்துக் குற்றியலிகரம், குற்றியலுகரம், உயிரளபெடை ஆயவை அலகிடப்பெற மாட்டா. அஃதாவது, குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஒற்றும் தன்மை உடையனவாயும், உயிரளபெடைகள் நெட்டெழுத்து இயல்பினவாயும் நிற்கும் எனக் கொள்ளல் வேண்டும்.

ஐகாரக் குறுக்கமும் ஒற்றளபெடையும் குற்றெழுத்தைப் போலவே கொண்டு அலகிடப்பெறும். இவற்றுள் ஐகாரக் குறுக்கம் அடுத்து வருகின்ற குறிலோடும் நெடிலோடும் சேர்ந்து நிரையசையாக வரும். ஆனால் ஒற்றுக்கள் அளபெழுந்தவிடத்துத் தனி ஒரு நேரசையாக அலகிடப் பெறும்.

தனிக்குறில் ஒரு நேரசையென்று அசை இலக்கணத் தில் கூறப்பெற்றாலும் குறிலானது விட்டிசைத்து ஒலிக்குங் கால் மட்டுமே நேரசையாக அலகிடப்பெறும். அல்லாத விடத்து அடுத்து நின்ற குறிலோடும் நெடிலோடும் சேர்ந்து நிரையசையாகும். இவ்விட்டிசைகள் மொழி முதல், இடை, கடை என்ற மூன்றிடத்தும் வரும். விட் டிசை; குறிப்பு, ஏவல், தற்சுட்டு, வினா, சுட்டு என்ற ஐந்தின் கண்ணும் வரப்பெறும்.

உயிரளபெடைகளில் அளபெடைக்காகப் போடப்படும் குற்றெழுத்து ஒரு நேரசையாகவும், நெட்டெழுத்து ஒரு நேரசையாகவும் கணக்கிடப்படும். மூன்று மாத்திரை யினும் மிக வரினும் கூட நேர் நேராகவே கொள்ளப்படும். குற்றெழுத்தினோடு சேர்ந்த நெட்டெழுத்து அளபெழுந்தால் அவ்விரண்டனையும் கூட்டி நிரையசையாகவும், அளபிற்குக்

குறியாக இடப்பட்ட குற்றெழுத்து நேரசையாகவும் கொள்ளப்பெறும். அளபெடைக் குறியாகிய குற்றெழுத்து பின்னின்ற குறிலோடும் நெடிலோடும் கூடி நிரையசை யாகாது.

தேமா, புளிமா என்ற நேரீற்றியற்சீர் இரண்டும் கலிப் பாவினுள் வாரா. கூவிளங்கனி, கருவிளங்கனி என்னும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் இரண்டும் கலிப்பாவி னுள்ளும் ஆசிரியத்தினுள்ளும் வாரா. வஞ்சி உரிச்சீர் நான்கும், வெண்பாவினுள் வாரா. இவை அல்லாத சீர் கள் எல்லாப் பாவினுள்ளும் எல்லாப் பாவினத்துள்ளும் வரப்பெறும்.

வெண்பா, இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண் டளையும் தவிர வேறு தளைகளை ஏலாது. எல்லாத் தளை களும் மற்றைய எல்லாப் பாக்களிலும் பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறும்.

இயற்சீர் வெண்டளையான் வந்த வெண்பாவடியும் வஞ்சியடியும் ஆசிரியப் பாவினுள் வந்து மயங்கப்பெறும். வெண்சீர் விரவிய இயற்றளை வெள்ளடியும் கலியடியும் ஆசிரியப் பாவினுள் அருகி வரப்பெறும்.

வஞ்சிப்பாவினுள் ஆசிரிய அடி பயின்று வரும். கலி யடியும் வெள்ளடியும் அருகி வரப்பெறும்.

கலிப்பாவினுள் வெண்பா அடியும் ஆசிரிய அடியும் வந்து மயங்கப் பெறும்.

ஒருசார் கலிப்பாவினுள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடி அருகி வரப்பெறும். ஒருசார் ஆசிரியர், முரண் தொடையினைக் கடைமுரண், கடையிணை முரண், பின் முரண், கடைக் கூழை முரண், இடைப்புணர் முரண் என வரவேண்டும் என்பர். அடிதோறும் இறுதிச் சீர்க்கண் மாறுபடத் தொடுக்கப்படுவது கடை முரண் ஆகும். கடை இருசீர்க்கண் மாறுபடத் தொடுக்கப்படுவது கடை இணை

முரண் ஆகும். இரண்டாம் சீர்க்கண்ணும் நான்காம் சீர்க்கண்ணும் மாறுபடத் தொடுக்கப்படுவது பின்முரணு கும். முதற் சீர்க்கணின்றி மற்றைய மூன்று சீர்க்கண்ணும் மாறுபடத் தொடுக்கப்படுவது கடைக்கூழை முரண் ஆகும். நடு இருசீர்க்கண்ணும் மாறுபடத் தொடுக்கப்பெறுவது இடைப்புணர் முரண் ஆகும். இனி, கடை, கடையிணை, பின், கடைக்கூழை, இடைப்புணர் என்பவற்றை மோனை, இயைபு, எதுகை, அளபெடை என்னும் நான்கு தொடைகளுக்கும் பொருத்திப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

வருக்க எழுத்தும் (க, கா, கி, கீ, கு, கூ போன்று உயிர் ஏறிய மெய் வருக்கம்) நெடில் எழுத்தும், இன எழுத்தும் (வல்லினம், மெல்லினம், இடையினம்) முதல் எழுத்தாகவும் இரண்டாம் எழுத்தாகவும் ஒன்றி வருமாயின் அவை வருக்க மோனை, நெடின்மோனை, இனமோனை எனவும், வருக்க எதுகை, நெடில் எதுகை, இன எதுகை எனவும் பெயரிட்டு வழங்கப் பெறும்.

எதுகையினை, இரண்டாம் எழுத்து மட்டுமின்றி அச்சீர் முழுதும் வரும் பிற எழுத்துக்களும் ஒன்றி வருமானுல் தலையாகுஎதுகை எனவும், இரண்டாம் எழுத்துமட்டும் ஒன்றி வருமானுல் இடையாகு எதுகை எனவும், பிறவற்றைக் கடையாகு எதுகை எனவும் கூறுவர். அதுபோலவே சீர் முழுதும் ஒன்றும் மோனையினைத் தலையாகு மோனை எனவும், முதலெழுத்து மட்டும் ஒன்றி வருவதை இடையாகு மோனை எனவும் மற்றையவற்றைக் கடையாகு மோனை எனவும் கூறுவதுண்டு.

உயிரெதுகை, ஆசெதுகை, இடையிட்டெதுகை, மூன்றுமெழுத்து ஒன்றெதுகை என எதுகைகள் உளவாயினும் பெரியதொரு சிறப்பில்லை என்று கொள்ளுதல் வேண்டும். இரண்டாம் எழுத்தின் மேல் ஏறிவரும் உயிர் ஒன்றி வருமானுல், இரண்டாம் எழுத்து ஒன்றுதபோது கூட அஃது உயிரெதுகை எனப்படும்.

ய், ர், ல், ழ், என்னும் நான்கு ஒற்றுக்களும் எதுகை யின் இடைவந்து ஏதேனும் ஓரடியில் நிற்பினும் கூட அது எதுகையாகவே கொள்ளப்படும். அவ்வாறு வருதற்கு ஆசெதுகை என்று பெயர்.

ஒன்றுவிட்டு ஒரு அடி எதுகை அமைந்து வருமானல் அது இடையிட்டெதுகை எனக்கொள்ளப்படும். ஒரு பாடலின் முன்னிரண்டடிகள் ஓரெதுகையாகவும் பின்னி ரண்டடிகள் மற்றோர் எதுகையாகவும் வருமாறுல் அவை இரண்டடி எதுகை எனப்படும். மோனையும் இவ்வாறே இரண்டடி மோனையாக வரப்பெறும்.

பவழமும், திகழரும்; பொய்ம்மை, நன்மை என்பன போல மூன்ருமெழுத்துக்கள், ஒன்றிவரத் தொடுக்கப் பெறு வது மூன்ருமெழுத்து ஒன்றெதுகையாகும்.

விட்டிசை வல்லொற்றெதுகை என்று வேண்டு வாரும் உளர். இவற்றின் விளக்கமெல்லாம் நூலினுட் காண்க.

பாவினங்கள் எல்லாத் தொடையானும் வரப்பெறும் என்ருலும் பெரும்பான்மையும் தலையாகு மோனையும், தலையாகு எதுகையும் வரப்பெறும். செந்தொடை ஒழித்து எல்லாத் தொடைக்கும் இன எழுத்து வரத்தொடுப்பதும், வழியெதுகை வரத்தொடுப்பதும், வழிமுரண் வரத்தொடுப் பதும் சிறப்புடைத்தாகும்.

இன வெழுத்துப் பெற்று மோனை முதலாகிய தொடை யும் தொடைவிகற்பமும் போலாது [வேறுபடத் தொடுக்கப் படுவது மருட்செந்தொடை ஆகும். இன எழுத்துக்களா வன தானம் ஒத்த குறிலும் நெடிலும் தம்முள் இனமாம்.

அ, ஆ, ஐ, ஔ, — தம்முள் இனமாம்.
இ, ஈ, எ, ஏ — தம்முள் இனமாம்.
உ, ஊ, ஒ, ஓ, — தம்முள் இனமாம்.

இவை ஏறிய உயிர்மெய்க்கும் இவ்வாறே கொள்க.

ச், த் — தம்முள் இனமாம்.
ஞ், ந் — தம்முள் இனமாம்.
ம், வ் — தம்முள் இனமாம்.

இவற்றை அனு என்றும் கூறுவர்.

அனுப்பிராசம் என்னும் வடமொழியை வழியெதுகை என்பர் தமிழ்நூலார்.

கலிப்பாக்களில் வரும் தரவு என்னும் உறுப்பு, அம்போதரங்க ஒத்தாழிசை, வண்ணக ஒத்தாழிசை என்ற இரண்டிலும் அல்லாத பிற கலிப்பாக்களில் மூன்றடிச் சிறுமையாகவும், பெருமை பாடுவோனது பொருண்முடிவுக் குறிப்பாகவும் வரப்பெறும். அம்போதரங்கம், வண்ணகம். என்ற இரு பாக்களிலும் வரும் தரவு ஆறடியால் வரப் பெறும். பெருமை சிறுமை இல்லை. தாழிசை என்னும் உறுப்பு, தரவைக்காட்டிலும் சுருங்கியும், இரண்டடிச் சிறுமையாகவும் நான்கடிப் பெருமையாகவும் வரப்பெறும்.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா ஆகியவற்றில் முதலில் பாவினது பொருளைத் தழுவித் தனியே நிற்கும் சொல் கூன் எனப்படும். வஞ்சிப்பாவினுள் முதலிலும் ஈற்றிலும் கூன் வருவதுண்டு. வஞ்சியடியின் நடுவும் இறுதியும் அசை கூனுய் வருவது சிறப்புடையது. சீர் கூனுய் வரினும் அவ்விடங்களில் உகர இறுதியாகிய நேரீற்றியற்சீ ரல்லது வாரா எனக் கொள்க.

விகாரம் : அறுவகைப்படும். வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் என்பன.

வகையுளி : முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழியறிந்து குற்றப்படாமல் வண்ணம் அறுத்தலாம். 'நீடுவாழ் வார்' இவற்றில் வந்துள்ள இரண்டு சொற்களையும் நீடு எனவும் வாழ்வார் எனவும் அலகிட்டால் குற்றப்படும். ஆகவே 'நீடுவாழ்' எனக் கூவிளம் ஆகவும் 'வார்' என நாள் ஆகவும் அலகிடப் பட்டன.

வாழ்த்து : மெய்வாழ்த்தும், இருபுறவாழ்த்தும் என இரு பொருளன.

அசை : மெய்வசையும், இருபுறவசையும் என இரு வகையாகும்.

வனப்பு : எட்டு வகைப்படும். அவை; அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன.

அம்மை : சிலவாய் மெல்லியவாய சொற்களால் ஒள்ளியவாய பொருள் மேல் சிலவடியால் புனையப்படுவது.

அழகு : செய்யுட் சொல்லாகிய திரிசொற்களான் ஓசை இனிதாகப் புணர்க்கப்படுவது.

தொன்மை : பழையதாக நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை உரைப்பது.

தோல் : இழும் என்னும் ஓசையுடைய மெல்லிய சொற்களாய் விழுமியவாய்க் கிடப்பனவும், எல்லாச் சொற்களானும் பலவடிவாய்க் கிடப்பனவும் என இருவகையாக வரும்.

விருந்து : புதியவற்றின் மேலதாய் வரும். அஃது இப்போதுள்ளாரைப் பாடுவது.

இயைபு : ஞ, ண, ந, ன, ம, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக அமையப்பாடுவது.

புலன் : இயற்சொல்லான் பொருள் தோன்றுமாறு பாடுவது.

இழைபு : வல்லொற்று யாதும் வாராது தொல்காப்பியனாரால் எழுத்தெண்ணி அடி வகுக்கப்பட்ட குறளடி முதலாகப் பதினேழ் நிலத்து [பதினேழு நிலமாவன : 4, 5, 6, எழுத்துக்களால் ஆகும் குறளடியும், 7, 8, 9, எழுத்துக்களால் ஆகும் சிந்தடியும், 10, 11, 12, 13, 14,

எழுத்துக்களால் ஆகும் அளவடியும் 15, 16, 17, எழுத்துக்களால் ஆகும் நெடிலடியும் 18, 19, 20 எழுத்துக்களால் ஆகும் கழிநெடிலடியும், நான்கு எழுத்து முதலாக இருபது எழுத்து முடியப் பதினேழு நிலம் பெற்றன.] ஐந்தடியும் முறையாலே உடையதாய் ஓங்கிய சொற்களால் வருவதாகும்.

பொருள் : குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் அகமும்; கைக்கிளை, பெருந்திணை என்ற அகப்புறமும்; வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை என்னும் புறமும்; வாகை, பாடாண், பொதுவியல் என்னும் புறப்புறமும் பொருள் எனப்படும். இவற்றின் விரிவெல்லாம் அவ்வந் நூல்களிற் காண்க.

பொருள் கோள் : ஒன்பது வகைப்படும். அவை : நிரனிறை மொழிமாற்றும், சுண்ணமொழி மாற்றும், அடிமறி மொழிமாற்றும், அடிமொழி மாற்றும், பூட்டுவிற் பொருள் கோளும், புனல்யாற்றுப் பொருள் கோளும், அளைமறிபாப்புப் பொருள் கோளும், தாப்பிசைப் பொருள் கோளும், கொண்டு கூட்டுப் பொருள் கோளும் என ஒன்பது வகையாயிற்று.

நிரனிறை : சொல்லையும் பொருளையும் வரிசைபட அமைத்து முறையே என்பது போல நிரலே பொருள் கொள்ளப் படுவதாகும். இஃது பெயர் நிரனிறையும், வினை நிரனிறையும் என இருவகையாக வரும்.

சுண்ணமொழிமாற்று : பொருந்தாத பொருளாகப் பொருந்திக் கிடக்கின்ற சொற்களை பொருந்துகின்றவற்றோடு இயைத்துப் பொருள் கொள்வதாகும்.

அடிமறி மொழிமாற்று : அடிமறி மண்டிலத்திற்கும் இதற்கும் வேறுபாடு இல்லை. அஃதாவது, மனத்துப்படும் அடிகளை முதல் நடு இறுதியாக உச்சரிப்பினும் ஓசையும் பொருளும் பிழையாது வருவது.

அடிமொழிமாற்று : இரண்டடிக் கண்ணே மாறுபட்டுக் கிடக்கின்ற சொற்களை இயைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைப்பது. இதனை இரண்டடி மொழிமாற்று எனவும் கூறுவர்.

பூட்டுவிற் பொருள்கோள் : ஒரு பாடலின் முதற் சீரும், இறுதிச் சீரும் இயைந்து பொருள் கொள்ளக் கிடப்பது. முதற் சீரினின்றும், இறுதிச் சீருக்குப் பாட்டைச் சுற்றி ஒரு வளைந்த கோடு இழுத்தால் ஓர் அரை வட்டம் புலப்படும். அதனை வில் பூட்டியது போலக் கொண்டு 'விற்பூட்டு' என்றும், 'பூட்டு வில்' என்றும் பெயர் கொடுப்பாராயினர்.

புனல் யாற்றுப் பொருள் கோள் : அடிதோறும் பொருள் அற்று அற்று முடியப் பெறுவது. அஃதாவது அவ்வவ் வடியிலேயே பொருள் முடிந்து, பிற அடிகளை எதிர்நோக்காதவாறு அமைக்கப்பெறுவது.

அளைமறி பாப்புப் பொருள் கோள் : 'பாப்பு' என்பது பாம்பு என்பதன் வலித்தல் விகாரம். வளையினூடு செல்கின்ற பாம்பு தலையினை நுழைத்தவுடன் வெளிப்பக்கத்தை நோக்கித் தலையைத் திருப்பிக்கொள்ளும். அதன் பின் உடல், வால் முதலியவற்றை மெல்ல உள்ளே இழுக்கும். அது பொழுது அதன் ஒவ்வொரு பகுதியும் தலையைச் சந்தித்த பின்னரே உள்ளே செல்லும். அதுபோல, ஒரு பாடலில் வந்துள்ள இறுதித் தொடர் இடையும் முதலும் சென்று சென்று இயைந்து பொருள் கொள்ளுமாறு அமைக்கப் பெறுவது.

தாப்பிசைப் பொருள் கோள் : 'தாம்பு' எனும் சொல் 'தாப்பு' என வலித்து நின்றது. ஓர் ஊஞ்சலில் கட்டப் பெற்ற தாம்புக்கயிறு அவ்வூஞ்சலை முன்னும் பின்னும், தான் நடுநின்று இயக்குமாறு போல நடுவுநின்ற ஒருசொல் முன்னுள்ள தொடர்களோடும் பின்னுள்ள தொடர்களோடும் சென்று பொருள் கொள்ளுமாறு அமைக்கப்பெறுவது.

கொண்டுகூட்டுப் பொருள் கோள் : ஒரு பாடலில் வெவ் வேறு இடங்களில் கிடக்கின்ற சொற்களைப் பொருள் முறைக் கேற்பக்கொண்டு வந்து கூட்டிப் பொருள்கொள்ளுமாறு அமைப்பது.

குறிப்பிசை : எழுத முடியாத ஓசைகளைப் பாடலில் அமைக்க நேர்ந்தால், செய்யுள் நடை அழியாமல் அசை யும், சீரும் அடியும், தொடையும் பிழையாமல் அலகிட்டுக் கொள்ளப்படுவதற்குக் குறிப்பிசை என்று பெயர்.

ஒப்பு : வரையறை கூறப்பெற்ற பாவும், பாவினமும் கூறிய முறைகளில் சிறிது வேறுபட்டு வரினும் ஒருவகை ஒப்புமை நோக்கி அவ்வச் செய்யுட்களின் பாற்படுத்தி அப்பெயர்களாலேயே வழங்கப்பெறும்.

வண்ணம் : நூறு என்பர் காரிகை ஆசிரியர். வண்ணங் கள் இருபது என்பர் தொல்காப்பியர். தூங்கிசைவண்ணம் இருபதும், ஏந்திசைவண்ணம் இருபதும், அடுக்கிசைவண் ணம் இருபதும், பிரிந்திசைவண்ணம் இருபதும், மயங் கிசைவண்ணம் இருபதுமாக, நூறு வண்ணங்களைக் காரிகை யார் கூறுகின்றார்.

3. ஒழிபியல்

எழுத்துக்கள் அலகுபெருதன, பெறுவன

சீருந் தளையுஞ் சிதையிற் சிறிய இஉஅளபோ
டாரு மறிவ ரலகு பெருமையை காரநைவேல்
ஓருங் குறிலிய லொற்றள பாய்விடி னேரலகாம்
வாரும் வடமுந் திகழு முகிழ்முலை வாணுதலே (51)

என்பது காரிகை - இவ்வியல் என்ன பெயர்த்தோ வெனின், உறுப்பியலுள்ளும், செய்யுளியலுள்ளுஞ் சொல்லா தொழிந்தவைகளை உணர்த்தினமையால் ஒழிபியல் என்னும் பெயர்த்து.

இவ்வியலுள் இக்காரிகை என்னுதலிற்றோ வெனின் ஒருசார் எழுத்துகட் கெய்தியதோர் இலக்கணம் உணர்த்து தல் நுதலீற்று.

சீருந் தளையுஞ் சிதையிற் சிறிய இஉ அளபோ, டாரு மறிவ ரலகு பெருமை' என்பது :

'சீருந் தளையுங் கெடவந்த விடத்துக் குற்றியலிகரமும் குற்றியலுகரமும், உயிரளபெடையும் அலகு காரியம் பெறு, என்றவாறு.

'ஒற்றளபாய் விடி னேரலகாம்' என்றுரைத்தமையால் ஈண்டுயிரளபெடையே கொள்ளப்பட்டது.

'ஆருமறிவர்' என்று மிகுத்துச் சொல்லிய வதனுல், குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஒற்றியல்பினவாய் நிற்கும் உயிரளபெடைகள் நெட்டெழுத்தியல்பினவாய் நிற்கும் அலகிடும் இடத்தெனக் கொள்க.

எனவே எதிரது மறுத்தலென்னும் இலக்கணத்தாற் சீருந் தளையுந் திருந்த நிற்புழிச் 'சிறிய இஉ அளபோடாரு மறிவ ரலகுபெறுதல்' என்பதாயிற்று.

இன்னும் 'ஆருமறிவர்' என்று மிகுத்துச் சொல்லிய வதனால், அவை அலகுகாரியம் பெறும்போது குற்றியலிகரமும், குற்றியலுகரமும் குற்றெழுத்தின் பயத்தவாம். உயிரளபெடை அலகுகாரியம் பெறுமாறு தத்தங் காரிகையுட் போக்கிச் சொல்லுதும்.

வருமாறு :—

நேரிசை வெண்பா

சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கால் நாளைப்
பெறுநன்றி பின்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதுந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர்

இதனுள், 'இனறிவர்க்கியாம்' என்புழி, குற்றியலிகரம் வந்து வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீராயிற்று: வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் விரவுமென்னும் ஓத்திலாமையால் வெண்பா வழிய நிற்குமாதலால், ஈண்டுக் குற்றியலிரகத்தை இவ்விலக்கணத்தால் அலகுபெருதென்று களையச் சீர் சிதையாதாம்.

குறள் வெண்பா

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர் (குறள் : 66)

குறள் வெண்பா

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல் (குறள் : 254)

இவற்றுள், 'குழலினி தியாழினிது' என்புழி ஆசிரியத் தளையும், 'அருளல்லதியாதெனில்,' என்புழிக் கலித்தளையுந் தட்டு, 'வெள்ளைத்தன்மை குன்றிப்போஞ் சீர்கனி புகிற் புல்லா தயற்றளை' என்னும் இலக்கணத்தோடு, 'வெள்ளையுட் பிறதளை வாரா; அல்லன எல்லாத் தளையும் மயங்கியும் வழங்கும்' என்னும் இலக்கணத்தோடும் மாறுகொள்ளுமாதலால், ஈண்டுக் குற்றியலிகரத்தை இவ்விலக்கணத்

தால் அலகுபெருதென்று களையச் சீருந் தளையுஞ் சிதை யாவாம்.

இனிக் குற்றியலுகரத்திற்குச் சொல்லுமாறு:

வஞ்சிப்பா

கொன்று கோடு நீடு குருதி பாயவும்
சென்று கோடு நீடு செழுமலை பொருவன
வென்று கோடு நீடு விறல்வேழம்
என்று மூடுநீடு பிடியுள போலும்

அதனால்,

இது தனிச்சொல்.

இரண்டிடை யிரவிவண் நசைஇ வரின்
வண்டுண் கோதை உயிர்வா மூலவே

இவ்விருசீரடி வஞ்சிப்பாவினுட் குற்றுகரம் பல வந்து ஆறசைச்சீராயின. இவ்வாறு வருகவென்னும் ஒத்தில்லா மையிற் குற்றுகரத்தை இவ்விலக்கணத்தால் அலகு பெரு தென்று களையச் சீருந் தளையுஞ் சிதையாவாம்.

இனி உயிரளபெடைக்குச் சொல்லுமாறு:

நேரிசை வெண்பா

பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றிலவால்—நெல்லுக்கு
நூறேஒநூ றென்பாள் நுடங்கிடைக்கும் மென்முலைக்கும்
மாறேமா லன்றளந்த மண்.

இதனுள் 'நூறேஒநூ' றென்புழிப் பண்டமாற்றின்கண் அளபெடை அநுகரணம் வந்து வெண்பாவினுள் நாலசைச் சீராயிற்று. அவ்வாறு வருகவென்னும் ஒத்தில்லாமையால் இவ்வா றலகிட்டு உதாரண வாய்பாட்டால் ஓசையூட்டும் பொழுது ஓசையுண்ணுது செப்பலோசை பிழைத்து நிற்குமா தலால், ஈண்டு உயிரளபெடையை இவ்விலக்கணத்தால் அலகுபெருதென்று நெட்டெழுத்தே போலக் கொண்டு அலகிடச் சீருந் தளையுஞ் சிதையாவாம்.

நேரிசை வெண்பா

இடைநுடங்க ஈர்ங்கோதை பின்தாழ வாட்கண்
புடை பெயரப் போழ்வாய் திறந்து—கடைகடையில்
உப்போஒ வெனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு

இதனுள், 'உப்போஒ' என்புழிப் பண்டமாற்றின்கண் அளபெடை யநுகரணம் வந்து கலித்தளை தட்டு வெண்பா அழியநிற்குமாதலின், ஈண்டுஉயிரளபெடையை இவ்விலக்கணத்தால் அலகு பெறுதென்று நெட்டெழுத்தே போலக் கொண்டு அலகிடத் தளை சிதையாதாம்.

இனிக்குற்றியலிகரக் குற்றியலுகரங்கள் குற்றெழுத்தே போல நின்று அலகுபெறுமாறு :

நேரிசை வெண்பா

வந்துநீ சேரின் உயிர்வாழும் வாராக்கால்
முந்தியாய் பெய்த வளைகழலும்—முந்தியாங்
கோளானே கண்டனங் கோல்குறியாய் இன்னுமோர்
நாளானே நாம்புணரு மாறு

இதனுள், 'வந்துநீ' என்புழிக்குற்றிலுகரமும் 'முந்தியாய்' என்புழிக் குற்றியலிகரமும் வந்து சீருந் தளையுந் திருந்தி நிற்புழிக் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகு பெற்றவாறு கண்டுகொள்க. என்னை,

தளைசீர் வண்ணந் தாங்கெட வரினே
குறுகிய இகரமுங் குற்றிய லுகரமும்
அளபெடை ஆவியும் அலகியல் பிலவே

என்பது யாப்பருங்கலம். (4)

'ஐகார நைவே லோருங்குறிலியல்' என்பது ஒன்றரை மாத்திரை என்றோதப்பட்ட ஐகாரக்குறுக்கம் குற்றெழுத்தே போலக் கொண்டு அலகிடப்பெறும்; எ - று.

'ஒரும்' என்பது : இடைச்சொல். என்னை,

குறுமை யெழுத்தின் இயல்பே ஐகார
நெடுமையின் நீங்கி யக்கால்

என்ருராகலின்.

இஉ - இரண்டன் குறுக்கந் தனைதப
நிற்புழி யொற்று நிலையின வாகும்

உயிரள பேழும் உரைத்த முறையான்
வருமெனின் அவ்வியல் வைக்கப் படுமே

என்ருர் காக்கைபாடினியார்.

ஈறும் இடையும் இணைந்தும் இணையிசை
யாகு மென்ப அறிந்திசி ேனுரே

குறள் வெண்பா

அன்னையையான் நோவ தவமா லணியிழாய்
புன்னையையான் நோவன் புலந்து

நேரிசை வெண்பா

நடைக்குதிரை யேறி நறுந்தார் வழுதி
அடைப்பையாய் கோல்தா வெனலும்—அடைப்பையான்
கள்ளற் சிறுகோல் கொடுத்தான் தலைப்பெறினும்
கொள்ளாதி யாங்கண் டிலம்

குறள் வெண்பா

கெண்டையை வென்ற கிளரொளி உண்கணுள்
பண்டைய ளல்லள் படி

என்னுமிவற்றுள், ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்தே போலக் குறிலோடும், நெடிலோடுங் கூடிநின்று நிரையசையாயின வாறும், தனியே நின்று நேரசையாயினவாறும் கண்டு கொள்க.

'ஒற்றளபாய்விடி னேரலகாம்' என்பது; ஒற்றுக்கள் அளபெழுந்தவிடத்து நேரசையாம்; எ-று. என்னை,

ஆய்தமும் ஒற்றும் அளபெழ நிற்புழி
வேறல கெய்தும் விதியின வாகும்

என்ருர் காக்கைபாடினியார்.

அளபெழாதவிடத்து ஒற்றுக்கள் அலகுபெரு வென்ப தாம், என்னை,

தனிநிலை ஒற்றிவை தாமல கியலா
அளபெடை யல்லாக் காலை யான

என்றாராகலின்.

ஈரொற் றுயினு மூவொற் றுயினும்
ஓரொற் றியல என்மனார் புலவர்

என்றாராகலின்.

கார்க்கடல், கார்ச்சேதம், கதிர்ச்செந்நெல், கடாய்க் கன்றுஎன, ஈரொற்றுடனிலையாய் நிற்பினுங் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகுபெரு என்பதூஉம், ஒற்றளபெழினும் மற்றோரெழுத்தினெடுங்கூடி நிரைசயை ஆகாதென்பதூஉம் பெறப்பட்டன.

வருமாறு :—

கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்

இன்னிசை வெண்பா

கண்ண்கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வாய் இலவம்பூ
மின்ன் னுழைமருங்கின் மேதகு சாயலாள்
என்ன் பிறமகளா மாறு

குறள் வெண்பா

எஃஃஃ கிலங்கிய கையராய் இன்னுயிர்
வெஃஃஃ குவார்க்கில்லை வீடு

இவற்றுள், ஒற்றும், ஆய்தமும் அளபெழுந்து ஓரலகு பெற்றவாறு கண்டுகொள்க.

'வாரும் வடமும் திகழு முகிழ்முலை வாணுதலே' என்பது மகடூஉ முன்னிலை.

விட்டிசைத் தல்லான் முதற்கட் டனிக்குறி னேரசையென்
றெட்டப் படாதுதற் குண்ணு னுதாரண மோசைகுன்று
நெட்டள பாய்விடின் நேர்நேர் நிரையொடு நேரசையாம்
இட்டத்தி னுற்குறில் சேரி னிலக்கிய மேர்சிதைவே (52)

இ-கை. ஒருசார் அசைகட் கெய்தியதோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று

'விட்டிசைத் தல்லால் முதற்கண் தனிக்குறில் நேரசை யென் றெட்டப்படாது' என்பது.

மேற் பொதுவகையால் தனிக்குறில் நேரசை என்று ராயினும், விட்டிசைத்து நின்றவழியல்லது மொழிமுதற் கணின்ற தனிக்குற்றெழுத்து நேரசையாமென் றுடம்படப் பெருது; எ-று.

எனவே விட்டிசையாதவழி மொழிமுதற்கண் தனிக் குறிலொடும், நெடிலொடுங் கூடி நிரையசையாம் என்ப தாயிற்று.

'அதற் குண்ணுன் உதாரணம்' என்பது:

நேரிசை வெண்பா

உண்ணுன் ஒளிநிருன் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும் (நாலடியார்: 9)

இதனுள் அ ஆ என்புழி அருளின்கட் குறிப்பாய் மொழி முதற்கணின்ற குற்றெழுத்து விட்டிசைத்து நேரசையா யினவாறும், அல்லாதவழி குறிலோடும், நெடிலோடுங்கூடி நிரையசையாயினவாறுங் கண்டுகொள்க.

நேரிசை வெண்பா

வெறிகமழ் தண்புறவின் வீங்கி யுகளும்
மறிமுலை யுண்ணுமை வேண்டிப்—பறி முன்கை
அ உ அறியா வறிவில் இடைமகனே
நொ அலையல் நின்னுட்டை நீ

குறள் வெண்பா

அ அவனும் இ இவனும் உ உவனுங் கூடியக்கால்
எ எவனை வெல்லா ரிகல்

இவற்றின்கண் தனிக்குறில் முதற்கண் விட்டிசைத்து நேரசையாயினவாறு கண்டுகொள்க.

இவற்றுள் 'அ உ அறியா' என்பது: தற்சுட்டுக் குறிப்புச் சொல். 'நொ' என்பது: செயவென் எச்சத்திறுதி தொக்கு முதனிலை குறுகிய குறிப்புச்சொல். 'அ இ உ எ' என்பன சுட்டும் வினுவுமாகிய குறிப்புச்சொல்.

'ஒட்டப்படாது' என்று மிகுத்துச் சொல்லியவதனுன் மொழிக்கு மூன்றிடத்தும் விட்டிசைத்து வந்த குற்றெழுத்து நேரசையாம் என்பதூஉம், விட்டிசைப்பதுதான் குறிப்பு, ஏவல், தற்சுட்டு, வினு, சுட்டு என்னும் ஐந்தன் கண்ணும் என்பதூஉம், குற்றெழுத்து விட்டிசைத்து நின்ற விடத்து மற்றோரெழுத்திைேடுங் கூடி நிரையசை யாகா தென்பதூஉம் பெறப்பட்டன. என்னை,

அ இ உ எ குறிய மற்றைய
ஏழுநெட் டெழுத்தா நேரப் படுமே

இதனுண் மொழிக்கு மூன்றிடத்தும், விட்டிசைத்து வந்த குற்றெழுத்து நேரசையாயினவாறு கண்டுகொள்க.

இவை தற்சுட்டு ஏவல் வந்தவழிக் காண்க. என்னை,

ஏவல் குறிப்பே தற்சுட் டல்வழி
யாவையுந் தனிக்குறின் முதலசை யாகா
சுட்டினும் வினுவினும் உயிர்வரு காலை
ஒட்டிய வரூஉம் ஒருசாரு முளவே

என்ருர் மயேச்சுரர்.

'ஓசைகுன்ரு நெட்டளபாய் விடின் நேர்நேர்' என்பது நெட்டெழுத்து அளபெழுந்து வருமெனின், அஃது இரண்டு நேரசையாக வைக்கப்படும்; எ-று.

'ஓசைகுன்று' என்று மிகுத்துச் சொல்லியவதனுன் மூன்று மாத்திரையின் மிக உச்சரிப்பினும், நேர் நேராக வைக்கப்படும் எனக்கொள்க.

நிரையொடு நேரசையாம் இட்டத்திறைற் குறில் சேரின் என்பது: குற்றெழுத்தினேடு புணர்ந்த நெட்டெழுத்து அளபெழுந்தால் அவ் விரண்டையுங் கூட்டி நிரை அசையும், நேர் அசையுமாக வைக்கப்படும்; எ-று.

'இலக்கியம் ஏர்சிதைதவே' என்பது :

குறள் வெண்பா

ஏஎர் சிதைய வழாஅல் எலாஅநின்
சேயரி சிந்தின கண்

இப்பாட்டு நேர்நே ராதற்கும் நிரைநே ராதற்கும் இலக்கியமாம் என்க. 'ஏஎர்' என நேர் நேராயிற்று.

'அழாஅ அல், எலாஅ' என நிரைநே ராயின;

'இட்டத்தினல்' என்று மிகுத்துச் சொல்லியவதனல், பின்னின்ற குறிலொடும், நெடிலொடுங் கூடி அளபெடை நிரை அசையாகாது எனக்கொள்க. என்னை,

தனிநிலை அளபெடை நேர்நே ரியற்றே
இறுதிநிலை யளபெடை நிரைநே ரியற்றே

என்றார் நத்தத்தனர்.

மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவில் விளங்கனிவந்
தாஞ்சி ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்
தாஞ்சீர் மயங்குந் தளையுமஃ தேவெள்ளைத் தன்மைகுன்றிப்
போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கொடியே (53)

இ-கை. சீருந் தளையுஞ் செய்யுளகத்து நிற்பதொரு முறைமை யுணர்த்துதல் நுதலிற்று.

'மாஞ்சீர் கலியுட் புகா' என்பது: தேமா, புளிமா, என்னும் நேரீற் றியற்சீ ரிரண்டும் கலிப்பாவினுட் புகப் பெறு; எ-று.

'கலிப்பாவில் விளங்கனிவந் தாஞ்சீ ரடையா' என்பது: 'கருவிளங்கனி, என்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரிரண்டுங் கலிப்பாவினுட் புகப்பெறு; எ - று.

'அகவலகத்தும்' என்பது: ஆசிரியப்பாவினுள்ளுங் 'கருவிளங்கனி, கூவிளங்கனி' என்னும் இரண்டு சீரும் புகப்பெறு; எ - று.

'அல்லாத வெல்லாந் தாஞ்சீர் மயங்கும்' என்பது: இவையொழிந்த சீர்கள் எல்லாப் பாவினுள்ளும், பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறும்; எ - று.

'தளையுமஃதே' என்பது எல்லாத் தளையும் எல்லாப் பாவினுள்ளும், பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறும்; எ - று.

'வெள்ளைத் தன்மை குன்றிப் போஞ்சீர் கனிபுகின்' என்பது: 'எல்லாச்சீரும் எல்லாப் பாவினுள்ளும், பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறும்' என்றுராயினும், வஞ்சியுரிச்சீர் நான்கும் வெண்பாவிற் புகப்பெறு: புகிற் செப்பலோசை யழிந்து வேறுபட்டு ஓசை யுண்ணுது கெடும்; எ - று.

'புல்லா தயற்றளை' என்பது: 'எல்லாத் தளையும் எல்லாப் பாவினுள்ளும், பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறும்' என்றுராயினும், வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் அல்லது வேற்றுத்தளை விரவாது; எ - று.

'பூங்கொடியே' என்பது: மகடூஉ முன்னிலை.

வருமாறு:—

குடநிலைத் தண்புறவில்—சென்றவாறே (கா: 21 மேற்)

என்னும் தரவு கொச்சகக் கலிப்பாவில் நேரீற்றியற் சீரும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வாராது, நிரையீற்ருசிரிய

உரிச்சீரும், வெண்பா உரிச்சீரும், நேர்நடுவாகிய வஞ்சியுரிச் சீரும் வந்து, வெண்டளையும் ஆசிரியத்தளையும், கலித்தளையும், வஞ்சித்தளையும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

நேரிசை யாசிரியப்பா

நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்குகவுட் கடுவன்
உண்டு சிலம்பேறி யோங்கிய இருங்கழைப்
படிகம் பயிற்று மென்ப
மடியாக் கொலைவில் என்னையர் மலையே.

இவ்வாசிரியத்துள் தன்சீரும், வெண்சீரும், நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து வெண்டளையும், தன்தளையும், கலித்தளையும், வஞ்சித்தளையும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

வஞ்சிப்பா

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் (புறநானூறு 2)

வஞ்சிப்பா

புன்காற் புணர்மருதின்
போதரும்பிய புனல்தாமரை
தேன்தாழ் தீங்கரும்பின்
பூந்தாட் புனற்றாமரை
வார்காற் செங்கழுநீர்

இக்குறளடி வஞ்சிப்பாக்களுள், வெண்சீரும், தன்சீரும், நேரீற் றியற்சீரும் வந்து, வெண்டளையும், தன்றளையும், கலித்தளையும், ஆசிரியத்தளையும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

'முழங்குதிரைக் கொற்கை வேந்தன்' என்னும் வெண்டுறையுள் வஞ்சியுரிச்சீரும், இயற்சீரும், வெண்சீரும்,

வஞ்கித்தளையும், ஆசிரியத்தளையும், வெண்டளையும், கலித்தளையும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

கலி விருத்தம்

வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மௌவல்
நளிர்கொடியன நறுவிறையன நகுமலரன வகுளம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கோங்கம்
ஒளிர்கொடியன உயர்தளிரின டொழுகிணரன வோடை
(சூளாமணி தூது: 4)

இக் கலிவிருத்தத்துள், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும் நேரீற் றியற்சீரும், வஞ்சித்தளையும், இயற்சீர் வெண்டளையும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

நேரீற் றியற்சீர் ஒத்தாழிசைக் கலியுள் வாராதவாறும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கலிப்பாவுள்ளும், ஆசிரியத்துள்ளும் வாராதவாறும், வெண்பாவினுள்ளும் வஞ்சியுரிச்சீர் வாராதவாறும், வேற்றுத்தளை விரவாமையும் மேற்காட்டிய செய்யுளகத்தும், பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க.

நேரீற் றியற்சீர் வெண்கலியுள்ளும், கொச்சகத்துள்ளும் வருதலும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கொச்சகத்துள் அருகிவருதலுஞ் செய்யுளோத்துள்ளே சொல்லப்பட்டன.

நேரிசை வெண்பா

குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு வெண்மணன்மேல் நின்று—புலாலுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர்
உள்ளம்புக் கியாப்ப துரை

இவ் வெண்பாவினுள், வஞ்சியுரிச்சீர் வந்தனவாலோ வெனின், திருவள்ளுவப்பயன், நாலடி நானூறு முதலாகிய கீழ்க்கணக்குள்ளும், முத்தொள்ளாயிர முதலாகிய சான்றோர் செய்யுளுள்ளும் வஞ்சியுரிச்சீர் வந்திலாமையானும், வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் வருகவென்னும் ஓத்தில்லாமையானும், வேற்றுத்தளை வெண்பாவினுள் வந்திலா

மையானும் இத் தொடக்கத்தன குற்றமல்லது குணமாகா என்பது காக்கைபாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிவு. அதுவே இந் நூலுடையார்க்கும் உடன்பாடு. என்னை,

இயற்சீர் நேரீற்றுத் தன்தளை யடைதல்
கலிக்கியல் பிலவே காணும் காலை
வஞ்சி யுள்ளும் வரத்தகா வாயினும்
ஓரோவிடத் தாகு மென்ப

என்றார் பல்காயனார்.

நிரைநடு வியலா வஞ்சி உரிச்சீர்
கலியினோ டகவலிற் கடிவரை யிலவே

என்பது யாப்பருங்கலம் (16)

இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாத மகவலுள்ளான்
மயக்கப் படாவல்ல வஞ்சி மருங்கினெஞ் சாவகவல்
கயற்கணல் லாய்கலிப் பாதமு நண்ணுங் கலியினுள்ளான்
முயக்கப் படுமுதற் காலிரு பாவும் முறைமையினே (54)

இ-கை. அடிமயக்கம் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாதம் அகவலுண் மயக்கப்படா வல்ல' என்பது, இயற்சீர் வெண்டளையான் வந்த வெண்பாவடியும், வஞ்சியடியும், ஆசிரியாப்பாவினுள் வந்து மயங்கப்பெறும்; எ-று. என்னை,

இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே (தொல்: 1319)

என்றார் தொல்காப்பியனார்.

வஞ்சி விரவ லாசிரிய முரித்தே
வெண்பா விரவினுங் கடிவரை யின்றே

என்றார் பல்காயனார்.

வருமாறு :—

நேரிசை யாசிரியப்பா

எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்ப வவர்சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கழறுமிவ் வழுங்க லூரே (குறுந்தொகை: 12)

இதனுள், 'எறும்பி யளையிற் குறும்பல் சுனைய' என்பது: இயற்றளை வெள்ளடி. இதனை,

எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
குறுந்தொடி யாஞ்செல் சுரம்

என உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டு கொள்க.

இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மா நிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே

அதனால்

நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற உயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோன் ஈயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே
(புறநானூறு: 363)

இதனுள் 'உப்பிலாஅ அவிப்புழுக்கல், கைக்கொண்டு பிறக்குநோக்கா' எனவும், 'இழிபிறப்பினோன் ஈயப்பெற்று' எனவும் வஞ்சியடி விரவி வந்தவாறு கண்டுகொள்க.

'மயக்கப்படும்' என்றது 'மயக்கப் படாவல்ல' என்று இருகால் விலக்கிச் சொல்லியவதனால் வெண்சீர் விரவிய இயற்றளை வெள்ளடியும், கலியடியும் ஆசிரியத்துள் அருகி வரப்பெறும் எனக்கொள்க.

வருமாறு :

நேரிசையாசிரியப்பா

அங்கண் மதியம் அரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
ஏதில் மாக்களு நோவர் தோழி
என்று நோவா ரில்லை
தண்கடற் சேர்ப்ப னுண்டவென் நலக்கே

இதனுள், 'அங்கண் மதியம் அரவின்வாய்ப் பட்டென என்பது: வெண்சீர் விரவிய இயற்றளை வெள்ளடி. இதனை,

அங்கண் மதியம் அரவின்வாய்ப் பட்டெனப்
பொங்கிய பூசல் பெரிது

என உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க.

நேரிசையாசிரியப்பா

குருகுவெண் தாளி கோடுபுய்த் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
மருள்பிடி திரிதருஞ் சாரல்
அருளா னுகுதல் ஆயிழை கொடிதே

இதனுள், இரண்டாமடி கலியடி, இதனை,

மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
தீவழங்கு சுழல்விழிக்கட் சீயஞ்சென் றுழலுமே

என உச்சரித்துக் கலியடியாமாறு கண்டுகொள்க.

'வஞ்சி மருங்கினெஞ் சாவகவல், கலிப்பாதமு நண்ணும்' என்பது: வஞ்சிப்பாவினுள் ஆசிரிய அடியும், கலியடியும் விரவி வரப்பெறும்; எ - று.

'எஞ்சா வகவல்' என்று சிறப்பித்தவதனால், வஞ்சியுள் ஆசிரியவடி பயின்றுவரும்; கலியடியும் வெள்ளடியும் அருகியன்றி வாரா எனக்கொள்க.

'கயற்கண் நல்லாய்' என்பது: மகடூஉ முன்னிலை.

'பட்டினப்பாலை' என்னும் வஞ்சிநெடும்பாட்டினுள் ஆசிரியவடி பயின்று வந்தன ; கலியடியும், வெள்ளடியும் அருகின எனக்கொள்க.

'நேரிழை மகளி ருணங்குணாக் கவரும்' (பட்டி) என்றித் தொடக்கத்தன ஆசிரியவடி.

'வயலாமைப் புழுக்குண்டு வறளடம்பின் மலர்மிலைந்து' (பட்டி) என்பது: கலியடி. இதனை,

வயலாமைப் புழுக்குண்டு வறளடம்பின் மலர்மிலைந்து
கயனுட்டக் கடைசியர்தங் காதலர்தோள் மணந்தனரே

என உச்சரித்துக் கலியடியாமாறு கண்டுகொள்க.

'கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை' (பட்டி) என்பது: வெள்ளடி; இதனை,

கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
ஆழிசூழ் வையக் கணி

என உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க.

'கலியினுள் முயக்கப் படுமுதற் காலிரு பாவும்' என்பது: கலிப்பாவினுள் வெண்பா வடியும், ஆசிரிய வடியும் புக்கு மயங்கப்பெறும்; எ - று.

'முறைமையினே' என்பது: முறைமையோடுங் கூட்டி வழங்கப்படும்; எ - று. என்னை,

நேரிசை வெண்பா

ஆசிரியப் பாவி னயற்பா வடிமயங்கும்
ஆசிரியம் வெண்பா கலிக்கண்ணும்—ஆசிரியம்
வெண்பாக் கலிவிரவும் வஞ்சிக்கண் வெண்பாவின்
ஒண்பா வடிவிரவா வுற்று

இதனை விரித்துரைத்துக் கொள்க.

'காமர் கடும்புனல்' (கலித்) என்னும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவினுள் வெண்பாவும்; ஆசிரியப்பாவும் மயங்கினவாறு கண்டுகொள்க. ஆல் இரண்டும் அசை.

அருகிக் கலியோ டகவன் மருங்கினஞ் சீரடியும்
வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர் மற்றொருசார்
கருதிற் கடையே கடையிணை பின்கடைக் கூழையுமென்
றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புணர் வென்பதுமே (55)

இ-கை. ஒருசார் அடிக்கும் தொடைக்கும் எய்திய தோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

'அருகிக் கலியோ டகவல் மருங்கினஞ் சீரடியும், வருதற் குரித்தென்பர் வான்தமிழ் நாவலர்' என்பது ஒருசார் கலிப் பாவினுள்ளும், ஆசிரியப் பாவினுள்ளும் ஐஞ்சீர் அடியும் அருகி வரப்பெறும் என்று சொல்லுவர் புலவர்; எ-று.

வருமாறு :

அணிகிளர் சிறுபொறி அவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர் தொட்டுழந்து மலைந்தனையே

இக்கலிப்பாவின் முதலடி ஐஞ்சீரடி வந்தவாறு கண்டு கொள்க.

நேரிசையாசிரியப்பா

உமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்காட்
டின்னா வென்றிர் ஆயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே
(குறுந்தொகை: 124)

இவ்வாசிரியத்துண் முதலடி ஐஞ்சீர் வந்தவாறு கண்டு கொள்க. 'சிறியகட் பெறினே' என்னும் இணைக்குறளா சிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடி வந்ததெனக் கொள்க. இவ்வாறே,

வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியு முளவென மொழிப (தொல்: 1320)

என்றார் தொல்காப்பியனார்.

வெண்பாவினுள் ஐஞ்சீரடி வரப்பெறாதெனக் கொள்க.

ஐஞ்சீ ரடுக்கலு மண்டில மாகலும்
வெண்பா யாப்பிற் குரிய வல்ல

என்று நத்தத்தனர் அடிநூலில் எடுத்தோதினராகலின்.

'மற்றொருசார், கருதிற் கடையே கடையிணை பின் கடைக் கூழையுமென், றிரணத் தொடைக்கு மொழிவர் இடைப்புணர் வென்பதுவே' என்பது: ஒருசார் ஆசிரியர் முரண்தொடையைக் கடைமுரணும், கடையிணை முரணும், பின்முரணும், கடைக்கூழை முரணும், இடைப்புணர் முரணும் என்று வேண்டுவர்; எ - று.

இரணத்தொடை எனினும், பகைத்தொடை எனினும், முரண்தொடை எனினும் ஒக்கும். என்னை,

மொழியினும் பொருளினும் முரணத் தொடுப்பின்
இரணத் தொடையென் றெய்தும் பெயரே

என்றார் காக்கைப்பாடினியர்.

மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே (தொல். 1352)

என்றார் தொல்காப்பியனார்.

மறுதலை யுரைப்பினும் பகைத்தொடை யாகும்

என்றார் அவிநயனார்.

அவற்றுள், கடைமுரணாவது:— அடிதோறும் இறுதிச் சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது.

கடையிணை முரணாவது:— கடை இருசீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது.

பின்முரணாவது:— இரண்டாஞ் சீர்க்கண்ணும், நான்காஞ் சீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது.

கடைக்கூழை முரணாவது:— முதற்சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது.

இடைப்புணர் முரணாவது:— நடு இருசீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது.

வருமாறு :

நேரிசையாசிரியப்பா

கயன்மலைப் பன்ன கண்ணிணை கரிதே
தடமுலை திவளுந் தனிவடம் வெளிதே
நூலி னுண்ணிடை சிறிதே
ஆடமைத் தோளிக் கல்குலோ பெரிதே

இஃது அடிதோறும் இறுதிச்சீர்க்கண் மறுதலைப்படத் தொடுத்தமையால், கடைமுரண்.

நேரிசையாசிரியப்பா

மீன்தேர்ந்து வருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினைக் குழூஉம்
தண்ணந் துறைவன் தவிர்ப்பவுந் தவிரான்
தேரோ காணலங் காண்டும்
பிரேர் வண்ணமுஞ் சிறுநுதழ் பெரிதே

இஃது அடிதோறும் கடை இருசீர்க்கண்ணும் மறுதலைப் படத் தொடுத்தமையால், கடையிணை முரண்.

நேரிசையாசிரியப்பா

சார லோங்கிய தடந்தாள் தாழை
கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமியம் இருந்தன மாக நின்றுதன்
நயனுடைப் பணிமொழி நன்குபல பயிற்றி
வீங்குதொடிப் பணைத்தோள் நெகிழத்
துறந்தோன் அல்லனெம் மேனியோ தீதே

இஃது அடிதோறுங் கடைச்சீரும், இரண்டாஞ்சீரும் மறுதலைப்படத் தொடுத்தமையால் பின்முரண்.

நேரிசையாசிரியப்பா

காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளும் அணங்குமால் எமக்கே

இது முதற்சீரொழிந்த மூன்றுசீரும் மறுதலைப்படத் தொடுத்தமையால், கடைக்கூழை முரண்.

நிலைமண்டில வாசிரியப்பா

போதவிழ் குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையில் தாழ்ந்த வோங்குவெள் ளருவி
காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறூ ரிழிதரு நலங்கவர்ந்
தின்னு வாயின இனியோர் மாட்டே

இஃது இடை இருசீரும் மறுதலைப்படத் தொடுத்தமையால், இடைப்புணர் முரண்.

இவ்வாறு சொன்னார் கையனார் முதலாகிய ஆசிரியர் எனக்கொள்க.

இனி, 'இரண்த் தொடைக்கும்' என்ற உம்மையால் ஒழிந்த மோனை, இயைபு, எதுகை, அளபெடை என்னுந் தொடை நான்கிற்கும் இவ்வாறே ஒட்டிக்கொள்க. அவை கூடி வழங்குமாறு :—

கடைமோனை	கடையெதுகை
கடையிணைமோனை	கடையிணையெதுகை
பின்மோனை	பின்னெதுகை
கடைக்கூழைமோனை	கடைக்கூழையெதுகை
இடைப்புணர்மோனை | எனவும்	இடைப்புணரெதுகை-எனவும்
கடையியைபு	கடையளபெடை
கடையிணை இயைபு	கடையிணையளபெடை
பின்னியைபு	பின்னளபெடை
கடைக்கூழையியைபு	கடைக்கூழையளபெடை
இடைப்புணரியைபு—எனவும்,	இடைப்புணரளபெடை

எனவுங் கண்டுகொள்க. இவற்றிற் கிலக்கியம் யாப்பருங் கல விருத்தியுட் கண்டுகொள்க.

வருக்க நெடிலினம் வந்தா லெதுகையு மோனையுமென்
றுருக்கப் பெயரா னுரைக்கப் படுமுயி ராசிடையிட்
டிருக்கு மொருசா ரிரண்டடி மூன்று மெழுத்துமொன்றி
நிரக்கு மெதுகையென் றுலுஞ் சிறப்பில நேரிழையே (56)

இ-கை. ஒருசார் எதுகைக்கும், மோனைக்கும் எய்திய தோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

'வருக்க நெடிலின் வந்தா லெதுகையு மோனையுமென், ௨
ருருக்கப் பெயரா னுரைக்கப்படும்' என்பது:

'வருக்கவெழுத்தும், நெடிலெழுத்தும், இனவெழுத்தும் எதுகையும், மோனையுமாய் வந்தால் அவை வருக்க வெதுகை, நெடிலெதுகை, இனவெதுகை எனவும், வருக்க மோனை, நெடின்மோனை, இனமோனை எனவும் பெயரிட்டு வழங்கப்படும்; எ - று.

வருமாறு :—

இன்னிசை வெண்பா

நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்
பாடும்வண் டஞ்சி அகலும் பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்ந்தா ருள்ளார் படலொல்லா
பாடமை சேக்கையுட் கண்

இது டகர வருக்க வெதுகை.

அறத்தா றிதுவென—னிடை (காரிகை : 15)

இது றகர வருக்க வெதுகை.

ஆவாவென்றே—ஒருசாரார் (காரிகை : 27)

என்பது இரண்டாமெழுத் தொன்றுதாயினும் இரண்டா மெழுத்தின் மேலேறிய நெடில் ஒப்புமை நோக்கி நெடி லெதுகை என்று வழங்கப்படும்.

இனி, இனவெதுகை மூன்று வகைப்படும்; வல்லின வெதுகையும், மெல்லின வெதுகையும், இடையின வெதுகை யும் என.

வருமாறு :

குறள் வெண்பா

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப்படும் (குறள்: 114)

இது வல்லின வெதுகை.

குறள் வெண்பா

அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு (குறள்: 74)

இது மெல்லின வெதுகை.

குறள் வெண்பா

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு (குறள்: 299)

இது இடையின வெதுகை.

வருக்கமோனை முதலாகிய மூன்றும் வருமாறு:—

நேரிசையாசிரியப்பா

பகலே, பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து மேம்படத் திருகிப்
புனையீ ரோதி செய்குறி நசைஇப்
பூந்தார் மார்ப புனத்துள் தோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயும் அறியா மாவழங்கு பெருங்காட்டுப்
பைங்கண் உழுவைப் படுபகை வெரீஇப்
பொங்குசினந் தணியாப் பூநுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாள்
பௌவத் தன்ன பாயிருள் நீந்தி
இப்பொழுது வருகுவை யாயின்
நற்றூர் மார்ப தீண்டலெங் கதுப்பே

இது பகர வருக்க மோனை.

ஆர்கலி யுலகத்து—ஒழுக்கமுடைமை (கா. 99. மேற்)

இது முதலெழுத் தொன்று தாயினும் முதலெழுத்தின் மேலேறிய நெடில் ஒப்புமை நோக்கி நெடில்மோனை என்று வழங்கப்படும்.

இனமோனை மூன்று வகைப்படும்; வல்லின மோனையும், மெல்லினமோனையும், இடையினமோனையும் என.

நேரிசை யாசிரியப்பா

கயலேர் உண்கண் கலுழ நாளுஞ்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை அமைத்தோள் அரும்பட ருழப்பப்
போகல் வாழி யைய பூத்த
கொழுங்கொடி அணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே

இஃது எல்லாவடியும் முதற்கண்ணே வல்லெழுத்து வந்தமையான், வல்லினமோனை. மெல்லினமோனையும், இடையினமோனையும் வந்தவழிக் கண்டுகொள்க. என்னை,

> வருக்க நெடிலினம் வரையா ராண்டே
> நெடிய பிறவும் இனத்தினு மாகும்

என்றார் பிறருமெனக் கொள்க.

'ஒருக்கப் பெயரான்' என்று சிறப்பித்தவதனால் ஒரு சார் ஆசிரியர் தலையாகு எதுகை, இடையாகு எதுகை, கடையாகு எதுகை என்றும், தலையாகுமோனை, இடையாகு மோனை, கடையாகுமோனை என்றும் வேண்டுவர் எனக் கொள்க. என்னை,

> சீர்முழு தொன்றில் தலையா கெதுகை
> யோரெழுத் தொன்றின் இடைகடை பிறவே

என்றாராகலின்.

இச் சூத்திரத்தான் மோனைக்கும் இவ்வாறே விரித்துரைத்துக் கொள்க.

வருமாறு:

நேரிசை வெண்பா

சிலைவிலங்கு —போழ்து (காரிகை : 35)

என்பது தலையாகு எதுகை.

குறள் வெண்பா

அகர முதல —.யுலகு (காரிகை : 97)

என்பது இடையாகு எதுகை.

குறள் வெண்பா

தக்கார் - காணப்படும் (காரிகை: 183)
என்பது கடையாகு எதுகை.

குறள் வெண்பா

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (குறள் : 350)

என்பது தலையாகு மோனை.

மாவும் புள்ளும்........அன்றே (காரிகை : 48)
என்பது இடையாகு மோனை.

நேரிசை ஆசிரியப்பா

பகலே, பல்பூங் கானல் .... கதுப்பே (காரிகை: 184)
என்பது கடையாகு மோனை.

'உயிராசிடையிட், டிருக்கு மொருசார் இரண்டடி மூன்று மெழுத்துமொன்றி, நிரக்கு மெதுகை யென்றலுஞ் சிறப்பில' என்பது :

உயிரெதுகை, ஆசெதுகை, இடையிட் டெதுகை, இரண்டடி யெதுகை, மூன்றுமெழுத்தொன் றெதுகை என்று ஒருசார் எதுகையும் உளவாயினும் பெரியதொரு சிறப்பில எனக் கொள்க.

'நேரிழையே' என்பது: மகடூஉ முன்னிலை,

வருமாறு :

நேரிசை யாசிரியப்பா

துளியொடு மயங்கிய தூங்கிருள் நடுநாள்
அணிகிளர் தாரோய் அருஞ்சுர நீந்தி
வடியமை யெஃகம் வலன்வயின் ஏந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ அரிதே

இஃது இரண்டாமெழுத் (மெய்யெழுத்து) தொன்றா தாயினும் இரண்டாமெழுத்தின் மேலேறிய உயிரொன்றி வந்தமையால் உயிரெதுகை.

இனி, ஆசெதுகை 'ய, ர, ல, ழ' என்னும் ஒற்று நான்கும் ஆசாய் வரும் எனக் கொள்க. என்னை,

> யரலழ வென்னும் ஈரிரண் டொற்றும்
> வரன்முறை பிறழாது வந்திடை உயிர்ப்பினஃ
> தாசிடை யெதுகையென் றறைதல் வேண்டும்

என்றார் காக்கைபாடினியார்.

வருமாறு :

கலித்துறை

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால் திசைபோய துண்டே
(சீவகசிந்தாமணி 31)

இது யகர ஒற்றிடைவந்த ஆசெதுகை.

கலி விருத்தம்

மாக்கொடி மாலையும் மௌவற் பந்தருங்
கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பருங் கான ஞாழலுந்
தூக்கடி கமழ்ந்துதான் துறக்க மொத்ததே
(சூளாமணி. நாட்டு. 29)

இது ரகர ஒற்றிடைவந்த ஆசெதுகை.

நேரிசை வெண்பா

ஆவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி யாபோல்
உருவு பலகொள லீங்கு (நாலடியார்: 118)

இது லகர ஒற்றிடைவந்த ஆசெதுகை.

நேரிசை வெண்பா

அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையாம்
மந்தரமே போலும் மணவாழ்க்கை—மந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று

இது ழகர ஒற்றிடை வந்த ஆசெதுகை.

குறள் வெண்செந்துறை

ஆர்கலி யுலகத்து .. .. உடைமை (காரிகை: 99)

இஃது ஆசிடையிட்டுவந்த வல்லின வெதுகை. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இடையிட்டெதுகை வருமாறு :

நேரிசை யாசிரியப்பா

தோடா ரெல்வளை நெகிழ நாளும்
நெய்த லுண்கண் பைதல் கலுழ
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைகல்தோறும் பையப் பெருகின
நீடா ரிவரென நீமனங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழி
வாடாப் பௌவ அறன்முகந் தெழிலி
பருவம் பொய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே

இஃது அடிதோறும் இடையிட்டு வந்தமையால், இடையிட்டெதுகை.

இது கையனார் காட்டிய பாட்டு. என்னை,

தாஅ வண்ணம்

இடையிட்டு வந்த எதுகைத் தாகும் (தொல்: 1471)

என்றார் தொல்காப்பியனார்.

இரண்டடி யெதுகை வருமாறு:

துவைக்குந் துளிமுந்நீர்க் கொற்கை மகளிர்
அவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்தம்
மணங்கமழ்தார் அச்சுதன் மண்காக்கும் வேலின்
அணங்கும் அமுதமு மந்நலார் பாடல்

இது முன் இரண்டடியும் ஓரெதுகையாய்ப் பின் இரண்டடியும் மற்றோரெதுகையாய் வந்தமையால் இரண்டடி எதுகை. என்னை,

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, LIBRARY, MADRAS

இரண்டடி எதுகை திரண்டொருங் கியன்றபின்
முரண்ட எதுகை யிரண்டில வரையார்

என்றுராகலின்.

மோனைக்கும் அவ்வாறே யொட்டிக்கொள்க.

வருமாறு:

கலிவிருத்தம்

ஆகங் கண்டக ராலற்ற ஆடவர்
ஆகங் கண்டகத் தாலற்ற அன்பினர்
பாகங் கொண்டு பயோதரஞ் சேர்த்தினர்
பாகங் கொண்டு பயோதரம் நண்ணினர்

இது முன் இரண்டடியும் ஒரு மோனையாய்ப் பின் இரண்டடியும் மற்றொரு மோனையாய் வந்தமையால், இரண்டடி மோனை.

குறள் வெண்பா

பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்
திகழரும் பீன்றனபுன் னை

குறள் வெண்பா

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின் (குறள்: 292)

இவை மூன்றுமெழுத்தொன் றெதுகை.

'நிரக்கு மெதுகை' என்று சிறப்பித்தவதனால், விட்டிசை வல்லொற்றெதுகை என்றும், விட்டிசை மோனை என்றும் வேண்டுவோரும் உளர் எனக்கொள்க.

வருமாறு:

குறள் வெண்பா

பற்றிப் பலகாலும் பான்மறி உண்ணுமை
நொஅலையல் நின்னாட்டை நீ

இது வல்லொற் றடுத்தாற்போல, விட்டிசைத்துக் குற்றெழுத்தினேடு புணர்ந்தமையான், விட்டிசை வல்லொற்றெதுகை.

குறள் வெண்பா

அ அவனும் இ இவனும் உ உவனுங் கூடியக்கால்
எ எவனை வெல்லா ரிகல்

இது முதலெழுத்து இரண்டடிக்கண்ணும் விட்டிசைத்து வந்தமையால் விட்டிசைமோனை. இவையெல்லாஞ் சிறப்பிலவெனக் கொள்க.

இன்னும் 'ஒருக்கப் பெயரான் உரைக்கப்படும்' என்று சிறப்பித்தவதனாற் பாவினங்கள் எல்லாத் தொடையானும் வரும் என்றாராயினும், பெரும்பான்மையுந் தலையாகு மோனையிற் றிரிந்தும், தலையாகு எதுகையிற் றிரிந்தும் வாராவெனவும், செந்தொடை யொழித் தெல்லாத் தொடைக்கும் இனவெழுத்து வரத்தொடுப்பதூஉம், வழியெதுகை வரத்தொடுப்பதூஉம் வழிமுரண் வரத்தொடுப்பதூஉஞ் சிறப்புடைத் தெனவுங் கொள்க.

இனவெழுத்துப் பெற்று, மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுப்பது 'மருட்செந்தொடை' எனக் கொள்க. இனவெழுத்தாமாறு தானமொத்த குறிலும், நெடிலுந் தம்முள் இனமாம் அவை,

அகர ஆகார ஐகார ஔகாரங்கள் தம்முள் இனமாம்.

இகர ஈகார எகர ஏகாரங்கள் தம்முள் இனமாம்.

உகர ஊகார ஒகர ஓகாரங்கள் தம்முள் இனமாம்.

ஒற்றினுள்,

இவை ஏறிய உயிர்மெய்க்கும் இவ்வாறே கொள்க.

சகர தகரங்கள் தம்முள் இனமாம்.

ஞகர நகரங்கள் தம்முள் இனமாம்.

மகர வகரங்கள் தம்முள் இனமாம்.

இவற்றை 'அனு' என்று வழங்குவாருமுளர். என்னை,

அகரமோ டாகாரம் ஐகாரம் ஔவாம்
இகரமோ டீகாரம் எஏ—உகரமோ
டூகாரம் ஒஓ ஞநமவ தச்சகரம்
ஆகாத அல்ல அனு

என்றாராகலின்.

அவற்றுட் சில வருமாறு:

குறள் வெண்பா

ஈத்துவக்கும்' இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் (குறள்: 228

குறள் வெண்பா

அமிழ்தினு மாற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ் (குறள்: 64)

இவை இனவெழுத்துப் பெற்று மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுத்தமையான், மருட்செந்தொடை. பிறவு மன்ன.

இனி, வழியெதுகை வருமாறு:

கட்டளைக்கலித்துறை

மண்டலம் பண்டுண்ட திண்டேர் வரகுணன் தொண்டியின்வாய்க்
கண்டலத் தண்டுறைக் கண்டதொன் றுண்டு கன மகர
குண்டலம் கெண்டை இரண்டொடு தொண்டையுங் கொண்டொர்திங்கள்
மண்டலம் வண்டலம் பக்கொண்டல் தாழ வருகின்றதே

'கொங்கு தங்கு' (கா: 39) முதலாயினவுங் கொள்க' 'அனுப்பிராசம்' என்னும் வடமொழியை, 'வழியெதுகை. என்பது தமிழ் வழக்கு.

இனி, வழி முரண் வருமாறு:

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

செய்யவாய்ப் பசும்பொ னேலைச் சீறடிப் பரவை யல்குல்
ஐயநுண் மருங்குல் நோவ வடிக்கொண்ட குவவுக் கொங்கை
வெய்யவாய்த் தண்ணென் நீலம் விரிந்தென விலங்கி நீண்ட
மையவா மழைக்கட் கூந்தன் மகளிரை வருக வென்றான்
(சூளாமணி சீய: 101)

கட்டளைக் கலித்துறை

ஒருமால் வரைநின் றிருசுட ரோட்டிமுந் நீர்க்கிடந்த
பெருமா நிலனுஞ் சிறுவிலைத் தாவுண்டு பேதையர்கண்
பொருமா தவித்தெங்க லெங்கோன் பொரவல் லவன்பொதியிற்
கருமா விழிவெண்பற் செவ்வாய்ப் பசும்பொற் கனங்குழைக்கே.

மோனையும் எதுகையும் திரிந்து, பாவும் இனமும் வாராமை மேற்காட்டியவற்றுள்ளும், பிறவற்றுள்ளும் கண்டு கொள்க.

சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவிரு மூன்றடியே
தரங்கக்கும் வண்ணகக் குந்தர வாவது தாழிசைப்பா
சுருங்கிற் றிரண்டடி யோக்க மிரட்டி சுரும்பிமிருந்
தரங்கக் குழலாய் சுருங்குந் தரவினிற் றாழிசையே. (57)

இ-கை. தரவு தாழிசைகட்கு அடிவரையறையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

'சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவு' என்பது அம்போ தரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவும்' வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவும் ஒழித்தல்லாத கலிப்பாவிற்குத் தரவு மூன்ற டியே சிறுமை; பெருமை பாடுவோனது பொருள் முடிவுக் குறிப்பே; வரையறையில்லை; எ - று.

'இருமூன்றடியே தரங்கக்கும் வண்ணகக்குந் தரவா வது' என்பது: அம்போ தரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற் கும், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் பெருக்கஞ் சுருக்கமில்லை; ஆறடியே தரவாவது; எ - று.

'சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவு' என்றாராயினும், 'வெள்ளைக்கிரண்டடி' என்னுங் காரிகையுள், கலிப்பாவிற்கு நான்கடிச் சிறுமை சொன்னமையால், தரவு கொச்சகக் கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை வருவதெனக் கொள்க.

'தாழிசைப்பா சுருங்கிற் றிரண்டடி யோக்கம் இரட்டி' என்பது: பொதுவகைபால் தாழிசை சொல்லிப் போந்தா

ராயினும், தாழிசைகட்கு இரண்டடி சிறுமை; நான்கடி பெருமை; இடை மூன்றடியானும் வருவது; எ-று.

'சுரும்பிமிருந் தரங்கக் குழலாய்' என்பது: மகடூஉ முன்னிலை.

'சுருங்குந் தரவினிற் ருழிசையே' என்பது: தரவடியிற் ருழிசையடி சுருங்கி வருவது; எ-று.

இவற்றிற் கிலக்கியம் மேற்காட்டியவற்றுள்ளும், பிற வற்றுள்ளுங் கண்டுகொள்க.

பொருளோ டடிமுத னிற்பது கூனது வேபொருந்தி
இருள்சேர் விலாவஞ்சி ஈற்றினு நிற்கு மினியொழிந்த
மருள்தீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப்
பொருள்கோள் குறிப்பிசை யொப்புங்குறிக்கொள்
பொலங்கொடியே. (58)

இ-கை. மேற்சொல்லப்பட்ட பாக்கட்கெல்லா மெய்திய தோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

'பொருளோ டடிமுதல் நிற்பது கூன்' என்பது அடி முதற்கட் பாவினது பொருளைத் தழுவித் தனியே நிற்பது 'கூன்' எனப்படும்.

'அதுவே பொருந்தி இருள் சேர்விலா வஞ்சி ஈற்றினு நிற்கும்' என்பது: அக் கூன் வஞ்சிப்பாவினது அடியின் இறுதிக்கண்ணும் நிற்கப்பெறும்; எ-று.

'ஈற்றினும்' என்ற உம்மையால் வஞ்சிப்பாவின் அடி நடுவினுங் கூன் வரப்பெறும் எனக் கொள்க.

'இருள்சேர் விலாவஞ்சி' என்று சிறப்பித்தவதனால் வஞ்சியடியின் நடுவும், இறுதியும் அசை கூனாய் வருவது சிறப்புடைத்து; சீர் கூனாய் வரினும் உகர இறுதியாகிய நேர்பு இயற்சீராயல்லது வாரா எனக் கொள்க. அசைச் சீர் எல்லாப் பாவினுள்ளும் அருகியல்லது கூனாய் வாராது

எனக் கொள்க. எனவே வெண்பா, ஆசிரியம், கலி என்னும் இவற்றின் இடையும், இறுதியுங் கூன் வரப் பெறுது எனக்கொள்க. என்னை,

அடிமுதற் பொருளைத் தானினிது கொண்டு
முடிய நிற்பது கூனென மொழிப

வஞ்சியி னிறுதியும் ஆகும் அதுவே

அசைகூ னுகும் என்மனுர் புலவர்

என்ருர், பல்காயனுர்.

கூனைத் தனிச்சொல் என்று வழங்குவாருமுளர். என்னை,

அடிமுதற் பொருள்பெற வருவது தனிச்சொலஃ
திறுதியும் வஞ்சியுள் இயலு மென்ப (யாப்பருங்கலம்: 94)

என்ருராகலின்.

கொச்சகக்கலியுள் ஓரடி முழுதுங் கூனுய் வாப்பெறும்; அவை சிறப்பில எனக் கொள்க.

வருமாறு :

நேரிசை வெண்பா

உதுக்காண்: சுரந்தாஞ வண்கைச் சுவ்வணமாப் பூதன்
பரந்தானுப் பல்புகழைப் பாடி—இரந்தார்மாட்
டின்மை யகல்வது போல இருணீங்க
மின்னும் அளிதேர் மழை

இவ் வெண்பாவினுள் அடிமுதற்கண் 'உதுக்காண்' எனக் கூன் வந்தவாறு கண்டுகொள்க.

நேரிசை யாசிரியப்பா

அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே

யானே, தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையுட் படர்கூர்ந் திசினே
அன்னள் அளியள் என்னுது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் இன்னுயிர் குறித்தே
(குறுந்தொகை: 216)

இவ்வாசிரியப்பாவின் அடிமுதற்கண் 'அவரே' எனவும், 'யானே' எனவுங் கூன் வந்தவாறு கண்டுகொள்க.

தரவு கொச்சகக் கலிப்பா

உலகினுள்,
பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்
இருந்தகைய விமுவரைமேல் எரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை சிறப்பெனினும் பிறழ்வின்றி
உறுதகைமை யுலகினுக்கோர் ஒப்பாகித் தோன்றுதே

இக் கலிப்பாவினுள் அடிமுதற்கண் 'உலகினுள்' எனக் கூன் வந்தவாறு கண்டுகொள்க.

வஞ்சிப்பா

உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி யொழுகுமென்ப
அதனல்,
நற்றிற நாடுதல் நன்மை
பற்றற யாவையும் பரிவறத் துறந்தே

இவ் வஞ்சிப்பாவினுள் அடிமுதற்கண் 'உலகே' எனச் சீர் கூனுய் வந்தவாறும்,

மாவழங்கலின் மயக்குற்றன — வழி

இவ் வஞ்சியடியின் இறுதிக்கண் 'வழி' என அசை கூனும் வந்தவாறும்,

கலங்கழாலிற் துறை — கலக்குற்றன

இவ் வஞ்சியடியின் நடுவில் 'துறை' என அசை கூனுய் வந்தவாறுங் கண்டுகொள்க.

தேரோடத் துகள் கெழுமின — தெருவு

இவ் வஞ்சி யடியினது இறுதிக்கண், 'தெருவு' என உகர விறுதியாகிய இயற்சீர் கூனுயினவாறு கண்டுகொள்க.

'காமர் கடும்புனல்' (கலித்தொகை 39) என்னுங் கொச்சகக் கலியுள் 'சிறுகுடியீரே சிறுகுடியீரே' என ஓரடியாற் கூன் வந்தவாறு காண்க. பிறவுமன்ன.

இனி ஒழிந்த 'மருடீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசை வனப்புப், பொருள்கோள் குறிப்பிசை யொப்புங் குறிக்கோள்' என்பது:

மேல் 'எழுத்தசைசீர் பந்த மடிதொடை பாவினங் கூறுவன்' (கா. பாயிரம்) என்று அதிகாரம்பாரித்து காரிகையுள் ஓதப்படாத யாப்புறுப்பாய் மயக்கந்தீர வகுக்கப்பட்ட விகாரமும், வகையுளியும், வாழ்த்தும், வசையும், வனப்பும், பொருளும், பொருள்கோளும், குறிப்பிசையும் செய்யுள் ஒப்புமையும் ஆமாறு உபதேச முறைமையான் உணர்க: எ - று.

'பொலங்கொடியே' என்பது: மகடூஉ முன்னிலை.

அவற்றுள், விகாரம் அறுவகைப்படும்: வலித்தலும், மெலித்தலும், விரித்தலும், தொகுத்தலும் நீட்டலும், குறுக்கலும் என. என்னை,

அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலு மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர் (தொல்: 886)

வறுமாறு.

குறுத்தாட் பூதஞ் சுமந்த
அறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே

இதனுள், 'குறுந்தாள், எனற்பாலதனைக் 'குறுத்'தாள் என வலிக்கும் வழிவலித்தவாறும்,

தண்டையி னினக்கிளி கடிவோள்
பண்டையள் அல்லள் மானோக் கினளே

இதனுள், 'தட்டை' எனற்பாலதனைத் 'தண்டை' என மெலிக்கும்வழி மெலித்தவாறும்;

இன்னிசை வெண்பா

வெண்மணலெக்கர் விரிதிரை தந்தநீர்
கண்ணுடி மண்டிலத் தூதாவி யொத்திழியுந்
தண்ணந் துறைவர் தகவிலரே தற்சேர்ந்தார்
வண்ணங் கடைப்பிடியா தார்

இதனுள், 'தண்டுறைவர்' எனற்பாலதனைத் 'தண்ணந் துறைவர்' என விரிக்கும்வழி விரித்தவாறும்,

நேரிசை வெண்பா

பூத்தாட் புறவிற் புனைமதில் கைவிடார்
காத்தலிற் காவல ரேனையார்—பார்த்துரூர்
வேண்டார் வணக்கி விறன்மதில் தான்கோடல்
வேண்டுமாம் வேண்டார் மகன்

இதனுள், 'வேண்டாரை வணக்கி' எனற்பாலதனை 'வேண்டார் வணக்கி' எனத் தொகுக்கும்வழித் தொகுத்த வாறும்,

நேரிசை வெண்பா

பாசிழை யாகப் பசப்பித்தான் பைந்தொடியை
மாசேனன் என்று மனங்கொளீஇ—மாசேனன்
சேயிதழ்க் கண்ணி தருதலாற் சேர்த்தியென்
நோய்தீர நெஞ்சின்மேல் வைத்து

இதனுள், 'பச்சிழை' எனற்பாலதனைப் 'பாசிழை' என நீட்டும்வழி நீட்டியவாறும்,

யானை, யெருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன் (காரிகை: 24)

இதனுள், 'தீயேன்' எனற்பாலதனைத் 'தியேன்' எனக் குறுக்கும்வழி குறுக்கினவாறுங் கண்டுகொள்க. பிறவுமன்ன.

'மருள்தீர் விகாரம்' என்று சிறப்பித்தவதனல் வரலாற்று முறைமையோடுங் கூடிப் பொருந்தி வாராநின்றன வல்லது 'துவைக்குப்பாலில்லை' எனற்பாலதனைத் 'தூவைக் குப் பாலில்லை' என்ருற்போலப் புணர்க்கப்படாது என்க.

இன்னும் 'மருள்தீர் விகாரம்' என்று சிறப்பித்த வதனால், தலைக்குறையும், இடைக்குறையும், கடைக்குறை யும் வருவனவு முள. அவையும் வரலாற்று முறைமை யோடுங் கூடி வழங்கப்படும் எனக் கொள்க.

வருமாறு :

மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி

இதனுள், 'தாமரை' எனற்பாலதனை 'மரை' எனத் தலைகுறைத்து வழங்கினவாறும்,

வேதின வெரிநின் ஓதி முதுபோத்து
(குறுந்தொகை: 140)

இதனுள் 'ஓந்தி' எனற்பாலதனை 'ஓதி' என இடை குறைத்து வழங்கினவாறும்,

அகலிரு விசும்பி னுஅல் போல
வாலிதின் மலர்ந்தன புன்கொடி முசுண்டை
(மலைபடுகடாம்: 100-101)

இதனுள், 'ஆரல்' எனற்பாலதனை 'ஆல்' என இடை குறைத்து வழங்கினவாறும்,

நீலுண் டுகிலிகை கடுப்ப

இதனுள், நீலமுண் துகிலிகை கடுப்ப' எனற்பாலதனை 'நீலுண் துகிலிகை கடுப்ப' எனக் கடைகுறைத்து வழங்கின வாறுங் கண்டுகொள்க. பிறவுமன்ன.

'அந்நாற்சொல்லுந் தொடுக்குங்காலை' என்றவழி நான்கு சொல்லாவன, இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என இவை. என்னை,

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே (தொல்: 880)

அவற்றுள், இயற்சொல்லாவன சோறு கூழ் பால் பாளிதம் என்பன. என்னை,

இயற்சொல் தாமே இயம்புங் காலைச்
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்குஞ் சொல்லே

என்றாராகலின்.

அவை நடக்கும் எல்லை யாவையோவெனின்; வைகை யாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாகிய நான்கு எல்லைக்குட் பட்ட சோணாடு என்க. என்னை,

மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியில்மாப் பெருமை பரவுறு சோழனுஞ்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கு
மையறு சோழ வளநா டென்ப

என்றாராகலின்.

திரிசொல்லாவன - அடுக்கல், பிறங்கல், ஓங்கல், விலங்கல், விண்டு, குவடு என்பவை, மலை என்னும் ஒருபொருள் குறித்த வேறு சொல்.

உந்தி என்பது - ஆற்றிடைக் குறையும், கொப்பூழும் தேருருளும், யாழகத்தோருறுப்பும் என்னும் வேறு பொருள் குறித்த ஒரு சொல். என்னை,

ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி (தொல்: 882)

என்றாராகலின்.

திசைச்சொல்லாவன: மயிலை 'மஞ்ஞை' என்றும், கிளியைக் 'கிள்ளை' என்றும், தாயைத் 'தள்ளை' என்றும், நாயை 'ஞமலி' என்றும் வழங்குவனவாம். என்னை,

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைசொற் கிளவி (தொல்: 883)

என்றாராகலின்.

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு கொடுந்தமிழ் நிலமாவன :—

தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா அதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

இதை விரித்துரைத்துக் கொள்க.

வடசொல்லாவன :— குங்குமம், மூலம், சங்கு, சந்தனம் என்பனவாம். என்னை,

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே (தொல்: 884)

சிதைந்தன வரினு மியைந்தன வரையார் (தொல்: 885)
என்றார் தொல்காப்பியனார்.

'வகையுளி' என்பது: முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழி யறிந்து, குற்றப்படாமல் வண்ணம் அறுத்தல் எனக் கொள்க. என்னை,

அருணைக்கு நீரா ரசைசீ ரடிக்கண்
பொருள்நோக்கா தோசையே நோக்கி—மருள்நீக்கிக்
கூம்பவுங் கூம்பா தலரவுங் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு
என்றாராகலின்.

வருமாறு :

குறள் வெண்பா

கடியார்பூங் கோதை கடாயினான் திண்டேர்
சிறியார்தஞ் சிற்றில் சிதைத்து

இதனைக் 'கடியார்' எனவும், 'பூங்கோதை' எனவும், 'கடாயினான்' எனவும் அலகிடின் ஆசிரியத்தளையும், கலித்தளையும் தட்டு வெள்ளைத் தன்மை குன்றுமாதலால் 'கடியார்பூ' என்று புளிமாங்காயாகவும், 'கோதை' என்று

தேமாவாகவும், 'கடாயினன்' என்று கருவிளமாகவும் அலகிட்டுக் கொள்க.

குறள் வெண்பா

மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் (குறள்: 4)

இதனை, 'நிலமிசை' எனவும், 'நீடு' எனவும், 'வாழ் வார்' எனவும் அலகிடின் ஆசிரியத்தளை தட்டு, வெண்பா வின் இறுதிக்கண் அசைச்சீர் ஆகற்பாலது இயற்சீராய், 'நிகரில் வெள்ளைக் கோரசைச்சீரு மொளிசேர் பிறப்பு மொண்காசு மிற்ற சீருடைச் சிந்தடியே முடிவாம்' என்னும் இலக்கணத்தோடு மாறுபடுமாதலின் 'நிலமிசை' எனக் கருவிளமாகவும், 'நீடுவாழ்' எனக் கூவிளமாகவும்' 'வார்' என நாள் என்னும் நேரசைச்சீராகவும் அலகிட்டுக் கொள்க.

நேரிசை வெண்பா

பாடுநர்க்கும் ஆடுநர்க்கும் பண்டுதாங் கொண்டவர்க்கும்
ஆடுநர்க்குங் கூடுநர்க்கு மொத்தலால்—நீடுநீர்
நல்வய லூரர நறுஞ்சாந் தணியகலம்
புல்லலின் ஊட லினிது

இதனுள் டுகர நகரங்கள் பிரிந்திசைத்தன வாயினும் இரண்டினையுங் கூட்டி நிரையசையாக அலகிடச் சீரும், தளையுஞ் சிதையாவாம். அல்லாவிடின் நாலசைச்சீராய் வண்ணமழிந்து ஓசையுண்ணுது கெடும். பிறவு மன்ன.

வாழ்த்து இருவகைப்படும்; மெய்வாழ்த்தும், இருபுற வாழ்த்தும் என.

வருமாறு:

நேரிசை வெண்பா

கார்நறு நீலங் கடிக்கயத்து வைகலும்
நீர்நிலை நின்ற பயன்கொலோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியால்
கொண்டிருக்கப் பெற்ற குணம் (முத்தொள்ளாயிரம்)

இது மெய்வாழ்த்து.

நேரிசை வெண்பா

பண்டு மொருகால்தன் பைந்தொடியைக் கோட்பட்டு
வெங்கடத்து வில்லேற்றிக் கொண்டுழந்தான்—
தென்களந்தைப்
பூமான் திருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்தேர் வையையார் கோ

இஃது இருபுறவாழ்த்து.

வசையும் இருவகைப்படும்: மெய்வசையும், இருபுற வசையும் என.

வருமாறு:—

நேரிசை வெண்பா

தந்தை இலேச்சுமடன் தாய்தொழிலி தான்பார்ப்பான்
எந்தைக் கிதெங்ஙனம் பட்டதுகொல்—முந்தை
அவியுணவி ஞர்தெரியின் ஆவதாங் கொல்லோ
கவிகண்ண ஞர்தம் பிறப்பு

இது மெய்வசை.

நேரிசை வெண்பா

படையொடு போகாது நின்றெறிந்தான் என்றுங்
கொடையொடு நல்லார்கண் தாழ்ந்தான்—படையொடு
பாடி வழங்குந் தெருவெல்லாந் தான்சென்று
கோடி வழங்கு மகன்

இஃது இருபுறவசை.

இனி வனப்பு எட்டுவகைப்படும்; அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு, என. என்னை,

அம்மை அழகு தொன்மை தோல்விருந்
தியைபு புலனிழை பெனவனப் பெட்டே

என்ருராகலின்.

அவற்றுள் 'அம்மை' யாவது சிலவாய், மெல்லியவாய சொற்களால், ஒள்ளிய வாய பொருண்மேற் சிலவடியாற் சொல்லியது. என்னை,

சின்மென் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அம்மை தானே யடிநிமிர் பின்றே (தொல்:1491)

என்றூராகலின்.

வருமாறு:

குறள் வெண்பா

அறிவினன் ஆகுவ துண்டோ பிறிதியின்நோய்
தன்னேய்போற் போற்றுக் கடை (குறள்: 315)

அழகு என்பது செய்யுட் சொல்லாகிய திரிசொற்களான் ஓசை இனியதாகப் புணர்க்கப்பட்டது. என்னை,

செய்யுண் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே (தொல்: 1492)

என்றூராகலின்,

வருமாறு:

நேரிசை யாசிரியப்பா

துணியிரும் பௌவங் குறைய வாங்கி
அணிகிள ரடுக்கல் முற்றிய வெழிலி
காலோடு மயங்கிய கனையிருள் நடுநாள்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
நெடுவரை மருங்கிற் பாம்பென இழிதருங்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே

'தொன்மை' என்பது பழையதாகி நிகழ்ந்த பெற்றி யுரைக்கப்படுவது. என்னை,

தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே (தொல்: 1493)

என்றூராகலின்.

வருமாறு:

'செறிதொடி யுவகைகேளாய் செஞ்சுடர்த் தெறு கதிர்ச்செல்வன் செய்வதொர்' என்பதூஉம், மாபாரதம் காந்தம் போல்வனவுங் கொள்க.

'தோல்' என்பது - இழும் என்னும் மெல்லியுவாகிய சொற்களாய் விழுமியவாய்க் கிடப்பனவும், எல்லாச் சொற்களானும் பலவடியாய்க் கிடப்பனவும் என இருதிறத் தனவாம். என்னை,

> இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
> பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினுந்
> தோலென மொழிப தொன்னெறிப் புலவர் (தொல்: 1494)

என்றாராகலின்.

வருமாறு:

நிலைமண்டில் ஆசிரியப்பா

> பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்
> ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
> துனிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
> ஒளியோன் காஞ்சி யெளிதினிற் கூறின்
> இம்மை யில்லை மறுமை யில்லை
> நன்மை யில்லைத் தீமை யில்லை
> செய்வோ ரில்லைச் செய்பொரு ளில்லை
> அறிவோ ரியாரஃ திறுவழி யிறுகென

இது மார்க்கண்டேயனுர் காஞ்சி. இஃது இழுமென் மொழியால் விழுமியது நுவன்றது.

இது பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகியது.

'விருந்து' என்பது, புதியவற்றின் மேற்று. அஃது இப்பொழுதுள்ளாரைப் பாடுவது: என்னை,

> விருந்தே தானும்
> புதுவது கிளந்த யாப்பின் மேற்றே (தொல்: 1495)

என்றாராகலின்.

அது வந்தவழிக் கண்டுகொள்க.

'இயைபு' என்பது ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள, என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வந்த பாட்டு. என்னை,

ஞகாரை முதலா ளகாரை யீற்றுப்
புள்ளி யிறுதி இயையெனப் படுமே (தொல்: 1496)

என்றாராகலின். அவையும் வந்தவழிக் கண்டுகொள்க.

'புலன்' என்பது இயற்சொல்லாற் பொருடோன்றச் சொல்லப்படுவது. என்னை,

தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே (தொல்: 1497)

என்றாராகலின்.

வருமாறு:

நேரிசை யாசிரியப்பா

பாற்கடல் முகந்த பருவக் கொண்மூ
வார்செறி முரசின் முழங்கி யொன்னார்
மலைமுற் றின்றே வயங்குதுளி சிதறிச்
சென்றவ டிருமுகங் காணக் கடுந்தேர்
இன்றுசெலக் கடவுமதி பாக வுதுக்காண்
மாவொடு புணர்ந்த மாஅல் போல
இரும்பிடி யுழைய தாகப்
பெருங்காடு மடுத்த காமர் களிறே

'இழைபு' என்பது வல்லொற் றியாதுந் தீண்டாது செய்யுளிய லுடையாரால் எழுத்தெண்ணி அடிவகுக்கப் பட்ட குறளடி முதலாகப் பதினேழ் நிலத்து ஐந்தடியும் முறையானே யுடைத்தாய் ஓங்கிய சொற்களால் வருவது. என்னை,

ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா ஐந்தடி காறும்
ஓங்கிய மொழியா ஞங்ஙன மொழுகின்
இழைபி னிலக்கணம் இயைந்த தாகும் (தொல்: 1498)

செய்யுளிய லுடையார் நாற்சீரடி தன்னையே நான் கெழுத்து முதலா ஆறெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியுங் குறளடி என்றும் (4, 5, 6 எழுத்துக்கள் கொண்ட அடி).

ஏழெழுத்து முதலா ஒன்பதெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியுஞ் சிந்தடி என்றும்,

பத்தெழுத்து முதலாப் பதினுன்கெழுத்தின்காறும் உயர்ந்த ஐந்தடியும் அளவடி என்றும்,

பதினைந்தெழுத்து முதலாப் பதினேழெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியும் நெடிலடி என்றும்,

பதினெட்டெழுத்து முதலா இருபதெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியும் கழிநெடிலடி என்றும்,

இருபதெழுத்தின் மிக்க நாற்சீ ரடிப்பா இல்லை என்றும் வேண்டுவர்.

அவ்வெழுத் தெண்ணுகின்றுழிக் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஆய்தமும், ஒற்றும் ஒழித்து நின்ற உயிரும், உயிர்மெய்யுங் கூட்டி எண்ணப்படும். என்னை,

குற்றிகரங் குற்றுகர மென்றிரண்டு மாய்தமும்
ஒற்று மெனவொரு நான்கொழித்துக்—கற்ருேர்
உயிரு முயிர்மெய்யு மோதினுர் கொள்ளச்
செயிர்தீர்ந்த செய்யு ளடிக்கு

நாற்சீர்கொண்ட தடியெனப் படுமே (தொல்: 1289

நாலெழுத்து ஆதியாக வாறெழுத்து
ஏறிய நிலத்தின் குறளடி யென்ப (தொல்: 1293)

ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
யீரெழுத் தேற்றம் அவ்வழி யான (தொல்: 1294)

பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தொற்றலங் கடையே (தொல்: 1295)

மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
யீரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிய (தொல்: 1296)

மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
யீரெழுத்து மிகுதலு மிவட்பெறு மென்ப (தொல்: 1297)

ஈரிரண்டும் ஒரேழும் ஈரைந்து மூவைந்தும்
பாரியன்ற நாற்சீர் பதினெட்டும்—ஓரா
விளையும் பதினேழ் நிலத்துக் குறள்சிந்
தளவு கழிநெடிலோ டைந்து

என்றாராகலின்.

வருமாறு :

நேரிசை யாசிரியப்பா

போந்து போந்து சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி நொந்து
வண்டு சூழ விண்டு வீங்கி
நீர்வாய்க் கொண்டு நீண்ட நீலம்
ஊர்வா யூதை வீச வூர்வாய்
மதியேர் வண்டோ டொல்கி மாலை
நன்மணங் கமழும் பன்னெல் லூர
அமைமேர் மென்றோ ளாயரி நெடுங்கண்
இணைபீ ரோதி யேந்திள வனமுலை
இறும்பமல் மலரிடை யெழுந்த மாவின்
நறுந்தழை துயல்வருஉஞ் செறிந்தேந் தல்குல்
அணிநடை யசைஇய வரியமை சிலம்பின்
மணிமருள் வணர்குழல் வளரிளம் பிறைநுதல்
ஒளிநிலவு வயங்கிழை யுருவுடை மகளிரொடு
நளிர்முழவு முழங்கிய வணிநிலவு மணிநகர்
இருந்தளவு மலரளவு சுரும்புலவு நறுந்தொடை
கலனளவு கலனளவு கல்னளவு கலனளவு
பெருமணம் புணர்ந்தனை யென்பவஃ
தொருநீ மறைப்பி னொழிகுவ தன்றே

இனிப் 'பொருள்கோள்' என்பது உம்மைத் தொகை: பொருளும், பொருள்கோளும் என.

குறள்வெண்பா

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல் (குறள்: 254)

இதனுள் அருளும், அருளல்லதும் எனற்பாலது 'அருளல்லது' என உம்மைதொக்கதாகக் கொள்க.

அவற்றுள், பொருளாவன குறிஞ்சி, கைக்கிளை முதலிய அகமும், அகப்புறமும்.

வெட்சி பாடாண்பாட்டு முதலிய புறமும் புறப்புறமு மாம். அவற்றை அவ்விலக்கணங் கூறிய நூல்களிற் கண்டு கொள்க.

இனிப் பொருள்கோள் ஒன்பது வகைப்படும்:—

நிரனிறைமொழிமாற்றும் சுண்ணமொழிமாற்றும், அடி மறிமொழிமாற்றும், அடிமொழிமாற்றும், பூட்டுவிற்பொருள் கோளும், புனல்யாற்றுப் பொருள்கோளும், அளைமறிபாப்புப் பொருள்கோளும், தாப்பிசைப் பொருள்கோளும், கொண்டு கூட்டுப் பொருள்கோளும் என.

இவற்றுள், நிரனிறை இரண்டு வகைப்படும்; பெயர் நிரனிறையும் வினைநிரனிறையும் என. அவற்றுள், பெயர் நிரனிறை வருமாறு:

இன்னிசை வெண்பா

கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடை நோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்

இனி 'வினை நிரனிறை' வருமாறு:

நேரிசை வெண்பா

காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீதியான்
மண்ணமிர்தம் மங்கையர்தோள் மாற்றுரை யேற்றூர்க்கு
நுண்ணிய வாய பொருள்

எனவும்,

இன்னிசை வெண்பா

அடல்வே லமர்நோக்கி நின்முகங் கண்டே
உடலு முடைந்தோடும் ஊழ்மலரும் பார்க்குங்
கடலுங் கனையிருளும் ஆம்பலும் பாம்புந்
தடமதிய மாமென்று தாம்

எனவுங் கண்டுகொள்க.

இனி, 'முறை நிரனிறை, எதிர் நிரனிறை, மயக்க நிர னிறை, மிகையெண் ணிரனிறை, குறையெண் ணிரனிறை' என்று வேண்டுவாரு முளர்.

அவற்றுட் 'சில வருமாறு':

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கூற்றுவனை வில்மதனை யரக்கர் கோ.வைக்
    கூனிலவைக் குஞ்சரத்தை இஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்கள்
    இறவெறிப்ப விமையப்பெண் வெருவ வேவக்
காற்றெழிலால் நயனத்தால் விரலாற் கற்றைக்
    கதிர்முடியாற் கரதலத்தாற் கணையாற் பின்னும்
ஊற்றழிய உதைத்தெரித்து நெரித்துச் சூடி
    உரித்தெரித்தான் அவனெம்மை யுடைய கோவே

எனவும்,

நேரிசை வெண்பா

காதம சூக விநுதிதுனி கண்புருவஞ்
சீதமுகங் கொங்கை திரண்டவாய்—ஓதக்
கரும்பார் மழபாடிக் காங்கேயன் பட்டத்
தரும்பார் குழலளகத் தார்க்கு

எனவுங் கண்டுகொள்க.

இனிச், 'சுண்ண மொழிமாற்று வருமாறு:

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

சுரை ஆழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை

இதனுள், 'சுரை' என்பதனோடு 'மிதப்ப' என்பது பொருள் கொள்ளவும் 'அம்மி' என்பதனோடு 'ஆழ' என்பது பொருள் கொள்ளவும், 'யானை' என்பதனோடு 'நிலை' என்பது பொருள் கொள்ளவும், 'முயல்' என்பதனோடு 'நீத்து' என்பது பொருள் கொள்ளவும், வந்தமையால் சுண்ண மொழிமாற்று.

இனி 'அடிமறி மொழிமாற்று' வருமாறு:

சூரல் பம்பிய—நீவர லாறே (காரிகை: 110)

என்னும் ஆசிரியம், வேண்டிற்றோர் அடியான் முதலாகச் சொன்னாலும் ஓசையும், பொருளும் பிழையாது வந்தமையால் அடிமறிமொழிமாற்று,

இனி 'அடிமொழிமாற்று' வருமாறு:

குறள் வெண்பா

ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு

என்பதனுள், 'ஆலத்து' மேல குரங்கு, குளத்துள குவளை' என்று இரண்டடியின் மொழிமாற்றிப் பொருள் கொண்டமையால், அடிமொழிமாற்று.

இனிப் 'பூட்டுவிற் பொருள்கோள்' வருமாறு :

நேரிசை வெண்பா

திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பின் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு

இதனுள், 'திறந்திடுமின்' என்பதனோடு 'கதவு' என்பது நோக்குடையதாய்ப் பொருள் கொண்டமையால் பூட்டுவிற் பொருள்கோள்.

இனிப் 'புனல்யாற்றுப் பொருள்கோள் வருமாறு:

இன்னிசை வெண்பா

அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றஞ்
சொலற்பால அல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம் (நான்மணிக்கடிகை 28)

இஃது அடிதோறும் பொருளற்று வந்தமையால் புனல் யாற்றுப் பொருள்கோள்,

இனி 'அளைமறிபாப்புப் பொருள்கோள்' வருமாறு:

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித்
தளர்வார் தாமுஞ்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற்
சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே
முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி
முயலா தாரே.

இதனுள், 'வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறி முன்னி முயலாதார்' என்னும் இறுதிச்சொல் இடையும், முதலுஞ் சென்று பொருள் கொண்டமையால், அளைமறி பாப்புப் பொருள்கோள்.

இனித் 'தாப்பிசைப் பொருள்கோள்' வருமாறு:

குறள் வெண்பா

உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு (குறள்: 255)

இதனுள், 'ஊனை உண்ணாமை உள்ள துயிர்நிலை' எனவும், 'ஊனையுண்ண அண்ணாத்தல் செய்யா தளறு, எனவும் நடுநின்ற 'ஊன்' என்னுஞ் சொல் முதலும், இறுதியுஞ் சென்று பொருள் கொண்டமையால், தாப்பிசைப் பொருள்கோள்.

இனிக் 'கொண்டுகூட்டுப் பொருள்கோள் வருமாறு:

இன்னிசை வெண்பா

தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்.

இதனுள், 'அஞ்சனத்தன்ன பைங்கூந்தல்' எனவும், 'தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட வெண்கோழி முட்டை யுடைத்தன்ன பசலை' எனவுஞ் சொற்களைக்

கொண்டு கூட்டிப் பொருள்கொண்டமையால் கொண்டு கூட்டுப் பொருள்கோள்.

நேரிசை வெண்பா

ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேல் தண்ணுமை—காரி
விறல்முள்ளூர் வேங்கைவீ நாறுந் தோளான்
நிறனுள்ளூ ருள்ள தலர்.

இதனுள், 'தண்ணுமை நாறுந்தோள்' எனவும், 'நிறம் வேங்கைவீ' எனவும், 'அலர் ஆரியமன்னர் பறையினெழுந்தியம்பும்,' எனவுஞ் சொற்களைக் கூட்டிப் பொருள் கொண்டமையால் இதுவுங் கொண்டு கூட்டுப் பொருள் கோள். பிறவுமன்ன.

இனிக் 'குறிப்பிசை' என்பது: எழுத்தல் ஓசையான் வந்த முற்கும், வீளையும், இலதையும், அநுகரணமு முதலாக உடையன செய்யுளகத்து வந்தால் அவை செய்யுள் நடையழியாமல் (அசையும், சீரும், அடியும், தொடையும் பிழையாமல்) அலகிட்டு வழங்கப்படும் எ—று.

வருமாறு :

நேரிசை வெண்பா

மன்றலங் கொன்றை மலர்மிலைந் துஃஃகுவஃஃ
கென்று திரியும் இடைமகனே—சென்று
மறியாட்டை உண்ணுமை வன்கையால் வல்லே
அறியாயோ அண்ணுக்கு மாறு

ஒழிந்தனவும் இடைக்காடனூர் பாடிய 'ஊசிமுறி' யுட் கண்டுகொள்க. என்னை,

எழுத்த லிசையை அசைகொடு சீர்தனை
திரைக்கவும் படுமென நேர்ந்திசி னோரே

என்றாராகலின்

இனி, 'ஒப்பு' என்பது மேற்சீரும், தளையும், அடியும், வரையறுக்கப்பட்ட பாவும், பாவினமுஞ் சொன்ன பெற்றியில் திரிந்தும், மிக்கும், குறைந்தும் வந்தால், அவை ஒரு

புடையொப்புமை நோக்கி ஒழிந்த செய்யுட்களின்பாற் படுத்தீ வழங்கப்படும்; எ - று.

வருமாறு :

கோழியுங் கூவின குக்கில் குரல்காட்டுந்
தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமிறே
ஆழிசூழ் வையத்தெம் அண்ண லடியேத்திக்
கூழை நனையக் குடைந்துங் குளிர்புனல்
ஊழியும் மன்னுவா மென்றேலோ ரெம்பாவாய்

மேல், நாற்சீர் நான்கடியாய் வருவது கலிவிருத்தம் என்று வரையறுத்துச் சொன்னார். இஃது ஐந்தடியான் வந்ததாயினும் ஒருபுடை யொப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின் பாற்படுத்து வழங்கப்படும் எனக் கொள்க. இதனைத் தரவு கொச்சக மெனினும் இழுக்காகாது.

சுற்றுநீர் சூழ்கிடங்கிற்
பொற்றாமரைப் பூம்படப்பைத் தெண்ணீர்
நல்வய லூரன் கேண்மை
யல்லிருங் கூந்தற் கலரா னவே

மேல் வஞ்சிப்பாவிற்கு மூன்றடிச் சிறுமை என்றெடுத்தோதினார். இஃது இரண்டடிச் சிறுமையான் வந்ததாயினும் ஒருபுடை யொப்புமை நோக்கி வஞ்சிப்பாவின் பாற்படுத்தே வழங்கப்படும் எனக் கொள்க. பிறவும், புராண கவிஞராற் பாடப்பட்ட இலக்கியங்களும் இவ் விலக்கணத்தான் ஒருபுடை யொப்புமை நோக்கி, ஒன்றன்பாற்படுத்து வழங்கப்படும் எனக் கொள்க.

'ஒப்பும்' என்ற உம்மையால் வண்ணமும், புனைந்துரையும், அடியின்றி நடப்பனவும் ஆமா றுணர்ந்து கொள்க.

அவற்றுள், வண்ணம் நூறு திறத்தனவாம். அவை சொல்லுமாறு :—

தூங்கிசை வண்ணம், ஏந்திசை வண்ணம், அடுக்கிசை வண்ணம், பிரிந்திசை வண்ணம், மயங்கிசை வண்ணம் என்னும் இவ் வைந்தினையு முதல் வைத்து,

அகவல் வண்ணம், ஒழுகிசை வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம் என்னும் இந்நான்கினை யும் இடை வைத்து குறில் வண்ணம், நெடில் வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இடையிசை வண்ணம் என்னும் இவ்வைந்தினையுங் கடைவைத்துக் கூட்டி உ௱ழ நூறு வண்ணமும் பிறக்கும். என்னை,

தூங்கேந் தடுக்கல் பிரிதல் மயங்கிசை வைத்துப்பின்னும்
பாங்கே அகவ லொழுகல் வலிமெலிப் பாற்படுத்திட்
டாங்கே குறினெடில் வல்லின மெல்லின மோடிடையைத்
தாங்கா துறழ்தரத் தாம்வண்ண நூறுந் தலைப்படுமே

அவற்றின் விரியாவன :

தூங்கிசை வண்ணம்

குறிலகவற் றூங்கிசை வண்ணம், நெடிலகவற்றூங் கிசை வண்ணம், வலியகவற்றூங்கிசை வண்ணம், மெலி யகவற்றூங்கிசை வண்ணம், இடையகவற் றூங்கிசை வண்ணம் எனவும்,

குறிலொழுகற் றூங்கிசை வண்ணம், நெடிலொழுகற் றூங்கிசை வண்ணம், வலியொழுகற் றூங்கிசை வண்ணம், மெலியொழுகற் றூங்கிசை வண்ணம், இடையொழுகற் றூங்கிசை வண்ணம் எனவும்,

குறில் வல்லிசைத் தூங்கிசை வண்ணம், நெடில் வல்லிசைத் தூங்கிசை வண்ணம், வலி வல்லிசைத் தூங் கிசை வண்ணம், மெலி வல்லிசைத் தூங்கிசை வண்ணம், இடை வல்லிசைத் தூங்கிசை வண்ணம், எனவும்,

குறில் மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், நெடில் மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், வலி மெல்லிசைத்

தூங்கிசை வண்ணம், மெலி மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், இடை மெல்லிசைத் தூங்கிசை வண்ணம் எனவும் தூங்கிசை வண்ணம் 20.

ஏந்திசை வண்ணம்

குறிலகவ லேந்திசை வண்ணம், நெடிலகவ லேந்திசை வண்ணம், வலியகவ லேத்திசை வண்ணம், மெலியகவ லேந்திசை வண்ணம், இடையகவ லேந்திசை வண்ணம் எனவும்,

குறிலொழுக லேந்திசை வண்ணம் நெடிலொழுக லேந்திசை வண்ணம் வலியொழுக லேந்திசை வண்ணம், மெலியொழுக லேந்திசை வண்ணம் இடையொழுக லேந்திசை வண்ணம் எனவும்,

குறில் வல்லிசை யேந்திசை வண்ணம், நெடில் வல்லிசை யேந்திசை வண்ணம், வலி வல்லிசை யேந்திசை வண்ணம், மெலி வல்லிசை யேந்திசை வண்ணம், இடை வல்லிசை யேந்திசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசை யேந்திசை வண்ணம், நெடில் மெல்லிசை யேந்திசை வண்ணம், வலி மெல்லிசை யேந்திசை வண்ணம், மெலி மெல்லிசையேந்திசை வண்ணம், இடை மெல்லிசை யேந்திசை வண்ணம் எனவும்—ஏந்திசை வண்ணம் 20.

அடுக்கிசை வண்ணம்

குறிலகவல் அடுக்கிசை வண்ணம், நெடிலகவல் அடுக்கிசை வண்ணம், வலியகவ லடுகிசை வண்ணம், மெலியகவ லடுக்கிசை வண்ணம், இடையகவ லடுக்கிசை வண்ணம் எனவும்,

குறிலொழுகல் அடுக்கிசை வண்ணம், நெடிலொழுக லடுக்கிசை வண்ணம், வலியொழுகல் அடுக்கிசை வண்ணம், மெலியொழுகல் அடுக்கிசை வண்ணம், இடையொழுகல் அடுக்கிசை வண்ணம் எனவும்,

குறில் வல்லிசை அடுக்கிசை வண்ணம், நெடில் வல்லிசை யடுக்கிசை வண்ணம், வலி வல்லிசை அடுக்கிசை வண்ணம், மெகு வல்லிசை அடுக்கிசை வண்ணம், இடை வல்லிசை அடுக்கிசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசை அடுக்கிசை வண்ணம், நெடில் மெல்லிசை அடுக்கிசை வண்ணம், வலி மெல்லிசை அடுக்கிசை வண்ணம், மெலி மெல்லிசை அடுக்கிசை வண்ணம், இடை மெல்லிசை அடுக்கிசை வண்ணம் எனவும்— அடுக்கிசை வண்ணம் 20.

பிரிந்திசை வண்ணம்

குறிலகவற் பிரிந்திசை வண்ணம், நெடிலகவற் பிரிந்திசை வண்ணம், வலியகவற் பிரிந்திசை வண்ணம், மெலியகவற் பிரிந்திசை வண்ணம், இடையகவற் பிரிந்திசை வண்ணம் எனவும்,

குறிலொழுகற் பிரிந்திசை வண்ணம், நெடிலொழுகற் பிரிந்திசை வண்ணம், வலியொழுகற் பிரிந்திசை வண்ணம் மெலியொழுகற் பிரிந்திசை வண்ணம், இடையொழுகற் பிரிந்திசை வண்ணம் எனவும்,

குறில் வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், நெடில் வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், வலி வல்லிசை பிரிந்திசை வண்ணம், மெலி வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், இடை வல்லிசைப் பிரிந்திசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், நெடில் மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், வலி மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், மெலி மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், இடை மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம் எனவும்—பிரிந்திசை வண்ணம் 20.

ஜாதி மத வேறுபாடு கருதாமல் அளித்தற்குரியது.

2. ஓரியண்டல் பட்டப் பரீட்சைகளுள் தனித்தமிழ் வித்துவான் பரீட்சையில் தேர்ச்சி பெறுவோர்களுள் முடிவுப் பரீட்சையில் முதல் வகுப்பில் முதல்வராக வருபவர் முதல் முறையிலேயே தேறினவராயின் அவருக்கு இப்பரிசு அளிக்கப்பெறும்.

எந்த வருஷத்திலாயினும், இருவரேனும் இருவருக்கு மேற்பட்டவரேனும் பரிசுக்குரிய தகுதியைப் பெற்ருல் பிரிலிமினரிப் பரீட்சையில் பெற்ற அம்சங்களையும் (Marks) சேர்த்துப் பார்த்து மொத்தத்தில் அதிக அம்சம் பெற்றவருக்கு இப்பரிசு அளிக்கப்படும். அவ்வாறு செய்வதிலும் சிக்கல் நேருமாயின், தேர்ச்சி பெற்றவர்களுடைய ஆங்கிலப் பயிற்சியையும் வயதையும் ஆராய்ந்து, அவர்களுள் அதிக ஆங்கிலப் பயிற்சியுடையவர்க்கும், குறைந்த வயது உடையவர்க்கும் பரிசைக் கொடுக்க சிண்டிகேட் சபையினர் தீர்மானிப்பார்கள்.

3. ஸெனெட் சபைக் கூட்டமொன்றில் இந்தப் பரிசு உரியவருக்கு வழங்கப்பெறும். எந்த வருஷத்திலேனும் பாசுக்கு உரியவர் நேரில் வந்து பரிசைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போனுல் சிண்டிகேட் சபையார் பரிசுத் தொகையை அவருக்கு அனுப்புவதற்குரிய ஏற்பாட்டைச் செய்வார்கள். பரிசு வழங்குவதற்கு முன் அப்பரிசுக்குரியர் இறக்கும்படி நேர்ந்தால் அத்தொகை சட்டப்படி அவருடைய வார்சாக இருப்பவரிடம் சேர்ப்பிக்கப்படும்.

4. இப்பரிசுத் தொகை பணமாகவேனும் செக்காகவேனும் அளிக்கப்பெறும். இந்தப் பரிசுத் தொகை எந்தக் காரணத்தைக் கொண்டாவது பகுக்கவோ குறைக்கவோ படாது. எந்த ஒரு வருஷத்திலேனும் அல்லது தொடர்ந்து பல வருஷங்களிலேனும் பரிசு கொடுக்கப்படாமல் இருந்தால் அங்ஙனம் கொடுக்கப்படாமல் இருந்த பரிசுத்தொகை முழுவதும் சேர்த்து, எந்த வருஷத்தில் பரிசு வழங்கப்படுகிறதோ அவ்வருஷத்தின் பரிசுக்குரியவருக்கே அளிக்கப்பெறும். பரிசுத் தொகைக்கு மேலே கிடைக்கும் தொகைதான் மூலதனத்தோடு சேர்க்கப்படும்.

5. வருஷந்தோறும் பரிசளிப்பு விபரம், பரிசு பெறுபவரின் பெயர், விலாசம் ஆகியவற்ருேடு திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ

காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளவர்களுக்கும், அவர்களுக்குப்பின் வரும் உரிமையுள்ளவர்களுக்கும் (Successors in Interest) தெரிவிக்கப்படவேண்டும்.

6. பரிசு ஏற்படுத்தியவர்களுடைய நோக்கத்துக்கு வேறுபட்ட எந்தக் காரியத்துக்கும் இந்த நிதியை உபயோகிக்கக் கூடாது. இனி எப்பொழுதேனும் சர்வகலாசாலையின் 7-D, விதிப்படி யமைந்த தனித்தமிழ் வித்துவான் பரீட்சைக்குப் பிரதியாக ஏதேனும் ஏற்பட்டாலும், ஷை பரீட்சைக்குரிய விதிகள் மாறுபட்டாலும் பரிசை ஏற்படுந்தியவர்களுடைய நோக்கமாகிய தமிழ்க் கல்வி யபிவிருத்திக்கு ஏற்றதென்று கருதும் வகையில் சிண்டிகேட் சபையார் இந்தப் பரிசை உரியவருக்கு அளிக்க ஏற்பாடு செய்யும் உரிவையைப் பெறுவார்கள்.

7. பரிசு கொடுத்தது போக எஞ்சும் வட்டித் தொகையையும் மூலதனத்தையும் கவர்ன்மெண்டார் எப்போதேனும் திருப்பிக் கொடுக்க நேர்ந்தால் அத்தொகையையும் எந்தவிதமான பத்திரங்களிலேனும், வேறுவகையிலேனும் வைத்துப் பாதுகாக்கும் உரிமை சிண்டிகேட் சபையாருக்கு உண்டு.

காசிமடம்,
திருப்பனந்தாள். } **காசிவாசி சாமிநாதத் தம்பிரான்**

குறிப்பு:— மேலேகண்ட மூலதனம் எண்டௌமெண்ட் சென்னை சர்வ கலாசாலையாருடைய அங்கீகாரம் பெற்று 1937, 38-ம் வருஷத்திய யுனிவர்சிட்டி காலண்டர் பகுதி 2-ல் 129, 130-வது பக்கங்களில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, MADRAS-8
LIBRARY